شَاتَانِ تُذْبَحَانِ

இரண்டு ஆடுகள் அறுக்கப்படும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய இறையறிவிப்பு

# இரண்டு உயிர்த் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்பு


ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி

# இரண்டு உயிர்த் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்பு

'இறை நெருக்கம் பெற்ற அடியார்களின்
அடையாளங்கள்' என்ற தலைப்பில்
அரபியில் எழுதப்பட்ட ஒரு கட்டுரையின்
மொழியாக்கமும் இந்நூலுடன்
இணைக்கப்பட்டுள்ளது

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

Tamil Translation of the Book

**TADHKIRATUSH SHAHADATAIN**

**இரண்டு உயிர்த் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்பு**

Written by : **Hazrat Mirza Ghulam Ahmad**[as]
(The Promised Messiah and Mahdi)

Translated by : **Maulavi M. Rafeek Ahmad**

Composed by : A. Khaleel Ahmad &
A. Abdul Nizar

Year : 2023


Copies : 500

Printed at : Fazl-e-Umar Printing Press
Qadian - 143 516
Gurdaspur, Punjab

Published by : Nazarat Nashr-o- Isha'at
Qadian

Noorul Islam Toll Free No : 1800 103 2131

Tamil Toll Free No : 1800 425 40000



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

# நூலாசிரியரைப் பற்றி...

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வாங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1835-ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார்கள். தனது சிறு வயதிலிருந்தே இறை வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், திருக்குர்ஆன், பிற மத வேதங்களைக் கற்பதிலும் அன்னார் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அனைத்து திசைகளில் இருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும் இஸ்லாத்தின் பரிதாப நிலையைக் கண்டு, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் போதனைகளை தூய, பரிசுத்த வடிவில் வழங்குவதற்காகவும், அன்னார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக் கணக்கான கடிதங்களையும் எழுதியதுடன், ஏராளமான மார்க்க விவாதங்களிலும் பங்கு பெற்றார்கள். நல்லொழுக்க, ஆன்மீக பரிபூரணத் தன்மையை அடையும் பொருட்டு, மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது என அன்னார் வாதித்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு, இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் புறமிருந்து கனவுகள், ஆன்மீகக் காட்சிகள், வெளிப்பாடுகள், முன்னறிவிப்புகள் வரத் தொடங்கின. 1889 -ல், ஒரு தூய ஜமாஅத்திற்கான அடித்தளம் இட்டார்கள். பின்னர், இறைக் கட்டளையின்படி அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். பின்னர் இறை வெளிப்பாடுகள் அதிகமாக வரத் தொடங்கின.

மேலும், பல்வேறு மார்க்கங்களில், வெவ்வேறு பெயர்களில் முன்னறிவிக்கப்பட்ட இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என்று இறை கட்டளைக்கிணங்க வாதித்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி தாமே என்றும் அன்னார் வாதித்தார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தற்போது இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

1908-ஆம் ஆண்டில் அன்னாரது மறைவுக்குப் பின்னர், திருக்குர்ஆன், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க, அன்னாரது வருகையின் நோக்கத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, கிலா∴பத் அமைப்பு (கலீ∴பாவை நியமித்தல்) நிறுவப்பட்டது. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீ∴பாவாகவும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவர் ஆகவும் இருந்து வருகின்றார்கள்.

# பதிப்புரை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய 'தத்கிரத்துஷ் ஷஹாததைன்' (இரண்டு உயிர்த் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்பு) என்ற நூலை மதிப்பிற்குரிய **மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்** அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, கீழ்வரும் சரிபார்ப்புக் குழு உறுப்பினர்கள் சரிபார்த்-துள்ளார்கள். **J. செய்யது அன்வர் அஹ்மது சாஹிப்** அவர்கள் ஆங்கில மொழியாக்கத்தைக் கொண்டு சரிபார்த்துள்ளார்கள். **மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப்** அவர்களும், **மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன் சாஹிப்** அவர்களும், **மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப்** அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களைச் செய்துள்ளார்கள்.

அவ்வாறே தமிழ் ரிவியூ கமிட்டி தலைவர் **J.S. சலீம் அஹ்மது சாஹிப்** அவர்களும் இந்த நூலின் தமிழாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்
எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
நாஸிர் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

அல்ஹம்துலில்லாஹி வல்மின்னஹ்

இந்த அருளுக்குரிய சிறு நூலில் காபூலிலுள்ள ஆலிம்களின் தலைவர் மற்றும் ஆப்கானிஸ்தானின் கம்பீரமிக்க பெருந்தகையும் கோஸ்த்தின் மகத்தான தலைவருமான மர்ஹூம் மவ்லவி அப்துல் லத்தீ.:.ப் சாஹிப் அவர்களது ஷஹாதத் பற்றிய குறிப்பு உள்ளது.

மேலும் அவரது நேர்மையான பண்புகளைக் கொண்ட மாணவரான மியா(ன்) அப்துர் ரஹ்மான் அவர்கள் ஷஹீதான நிலைமைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்நூல் எழுதப்பட்டு இதற்கு கீழ்க்காணும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. அதாவது,

**இரண்டு உயிர்த் தியாகங்களைப் பற்றிய நற்குறிப்பு**

அரபியில் ஒரு சிறு கட்டுரையும், இறை நெருக்கம் பெற்ற அடியார்களின் அடையாளங்கள் என்ற தலைப்பில் இன்னொரு கட்டுரையும் இந்நூலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் காதியானிலுள்ள ஸியாவுல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சக உரிமையாளரான ஹகீம் மவ்லவி .:.பஸ்லுத்தீன் சாஹிப் அவர்களின் ஏற்பாட்டின் கீழ் (1903-ஆம் ஆண்டு) அக்டோபர் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

نَحْمَدُهٗ وَ نُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْم

اَلْحَمْدُ لِلّٰهِ وَسَلَامٌ عَلٰی عِبَادِهِ الَّذِيْنَ اصْطَفٰی

இந்த காலத்தில் வானத்தின் கீழ் பல விதமான அநீதிகள் நடந்து கொண்டிருந்தாலும் நான் கீழே எடுத்து கூறவிருக்கின்ற அநீதி உள்ளத்தை உலுக்கக்கூடிய மற்றும் உடலை நடுங்கச் செய்கிற ஒரு வேதனைமிக்க சம்பவமாக இருக்கின்றது. இந்த விஷயம் பற்றி வரிசைக்கிரமமாக நான் எடுத்து கூறுவதற்கு முன்னதாக இதை கூறுகூது அவசியமானதாகும். அதாவது இறைவன் காலத்தின் தற்போதைய நிலைமையை கண்டு பூமி பல வகையான தீமையிலும் பாவத்திலும் வழிகேட்டிலும் நிறைந்திருப்பதைக் கண்டு உண்மையை எட்ட வைப்பதற்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் என்னை நியமித்துள்ளான். இந்த காலமும் கூட அப்படிப்பட்டதாக இருந்தது.... இந்த உலகிலுள்ள மக்கள் ஹிஜ்ரி பதிமூன்றாம் நூற்றாண்டை முடித்துவிட்டு பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தை அடைந்திருந்தனர்.

அப்போது நான் அந்த இறைவனின் கட்டளைக்கு கட்டுப்பட்டவாறு பொது மக்களிடம் எழுத்துப்பூர்வமான பிரசுரங்கள் மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் பூமியிலிருந்து தொலைந்து சென்று விட்ட ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்–காகவும், இறைவனிடமிருந்து ஆற்றலை பெற்று அவனது கைகளிலுள்ள ஈர்ப்பின் மூலமாக உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்கும், அவர்களது கொள்கை அளவிலான மற்றும் செயல் அளவிலான தவறுகளை அகற்றுவதற்காகவும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இறைவன் புறமிருந்து மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக ‘வர இருந்தவர் நானே’ என்ற இந்த அழைப்பை விடுக்க ஆரம்பித்தேன்.

இதற்கு சில வருடங்கள் கழிந்த பிறகு இந்த சமுதாயத் –திற்காக துவக்கத்திலிருந்தே வாக்களிக்கப்பட்டிருந்த அந்த மஸீஹும், இஸ்லாம் வீழ்ச்சியடைந்த சமயத்தில் மற்றும் வழிகேடு பரவிய காலத்தில் நேரடியாக இறைவனிடமிருந்து நேர்வழியைப் பெற்றவரும் அந்த ஆன்மீக உணவுத் தட்டை மீண்டும் புதிதாக மனிதர்களுக்கு முன்னால் எடுத்து வைப்பதற்காக இறை நியதியில் நியமிக்கப்பட்டிருந்தவரும் எவரைப் பற்றி இன்றிலிருந்து ஆயிரத்து முன்னூறு வருடங்களுக்கு முன்னதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அந்த இறுதி மஹ்தியான அவரும் நானே ஆவேன் என்பது இறையறிவிப்பின் மூலமாக எனக்கு தெளிவாக திறந்து தரப்பட்டது.

இது தொடர்பாக இறைவனின் உரையாடல்களும், ரஹ்மான் என்னை நோக்கி கூறியவையும் எந்த அளவு தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் எனக்கு கிடைத்தனவென்றால் அதில் ஐயத்திற்கும் சந்தேகத்திற்கும் இடமில்லை.

எனக்கு வந்த ஒவ்வோர் இறையறிவிப்பும் ஒரு பசுமரத்தாணி போன்று உள்ளத்தில் ஊடுருவி விட்டது. இறைவனின் இந்த அனைத்து உரையாடல்களும் எத்தகைய மகத்தான முன்னறிவிப்புகளால் நிறைந்திருந்தனவென்றால் அவை ஒளிமயமான பகல் போன்று நிறைவேறின. அவற்றின் தொடர்ச்சியும் மிகுதியும் அற்புத ஆற்றல்களின் அதிசயமும் எவனது வசனங்களாக திருக்குர்ஆன் இருக்கின்றதோ அதே ஏகனும் இணையற்றவனு –மாகிய இறைவனின் வார்த்தைகளாக இவை இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கி விட்டது.

மேலும் நான் இந்த இடத்தில் தவ்ராத் மற்றும் இஞ்சீலின் பெயரைக் கூறவில்லை. ஏனென்றால் தவ்ராத்தும் இஞ்சீலும் அவற்றை மாற்றம் செய்தவர்களின் கைகளால் எந்த அளவு

மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றன என்றால் இப்போது அந்த நூல்களை இறைவனின் வார்த்தைகள் என்று கூற முடியாது.

சுருக்கமாக, என்மீது இறங்கிய இறைவனின் அந்த வஹீ எந்த அளவு உறுதியானதும் மாற்ற முடியாததுமாக இருக்கின்றது என்றால் அதன் மூலமாக நான் எனது இறைவனை அடைந்தேன். மேலும் இந்த இறையறிவிப்பு வானத்தின் அடையாளங்கள் மூலமாக அனுபவத்தினால் ஏற்படும் நிச்சய உறுதியின் தகுதி வரை சென்றடைந்து விட்டது. இன்னும் சொல்வதென்றால், அதன் ஒவ்வொரு பகுதியையும் இறைவனின் வசனமான திருக்குர்ஆனுக்கு முன் எடுத்து வைக்கப்பட்டபோது அவை அவற்றிற்கு ஏற்ப இருந்ததாக நிரூபணமாகினது. மேலும் அவற்றை உண்மைப்படுத்து –வதற்காக வானத்தின் அடையாளங்கள் மழையைப் போன்று பொழிந்தன.

மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் ஏற்படும் என்று எழுதப்பட்டிருந்தது★ போன்றே இதே நாட்களில் ரமலான் மாதத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணமும் ஏற்பட்டது. இதே நாட்களில் பிளேக் நோயும் அதிகமாக பஞ்சாபில் பரவியது. இந்த செய்தி திருக்குர்ஆனில் காணப்படுகிறது.

இந்த நாட்களில் கொள்ளை நோய் அதிகமாக பரவும் என்று நபிமார்களும் கூட முன்னறிவித்திருந்தனர். மேலும் அது எந்த அளவு பரவும் என்றால் எந்தவொரு கிராமமும் நகரமும் இந்த கொள்ளை நோயிலிருந்து வெளியில் இருக்காது என்று அவர்கள் கூறியிருந்தனர். அவ்வாறே நடந்தது. இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றது.

---

★ தாரே குத்னி – கிதாப் ஈதய்ன், பாபு ஸிஃபதி ஸலாதில் குஸூஃபி வல் குஸூபி வஹய் அதிஹிமா – வெளியீட்டாளர்.

இறைவன், இந்த நாட்டில் பிளேக் நோய் பற்றிய பெயரும் அடையாளமும் இல்லாமல் இருந்த அந்த சமயத்தில் பிளேக் நோய் பரவ ஆரம்பித்திருந்த அந்தக் காலக்கட்டத்திற்கு ஏறக்குறைய இருபத்தி இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே அது தோன்றப் போகின்ற செய்தியை எனக்கு தெரிவித்தான்.

பிறகு இது தொடர்பாக மழையை போன்று இறை அறிவிப்புகள் வந்தன. அவற்றின் சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்களில் கூறப்பட்டது. கீழ்க்காணும் இறையறிவிப்பில் இதே போன்று இறைவன் என்னை நோக்கி இவ்வாறு கூறினான். (அரபி மூலத்தின் மொழியாக்கம் இதுவாகும்):

*இறைவனின் கட்டளை வந்து கொண்டிருக்கின்றது. எனவே, நீர் அவசரம் காட்ட வேண்டாம். இது நபிமார்களுக்கு தொன்று தொட்டே கிடைத்துக் கொண்டிருந்த நற்செய்தி ஆகும். இறைவன் இறையச்சத்தை கடைபிடிப்பவர்களுடன் இருக்கின்றான்.*

*அதாவது அவர்கள் மரியாதையுடனும் வெட்கத்துடனும் இறையச்சத்தை பேணியவாறும் பாவமும் கட்டுப்படாமையும் நிகழ்வதற்கு சாத்தியம் இருக்கின்ற அந்த சந்தேகத்திற்குரிய வழிகளையும் கூட விட்டு விடுகின்றனர். அவர்கள் தைரியத்தின் எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு காலெடுத்து வைப்பதில்லை. மாறாக, அச்சத்துடன் ஒரு செயலை செய்வதற்கும் ஒரு விஷயத்தை கூறுவதற்கும் அவர்கள் முற்படுகின்றனர். இறைவனுடன் மாசற்ற தொடர்பை வைத்திருப்பவர்களுடனும் அவனது அடியார்களுக்கு நன்மை புரிபவர்களுடனும் இறைவன் இருக்கின்றான். அவன் ஆற்றல் மிக்கவனும் மேலோங்கியவனும் ஆவான். அவன் எல்லாவற்றின் மீதும் மிகைத்து நிற்பவனாவான். ஆனால் பெரும்பாலான மக்கள் அதை அறிவதில்லை.*

*அவன் ஒரு விஷயத்தை விரும்பும் போது ஆகுக என்று கூறியதும் அது ஆகிவிடுகின்றது. நீங்கள் என்னிடமிருந்து தப்பி*

ஓடி விட முடியுமா என்ன? 'நாம் குற்றவாளிகளைப் பழிவாங்குவோம்'. 'இது மனிதனின் கூற்று மட்டுமேயாகும்' என்றும் 'இவ்விஷயங்களில் மற்றவர்கள் அந்த நபருக்கு உதவி செய்துள்ளனர்' என்றும் 'இவர் அறிவீனர் ஆவார் அல்லது பைத்தியக்காரர் ஆவார்' என்றும் அவர்கள் கூறுகின்றனர். நீங்கள் இறைவனை நண்பனாக ஆக்கியுள்ளீர்கள் என்றால் பிறகு வாருங்கள். என்னை பின்பற்றுங்கள். அதன் மூலம் இறைவனும் உங்களை நண்பனாக்கிக் கொள்ளட்டும் என்று அவர்களிடம் கூறுவீராக.

எந்த மக்கள் உம்மை பரிகாசம் செய்கின்றனரோ நாம் அவர்களுக்கு போதுமானவனாக இருக்கின்றோம். உம்மை இழிவுபடுத்த முற்படுகின்றவரை நான் இழிவுபடுத்துவேன். உமக்கு உதவி செய்ய விரும்புபவருக்கு நான் உதவி செய்வேன். நான் எப்படிப்பட்டவனென்றால் எனது அருகில் எனது தூதர்கள் இருக்கின்ற நிலையில் அவர்கள் அஞ்சுவதில்லை. இறைவனின் உதவியும் வெற்றியும் வரும் போது உனது இறைவனின் வார்த்தை நிறைவேறும் போது நீங்கள் எதற்காக அவசரம் காட்டினீர்களோ அது இதுவேயாகும் என்று அவர்களிடம் கூறப்படும்.

பூமியில் குழப்பம் விளைவிக்காதீர்கள் என்று அவர்களிடம் கூறப்படும்போது நாங்கள் சீர்திருத்தத்தைத் தான் ஏற்படுத்துகின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். எச்சரிக்கையாக இருங்கள். அவர்களே குழப்பவாதிகள் ஆவர். அவர்கள் உம்மை பரிகாசம் செய்து நகைப்பிற்குரியவராக ஆக்கியுள்ளனர். இறைவன் அனுப்பிய அந்த நபர் இவர்தானா? என்று எள்ளி நகையாடியவாறு கேட்கின்றனர். இவை அவர்கள் கூறும் விஷயங்களாகும்.

அசல் விஷயம் என்னவென்றால் நாம் அவர்களுக்கு முன்னால் உண்மையை எடுத்துக் கூறியுள்ளோம். அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்வதில் வெறுப்பு காட்டுகின்றனர். எந்த மக்கள் அநீதியிழைத்திருக்கின்றனரோ அவர்கள் எந்த பக்கம்

*திருப்பப்படுவர் என்பதை விரைவில் அறிந்து கொள்வர். அவர்கள் இறைவன் மீது சுமத்தும் அவதூறுகளிலிருந்து அவன் தூயவனும் மேன்மை மிக்கவனுமாவான். நீர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவர் அல்லர் என்று அவர்கள் கூறுகின்றனர். இறைவனின் சாட்சி என்னிடம் இருக்கின்றது. நீங்கள் நம்பிக்கை கொள்வீர்களா என்ன? என்று அவர்களிடம் கூறுவீராக.*

*நீர் என் முன்னிலையில் மதிப்பிற்குரியவராக இருக்கின்றீர். நான் எனக்காக உம்மை தேர்ந்தெடுத்துக் கொண்டேன். நீர் எவர் மீதாவது கோபமடையும்போது நானும் அவர் மீது கோபம் அடைகின்றேன். நீர் நேசிக்கின்ற ஒவ்வொரு பொருளையும் நானும் நேசிக்கின்றேன். இறைவன் தனது அரியணையிலிருந்து உம்மை புகழ்கின்றான். அவன் உம் பக்கம் வருகின்றான். நீர் என்னிடத்தில் உலகம் அறிந்திராத அந்த தகுதியைப் பெற்றுள்ளீர். நீர் எனக்கு எனது ஓரிறைமை மற்றும் ஏகத்துவம் போன்று இருக்கின்றீர். நீர் எமது தண்ணீரிலிருந்து வந்துள்ளீர். மேலும் அம்மக்கள் அசுத்தத்திலிருந்து வந்துள்ளனர். உம்மை மர்யமின் மகன் ஈஸாவாக ஆக்கி நீர் அறியாமல் இருந்த விஷயத்தை உமக்கு கற்றுத் தந்த அந்த இறைவனுக்கே புகழ் உரியது.*

*இந்தத் தகுதி எங்கிருந்து கிடைத்தது? ஏன் கிடைத்தது? என்று மக்கள் கேட்டனர். எனது இறைவன் வியப்பிற்குரியவன். அவனது அருளை எவராலும் தடுக்க முடியாது என்று நீர் கூறுவீராக. எந்த பணியை அவன் செய்கின்றானோ அதனை அவ்வாறு அவன் ஏன் செய்தான் என்று அவனிடம் கேட்ட முடியாது. ஆனால் மக்கள் தத்தமது பணிகள் தொடர்பாக கேட்கப்படுகின்றனர். உமது இறைவன் எதை விரும்பு -கின்றானோ அதை செய்கின்றான். அவனே அந்த ஆதமைப் படைத்து அவருக்கு மேன்மையை வழங்கினான். நான் இந்த காலத்தில் எனது ஒரு பிரதிநிதியை பூமியில் ஏற்படுத்த எண்ணினேன். எனவே, நான் இந்த ஆதமைப் படைத்தேன். பூமியில் குழப்பத்தை அதாவது பிரிவினையை ஏற்படுத்துகின்ற ஒருவரையா நீ உனது பிரதிநிதியாக ஆக்குகின்றாய் என்று*

மக்கள் கேட்டனர். இறைவன் அவர்களிடம், நீங்கள் அறியாதவற்றை நான் அறிந்துள்ளேன் என்று கூறினான். இறைவனே இந்த இயக்கத்தை நிறுவினான் என்பது ஒரு இட்டுக்கட்டாகும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

பிறகு இறைவனே இதை ஏற்படுத்தியுள்ளான் என்று கூறி அவர்களை அவர்களது கேளிக்கைகளிலும் விளையாட்டுகளிலும் விட்டுவிடுவீராக. நாம் உண்மையுடன் இதை இறக்கியுள்ளோம். உண்மையான தேவைக்கேற்ப அது இறங்கியுள்ளது. நாம் உம்மை முழு உலகத்திற்கும் ஒரு பொதுவான அருட்கொடையாக அனுப்பியுள்ளோம்.

எனது அஹ்மதே! நீர் எனது நாட்டமாக இருக்கின்றீர். மேலும் என்னைச் சார்ந்தவராக இருக்கின்றீர். உமது இரகசியம் எனது இரகசியமாகும். உமது மகிமை வியக்கத்தக்கதாகும். மேலும் நற்கூலி அருகில் இருக்கின்றது. நான் உம்மை ஒளிமயமாக்கி -யுள்ளேன். மேலும் நான் உம்மை தேர்ந்தெடுத்துள்ளேன். மூஸாவின் மீது வந்தது போன்ற ஒரு காலம் உம் மீதும் வரும். அநீதி இழைத்துள்ள மக்கள் தொடர்பாக என்னிடம் நீர் பரிந்துரை செய்யாமல் இருப்பீராக. ஏனென்றால் அவர்கள் மூழ்கடிக்கப்படுவர். இம்மக்கள் திட்டம் தீட்டுவர். இறைவனும் அவர்கள் தொடர்பாக திட்டம் தீட்டுவான். இறைவன் சிறந்த திட்டம் தீட்டுபவன் ஆவான். உமக்கு முன்னால் நடந்து செல்லும் அவன் கண்ணியத்திற்குரியவன். எவர் உம்மிடம் பகைமை கொள்கிறாரோ அவரை அவன் தனது எதிரியாக கருதுகின்றான். மேலும் அவன் விரைவில் நீர் திருப்தியடையும் வகையிலுள்ள பொருள்களை உமக்கு வழங்குவான். நாம் பூமிக்கு வாரிசாகி விடுவோம்.

எவர்களது மூதாதையர்கள் எச்சரிக்கப்படவில்லையோ அந்த சமுதாயத்தை எச்சரிப்பதற்காகவும் குற்றவாளிகளின் வழி தெளிவானதாய் ஆவதற்கும் பூமியை அதன் எல்லா பக்கங்களில் இருந்தும் நாம் சுருக்கிக் கொண்டிருக்கின்றோம். நான் நியமிக்கப்பட்டுள்ளேன். நம்பிக்கை கொண்டவர்களில்

*முதன்மையானவனாக நான் இருக்கின்றேன் என்று கூறுவீராக. உம்முடைய இறைவன் ஒரே இறைவனாவான். எல்லா நன்மைகளும் திருக்குர்ஆனில் இருக்கின்றன. தூய்மையாக்கப் -படுபவர்களே அதன் உண்மைகளையும் ஞானங்களையும் அடைய முடியும். எனவே, இதற்குப் பிறகு அதாவது இதை விட்டு விட்டு நீங்கள் எந்த வார்த்தையின் மீது நம்பிக்கை கொள்வீர்கள்? என்று என் மீது இந்த வஹீ இறங்கியுள்ளது என்று கூறுவீராக.*

*உமது பிரச்சாரம் முழுமையடையாமல் இருக்கும் வகையிலுள்ள அத்தகைய சில முயற்சிகளை செய்ய இம்மக்கள் எண்ணுகின்றனர். ஆனால் உமது பிரச்சாரம் முழுமையடைய வேண்டும் என்றே இறைவன் விரும்புகின்றான். தூயவர் -களையும் அசுத்தமானவர்களையும் வேறுபடுத்திக் காட்டாமல் இறைவன் உம்மை கைவிட்டு விட மாட்டான். தனது தூதரை (அதாவது இந்த எளியவனை) நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் அதனை அவன் எல்லா மார்க்கங்களின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பியவனே அந்த இறைவன் ஆவான். இறைவனின் வாக்குறுதி ஒரு நாள் நிறைவேற வேண்டியே இருந்தது. இறைவனின் வாக்குறுதி (நிறைவேறும் நாள்) வந்து விட்டது. அவன் தனது ஒரு பாதத்தை தரையில் அடித்து குழப்பங்களை சீர்திருத்தினான். இறைவன் உம்மை பகைவர்களிடமிருந்து பாதுகாப்பான். எவர் அநீதியுடன் உம் மீது தாக்குதல் நடத்துவாரோ அவர் மீது அவன் தாக்குதல் நடத்துவான். அவனது கோபம் பூமியில் இறங்கி வந்தது. மேலும் மக்கள் பாவத்தில் தீவிரமடைந்தனர். மேலும் அவர்கள் வரம்பு மீறி விட்டனர். நோய்கள் நாட்டில் பரப்பப்படும். மேலும் பல்வேறு காரணிகளால் உயிர்கள் பறிக்கப்படும். இவை விண்ணில் தீர்மானிக்கப்பட்டவையாகும். மிகைத்தோனும் மேன்மை மிக்கவனுமாகிய அந்த இறைவனின் செயலாக இது இருக்கின்றது. மக்கள் தங்கள் உள்ளங்களின் நிலைமைகளை மாற்றிக் கொள்ளாத வரை இறைவன் சமுதாயத்தின் மீது*

*இறங்கியவற்றை மாற்ற மாட்டான். அவன் காதியான் என்ற இந்த கிராமத்தை ஓரளவு சோதனைக்குப் பிறகு தனது அடைக்கலத்தின் கீழ் கொண்டு வந்து விடுவான்.★*

*இன்று இறைவனைத் தவிர காப்பாற்றுபவன் யாரும் இல்லை. நமது கண்களுக்கு முன்னால் நமது இறையறிவிப்பிற் -கேற்ப கப்பலை உருவாக்குவீராக. வல்லமைமிக்க அந்த இறைவன் உம்முடனும் உமது மக்களுடனும் இருக்கின்றான். எந்த மக்கள் எனக்கு எதிரில் ஆணவத்துடன் எனது கட்டளைகளுக்குக் கட்டுப்படாமல் தங்களை மேலானவர்களாக கருதுகின்றனரோ அதாவது முழுமையான முறையில் கட்டுப்படாமல் இருக்கின்றனரோ அவர்களைத் தவிர உம்மையும், உமது வீட்டிற்குள் உள்ள ஒவ்வொருவரையும் நான் பாதுகாப்பேன். குறிப்பாக எனது பாதுகாப்பு உம்மோடு இருக்கும். கருணைமிக்க இறைவனிடமிருந்து சாந்தி நிலவுகின்றது. உம் மீதும் சாந்தி உண்டாவதாக. நீர் தூய ஆன்மாவை கொண்டவராவீர்.*

*குற்றவாளிகளே! நீங்கள் தனியாக பிரிந்து சென்று விடுங்கள். நான் இந்த தூதருடன் நிற்பேன். நோன்பு திறப்பேன். நோன்பும் நோற்பேன். உம்மை வசைமாறிப் பொழிபவரை நானும் வசைமாறிப் பொழிவேன். என்றென்றும் உம்முடன் நிலைத்திருக்கின்ற அருளை உமக்கு வழங்குவேன். எனது தோற்றத்தின் ஒளியை உம்மிடம் வைத்து விடுவேன். விதிக்கப்பட்டுள்ள அந்த நேரம் வரை நான் இந்த பூமியிலிருந்து*

---

★ ஒரு நபரை ஓரளவு துன்பம் அல்லது சோதனைக்கு பிறகு தனது அடைக்கலத்தின் கீழ் கொண்டு வரும் சந்தர்ப்பத்தின்போது அரபி மொழியில் ‘ஆவா’ என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. அதிகமான துன்பங்கள் மற்றும் இழப்புகளிலிருந்து ஒருவர் காப்பாற்றப்படுகின்றார். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى அதாவது அவன் உம்மை அநாதையாகக் கண்டு (தன் நிழலில் உமக்குப்) புகலிடம் அளிக்கவில்லையா? (திருக்குர்ஆன் 93:7) இவ்வாறு முழு குர்ஆனிலும் ‘ஆவா’ அல்லது ‘ஆவய்’ என்ற சொல் ஒரு நபருக்கு அல்லது ஒரு சமுதாயத்திற்கு ஓரளவு துன்பத்திற்கு பிறகு நிம்மதி வழங்கப்படும் அத்தகைய சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*விலகிச் செல்ல மாட்டேன். அதாவது எனது கோபத்தின் தோற்றத்தில் எந்த வித்தியாசமும் ஏற்படாது. நான் பேரீடியின் முழக்கமாக இருக்கின்றேன். நான் ரஹ்மானாக இருக்கின்றேன். பரிவுடன் நடந்து கொள்பவனாகவும் மன்னிக்கக்கூடியவ -னாகவும் இருக்கின்றேன்.*

## இரண்டு உயிர்த் தியாகங்களின் நிகழ்வு பற்றிய குறிப்பு

இதே நாட்களில் இறைவனின் வஹீ தொடர்ந்து எனக்கு வந்து கொண்டிருந்தது. மிகவும் வலுவான உறுதியான அடையாளங்கள் வெளிப்பட்டன. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற எனது வாதம் ஆதாரங்களுடன் உலகில் வெளியிடப்பட்டது. காபூலின் எல்லையிலுள்ள கோஸ்த் என்ற பகுதியைச் சார்ந்த எனது சகோதரர் மவ்லவி அப்துல் லத்தீஃப் என்ற பெயரைக் கொண்ட பெருந்தகை வரை தற்செயலாக எனது நூல்கள் சென்றடைந்தன. இறை உதவியால் எழுத்துப்பூர்வமாகவும், அறிவுப்பூர்வமாகவும் திகழ்கின்ற நான் எனது நூல்களில் எழுதியிருந்த எல்லா ஆதாரங்களும் அவர்களது பார்வையில் வந்தன. அந்த பெருந்தகை மிகவும் தூய அகத்தை உடையவராகவும், அறிஞராகவும் , தொலைநோக்கு பார்வையுடையவராகவும், இறைவனுக்கு அஞ்சுபவராகவும், இறையச்சத்துடன் வாழ்பவராகவும் இருந்தார்கள்.

எனவே, அவர்களது உள்ளத்தில் இந்த ஆதாரங்களின் வலுவான தாக்கம் ஏற்பட்டது. அவர்களுக்கு இந்த வாதத்தை உண்மைப்படுத்துவதில் எந்த சிரமமும் இருக்கவில்லை. அவர்களது தூய மனசாட்சி எவ்வித தயக்கமுமின்றி, இந்த நபர் அல்லாஹ்வின் புறமிருந்து வந்தவர். மேலும் இந்த வாதம் சரியானது என்பதை ஏற்றுக் கொண்டது.

அப்போது அவர்கள் எனது நூல்களை மிகவும் அன்புடன் பார்க்க ஆரம்பித்தார். மிகவும் தூய்மையாகவும், ஆயத்தமாகவும் இருந்த அவர்களது ஆன்மா என் பக்கம் ஈர்க்கப்பட்டது. எதுவரை

என்றால், என்னை சந்திக்காமல் தூரத்தில் அமர்ந்திருப்பது அவர்களுக்கு மிகவும் கடினமானதாக ஆகிவிட்டது. இறுதியில் இந்த வலுவான ஈர்ப்பு, அன்பு மற்றும் கலப்பற்ற தன்மையின் விளைவு இவ்வாறு இருந்தது. காபூல் பிரதேசத்திலிருந்து அனுமதி கிடைக்க வேண்டும் என்பதற்காக ஹஜ் செய்வதற்கு உறுதியாக எண்ணினார்கள். காபூலின் அமீரிடம் இந்த பயணத்திற்காக விண்ணப்பித்தார்கள். காபூலின் அமீரின் பார்வையில் ஆலிமாகவும், எல்லா ஆலிம்களின் தலைவராகவும் அவர்கள் கருதப்பட்டார்கள். இதனால் அவர்களுக்கு அனுமதி கிடைத்தது மட்டுமல்லாமல் உதவித் தொகையாக கொஞ்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. அவர்கள் அனுமதியை பெற்று காதியானுக்கு வந்து சேர்ந்தார்கள்.

எனது உயிர் எவன் கையில் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! என்னை அவர் சந்தித்த போது நான் அவர்களை என்னை பின்பற்றுவதிலும், எனது வாதத்தை உண்மைப் –படுத்துவதிலும் தன்னையே மாய்த்துக் கொண்டவராகக் கண்டேன். அதை விட அதிகமாக தன்னை அர்ப்பணிப்பது மனிதனுக்கு இயலாத காரியமாகும். வாசனை திரவியத்தால் நிரம்பியுள்ள ஒரு குப்பியைப் போன்று அவர்கள் என் மீதுள்ள அன்பால் நிரம்பியிருப்பதை நான் கண்டேன். எவ்வாறு அவரது முகம் ஒளிமயமாக இருக்கின்றதோ அவ்வாறே அவரது உள்ளமும் ஒளியமயமானதாக இருப்பது எனக்கு தெரிகின்றது. உண்மை –யிலேயே அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருந்தார்கள். இந்த பெருமை கொள்ளத்தக்க இப்பண்பு காலம் சென்ற பெருந்தகை அவர்களிடம் காணப்பட்டது.

மேலும் உண்மையிலேயே இறைவனுக்கு அஞ்சி தனது தக்வா மற்றும் இறைவனுக்கு கட்டுப்படுவதை அதன் உச்சம் வரை கொண்டு செல்லக் கூடியவர்களாகவும், இறைவனை மகிழ்விக்கவும், திருப்திப்படுத்தவும், தம் உயிர், கண்ணியம், பொருள் ஆகியவற்றை

உபயோகமற்ற ஒரு பொருளைப் போல் தம் கைகளால் தூக்கி எறிய ஆயத்தமாகக்கூடிய உண்மையாளர்களில் ஒருவராக அவர்கள் இருந்தார்கள். அவர்களது ஈமானின் ஆற்றல் எந்த அளவு வளர்ச்சி அடைந்திருந்தது என்றால் நான் அதனை பெரிதிலும் பெரிதான மலைகளுடன் ஒப்பிட்டுக் கூறினாலும் எனது ஒப்புமை குறையுள்ளதாக இருந்து விடக் கூடாதே என்று நான் அஞ்சுகின்றேன். பெரும்பாலான மக்கள் பைஅத் செய்திருந்தாலும் கூட எனது வாதத்தை உண்மைப்படுத்தியிருந்தாலும் கூட மார்க்கத்தை விட உலகிற்கு முன்னுரிமை வழங்குகின்ற விஷத்தன்மை கொண்ட விஷயங்களிலிருந்து அவர்கள் முற்றிலுமாக இரட்சிப்பைப் பெறவில்லை. மாறாக, உலகின் கலப்படம் அவர்களிடம் சற்று எஞ்சி விடுகின்றது. மறைமுகமான ஒரு கருமித்தனம் – அது அவர்களது உயிருடன் தொடர்புடையதாகவோ அல்லது அவர்களது கண்ணியம், பொருள் மற்றும் அவர்களது ஒழுக்க நிலைமைகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும் அவை முழுமையடையாத அவர்களது ஆன்மாக்களில் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே அவர்கள் தொடர்பாக எப்போதும் எனது நிலை எவ்வாறு இருந்து வருகிறது என்றால், ஏதாவதொரு மார்க்கத் தொண்டை அவர்களிடம் ஒப்படைக்கும்போது அவர்களுக்கு சோதனையாக அமைந்து விடக்கூடாதே என்றும் இந்த தொண்டினை தங்கள் மீதுள்ள ஒரு சுமையாக கருதியவாறு தங்களது பைஅத் உடன்படிக்கையை அவர்கள் முறித்து விடக்கூடாதே என்றும் நான் அஞ்சுகின்றேன். ஆனால் நான் எந்த சொற்களால் இந்த பெருந்தகை மர்ஹூம் அவர்களை புகழ்ந்து கூறுவேன்? பயனற்ற பொருள் தூக்கி எறியப்படுவது போன்று என்னை பின்பற்றி நடப்பதில் அவர்கள் தமது பொருளையும், கண்ணியத்தையும், உயிரையும் தூக்கி எறிந்து விட்டார்கள்.

பெரும்பாலான மக்களின் ஆரம்பமும் முடிவும் ஒன்று போல் இல்லாததை என்னால் பார்க்க முடிகிறது. சிறியதொரு தடுமாற்றம்

அல்லது ஷய்த்தான் ஏற்படுத்தும் சந்தேகங்கள் அல்லது தீய நட்பினால் அவர்கள் வீழ்ந்து விடுகின்றனர். ஆனால், இந்த வீரமிக்க ஆண் மகனான மர்ஹூம் அவர்களின் உறுதியான நிலைநிற்றல் பற்றிய விபரத்தை எந்த சொற்களால் நான் எடுத்துக் கூறுவேன்? அவர்கள் நிச்சய உறுதியின் ஒளியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டேயிருந்தார்கள். அவர்கள் என்னிடம் வந்ததும் எந்த ஆதாரங்களால் தாங்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டீர்கள்? என்று நான் அவர்களிடம் கேட்டேன்.

அதற்கு அவர்கள் எல்லாவற்றிற்கும் முதலாவதாக திருக்குர்ஆன் உங்கள் பக்கம் நான் வருவதற்கு எனக்கு வழிகாட்டியது என்று கூறினார்கள். மேலும் நான் எத்தகைய இயல்பையுடைய மனிதனாக இருந்தேன் என்றால் நாம் வாழ்ந்து வருகின்ற இந்த காலத்தில் உள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் இஸ்லாமிய ஆன்மீகத்தை விட்டும் விலகி வழிதவறி வெகு தொலைவில் சென்று விட்டனர் என்ற முடிவுக்கு ஏற்கனவே நான் வந்திருந்தேன். நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று அவர்கள் தமது நாவால் கூறுகின்றனர்.

ஆனால் அவர்களது உள்ளம் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர்களது கூற்றுக்களும் செயல்களும் பித்அத் (மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவை) ஷிர்க் மற்றும் பல வகையான பாவங்களால் நிரம்பியுள்ளன. அவ்வாறே (இஸ்லாத்தின் மீது) வெளிப்புற தாக்குதல்களும் கூட அதன் உச்சத்தை அடைந்திருந்தன. பெரும்பாலான உள்ளங்கள் இருள்படிந்த திரைகளில் அவை மரணித்து விட்டன என்பது போன்று உணர்வில்லாமலும் அசைவற்றும் கிடக்கின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அந்த மார்க்கமும் தக்வாவும் சஹாபா ரலியல்லாஹு அன்ஹும் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதன் போதனைகளும் அந்த தூய கூட்டத்தினருக்கு

கிடைந்திருந்த அந்த உண்மையும் உறுதியும் இப்போது அதிகமான கவனமின்மையின் காரணமாக இல்லாமல் மறைந்து விட்டன. மேலும் மிக அரிதாகவே அவை தென்படுகின்றன. மிக அரிதாகக் காணப்படுதல் என்பது இல்லாமைக்குச் சமமாகும். அவ்வாறே ‘இஸ்லாம்’ மரணித்த நிலையை அடைந்திருப்பதை நான் பார்க்கின்றேன்.

மறைவான திரையிலிருந்து இறைவன் சார்பாக மார்க்கத்தை சீர்திருத்துகின்ற ஒருவர் பிறக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று நான் கருதினேன். இன்னும் சொல்வதென்றால், இந்த காலம் நெருக்கடியான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது என்பதில் நாள்தோறும் எனக்கு நிம்மதியற்ற நிலை இருந்து வந்தது.

இந்த நாட்களில் ஒரு நபர் பஞ்சாப் மாநிலத்திலுள்ள காதியானில் தானே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் புரிந்துள்ளார் என்ற இந்த ஓசை எனது காதுகள் வரை எட்டியது. நான் மிகவும் முயற்சி செய்து தங்களால் எழுதப்பட்ட சில நூல்களை என்னை வந்தடையும்படி செய்தேன். நீதியின் பார்வையுடன் அவற்றை சிந்தித்துப் பார்த்து அவை திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப இருக்கின்றனவா? என்று பார்த்தேன். திருக்குர்ஆன் அவற்றின் ஒவ்வொரு கூற்றையும் உண்மைப் –படுத்துவதை நான் கண்டேன். முதன் முதலில் என்னை இதன் பக்கம் இழுத்துக் கொண்டு வந்த விஷயம் இதுவாகும்.

அதாவது ஒருபுறம் திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள்; அவர்கள் மீண்டும் இவ்வுலகிற்கு திரும்ப வர மாட்டார்கள் என்று கூறுவதை நான் பார்த்தேன். மறுபுறம் அது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இயக்கத்திற்கு எதிரில் இந்த உம்மத்திற்கு, அதன் துன்பம் மற்றும் வழிகேட்டின் நாட்களில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இயக்கத்தை நிலைநாட்டி அதை தொடர்ந்து நீடித்திருக்கும்படி செய்வதற்காக அனுப்பப்பட்ட

கலீஃபாக்களை போன்ற கலீஃபாக்களை அந்த இறைவன் இந்த உம்மத்திற்கும் அனுப்பிக் கொண்டிருப்பான் என்று திருக்குர்ஆன் இந்த உம்மத்திற்கு வாக்குறுதி வழங்கியிருக்கின்றது.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தொடரில் இறுதியில் பிறந்த கலீஃபாவாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இருந்தது போன்றே, மேலும் அவர்கள் வாளேந்தி போர் செய்ய நியமிக்கப்படாதது போன்றே அவர்களது பண்புகளை உடைய ஒருவர் இறுதி காலகட்டத்தில் இந்த உம்மத்திலும் தோன்ற வேண்டும் என்பது இறைவனின் வார்த்தைகளிலிருந்து கண்டிப்பாக புரிந்து கொள்ளப்படுகின்றது. இவ்வாறு ஞானமுள்ள மற்றும் அறிவு சார்ந்த பல சொற்களை நான் அவர்களது நாவிலிருந்து கேட்டேன். அவற்றில் சில என் நினைவில் இருந்தன. சிலவற்றை நான் மறந்து விட்டேன். பல மாதங்கள் வரை அவர்கள் என்னுடன் இருந்தார்கள். நான் கூறிய விஷயங்களில் அவர்களுக்கு எந்த அளவுக்கு ஆர்வம் ஏற்பட்டது என்றால் அவர்கள் ஹஜ்ஜிற்கு செல்வதை விட நான் கூறிய விஷயங்களுக்கு முன்னுரிமை வழங்கினார்கள்.

ஈமானை வலுப்படுத்துகின்ற, அந்த அறிவின் தேவை உடையவனாக நான் இருக்கிறேன். மேலும் அறிவானது செயலை விட மேலானது என்று அவர்கள் கூறினார்கள். அவர்கள் ஆர்வமாய் இருப்பதைக் கண்டு என்னால் இயன்றவரை என்னிடமிருந்த ஞானங்களை அவர்களது உள்ளத்தில் வைத்தேன். அதாவது பாருங்கள். இந்த விஷயம் மிகவும் தெளிவாக இருக்கின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

اِنَّاۤ اَرۡسَلۡنَاۤ اِلَیۡکُمۡ رَسُوۡلًا ۬ۙ شَاهِدًا عَلَیۡکُمۡ کَمَاۤ اَرۡسَلۡنَاۤ
اِلٰی فِرۡعَوۡنَ رَسُوۡلًا (திருக்குர்ஆன் 73:16)

நாம் ஃபிர்அவ்னிடம் ஒரு தூதரை அனுப்பியது போன்று நிச்சயமாக உங்களுக்கு சாட்சியாக இருக்கின்ற அதாவது நீங்கள்

எந்த அளவு மோசமான நிலைமையில் இருக்கின்றீர்கள் என்பதற்கு சாட்சியாக இருக்கின்ற – ஒரு தூதரை உங்களிடம் அனுப்பியுள்ளோம்.

இந்த வசனத்தில் அல்லாஹ் நமது நபி (ஸல்) அவர்களை மூஸாவிற்கு ஒப்பானவராக ஆக்கியுள்ளான். பிறகு அந்நூர் அதிகாரத்தில் முஹம்மதிய்ய கிலாஃபத்தின் தொடரை மூஸா (அலை) அவர்களின் கிலாஃபத் தொடருக்கு ஒப்பானதாக ஆக்கி –யுள்ளான். எனவே, குறைந்தபட்ச ஒப்புமைக்கு உள்ள உரிமையை நிறைவேற்றுவதற்கு இரண்டு தொடர்களின் ஆரம்பத்திலும் இறுதியிலும் மிகப்பெரும் ஒப்புமை இருக்க வேண்டியது அவசியமானதாகும். அதாவது இந்த தொடரின் ஆரம்பத்தில் மூஸாவுக்கு ஒப்புமையானவரும் இந்த தொடரின் இறுதியில் ஈஸாவுக்கு ஒப்பானவரும் இருக்க வேண்டியது அவசியமாகும். நமக்கு எதிரியாக இருக்கின்ற ஆலிம்கள் இஸ்லாமிய சமுதாயத்தின் இந்த தொடர் மூஸாவுக்கு ஒப்பானவனருடன் ஆரம்பமானது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவர்கள் முழுக்க முழுக்க பிடிவாதத்துடன் இந்த தொடரின் முடிவு ஈஸாவிற்கு ஒப்பானவரின் மூலம் ஏற்படும் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. இந்நிலையில் அவர்கள் தெரிந்து கொண்டே திருக்குர்ஆனை கைவிட்டு விடுகின்றனர். திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மூஸாவிற்கு ஒப்பானவராக ஆக்கியிருப்பது உண்மை அல்லவா? திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மட்டும் மூஸாவிற்கு ஒப்பானவராக ஆக்கவில்லை. மாறாக, (திருக்குர்ஆன் 24:56) كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கியது போன்று என்ற இந்த வசனத்தில் அது முஹம்மதிய்ய கிலாஃபத்தின் தொடர் முழுவதையும் மூஸாவின் கிலாஃபத்திற்கு ஒப்பானதாக ஆக்கி விட்டது.

எனவே இந்நிலையில் உறுதியாக இஸ்லாமிய கிலாஃபத்தின் தொடரின் இறுதியில் ஈஸாவிற்கு ஒப்பானவராக இருக்கின்ற ஒருவர்

பிறக்க வேண்டியது கட்டாயமானதாகும். ஏனெனில் ஆரம்பத்திலும் இறுதியிலும் இருக்கின்ற ஒப்புமை நிரூபணம் ஆவதன் மூலம் முழு தொடரின் ஒப்புமையும் நிரூபணமாகி விடுகின்றது. எனவே தான் இறைவனின் தூய நபிமார்களின் வேதங்களில் பல இடங்களில் இந்த இரண்டு ஒப்புமைகள் குறித்து குறிப்பாக வலியுறுத்தி கூறப்பட்டிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், முதலிலும் இறுதியிலும் இருப்பவர்களது எதிரிகளின் ஒப்புமையும் கூட நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக, அபூ ஜஹிலை ஃபிர்அவ்னுக்கு ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கின்றது. மேலும் இறுதியில் தோன்றிய மஸீஹின் எதிரிகள் இறைவனின் கோபத்திற்கு ஆளான யூதர்களுடன் ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கின்றனர்.

كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ என்ற வசனத்திலும் கூட இதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த உம்மத்தின் இறுதி கலீஃபா எத்தகையதொரு காலத்தில் தோன்றுவார் என்றால் அதன் கால அளவு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றிய அதே கால அளவைக் கொண்டதாக இருக்கும். அதாவது பதினான்காவது நூற்றாண்டில் அவர் தோன்றுவார். ஏனென்றால், ‘கமா’ (போன்று) என்ற சொல்லுக்கு எந்த ஒப்புமை தேவைப்படுகிறதோ அதில் காலத்தின் ஒப்புமையும் அடங்கும். யூதர்களின் எல்லா பிரிவுகளும் இவ்விஷயத்தில் ஒருமித்த கருத்தை கொண்டிருக்கின்றன. அதாவது மர்யமின் மகன் ஈஸா அவர்கள் தாம் நபி என்று வாதம் செய்த அந்த காலம் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய காலத்திலிருந்து பதினான்காம் நூற்றாண்டாக இருந்தது.

கிறித்தவர்களுள் புரட்டஸ்டன்ட் கொள்கையை உடையவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு பதினைந்தாவது

நூற்றாண்டின் ஒரு சில வருடங்கள் கழிந்திருந்த நிலையில் தான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தாம் நபி என்று வாதம் செய்ததாக கூறுகின்றனர்.

புரட்டஸ்டன்ட்களின் இந்த கூற்றிற்கு யூதர்களின் ஒருமித்த கருத்தை கொண்டிருக்கின்ற கூற்றுக்கு எதிரில் எந்த மதிப்பும் இல்லை. இதன் நம்பகத்தன்மையை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் இந்த அளவு சிறிய வித்தியாசம் இருப்பதன் காரணமாக ஒப்புமையில் எந்த வேறுபாடும் வராது. மாறாக, ஒப்புமை ஒரு சிறிய வித்தியாசத்தை கொண்டதாக இருக்கும். அவ்வாறே திருக்குர்ஆனின் அடிப்படையில் முஹம்மதிய்ய தொடருக்கு ஒவ்வொரு நன்மையிலும் தீமையிலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடருடன் ஒப்புமை இருக்கின்றது. இதன் பக்கமே இந்த வசனங்களில் சுட்டிக் காட்டப்பட்டிருக் –கின்றது. அதாவது ஓர் இடத்தில் யூதர்கள் தொடர்பாக فَيَنْظُرَ كَيْفَ تَعْمَلُوْنَ (7:130) அதாவது நீங்கள் எவ்வாறு செயல்படு –கின்றீர்கள் என்பதனை அவன் பார்த்துக் கொள்வான் என்றும், பிறிதோரிடத்தில் முஸ்லிம்கள் தொடர்பாக لِنَنْظُرَ كَيْفَ تَعْمَلُوْنَ (10:15) அதாவது பிறகு நீங்கள் எவ்வாறு செயல்படுகின்றீர்கள் என்பதனை பார்ப்பதற்காக என்றும் எழுதப்படிருக்கின்றது.

இந்த இரு வசனங்களின் பொருள் அதாவது, இறைவன் உங்களுக்கு கிலாஃபத்தையும் ஆட்சியையும் வழங்கிய பிறகு நீங்கள் உண்மையில் நிலைத்திருக்கின்றீர்களா? இல்லையா? என்பதை பார்ப்பான் என்பதாகும். இந்த வசனங்களில் யூதர்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள அதே சொற்கள் முஸ்லிம்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அதாவது, இறைவன் ஒரே வசனத்தின் கீழ் இந்த இருவரையும் வைத்துள்ளான். இறைவன் சில முஸ்லிம்களை யூதர்கள் என்று கூறுகின்றான். இந்த உம்மத்தைச் சார்ந்த ஆலிம்களும் கூட யூதர்களின் ஆலிம்கள் செய்த அதே

தீமைகளை செய்வர் என்பதை தெளிவாக அவன் சுட்டிக் காட்டி விட்டான். எனவே, இவ்விஷயத்திற்கு இதை விட மேலான வேறு என்ன ஆதாரம் இருக்க முடியும்? இதே கருத்து غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ (1:7) (உனது கோபத்திற்கு ஆளானவர் –களின் வழியில் அல்லாமல்) என்ற வசனத்திலும் கூட சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. ஏனென்றால், எல்லா திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள் என்பது இந்த வசனத்தில் யூதர்களைப் பற்றியே ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மறுத்ததன் காரணமாக அவர்கள் மீது இறைவனின் கோபம் இறங்கியது. ஆதாரப்பூர்வமான நபிமொழிகளிலும் இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள் யூதர்கள் என்றே கூறப்பட்டிருக்கின்றது. அவர்கள் இவ்வுலகிலேயே இறைவனின் கோபத்திற்கு ஆளாகி விட்டனர். யூதர்கள் இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது நாவால் அவர்கள் சபிக்கப்பட்டுள்ளனர் என்பதற்கு திருக்குர்ஆனும் கூட சாட்சி பகர்கின்றது.

எனவே, உமது கோபத்திற்கு ஆளானவர்கள் என்ற சொற்கள் உறுதியாகவும் வலுவாகவும் யூதர்களையே குறிப்பிடு –கின்றது. அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்து கொல்ல விரும்பினர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கொல்ல விரும்பிய அதே யூதர்களாக நாங்கள் ஆகிவிடக் கூடாது என்ற துஆவை இறைவன் இப்போது கற்று தந்திருப்பது இந்த முஹம்மதிய்ய உம்மத்திலும் கூட ஒரு ஈஸா பிறக்க இருக்கின்றார் என்பதை தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. அவ்வாறு இல்லையென்றால் இந்த துஆவிற்கான என்ன தேவை இருந்தது?

மேற்கண்ட வசனங்களிலிருந்து ஏதாவதொரு காலத்தில் சில முஸ்லிம் ஆலிம்கள் முற்றிலுமாக யூத ஆலிம்களுக்கு ஒப்பானவர்களாக ஆகிவிடுவர். மேலும் யூதர்களாகவே ஆகிவிடுவர் என்று நிரூபிக்கப்பட்டிருக்கும்போது அந்த யூதர்களை சீர்திருத்துவதற்காக இஸ்ரவேல் சமுதாயத்தைச் சார்ந்த (அதே) ஈஸா (அலை) அவர்கள் விண்ணிலிருந்து இறங்குவார்கள் என்று கூறுவது முற்றிலும் அறிவுக்கு புறம்பான விஷயமாக இருக்கின்றது.

ஏனென்றால், முதலாவதாக, வெளியிலிருந்து ஒரு நபி வருவதனால் கத்மே நுபுவ்வத்தின் முத்திரை உடைகின்றது. திருக்குர்ஆன் தெளிவான சொற்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக – நபிமார்களின் முத்திரையாக இருக்கின்றார்கள் என்று கூறுகின்றது. அது மட்டுமின்றி, திருக்குர்ஆனின் அடிப்படையில் இந்த சமுதாயம் தலை சிறந்த சமுதாயம் என்று கூறப்பட்டிருக்கின்றது. யூதர்களாக ஆகுவதற்கு இந்த உம்மத் தேவைப்படுகின்றது. ஆனால், (அவர்களை சீர்திருத்துவதற்காக) ஈஸா (இந்த உம்மத்திலிருந்து தோன்றாமல்) வெளியிலிருந்து வர வேண்டும் என்(று நினைப்)பதை விட அதிகமாக அவமரியாதைக்குரிய விஷயம் வேறு எதுவும் இருக்க முடியாது.

ஒரு காலத்தில் இந்த உம்மத்தைச் சார்ந்த பெரும்பாலான ஆலிம்கள் யூதர்களாக ஆகிவிடுவர். அதாவது யூதர்களின் இயல்பையுடையவர்களாக ஆகிவிடுவர் என்பது உண்மையாக இருந்தால், பிறகு அந்த யூதர்களை சரி செய்வதற்கு ஈஸா வெளியிலிருந்து வர மாட்டார் என்பதும் உண்மையாகும். மாறாக, எவ்வாறு சில நபர்களுக்கு 'யூதர்கள்' என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றதோ அவ்வாறே அதற்கு எதிரில் ஒரு நபருக்கு 'ஈஸா' என்றும் பெயர் வைக்கப்படும். திருக்குர்ஆன் மற்றும் நபிமொழி ஆகிய இரண்டுமே இந்த உம்மத்தை சார்ந்த சில நபர்களுக்கு யூதர்கள் என்று பெயர் வைத்திருக்கின்றது.

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ அதாவது 'உமது கோபத்திற்கு ஆளானவர்கள் வழியில் அல்ல' என்ற வசனத்தில் இதுவே தெரிய வருகின்றது. ஏனென்றால், இந்த உம்மத்தைச் சார்ந்த சில நபர்கள் யூதர்களாக ஆக வேண்டியது இல்லாமல் இருந்திருந்தால் பிறகு மேற்கண்ட துஆ ஒருபோதும் நமக்கு கற்றுத் தரப்பட்டிருக்காது. உலகில் இறைவனின் வேதங்கள் வந்த நாளிலிருந்து அவர்களைப் பற்றி இது போன்ற சொற்றொடர்களை இறைவன் பயன்படுத்துவதை நாம் பார்க்க முடிகின்றது. உதாரணமாக, நீங்கள் விபச்சாரம் செய்ய வேண்டாம் அல்லது திருட வேண்டாம் அல்லது யூதர்களாக ஆகிவிட வேண்டாம் என்று ஏதாவதொரு சமுதாயத்தை ஒன்றை செய்வதிலிருந்து இறைவன் தடை செய்கின்றபோது அவர்களில் சிலர் இந்த குற்றச் செயல்களை செய்வதில் ஈடுபடுவர் என்ற முன்னறிவிப்பு அந்த தடைக்குள் மறைந்திருக்கின்றது.

ஒரு ஜமாஅத் அல்லது ஒரு சமுதாயத்தை, 'செய்யக் கூடாது' என ஒரு செயலிலிருந்து இறைவன் தடுத்திருக்கும் நிலையில் அவர்கள் அனைவரும் அந்த செயலைச் செய்வதிலிருந்தும் விலகி இருந்ததாக எந்தவொரு நிகழ்வையும் உலகிலுள்ள எவராலும் எடுத்துக் காட்ட முடியாது. மாறாக, கண்டிப்பாக சிலர் அந்த செயலைச் செய்கின்றனர்.

உதாரணமாக, நீங்கள் தவ்ராத்தில் மாற்றம் செய்யக்கூடாது என்று யூதர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான். இந்த கட்டளையின் விளைவு எவ்வாறு வெளிப்பட்டது என்றால் சில யூதர்கள் தவ்ராத்தை மாற்றி விட்டனர். ஆனால் திருக்குர்ஆனில் இறைவன் முஸ்லிம்களுக்கு நீங்கள் திருக்குர்ஆனில் மாற்றம் செய்யாதீர்கள் என்று எங்குமே கட்டளையிடவில்லை. மாறாக, إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحٰفِظُوْنَ (15:10) நாமே திருக்குர்ஆனை இறக்கினோம்; மேலும் நாமே இதனை பாதுகாப்போம் என்று அவன் கூறியுள்ளான். இதன் காரணமாகவே திருக்குர்ஆன் மாற்றப்படுவதி–லிருந்து பாதுகாப்பாக இருந்து கொண்டிருக்கிறது.

சுருக்கமாக, இது திட்டவட்டமான, உறுதியான, எல்லாராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க இறைவனின் நடைமுறையாக இருக்கின்றது. அதாவது இறைவன் ஒரு வேதத்தில் ஒரு ஜமாஅத்தை அல்லது ஒரு சமுதாயத்தை ஒரு தீய செயலிலிருந்து தடுக்கின்றான் அல்லது நல்ல பணியை செய்யக் கட்டளை இடுகின்றான் என்றால் சில மக்கள் அவனது கட்டளையை எதிர்க்கவும் செய்வர் என்பது அவனது தொன்மையான அறிவில் இருக்கின்றது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் ஏற்றி கொல்ல விரும்பிய யூதர்களின் மீது இவ்வுலகிலேயே இறைவனின் கோபத்தின் அடி விழுந்தது; எனவே இறைவன் சூரா ஃபாத்திஹாவில் நீங்கள் யூதர்களைப் போன்று ஆகாமலிருப்பதற்காக துஆ செய்யும்படி கூறியுள்ளான். இந்த உம்மத்திலுள்ள 'உம்மத்தின் ஆலிம்கள்' என்று அழைக்கப்படும் சிலர் தம் தீய செயலின் காரணமாகவும், காலத்தின் மஸீஹைப் பொய்யாக்கியதன் விளைவாகவும் யூதர்களின் ஆடையை அணிந்து கொள்வர் என்பது இறை ஞானத்தின் அடிப்படையில் விதிக்கப்பட்டிருந்தது என்பதை இதிலிருந்து தெளிவாகப் புரிய முடிகிறது. அவ்வாறு இல்லையெனில் ஒரு வீணான துஆவைக் கற்றுத் தருவதற்கான எந்த தேவையும் இறைவனுக்கு இல்லை.

இந்த உம்மத்தைச் சேர்ந்த ஆலிம்கள் இஸ்ரவேல் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற அதே யூதர்களாக ஆக முடியாது என்பதும் ஒரு நீண்ட காலத்திற்கு முன்னரே இந்த உலகை விட்டு சென்று விட்ட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இந்த ஆலிம்கள் சிலுவையில் அறைந்து கொல்ல முடியாது என்பதும் வெளிப்படையானதாகும்.

ஏனென்றால் இப்போது இந்த காலத்தில் பூமியில் அந்த யூதர்களும் இல்லை. அந்த ஈஸாவும் இல்லை. எனவே இந்த வசனத்தில் வருங்காலத்தில் நடக்க இருக்கின்ற ஒரு சம்பவம் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. இறுதி காலத்தில் இந்த உம்மத்திலிருந்து

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பண்புகளை பெற்றிருக்கின்ற ஒருவர் தோன்றுவார். அவரது காலத்தில் உள்ள இஸ்லாத்தைச் சேர்ந்த சில ஆலிம்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது துன்பம் இழைத்த அந்த யூத ஆலிம்களைப் போன்றே அவர் மீது துன்பமிழைப்பர். அவரது மகிமைக்கு மாற்றமாக தீய சொற்களை கூறுவர் என்று கூறுவதே இவ்வசனத்தின் நோக்கமாகும். மாறாக, நம்பத்தகுந்த ஹதீஸ்களில் இருந்து யூதர்களாக ஆகிவிடுதல் என்பது யூதர்களின் தீய ஒழுக்கங்கள் மற்றும் தீய பண்புகளையுடைய ஆலிம்கள் இஸ்லாத்தில் உருவாகி விடுவார்கள் என்றே புரிய முடிகிறது. இந்த ஆலிம்கள் வெளிப்படையாக முஸ்லிம்கள் என்று அழைக்கப்பட்டாலும் அவர்களது உள்ளம் கடினமாகி ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு துன்பமிழைத்து இறை கோபத்திற்கு ஆளான அந்த யூதர்களின் பண்புகளைப் பெற்று விடுவார்கள். முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற இந்த மக்களே யூதர்களாக ஆவார்கள். ஆக, இந்த உம்மத்தைச் சார்ந்தவர்கள் யூதர்களாக ஆவதற்கென்று நியமிக்கப்படும்போது அந்த யூதர்களை சரி செய்ய மஸீஹ் வெளியிலிருந்து வருவார் எனக் கூறப்பட்டால் இந்த கருணை காட்டப்பட்ட உம்மத்திற்கு அதனால் அவமரியாதை ஏற்படாதா?

இது திருக்குர்ஆனின் நோக்கத்திற்கு முற்றிலும் எதிரான விஷயமாகும். திருக்குர்ஆன் முஹம்மதிய்ய நபித்துவத்தின் தொடரை தீமையில் மட்டும் அல்லாமல் அதன் ஒவ்வொரு நன்மையிலும் தீமையிலும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடருக்கு ஒப்பானதாக ஆக்கியுள்ளது. இதைத் தவிர, غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ உனது கோபத்திற்கு ஆளானவர்கள் வழியில் அல்ல (1:7) என்ற வசனத்தின் தெளிவான நோக்கமும் இதுவேயாகும். அதாவது அவர்களது சீர்திருத்தத்திற்காக வரவிருக்கின்ற இறைவனால் நியமிக்கப்பட்டவரை அற்பமான மற்றும் மறுக்கின்ற பார்வையால் அவர்கள் பார்ப்பார்கள். அவரை அவர்கள் பொய்ப்படுத்துவர்.

அவரை கொலை செய்ய விரும்புவர். தங்களது கோபத்தின் ஆற்றல்களை அவரை எதிர்ப்பதற்காக பொங்கி எழச் செய்வர். எனவே அவர்கள் வானத்தில் இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள் என்று அழைக்கப்படுவர். இதனாலேயே அவர்கள் யூதர்கள் என்று கூறப்பட்டிருக்கின்றனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை பொய்ப்படுத்திய அந்த யூதர்களை போன்றே அவர்கள் செயல்பட்டனர், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை பொய்யாக்கியதன் இறுதி விளைவாக யூதர்கள் மீது பிளேக் நோய் தண்டனையாக இறங்கியது. அதற்கு பிறகு ரோமாபுரியின் அரசனான டைட்டசு மூலமாக அவர்கள் முற்றிலுமாக அழிக்கப் –பட்டனர். எனவே غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ என்ற வசனத்திலிருந்து உலகிலேயே இறைகோபம் அவர்கள் மீது இறங்கும் என்பது தெளிவாக தெரிகிறது. ஏனென்றால், மறுமையில் எல்லா காஃபிர்களும் இறைவனின் கோபத்திற்கு ஆளாகியிருப்பர்.

எனவே, மறுமையைப் பொருத்தவரை எல்லா காஃபிர்களுமே இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்களாகவே இருப்பர். பிறகு இந்த வசனத்தில் குறிப்பாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்து கொல்ல விரும்பிய அந்த யூதர்களுக்கு இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள் என்ற பெயரை வைப்பதற்கான காரணம் என்ன? இன்னும் சொல்வதென்றால், அந்த யூதர்கள் அவர்களது சிந்தனைக் –கேற்ப அவரை சிலுவையில் அறைந்து கொன்று விட்டதாகவே கருதினர். எனவே யூதர்கள் மீது இந்த உலகிலேயே இறைவனின் கோபம் இறங்கியதன் காரணமாகத்தான் அந்த யூதர்களுக்கு, ‘இறைவனின் கோபத்திற்கு ஆளானவர்கள்’ என்று குறிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த காரணத்தினாலேயே சூரா ஃபாத்திஹாவில், ‘இறைவா! அதே யூதர்களாக நாங்கள் ஆகிவிடக் கூடாது. அவ்வாறு

நீ செய்வாயாக' என்ற துஆ இந்த உம்மத்திற்கு (அதாவது முஸ்லிம்களுக்கு) கற்றுத் தரப்பட்டிருக்கின்றது. இது ஒரு முன்னறிவிப்பாகும். இந்த உம்மத்தில் மஸீஹ் தோன்றும்போது அவருக்கு எதிரில் இந்த உலகிலேயே இறைவனின் கோபம் இறங்கும். 'அந்த யூதர்களும் உருவாகி விடுவர்' என்பதே இந்த முன்னறிவிப்பின் கருத்தாகும். உங்களிலிருந்தும் ஒரு மஸீஹ் தோன்றுவார் என்பது விதிக்கப்பட்டுள்ளது. அவருக்கு எதிரில் யூதர்களும் தோன்றுவர். 'அவர்கள் மீது உலகிலேயே இறைவனின் கோபம் இறங்கும்' என்பதே இந்த துஆவிலுள்ள கருத்தாகும். எனவே, நீங்கள் அத்தகைய யூதர்களாக ஆகாமலிருப்பதற்காக நீங்கள் துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நிராகரிப்பாளரும் கியாமத்தில் இறை கோபத்திற்கு ஆளாகக் கூடியவராக இருக்கின்றார் என்ற விஷயம் நினைவில் கொள்ளத்தக்கதாகும். ஆனால் இந்த இடத்தில் இறைகோபம் என்பதன் கருத்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதற்காக இவ்வுலகிலேயே அவர்கள் மீது இறங்கிய இறைவனின் கோபமாகும். திருக்குர்ஆனின் வசனம் கூறுகின்றபடி, யூதர்கள் தம் நாவினால் 'சபிக்கப்பட்டவர்கள்' என அழைத்தனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குத் துக்கத்தைக் கொடுத்தனர். அத்தகைய யூதர்களின் மீது இவ்வுலகத்திலேயே தண்டனையின் அடி விழுந்தது.

கடுமையான பிளேக் நோயின் பாதிப்பிற்கு ஆளாகி அவர்கள் முதலில் அழிக்கப்பட்டனர். அதற்கு பிறகு எஞ்சி இருந்தவர்கள் ரோமானிய அரசரான டைட்டசுவின் கைகளால் கடுமையான தண்டனை வழங்கப்பட்டு நாட்டிலிருந்து சிதறுண்டு போகுமாறு விரட்டப்பட்டனர். எனவே, 'எவர்கள் இறைவனின் கோபத்திற்கு ஆளானார்களோ' அவர்களைத் தவிர என்ற வார்த்தைகளில் இந்த மகத்தான முன்னறிவிப்பு மறைந்திருக் –கின்றது. அதாவது முஸ்லிம்களில் எவர்கள் யூதர்கள் என்று

கூறப்பட்டிருக்கின்றனரோ அவர்களும் கூட ஒரு மஸீஹை பொய்ப்படுத்துவர். அவர் அந்த முதலாவது மஸீஹின் பண்புகளைக் கொண்டவராக வருவார். அதாவது அவர் ஜிஹாது செய்ய மாட்டார். வாளை ஏந்த மாட்டார். மாறாக, தூய போதனை மற்றும் வானத்தின் அடையாளங்கள் மூலமாக மார்க்கத்தை பரப்புவார். மேலும் இந்த இறுதி மஸீஹ் பொய்ப்படுத்தப்பட்ட பிறகும் கூட உலகில் பிளேக் நோய் பரவும். மேலும் துவக்க நாட்களிலிருந்து எல்லா நபிமார்களும் கூறி வந்திருந்த எல்லா விஷயங்களும் நிறைவேறும். இறுதி காலத்தில் மர்யமின் மகனான அதே ஈஸாதான் மீண்டும் உலகில் வருவார் என்ற இந்த சந்தேகம் திருக்குர்ஆனின் கருத்துக்கு முற்றிலும் எதிரானதாகும். எவர் திருக்குர்ஆனை இறையச்சத் –துடனும், நம்பிக்கையுடனும், நீதியுடனும், சிந்திக்கும் பார்வையுடனும் பார்க்கின்றாரோ அவருக்கு வல்லமையுள்ள கருணைமிக்க இறைவன் இந்த முஹம்மதிய்ய உம்மத்தை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் உம்மத்திற்கு முற்றிலும் ஒப்பானதாக ஆக்கியுள்ளான் என்பது வெட்ட வெளிச்சமாகி விடும். அதாவது அவர்களிடமிருந்த நல்ல விஷயங்களுக்கு ஒப்பான அதே நல்ல விஷயங்களையும் அவர்களிடமிருந்த தீய விஷயங்களுக்கு ஒப்பான அதே தீய விஷயங்களையும் அவன் இந்த உம்மத்தில் ஏற்படுத்தியிருக்கின்றான்.

இந்த உம்மத்தைச் சார்ந்த சிலர் இஸ்ரவேல் சந்ததிகளில் தோன்றிய நபிமார்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றனர். அவர்களில் சிலர் இறைவனின் கோபத்திற்கு ஆளாகி விட்ட யூதர்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றனர். இதற்கான உதாரணத்தை இவ்வாறு கூறலாம். நன்றாக அலங்கரிக்கப்பட்ட அறைகளையுடைய சிறந்த முறையில் கட்டப்பட்ட ஒரு வீடு இருக்கின்றது. அதன் அறைகளில் மகத்துவமிக்க நாகரீகமான மக்கள் அமர்வதற்கான இடம் இருக்கின்றது. அந்த வீட்டின் சில பகுதிகளில் கழிப்பிடங்களும், கழிவுநீர் செல்லும் வழியும் உள்ளன.

அந்த மாளிகையின் எஜமானர் இந்த மாளிகைக்கு எதிரில் இன்னொரு மாளிகையை கட்டவும், அந்த மாளிகையில் இருந்த அதே பொருட்களை இந்த மாளிகையிலும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார்.

அந்த இரண்டாவது மாளிகையே இஸ்லாத்தின் மாளிகை ஆகும். முதலாவது மாளிகை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடரின் மாளிகையாகும். இந்த இரண்டாவது மாளிகைக்கு எந்த விஷயத்திலும் முதல் மாளிகையின் தேவையுடையதல்ல. திருக்குர்ஆன் தவ்ராத்தின் தேவையைக் கொண்டிருக்கவில்லை. இந்த உம்மத்திற்கு எந்தவோர் இஸ்ராயீல் நபியின் தேவையுமில்லை.

இந்த உம்மத்தில் தோன்றுகின்ற ஒவ்வொரு முழுமை பெற்ற மனிதனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள்களிலிருந்து பலன் பெற்று வளர்ச்சி அடைந்தவராக இருக்கின்றார். அவருக்கு கிடைக்கின்ற வஹீ (இறையறிவிப்பு) முஹம்மதிய்ய வஹீயின் பிரதிபலிப்பாகவே இருக்கின்றது.

இதுவே சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டிய கருத்தாக இருக்கின்றது. நமது எதிரிகள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மீண்டும் கொண்டு வருவது பரிதாபத்திற்குரிய விஷயமாகும். இஸ்லாத்திற்கு பெருமைக்குரிய ஒப்புமை கிடைக்க வேண்டுமே தவிர இஸ்ரவேலர்களின் நபி வந்து இந்த உம்மத்தை சீர்திருத்த வேண்டும் என்ற இழி நிலை ஏற்படக் கூடாது என்பதை இவர்கள் புரிவதில்லை. அது தவிர இறைவேதத்தில் எந்தவொரு சான்றும் இருந்திராத இத்தகைய அபத்தமான கொள்கையின் மீது அழுத்தம் காட்டுவது மிகவும் வீணான முட்டாள்தனமான எண்ணமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வானத்தில் ஏறி செல்லுமாறு கோரிக்கை வைக்கப்பட்டது.

அது பற்றி திருக்குர்ஆனிலும் கூறப்பட்டிருக்கின்றது. (17:94) قُلْ سُبْحَانَ رَبِّيْ هَلْ كُنْتُ اِلَّا بَشَرًا رَّسُوْلًا ஆனால், என் இறைவன் தூய்மையானவன். நான் ஒரு மனிதனாகிய தூதரேயன்றி வேறு அல்லன் என்று கூறுவீராக என்று கூறியதன் மூலம் அந்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவ்வாறிருக்க, எந்த கோரிக்கையும் வைக்கப்படாத நிலையில் வானத்தில் ஏற்றுவதற்கு ஈஸா மனிதன் இல்லையா? பிறகு திருக்குர்ஆனிலிருந்து 'ரஃபஅ இலல்லாஹ்' அதாவது 'அல்லாஹ்வின் அளவில் உயர்த்தப்படுவது' என்பதே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அது ஓர் ஆன்மீக விஷயமாகும். அது அல்லாமல் 'ரஃபஅ இலஸ்ஸமாயி' அதாவது 'வானத்திற்கு உயர்த்தப்படுவது' என்பது நிரூபிக்கப்படவில்லை. எவர் சிலுவையில் தொங்கவிடப்படுகின்றாரோ அவருக்கு மற்ற நபிமார்களை போன்று இறைவனிடம் ஆன்மீக உயர்வு ஏற்படுவதில்லை என்பதே யூதர்களின் ஆட்சேபனையாக இருந்தது. இந்த ஆட்சேபனை அகற்றுவதற்கு தகுதியுடையதாக இருந்தது. எனவே திருக்குர்ஆன் இந்த ஆட்சேபனையை அகற்றியிருக்கிறது. அதாவது இந்த எல்லா சர்ச்சைகளுக்கான அடித்தளம் இதுவே ஆகும். அதாவது ஈஸா சிலுவையில் அறையப்பட்டார். எந்த நபர் சிலுவையில் அறையப்பவாரோ இறைவன் புறத்தில் அவர் ஈடேற்றம் பெற்றவரும் அல்ல.

எனவே ஈஸாவிற்கு ஏனைய நபிமார்களைப் போன்று ஆன்மீக உயர்வு எற்படவில்லை. எனவே அவர் முஃமினும் இல்லை. இரட்சிக்கப்பட்டவரும் இல்லை என்று யூதர்கள் கூறி வந்தனர். முதலில் இருக்கின்ற சர்ச்சைகளைத் தீர்த்து வைப்பது திருக்குர்ஆனின் பொறுப்பாக இருக்கின்றது. ஈஸா (அலை) அவர்களும் ஏனைய நபிமார்களை போன்று ஆன்மீகமாக உயர்த்தப்பட்டுள்ளார்கள் என்று அது தீர்ப்பு கூறிவிட்டது. இறைவன் இந்த சர்ச்சையைத் தீர்த்து வைக்க வேண்டியது இருந்தது.

இறைவன் இந்த வசனங்களில் இதற்கான தீர்ப்பைக் கூறாமல் இருந்தால் பிறகு எந்த இடத்தில் இந்த தீர்ப்பைக் கூறியுள்ளான் என்பதை நீங்களே கூறுங்கள்.

யூதர்களிடத்தில் ஆன்மீக உயர்வு பற்றி முரண்பாடு இருக்கையில், ஈஸா பூத உடலுடன் இரண்டாவது வானத்தில் அமர்ந்துள்ளார் என்று இறைவன் கூறுவது – நவூதுபில்லாஹ் – இவ்வாறான தவறான புரிதலை இறைவனுடன் தொடர்புபடுத்த முடியுமா? பூத உடலுடன் விண்ணிற்கு செல்வது இரட்சிப்பிற்கான நிபந்தனை அல்ல. மாறாக, ஆன்மீக உயர்வை பெறுவதே நிபந்தனையாகும். எனவே இந்த இடத்தில் இந்த கருத்து வேறுபாட்டிற்கான தீர்ப்பை கூறுவதற்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சபிக்கப்பட்டவர் அல்லர். நவூதுபில்லாஹ். மாறாக, நிச்சயமாக ஆன்மீக உயர்வு அவருக்கு கிடைத்திருக்கின்றது என்று கூற வேண்டியது இருந்தது. இதை தவிர திருக்குர்ஆனில் 'ரஃபஅ்' (உயர்த்துதல்) என்ற சொல்லிற்கு முன்னால் 'தவஃப்பா' (மரணிக்கச் செய்தல்) என்ற சொல் கையாளப்பட்டிருக்கின்றது. இது மரணத்திற்கு பிறகு ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவருக்கும் கிடைக்கின்ற உயர்வையே தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது.

தவஃப்பா என்பதற்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டார் என்று பொருள் கூறுவது கூட யூதர்களை போன்று திருக்குர்ஆனை மாற்ற முயலும் செயலாகும். திருக்குர்ஆனிலும் எல்லா நபிமொழிகளிலும் 'தவஃப்பா' என்ற சொல் ரூஹை (உயிரை) கைப்பற்றுவது தொடர்பாகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு நபர் உடலுடனும் உயிருடனும் வானத்திற்கு உயர்த்தப்பட்டார் என்ற பொருளில் இந்த சொல் எந்தவோர் இடத்திலும் பயன்படுத்தப்படவில்லை. இது அல்லாமல் (மற்றவர்கள் கொடுக்கும்) அந்த விளக்கத்தை ஏற்போம் என்றால், அதன் மூலம் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ஈஸா (அலை)

அவர்களின் மரணம் பற்றி எங்குமே குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் எப்போதும் மரணிக்கப் போவதில்லை என்றும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். ஏனென்றால், எந்த இடத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக தவஃப்பா என்ற சொல் வருமோ அங்கு உடலுடன் அவர் வானத்திற்கு சென்று விட்டார் அல்லது செல்வார் என்ற இந்த பொருளையே நாம் கொடுக்க வேண்டியது வரும். பிறகு அவரது மரணம் எவ்வாறு நிரூபிக்கப்படும்?

இது மட்டுமின்றி, இவ்வுலகில் மனிதன் மீண்டும் வர முடியுமென்றால் இறைவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை யூதர்களுக்கு முன்னால் ஏன் வெட்கப்பட வைத்தான்? ஏனென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தானே மஸீஹ் என்று வாதம் செய்தபோது யூதர்கள் நாங்கள் உம்மை உண்மையான மஸீஹாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் வர வேண்டுமென்று வாக்குறுதி வழங்கப்பட்ட உண்மையான மஸீஹுக்கு முன்னர் இல்யாஸ் நபி மீண்டும் உலகிற்கு வருவார் என்பது கண்டிப்பான –தாகும் என்று மலாக்கி நபியின் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.★ ஆனால் இல்யாஸ் நபி இதுவரை மீண்டும் உலகிற்கு வரவில்லை. எனவே நாங்கள் உம்மை உண்மையாளராகக் கருத முடியாது என்ற சான்றை எடுத்து வைத்தனர். அப்போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வர வேண்டிய அந்த இல்யாஸ் – 'யோவான்' தீர்க்கதரிசி ஆவார்கள் என்று அவர்களுக்கு இந்த பதிலை கூறினார்கள்.★ அவரை இஸ்லாத்தை சார்ந்தவர்கள் 'யஹ்யா' என்று அழைக்கின்றனர். இந்த பதிலைக் கேட்ட யூதர்கள் கடும் கோபம்

★ இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருவதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா (இல்யாஸ்) தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். (மல்கிய்யா 4:5 காண்க) – வெளியீட்டாளர்.

★ ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்கிறேன். அவன் யோவான் ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லுகிறார் என்று சீஷர்கள் அப்போது அறிந்து கொண்டனர். (மத்தேயு 17:12,13) – வெளியீட்டாளர்.

கொண்டனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இட்டுக்கட்டி பொய் கூறுபவர் என்றும் பொய்யர் என்றும் கூறினர். அவர்களின் சில நூல்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றில் இதுவரை அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை பொய்ப்படுத்தியே வந்துள்ளனர்.

இந்த நபரை நீங்கள் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்று இறைவன் எங்களிடம் மறுமை நாளில் கேட்டால் நாங்கள் மலாக்கி நபியின் வேதத்தை அவனுக்கு முன்னால் வைத்து விடுவோம். மேலும் அவனிடம் இறைவா! இல்யாஸ் நபி (அதாவது எலியா தீர்க்கதரிசி) மீண்டும் உலகில் வராதவரை இஸ்ரவேல் சந்ததிகளுக்காக வாக்களிக்கப்பட்டிருந்த அந்த உண்மையான மஸீஹ் தோன்ற மாட்டார் என்று நீயே தெளிவான சொற்களில் கூறியிருந்தாய். ஆக, 'இல்யாஸ் நபி (எலியா தீர்க்கதரிசி)' மீண்டும் உலகில் வரவில்லை. எனவே நாங்கள் இந்த நபரை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி விடுவோம். 'இல்யாஸுக்கு ஒப்பான ஒருவர்' தோன்றாத வரை உண்மையான மஸீஹ் வர மாட்டார் என்று எங்களிடம் கூறப்படவில்லை. மாறாக, உண்மையான மஸீஹ் தோன்றுவதற்கு முன்னதாக 'உண்மையிலேயே இல்யாஸ் அவர்களே (எலியா தீர்க்கதரிசியே)' மீண்டும் வருவது கண்டிப்பான –தாகும் என்றே எங்களிடம் கூறப்பட்டது. எனவே அந்த விஷயம் நிறைவேறவில்லை என்று நாங்கள் கூறுவோம் என்று அவர்கள் தமது நூல்களில் எழுதியுள்ளனர். எந்த யூத அறிஞரின் நூல் என்னிடம் உள்ளதோ அவர், தனது இந்த ஆதாரத்தின் மீது மிகவும் பெருமை கொண்டவாறு பொதுமக்களுக்கு முன்னால் அப்பீல் செய்தவாறு கூறுவதென்னவென்றால், விளக்கங்களை கையாளுகின்றவரும், தனது ஆசிரியரான யோவானை அவசியமில்லாமல் இல்யாஸ் (எலியா) என்று நிரூபிப்பவருமான இவ்வாறான இட்டுக்கட்டிக் கூறுகின்ற (இ)வரை யாராவது ஒப்புக் கொள்வாரா என்ன? என்று எழுதியுள்ளார். இதற்குப் பிறகும் அவர்

மிகுதியாக தமது ஆவேசத்தை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் எத்தகைய இழிவான சொற்களைக் கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவற்றை இந்த இடத்தில் நாம் எழுத முடியாது.

திருக்குர்ஆன் இறங்காமல் இருந்திருந்தால் பிறகு இந்த ஆதாரத்தின் அடிப்படையில் வெளிப்படையாகப் பார்க்கும் போது யூதர்கள் உண்மையின் பக்கம் இருப்பதாகத் தோன்றும். ஏனென்றால், மலாக்கி நபியின் ஏட்டில் உண்மையான மஸீஹிற்கு முன்னதாக இல்யாஸிற்கு 'ஒப்பானவர் வருவார்' என்ற இந்த சொற்கள் உண்மையில் இல்லை. மாறாக, அந்த மஸீஹிற்கு முன்னதாக 'இல்யாஸே' மீண்டும் வருவது அவசியமானதாகும் என்று அதில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் கிறித்தவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு இறைத் –தன்மையை வழங்க எத்தனிக்கின்றனர் என்றாலும், அன்னாரது நபித்துவத்தைக் கூட அவர்களால் நிரூபிக்க முடியாது. மேலும் (இதன் மூலம்) யூதர்கள் உண்மையாளர்கள் போன்று தெரிகிறார்கள். எனவே, இது கிறித்தவர்கள் மீது திருக்குர்ஆன் செய்துள்ள பேரருளாகும். அதாவது திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உண்மையை வெளிப்படுத்திக் காட்டி விட்டது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எஞ்சியிருக்கின்றது. அது என்னவெனில், மலாக்கி நபியின் ஏட்டில் இல்யாஸ் நபி (எலியா தீர்க்கதரிசி) மீண்டும் உலகில் வராத வரை இஸ்ரவேலர்களுக்கு வாக்களிக்கப்பட்ட அந்த உண்மையான மஸீஹ் உலகில் வர மாட்டார் என்று தெளிவான சொற்களில் எழுதப்பட்டிருக்கின்ற நிலையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இருந்து அவரை காஃபிர் என்றும் மார்க்கத்தை துறந்து சென்று விட்டவர் என்றும் மார்க்கத்தை இழந்தவர் என்றும் யூதர்கள் கூறுவதனால் அவர்கள் மீது என்ன குற்றத்தை சுமத்த முடியும்?

அல்லாஹ்வின் வேதத்தின் கூற்றிற்கு ஏற்ப அவர்கள் செயல்பட்டார்கள் என்பது அவர்களின் நல்லெண்ணத்திற்கு போதுமானதாக இல்லையா? எனினும் மலாக்கி நபியின் ஏட்டில் இல்யாஸிற்கு (எலியா தீர்க்கதரிசிக்கு) ஒப்பானவர் மீண்டும் வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தால் அந்நிலையில் யூதர்கள் குற்றவாளிகளாக ஆகியிருப்பர். ஏனென்றால், யஹ்யா நபியை இல்யாஸிற்கு ஒப்பானவராக கூறுவது ஒன்றும் அதிக விவாதத்திற்கு தகுதியுள்ள விஷயமாக இருக்கவில்லை.

அந்தக் கேள்விக்கான பதில் என்னவென்றால், எந்தவொரு நபரும் மீண்டும் உலகிற்கு வருவது என்பது இறைவனின் நடைமுறை அல்ல என்பதும் இதற்கு இணையான ஒரு சம்பவம் முன்னர் நடக்கவில்லை என்பதும் யூதர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே எவ்வாறு இறைவனின் வேதங்களில் நூற்றுக்கணக்கான உருவகங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தனவோ அவ்வாறே இதுவும் உருவகமாக கூறப்பட்ட ஒன்றாகும். அவ்வாறு உருவகமாக கூறப்பட்டவை தொடர்பாக யூதர்கள் அறியாமல் இருக்கவில்லை. பிறகு, இது மட்டுமின்றி, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் இறையுதவியும் இருந்தன. சரியான தொலைநோக்குப் பார்வையை உடையவருக்கு போதுமான அளவில் (சான்று) கருவூலங்கள் இருந்தன. யூதர்கள் அவற்றை அடையாளங்கண்டு அவற்றின் மீது நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஒவ்வொரு நாளும் தீங்கிழைப்பதில் முன்னேறிக் கொண்டிருந்தனர். மேலும் உண்மையாளர்களுடன் இருக்கின்ற அந்த ஒளியை கண்டிப்பாக அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் பார்த்தனர். ஆனால் காழ்ப்புணர்வும், கருமித்தனமும், தீங்கிழைக்கும் எண்ணமும் அவர்களை விட்டு அகலவில்லை. ஆனால், இந்த கேள்வி யூதர்களுடன் மட்டும் தொடர்புடையதாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அவர்களுக்கு முதன் முதலாக இந்த சோதனையை சந்திக்க வேண்டியது வந்தது. ஆனால், முஸ்லிம்கள் இறையச்சத்தைக் கடைபிடிப்பவர்களாக இருந்தால் திருக்குர்ஆன் இந்த சோதனை –களிலிருந்து அவர்களை காப்பாற்றி விடுகிறது. ஏனென்றால், அது தெளிவான சொற்களில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று கூறிவிட்டது. அதுமட்டுமல்லாமல் மாயிதா அதிகாரத்தில் அவர் மீண்டும் வர மாட்டார் என்பதையும் தெளிவாக அது புரிய வைத்து விட்டது. ஏனென்றால் فَلَمَّا تَوَفَّيْتَنِي (5:118) என்ற வசனத்தில் இதுவே குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அதாவது அல்லாஹ் மறுமை நாளன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் என்னையும் எனது தாயாரையும் இறைவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீர் கூறினீரா என்று கேட்பான். அதற்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள், இறைவா! நான் அவ்வாறு கூறியிருந்தால் உனக்கு அது பற்றி தெரிந்திருக்கும். ஏனென்றால் எந்த பொருளும் உனது அறிவை விட்டு வெளியில் இல்லை. நீ கூறியிருந்தவற்றை மட்டுமே நான் அவர்களிடம் கூறினேன். பிறகு நீ எனக்கு மரணத்தை தந்த பிறகு நீயே அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தாய். எனக்கு அவர்களின் நிலைமை பற்றி என்ன தெரிந்திருந்தது? என்று பதிலளிப்பார்கள்.

இப்போது தெளிவாக தெரிகின்ற விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மறுமை நாளுக்கு முன்னதாக மீண்டும் உலகிற்கு வருவார்கள். நாற்பது வருடங்கள் உலகில் வாழ்வார்கள். சிலுவையை முறிப்பார்கள். கிறித்தவர்களுடன் போர் செய்வார்கள் என்ற விஷயம் உண்மையானதாக இருந்தால் பிறகு மறுமை நாளன்று இறைவனின் முன்னிலையில் நீ எனக்கு மரணத்தை தந்த பிறகு கிறித்தவர்கள் எந்த வழியை பின்பற்றிச் சென்றனர் என்பதை பற்றி எனக்கு என்ன தெரியும்? என்று எவ்வாறு அவர்களால் கூற முடியும்? எனக்கு அது பற்றி தெரியாது

என்று அவர்கள் பதில் கூறுவார்கள் என்றால் உலகில் அவரை விட மிகப்பெரும் பொய்யர் வேறு எவரும் இருக்க மாட்டார்.

ஏனென்றால் எந்த நபருக்கு (அதாவது, ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு) அவர் மீண்டும் உலகிற்கு வரும் போது கிறித்தவர்கள் அவரை இறைவனாக கருதி வந்ததையும் அவர்கள் அவரை வணங்கிக் கொண்டிருந்ததையும் அவர் பார்த்தாரோ அவர்களோடு அவர் போர்கள் புரிந்தார் என்பதை பற்றியெல்லாம் தெரியுமோ அவர் இறைவன் முன்னால் நேருக்கு நேர் நின்று எனக்கு பிறகு அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை பற்றி எதுவும் தெரியாது என்று மறுக்கின்றார் என்றால் அவரை விட பெரிய பொய்யராக எவர் இருக்க முடியும்? ஆம். இறைவா! கிறித்தவர்கள் வழிகேட்டில் சென்று விட்டதைப் பற்றி எனக்கு நன்றாக தெரியும். ஏனென்றால் நான் மீண்டும் உலகிற்கு சென்று நாற்பது வருடங்கள் வரை அங்கு வாழ்ந்தேன். சிலுவையை முறித்தேன். எனவே இதில் எனது பாவம் எதுவுமே இல்லை. அவர்கள் இணை வைப்பவர்கள் என்பது எனக்கு தெரிய வந்ததும் அந்த நேரத்தில் நான் அவர்களின் எதிரியாக ஆகிவிட்டேன் என்பதே அவர்கள் கூறும் சரியான பதிலாக இருக்க முடியும்.

மறுமை நாளுக்கு முன்னதாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் நாற்பது வருடங்கள் வரை உலகில் வாழ்ந்திருப்பார்கள். அவர்களை கடவுள் என்று கருதி வந்த அனைவருக்கும் தண்டனைகளை வழங்கியிருப்பார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவர்களிடம் இறைவன் அவ்வாறு கேட்பது ஒரு வீணான கேள்வி –யாகத்தான் இருக்கும். இந்த நபர், தான் வணக்கத்திற்குரியவனாக ஆக்கப்பட்டிருப்பது பற்றி தகவல் பெற்று அத்தகைய மக்களுக்கு அவர் கடினமாக தண்டனை வழங்கியிருந்தும் அத்தகைய ஒருவரிடம் அப்படிப்பட்ட கேள்வியை கேட்பது (இறைவனது) மகிமைக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயமாக இருக்கின்றது.

சுருக்கமாக, ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்; அவர்கள் மீண்டும் உலகிற்கு வர மாட்டார்கள். எனினும் அவருக்கு ஒப்பான ஒருவர் வர வேண்டியது அவசியமானதாகும் என்று எந்த அளவு முஸ்லிம்களுக்கு இறைவன் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தானோ அந்த அளவு இது போன்ற விளக்கம் மலாக்கி நபியின் ஏட்டில் இருந்திருந்தால் யூதர்கள் அழிந்திருக்க மாட்டார்கள். இறைவனது தூய வார்த்தைகளில் இந்த அளவு விளக்கங்களை பார்த்த பிறகும் கூட ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் திரும்பவும் வர வேண்டும் என்று காத்துக் கொண்டிருப் –பவர்கள் சந்தேகமின்றி யூதர்களைவிட மோசமானவர்கள் ஆவர்.

இன்னும் நமது எதிரி மவ்லவிகள் மக்களை ஏமாற்றியவாறு திருக்குர்ஆனில் இல்லையென்றாலும் நபிமொழிகளில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் உலகிற்கு வருவார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்று கூறுகின்றனர்.

எவர் மீது சுவிஷேசங்கள் இறங்கியதோ, எவரது பெயர் ஈஸாவோ அதே இஸ்ரவேலர்களின் நபி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கும் நிலையில் மீண்டும் உலகிற்கு வருவார்கள் என்று நபிமொழிகளில் எந்த இடத்தில் எழுதப்பட்டுள்ளது என்று நமக்கு தெரியவில்லை. ஈஸா அல்லது இப்னு மர்யம் ஆகிய பெயர்களால் ஏமாற்றத்திற்கு ஆளாவதாக இருந்தால் பிறகு திருக்குர்ஆனில் தஹ்ரீம் அதிகாரத்தில்★ இந்த உம்மத்தைச் சார்ந்த சில நபர்களின் பெயர் ஈஸா என்றும் இப்னு மர்யம் என்றும் வைக்கப்பட்டுள்ளது.

இந்த உம்மத்தின் சிலருடைய பெயரும் கூட ஈஸா என்றும், இப்னு மர்யம் என்றும் வைக்கப்பட்டுள்ளது என்பது ஈமான் கொண்டோருக்கு போதுமானதாகும். ஏனென்றால், இறைவன் இந்த

★ திருக்குர்ஆன் 66:12,13 காண்க – (வெளியீட்டாளர்).

அதிகாரத்தில் இந்த உம்மத்தைச் சார்ந்த சில நபர்களை மர்யமுடன் ஒப்பிட்டு கூறியுள்ளான். பிறகு அவர் மீது ஆவி ஊதப்படுவதை பற்றி குறிப்பிட்டுள்ளான். எனவே மர்யமின் மீது ஊதப்பட்ட ஆவி ஈஸா ஆவார் என்பது தெளிவாக தெரிகின்றது. இது இந்த உம்மத்தைச் சார்ந்த ஒரு நபர் முதலில் இறைவனிடமிருந்து வழங்கப்பட்ட தனது தக்வாவின் காரணமாக மர்யம் ஆகிவிடுவார். பின்னர் ஈஸா ஆகிவிடுவார் என்ற விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது.

அவ்வாறே 'பராஹீனே அஹ்மதிய்யா'–வில் (நான் கூறியபடி) இறைவன் முதலில் எனக்கு மர்யம் என்று பெயர் வைத்தான். பிறகு ஆவி ஊதப்படுவதை பற்றி குறிப்பிட்டுள்ளான். பிறகு இறுதியில் அவன் எனக்கு ஈஸா என்று பெயர் வைத்து விட்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜின் இரவில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை மரணித்துப் போன ஆன்மாக்களுடனேயே கண்டார்கள் என்று நபிமொழிகளில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் அரியணை வரை சென்றடைந்தார்கள்.★ ஆனால், பூத உடலுடன் கூடிய ஈஸா என்ற பெயர் கொண்ட எவரையும் காணவில்லை. அவர்கள் பார்த்தார்கள் என்றால் இறந்து போன யஹ்யாவிற்கு அருகில் இருந்த அதே ஆன்மாவைத்தான் அவர்கள் கண்டார்கள். உயிருள்ளவர்கள் மரணித்தவர்(களின் வீட்டில் அவர்)களுடன் சேர்ந்து இருப்பதில்லை என்பது வெளிப்படையான ஒன்றே ஆகும்.

சுருக்கமாக, இறைவன் தனது சொல்லால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்திற்குச் சாட்சி பகர்ந்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது செயலால் அதாவது தனது கண்களால் கண்டு அதே சாட்சியை கூறியுள்ளார்கள்.

---

★ புகாரி – கிதாபுஸ் ஸலாத், பாபு கைஃப ஃபுரிஸதிஸ் ஸலா(த்)து ஃபில் இஸ்ரா – (வெளியீட்டாளர்).

இப்போது கூட எவரும் புரியாமல் இருந்தால் பிறகு இறைவன் அவரைப் புரிந்து கொள்வான்.

அதுமட்டுமின்றி, உலகிற்கு மக்களை மீண்டும் அனுப்புவது இறைவனின் வழக்கம் அல்ல என்பதில் யூதர்களை விட (முஸ்லிம் –களாகிய) அவர்களுக்கு அதிகமாக அனுபவம் ஏற்பட்டிருக்கின்றது. இல்லையென்றால் நமக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீண்டும் உலகிற்கு வருவதன் தேவையே அதிகமாக இருந்தது. மேலும் இதில் தான் நமக்கு மகிழ்ச்சி இருந்தது. ஆனால் இறைவன் اِنَّكَ مَيِّتٌ அதாவது 'நீரும் மரணிக்கக்கூடியவரே' என்று கூறி இந்த நம்பிக்கையிலிருந்து நம்மை விலக்கி வைத்து விட்டான். மீண்டும் உலகிற்கு வருவதற்கான கதவு திறக்கப்பட்டிருந்தது என்றால் இறைவன் சில நாட்களுக்காக இல்யாஸ் நபி (எலியா தீர்க்கதரிசியை) அவர்களை மீண்டும் உலகிற்கு ஏன் அனுப்பவில்லை? இவ்வாறு இலட்சக்கணக்கான யூதர்களை அவன் ஏன் நரகத்தில் நுழையச் செய்தான்?

இறுதியில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களே, ஒருவர் மீண்டும் வருவது என்பது அவருக்கு ஒப்பான ஒருவர் வருவதையே குறிக்கின்றது என்று தீர்ப்பு கூறியுள்ளார்கள். இந்த தீர்ப்பு இதுவரை சுவிஷேசங்களில் எழுதப்பட்டு இருந்து வருகிறது. பிறகு எந்த விஷயம் தொடர்பாக ஒருமுறை முடிவு எடுக்கப்பட்டு விட்டதோ மேலும் எந்த வழி அபாயகரமானது என்று நிரூபிக்கப்பட்டு விட்டதோ அதே வழியில் மீண்டும் அடியெடுத்து வைப்பது அறிவுள்ளவர்களின் பணியல்ல. இல்யாஸ் நபி (எலியா தீர்க்கதரிசி) மீண்டும் உலகிற்கு வருவார் என்ற விஷயத்தில் யூதர்கள் பிடிவாதமாக இருந்ததால் மறுப்பையும் இழிவையும் தவிர அதிலிருந்து என்ன பலன் பெற்றார்கள்? அவ்வாறிருக்க, இந்த காலத்திலுள்ள முஸ்லிம்கள் இதிலிருந்து பலன் பெறுவதன் மீது நம்பிக்கை வைக்க முடியாது. எந்த பொந்தில் கைவிட்டதனால் ஒரு பெரிய பிரிவே கடிக்கப்பட்டு

அழிந்து விட்டதோ அதே பொந்தில் இந்த மக்கள் ஏன் தனது கைகளை இடுகின்றனர்?

لَا يُلْدَغُ الْمُؤْمِنُ مِنْ جُحْرٍ وَاحِدٍ مَرَّتَيْنِ நம்பிக்கை கொண்டவர் ஒரு பொந்தில் இருமுறை கடிக்கப்படமாட்டார் என்ற நபிமொழி★ இவர்களுக்கு நினைவில் இல்லையா?

இதிலிருந்தும் அவர்கள் ஒருநாள் மரணித்தை சந்தித்தே ஆக வேண்டும் என்பதை மறந்து விட்டனர் என்பது நிரூபணம் ஆகின்றது. அந்த மக்கள் ஐவேளை தொழுகைகளில் ஓதி வருகின்ற அதிகாரத்தை அதாவது غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ ‘உமது கோபத்திற்கு ஆளானவர்கள், வழி தவறியவர்கள் ஆகியோரின் வழியில் அல்ல’ என்ற இந்த வசனத்திலுள்ள பொருள்களை அவர்கள் ஏன் சிந்திப்பதில்லை? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த போது கூட பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் உலகிற்கு வருவார்கள் என்ற எண்ணம் சில நபித் –தோழர்களிடம் உருவானது.

ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்,

(3:145) وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ

அதாவது முஹம்மது ஒரு தூதர் மட்டுமே ஆவார். அவருக்கு முன் தோன்றிய எல்லா தூதர்களும் மரணமடைந்து விட்டனர் என்ற இந்த வசனத்தைப் படித்துக் காட்டி★ இந்த எண்ணத்தை அகற்றி விட்டார்கள். எந்த நபியும் மரணமடையாமல் இருக்கவில்லை. எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட மரணமடைந்து விட்டால் அதில் வருந்துவதற்கு எந்த காரணமும்

---

★ முஸ்லிம் – கிதாபுஸ் ஸுஹ்தி வர்ரகாயிக், பாபு லா யுல்தகுல் முஃமினு மின் ஜுஹ்ரின் மர்ரதய்னி – (வெளியீட்டாளர்).

★ புகாரி – கிதாப் ஃபஸாயிலிஸ் ஸஹாபா, பாபு கவ்லின் நபிய்யி (ஸல்) லவ் குன்(த்)து முத்தகிஸன் கலீலன் – (வெளியீட்டாளர்).

இல்லை. இந்த விஷயம் எல்லாருக்கும் பொதுவான ஒன்றாகும் என்று இவ்வசனத்திலுள்ள பொருளை அவர்களுக்கு புரிய வைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் 600 வருடங்களாக உயிருடன் அமர்ந்திருக்கின்றார்கள் என்ற இந்த எண்ணம் நபித்தோழர்களின் உள்ளங்களில் இருந்திருந்தால் அவர்கள் கண்டிப்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முன்னால் அவர்களின் இந்த எண்ணத்தை எடுத்து வைத்திருப்பார்கள். ஆனால் எல்லா நபிமார்களும் மரணித்து விட்டனர் என்பதை அவர்கள் அந்த நாளில் ஏற்றுக் கொண்டனர்.

எவருடைய உள்ளத்திலாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றார் என்ற எண்ணம் இருந்திருந்தாலும் அவரும் கூட அந்த எண்ணத்தை தூக்கி எறியப்பட வேண்டிய ஒரு பொருளைப் போன்று தனது உள்ளத்திலிருந்து வெளியே எறிந்து விட்டார். நான் இதை கூறக்காரணம் அக்கம் பக்கத்தில் இருந்த கிறித்தவ மதத்தின் தாக்கத்தின் காரணமாக அறிவீனராக இருக்கின்ற ஒரு நபர் சரியான புரியும் திறன் இல்லாத காரணத்தால் ஒருவேளை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இதுவரை உயிருடன் இருக்கின்றார் என்ற எண்ணத்தை கொண்டவராக இருந்திருக்கலாம். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறிய அறிவுரைக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னர் எத்துணை நபிமார்கள் இருந்தனரோ அவர்கள் அனைவரும் மரணித்து விட்டனர் என்ற விஷயத்தில் எல்லா நபித்தோழர்களும் ஒருமித்த கருத்தை உடையவர்களாக ஆகிவிட்டனர். இது நபித்தோழர்களிடம் ஏற்பட்ட முதல் இஜ்மா (ஒருமித்த கருத்து) ஆக இருந்தது. சஹாபா ரலியல்லாஹு அன்ஹும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பில் தங்களையே மாய்த்துக் கொண்டவர்கள். எல்லா நபிமார்களின் தலைவராக இருந்த அவர்களது கண்ணியமிக்க

நபி (ஸல்) அவர்கள் 64 வயதை கூட முழுமையாக அடையவில்லை. ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களோ 600 வருடங்களாக வானத்தில் உயிருடன் அமர்ந்திருக்கின்றார் என்பதை அவர்களால் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக குறிப்பாக இத்தகைய தனிச்சிறப்பை அவர்கள் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு நபி (ஸல்) அவர்கள் மீதான அன்பு (அதற்கு) ஒருபோதும், ஒருக்காலும் (மார்க்கத் தீர்ப்பு வழங்கி) இடமளிக்காது. எந்த கொள்கையினால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழிவு ஏற்படுவது கட்டாயமானதாக ஆகிவிடுகின்றதோ அத்தகைய கொள்கையின் மீது சாபம் உண்டாகட்டும். அந்த நபித்தோழர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பேரன்பர்களாக இருந்தனர். அவர்களது அன்பான தூதர் இறந்து விட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் உயிருடன் இருக்கின்றார் என்பதை கேட்பதைக் காட்டிலும் அவர்கள் உயிருடன் இருக்கும் நிலையிலேயே மரணிக்கக் கூடியவர்களாக இருந்தனர். அந்த தூதர் அவர்களுக்கு மட்டும் அல்லாமல் இறைவனுக்கும் கூட எல்லா நபிமார்களை விடவும் அதிகமாக அன்பிற்குரியவராக இருந்தார்கள். இதன் காரணமாகவே கிறித்தவர்கள் தமது துர்பாக்கியத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த தூதரை ஒப்புக் கொள்ளாமல் இருந்து, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவனாக ஆக்கும் அளவிற்கு அவரை மிகவும் உயர்த்தியபோது இறைவனின் தன்மான உணர்வு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியார்களின் ஓர் அடியாரை அதாவது இந்த எளியவனை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஒப்பானவராக ஆக்கி இந்த உம்மத்தில் அவரை பிறக்க வைக்க வேண்டும் என்று விரும்பியது; ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விட தனது அருள் மற்றும் வெகுமதியிலிருந்து அதிகமாக அவருக்கு பங்கை தந்தது. எல்லா அருள்களும் இறைவனுடைய அதிகாரத்தில்தான்

இருக்கின்றது என்பதை கிறித்தவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விட அதிகமாக தனது அருள் மற்றும் வெகுமதியிலிருந்து அவருக்கு பங்கை வழங்கினான்.

சுருக்கமாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இறைத்தன்மையை துண்டு துண்டாக்கிட வேண்டும் என்பதே ஈஸப்னு மர்யமிற்கு ஒப்பானவராக வருபவரது இன்னொரு குறிக்கோளாகவும் இருந்தது. மலக்குகள் வடிவத்தைப் பெற்று பூமியில் வந்து குடியமர்வது அல்லாஹ்வின் நடைமுறைக்கு எதிராக இருப்பது போன்றே மனிதன் வானத்திற்கு சென்று இந்த பூத உடலுடன் அங்கு குடியேறுவதும் அல்லாஹ்வின் நடைமுறைக்கு எதிரானதாகும். وَلَنْ تَجِدَ لِسُنَّةِ اللّٰهِ تَبْدِيْلًا (48:24) அதாவது அல்லாஹ்வின் செயல் முறையில் எந்த மாற்றத்தையும் உம்மால் ஒருபோதும் காண முடியாது .

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட நேரத்தில் அவர்களது பிரச்சாரம் முழுமையடையாமல் இருந்தது என்பதை இந்த அறிவற்ற சமுதாயம் சிந்திப்பதில்லை. அப்போது யூதர்களின் பத்து கோத்திரங்கள் மற்ற நாடுகளில் எஞ்சியிருந்தன. அவர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பெயரைக் கூட அறியாதவர்களாக இருந்தனர். அவ்வாறிருக்க **தனது கடமையான பணியை முழுமையாக நிறைவேற்றாமல் விட்டு விட்டு வானில் சென்று அமரும் எண்ணம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஏன் வந்தது?** பிறகு வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி இஸ்லாத்தின் நூல்களில் **மிக நீண்ட தூரம் பயணம் செய்யக் கூடிய நபி** என்று எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால், அவர்களோ மூன்றரை வருடம் மட்டும் தனது கிராமத்தில் இருந்து விட்டு வானத்தை நோக்கி புறப்பட்டு விட்டார்.

வீணான கதைகள் மீது நம்பிக்கை வைத்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறைவன் என்று நம்பப்படுகின்றார் என்பது வெளிப்படையான விஷயமாகும். பிறகு வானத்திலிருந்து மலக்குகளுடன் இறங்குகின்ற இந்த அற்புதத்தை அவர் காட்டினாலும் கூட அந்த நேரத்தில் நிலைமை எவ்வாறு இருக்கும்?

**நினைவில் கொள்ளுங்கள். எந்த நபர் இறங்க வேண்டியது இருந்ததோ அவர் சரியான நேரத்தில் இறங்கி வந்தார். இன்று எல்லா வேதங்களிலும் குறிப்பிடப்பட்டவை நிறைவேறி விட்டன. எல்லா நபிமார்களது வேதங்களும் இந்த காலத்தைதான் குறிப்பிடுகின்றன. இந்த காலத்தில்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வர வேண்டியது அவசியமானதாக இருந்தது என்பதே கிறித்தவர்களின் கொள்கையுமாகும்.** அவர்களின் நூல்களில் ஆதமிலிருந்து ஆறாவது ஆயிரம் ஆண்டின் இறுதியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருவார் என்று தெளிவாக எழுதப்பட்டிருந்தது. ஆக, ஆறாவது ஆயிரம் ஆண்டின் இறுதியும் வந்து விட்டது. அதற்கு முன்னதாக வால் நட்சத்திரம் தோன்றும் என்றும் எழுதப்பட்டிருந்தது.★ அதுவும் தோன்றி வெகுகாலம் ஆகிவிட்டது. அவரது காலத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஒரு ரமலான் மாதத்தில் கிரகணம் நிகழும் என்று எழுதப்பட்டிருந்தது.★ இந்த முன்னறிவிப்பும் நிறைவேறி பல நாட்கள் ஆகின்றன. இந்த நாட்களில் மிகவும் தீவிரமாக பிளேக் நோய்★ உருவாகும் என்று எழுதப்படிருந்தது. அது பற்றிய செய்தி சுவிஷேசங்களிலும்

---

★ யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள். (மத்தேயு 2:2, 2:7–10 காண்க). – வெளியீட்டாளர்.

★ தாரே குத்னி – கிதாப் ஈதய்ன் பாபு ஸிஃபதி ஸலாதில் குஸூஃபி வல் குஸூஃபி வஹய்அதிஹிமா. – வெளியீட்டாளர்.

★ பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். (மத்தேயு 24:7) – வெளியீட்டாளர்.

குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பிளேக் நோயிலிருந்து நாம் இதுவரை விடுபட முடியாமல் இருப்பதை நான் பார்க்கின்றேன். அவரது காலத்தில் ஒரு புதிய வாகனம் உருவாகும். அது நெருப்பின் மூலமாக செல்லும். அதே நாட்களில் ஒட்டகமும் பயனற்று போகும் என்று என்று திருக்குர்ஆன், நபிமொழிகள் மற்றும் முன்னுள்ள வேதங்களில் எழுதப்பட்டிருந்தது. இதில் இறுதிப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள (ஒட்டகம் கைவிடப்படுகின்ற) விஷயம் சஹீஹ் முஸ்லிமிலும் இருக்கின்றது.★ அந்த வாகனம் தொடர் வண்டியாகும். தோன்றி விட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றுவார் என்று எழுதப்பட்டிருந்தது. இப்போது இந்த நூற்றாண்டு தொடங்கி 21 வருடங்கள் கழிந்து விட்டன.

**இந்த எல்லா அடையாளங்களுக்குப் பிறகும் எந்த நபர் என்னை மறுக்கின்றாரோ அவர் என்னை அல்ல. மாறாக, எல்லா நபிமார்களையும் மறுக்கின்றார். மேலும் அவர் இறைவனுடன் போர் புரிகின்றார். அவர் பிறக்காமல் இருந்திருந்தால் அது அவருக்கு நல்லதாக இருந்திருக்கும்.**

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இஸ்லாத்தில் உருவான எல்லா தீங்கிற்கும் அழிவிற்கும், எதுவரையென்றால் இந்த இந்திய நாட்டில் 29 லட்சம் மனிதர்கள் தமது மார்க்கத்தை துறந்து விட்டு கிறித்தவர்களாக ஆகிவிட்டனர். அதற்கு காரணம், முஸ்லிம்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது பொருத்தமற்ற மற்றும் மிகைப்படுத்தி கூறப்பட்ட நம்பிக்கையை வைத்து ஒவ்வொரு பண்பிலும் அவர்களுக்கு தனிச்சிறப்பை வழங்கி ஏறக்குறைய கிறித்தவர்களுக்கு அருகில் சென்று விட்டனர் என்பதேயாகும். எதுவரையென்றால் எந்தெந்த மனித பண்புகளை அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புபடுத்தி கூறி

★ சஹீஹ் முஸ்லிம் – கிதாபுல் ஈமான், பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம ஹாகிமன் பிஷரீ அதி நபிய்யினா முஹம்மதின் (ஸல்). – வெளியீட்டாளர்.

வந்தனரோ அதே போன்ற பண்புகளை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடன் தொடர்புபடுத்தி ஏதாவதொரு வரலாற்று நூலில் எழுதப்பட்டிருந்தால் அவர்கள் தவ்பா தவ்பா என்று கூறுகின்றனர்.

உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில நேரங்களில் நோய்வாய்ப்பட்ட நிலையிலும் இருந்தார்கள். அவர்களுக்கு காய்ச்சலும் வந்துள்ளது. அன்னார் மருந்தும் சாப்பிட்டு வந்துள்ளார்கள். சில நேரங்களில் இரத்தம் உறிஞ்சும் கருவியால் (உடலில்) கீறும் சிகிச்சையை தங்களுக்கு செய்து கொள்வார்கள்.★ ஆனால் இதற்கு ஒப்பாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக அவர்கள் காய்ச்சல் அல்லது வேறு ஏதாவதொரு நோய்க்கு ஆளாகியிருப்பதாகவும் அவர்களை ஏதாவது ஒரு மருத்துவரிடம் தூக்கிக் கொண்டு சென்றனர் என்று எழுதப்பட்டிருந்தால் உடனே இது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மகிமைக்கு அப்பாற்பட்ட விஷயமாகும் என்று கூறுவர். ஆனால் அவரோ ஓர் எளிய மனிதராக இருந்தார். எல்லா மனித பலவீனங்களுக்கும் அவர் ஆளாகியிருந்தார். அவருக்கு உடன் பிறந்த நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் சிலர் அவருக்கு எதிரிகளாக இருந்தனர். அவருக்கு உடன்பிறந்த இரு சகோதரிகளும் இருந்தனர். பலவீனமான மனிதராக அவர் இருந்தார். இரண்டு ஆணிகள் அறையப்பட்டதும் சிலுவையிலேயே அவர் மயக்கமுற்றார்.

அந்தோ பரிதாபம்! முஸ்லிம்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆன் கூறும் கூற்றுக்கு ஏற்ப நடந்து, அவர்களை மரணித்தவர் என்று நம்பியிருந்தால் திருக்குர்ஆன் கூறுவது போன்று அவர்கள் மீண்டும் வருவதை தடை செய்யப்பட்ட ஒன்றாக கருதியிருந்தால், இஸ்லாத்தின் மீது இப்போது வந்துள்ள இந்த அழிவு வந்திருக்காது. கிறித்தவம் விரைவாக அழிந்து

---

★ புகாரி – கிதாபுத் திப், பாபுல் ஹிஜாம(த்)தி மினத் தாஃ. – வெளியீட்டாளர்.

போயிருக்கும். இந்த நேரத்தில் இறைவன் விண்ணிலிருந்து இஸ்லாத்தின் கையைப் பற்றிப் பிடித்ததற்காக அல்லாஹ்வுக்கு நன்றி!

இந்த விஷயங்களைத்தான் நான் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களிடம் கூறினேன். எந்த விஷயத்தை நான் இறுதியாக அவருக்கு புரிய வைத்தேனோ அது இதுவாகும். அதாவது மார்க்க அம்சத்தின் அடிப்படையில் பார்க்கும் போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு 16 சிறப்புகள் உள்ளன.

(1) முதலில் இஸ்ரவேல் நபிமார்களுக்கு அருளப்பட்ட ஏடுகள் சாட்சி பகர்வது போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இஸ்ரவேல் சந்ததிகளுக்கு வாக்களிக்கப்பட்ட நபியாக இருந்தார்கள்.

(2) இரண்டாவது விஷயம் என்னவென்றால் யூதர்கள் தமது ஆட்சியை இழந்திருந்த காலத்தில் அவர்கள் வந்தார்கள். அதாவது அந்த நாட்டில் யூதர்களின் எந்தவோர் ஆட்சியும் இருக்கவில்லை. யூதர்களில் சில பிரிவுகளை சார்ந்தவர்கள் வேறு ஏதாவதொரு நாட்டிற்கு சென்று அங்கு அவர்களின் அரசாங்கத்தை நிறுவி இருக்கலாம்.

உதாரணமாக, ஆப்கானியர்களும் காஷ்மீரிகளும் யூதர்களிலிருந்து வந்தவர்களாகவே கருதப்படுகின்றனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு பேரரசர்களாக ஆகி விட்டனர் என்பதை மறுக்க முடியாது. எவ்வாறாயினும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றிய காலத்தில் நாட்டின் இந்த பகுதியிலிருந்து யூதர்களின் ஆட்சி இல்லாமல் ஆகிக் கொண்டிருந்தது. அவர்கள் ரோமானிய ஆட்சியின் கீழ் வாழ்ந்து வந்தனர். ரோமானிய ஆட்சிக்கு ஆங்கிலேய ஆட்சியுடன் அதிகமாக ஒப்புமை இருக்கின்றது.

(3) மூன்றாவதாக, யூதர்கள் பல்வேறு பிரிவுகளாக பிரிந்திருந்த காலத்தில் அவர்கள் வந்தார்கள். யூதர்களின்

ஒவ்வொரு பிரிவும் மற்ற பிரிவுக்கு எதிராக இருந்தது. பரஸ்பரம் அவர்களுக்கிடையில் கடுமையான பகைமையும் சண்டைகளும் உருவாகி விட்டன. அவர்களிடையே இருந்து வந்த அதிகமான கருத்து வேறுபாடுகளின் காரணமாக தவ்ராத்தின் பெரும்பாலான கட்டளைகள் சந்தேகத்திற்குரியவையாக ஆகி விட்டன. ஓரிறைமையில் மட்டுமே அவர்கள் ஒன்றுபட்டிருந்தனர். ஏனைய பெரும்பாலான பல மார்க்க விஷயங்களில் அவர்கள் ஒருவர் மற்றவரது எதிரியாக இருந்தனர். அறிவுரை கூறுகின்ற எவராலும் அவர்களிடையே சமாதானம் செய்து வைக்க முடியாமல் இருந்தது. அவ்வாறே அவர்களுக்கிடையில் தீர்ப்பு கூறவும் முடியாமல் இருந்தது. இந்நிலையில் ஓர் இறைகட்டளை அதாவது இறைவனிடமிருந்து புது இறையறிவிப்பை பெற்று உண்மையாளர் –களுக்கு உதவுகின்ற, தீர்ப்பு வழங்குகின்ற ஒருவரின் தேவை உடையவர்களாக இருந்தனர். இறைநியதியினால் அவர்களின் எல்லா பிரிவுகளிலும் எத்தகைய வழிகே கலந்து விட்டது என்றால் அவர்களில் ஒருவரைக் கூட உண்மையை சார்ந்திருப்பவர்கள் என்று கூற முடியாமல் இருந்தது. எல்லா பிரிவுகளிலும் ஏதாவதொரு வகையில் பொய்யும், கூட்டிக் குறைத்துக் கூறப்படும் கூற்றுக்களின் கலப்படமும் இருந்தன.

எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை எதிரியாக கருதி அவர்களை பிடித்து அவர்களது உயிரை பறிக்கும் சிந்தனையில் அவர்கள் ஆழ்ந்து விட்டதற்கு இதுவே காரணமாக ஆகிவிட்டது. ஏனென்றால் அவர்களில் ஒவ்வொரு பிரிவினரும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் முழுமையான முறையில் அவர்களை உண்மைப்படுத்துபவர்களாகவும், உண்மையாளர் என்றும், நன்னடத்தை உடையவர்கள் என்றும் அவர்களின் எதிரியை பொய்யர் என்று கூற வேண்டும் என்றே விரும்பினர். ஆனால், அவ்வாறு 'ஆமாம்' போடுவது இறைவனின் நபியால் சாத்திய –மற்றதாகும்.

(4) நான்காவதாக, மர்யமின் மகன் ஈஸாவிற்கு ஜிஹாது செய்வதற்கான கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மார்க்கத்தின் முன்னேற்றத்திற்காக ஏதாவதொரு காரணங்களைக் கூறியவாறு வாளை பயன்படுத்தி வந்ததால் அவர்களின் மார்க்கம் கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர் –களின் பார்வையில் அவப்பெயருக்கு ஆளாகியிருந்தது. பால் குடிக்கின்ற பல இலட்சம் குழந்தைகள் (மூஸா) அவர்களது கட்டளையினாலும் அவர்களது பிரதிநிதியாக இருந்த அவர்களது கலீஃபாவாகிய யோசுவா அவர்களின் கட்டளையினாலும் கொல்லப்பட்டனர் என்று இன்று வரை அவர்களின் நூல்களில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மார்க்கத்தின் மீது தொடர்ந்து இந்த ஆட்சேபனை செய்யப்படுகின்றது.

பிறகு தாவூது★ மற்றும் ஏனைய நபிமார்கள் செய்த போர்கள் இந்த ஆட்சேபனைக்கு மேலும் வலுவூட்டக் கூடியவையாக இருந்தன. எனவே, மனிதர்களின் இயல்புகளினால் இந்த கடுமையான கட்டளையை சகித்துக் கொள்ள முடியவில்லை. மாற்று மதத்தவர்களின் இந்தக் கருத்துக்கள் அதன் உச்சத்தை அடைந்து விட்டபோது சமாதானம் மற்றும் அமைதியின் மூலமாக மட்டும் மார்க்கத்தை பரப்புகின்ற, மற்ற சமுதாயங்கள் தவ்ராத்தின் மீது செய்திருந்த ஆட்சேபனைகளை அகற்றுகின்ற ஒரு நபியை அனுப்ப இறைவன் நாடினான். அந்த சமாதானத்தின் தூதர் மர்யமின் மகன் ஈஸா (அலை) அவர்களாக இருந்தார்கள்.

(5) ஐந்தாவதாக, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் பொதுவாக யூத ஆலிம்களின் நடத்தை மிகவும் சீர்குலைந்திருந்தது. அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் ஒற்றுமை இல்லாமல் இருந்தது. அவர்களது தொழுகைகளும், நோன்புகளும் முழுக்க முழுக்க வெளி வேஷத்தால்

---

★ I சாமுவேல் 17:57 – வெளியீட்டாளர்.

நிரம்பியிருந்தன. அதிகாரப் பிரியர்களாக இருந்த அந்த ஆலிம்கள் ரோமானிய ஆட்சியின் கீழ் எந்த அளவு உலகின் கிருமிகளாக ஆகிவிட்டனர் என்றால் சூழ்ச்சியின் மூலமாக அல்லது நம்பிக்கை துரோகத்தின் மூலமாக அல்லது ஏமாற்றுவதன் மூலமாக அல்லது பொய் சாட்சி கூறுவதன் மூலமாக அல்லது பொய்யான மார்க்கத் தீர்ப்பு வழங்குவதன் மூலமாக உலகை சம்பாதித்துக் கொள்வதிலேயே தமது அனைத்து ஆற்றல்களையும் அவர்கள் பயன்படுத்தினர்.

தூய்மையானவர்களாக தங்களை காட்டிக் கொள்கின்ற ஆடைகளையும் பெரும் பெரும் ஜிப்பாக்களையும் அணிவதை தவிர ஓர் அணுவளவு கூட அவர்களிடம் ஆன்மீகம் எஞ்சியிருக்கவில்லை. அவர்கள் ரோமானிய பேரரசின் ஆட்சியாளர்களிடமிருந்து கூட கௌரவத்தை பெற்றுக் கொள்ள மிகவும் விருப்பமுடையவர்களாக இருந்தனர். பல வகையான சதியாலோசனைகளில் ஈடுபடுவது மற்றும் பொய்யாக புகழ்வதன் மூலம் அரசிடமிருந்து கண்ணியத்தையும் ஓரளவு ஆட்சியையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

அவர்களிடம் முழுக்க முழுக்க உலகம் மட்டுமே எஞ்சியிருந்ததால் தவ்ராத்திற்கேற்ப செயல்படுவதன் மூலமாக வானத்திலிருந்து அவர்களுக்கு கிடைக்கவிருந்த கண்ணியத்தை முற்றிலும் பொருட்படுத்தாமல் உலகை வணங்கும் கிருமிகளாக அவர்கள் ஆகியிருந்தனர். உலகத்தின் அழகில்தான் எல்லா பெருமையும் இருப்பதாக அவர்கள் கருதி வந்தனர். இதன் காரணமாக ரோமானிய பேரரசால் நியமிக்கப்பட்டிருந்த அந்த நாட்டின் கவர்னர் மீது ஓரளவு இவர்களது செல்வாக்கும் இருந்திருக்கின்றது என்பது தெரிய வருகிறது. உலக வணங்கிகளாக இருக்கின்ற இவர்களது பெரும் பெரும் குருமார்கள் மிக நீண்ட தூர பயணங்களை மேற்கொண்டு (ரோமானிய பேரரசரான) கெய்ஸரை சந்தித்து வந்தனர்.

பேரரசுடனுள்ள தங்களது தொடர்புகளை வலுப்படுத்தி வந்தனர். அவர்களில் பலருக்கும் அரசின் புறமிருந்து உதவித் தொகையும் கிடைத்து வந்தது. இதன் அடிப்படையிலேயே அம்மக்கள் தங்களை பேரரசின் நலனில் மிகவும் அக்கறை உடையவர்களாக தங்களை காட்டிக் கொண்டனர். ஒரு வகையில் பார்க்கும்போது அவர்கள் கண்காணிப்பின் கீழ் இருந்து வந்தாலும் (பொய்யாக) புகழ்கின்ற வழிமுறைகளின் மூலமாக அவர்கள் கெய்ஸரையும் அவரது பெரும் ஆட்சியாளர்களையும் தங்களை பற்றி மிகவும் நல்லெண்ணம் கொண்டவர்களாக ஆக்கி வைத்திருந்தனர்.

இந்த தந்திரங்களின் காரணமாக அவர்களின் ஆலிம்கள் ஆட்சியாளர்களின் பார்வையில் கண்ணியமிக்கவர்களாக கருதப்பட்டனர். பதவி வகிப்பவர்களாகவும் இருந்தனர். இதனால் மர்யமின் மகனான இயேசு என்ற பெயருடைய கலீலியோவில் வசித்து வந்த ஓர் ஏழை மனிதர் இந்த தீங்கிழைக்கும் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக மிகவும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். அவரது முகத்தில் உமிழ்ந்தது★ மட்டுமல்லாமல் ஆளுநரின் கட்டளையின்படி அவருக்கு கசையடியும்★ கொடுக்கப்பட்டது. திருடர்கள் மற்றும் தீய நடத்தை உடையவர்களுடன் சேர்த்து அவர் சிலுவையில் அறையப்பட்டார்.★ ஆனால் அவர் ஓர் அணுவளவு கூட குற்றமிழைக்கவில்லை. யூதர்களை மகிழ்விப்பதற்காக மட்டுமே அரசாங்கம் இவ்வாறு நடந்து கொண்டது. ஏனென்றால் பெரும்பாலான மக்களின் கருத்திற்கு ஏற்ப வளைந்து கொடுத்து செயல்படுவது பேரரசின் கொள்கையாக

---

★ (மத்தேயு 26:67) – வெளியீட்டாளர்.

★ (மாற்கு 10:34) – வெளியீட்டாளர்.

★ அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவரோடே கூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுள்ள சிலுவைகளில் அறைந்தார்கள். (யோவான் 19:18) – வெளியீட்டாளர்.

இருந்தது. இந்நிலையில் இந்த ஏழைக்கு ஆதரவாகப் பேச எவரும் இருக்கவில்லை. இதுவே அந்த நீதிமன்றத்தின் நிலையாக இருந்தது. இதன் விளைவாக இறுதியில் அவர் யூத புரோகிதர் –களிடம் ஒப்படைக்கப்பட்டார். அந்த புரோகிதர்கள் அவரை சிலுவையில் அறைந்தனர். வானம் மற்றும் பூமியின் எஜமானனாக இருக்கின்ற இறைவன் அத்தகைய நீதிமன்றங்களை சபிக்கின்றான். ஆனால் அந்த அரசாங்கங்கள் மீது அந்தோ பரிதாபம்! அவர்கள் வானத்தின் இறைவனின் பக்கம் பார்ப்பதே இல்லை. இதையும் நாம் கூறிக்கொள்கின்றோம். இந்த நாட்டின் ஆளுநராக இருந்த பிலாத்துவும் அவரது மனைவியும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சீடர்களாக இருந்தனர். பிலாத்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை விடுதலை செய்து விட வேண்டும் என்றே விரும்பினார்.★

தங்களது உலகியல் காரியங்களின் காரணமாக அரசர் கெய்ஸரின் பார்வையில் கண்ணியத்திற்குரியவர்களாக இருந்து வந்த யூதர்களின் புரோகிதர்கள் வலுக்கட்டாயமாக அவரிடம் (பிலாத்துவிடம்) இந்த நபருக்கு நீர் தண்டனை வழங்காமல் இருந்தால் நாங்கள் கெய்ஸரிடம் உம்மை பற்றி முறையீடு செய்வோம் என்று கூறி மிரட்டியபோது பிலாத்து பயந்து விட்டார். ஏனென்றால் அவர் கோழையாக இருந்தார். தனது கொள்கையில் அவரால் நிலைத்திருக்க முடியவில்லை. இந்த அச்சம் அவரை பற்றிக் கொண்டதற்கான காரணம் சில கண்ணியமிக்க யூத புரோகிதர்களுக்கு கெய்ஸர் வரை செல்வதற்கான செல்வாக்கு இருந்தது. அவர்கள் மறைவான முறையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக இவர் குழப்பவாதியாகவும் அரசாங்கத்தின் எதிரியாகவும் இருந்து வருகின்றார். அவர் ஒரு கூட்டத்தை ஒன்று கூட்டி கெய்ஸர் மீது தாக்குதல் நடத்த விரும்புகின்றார் என்ற செய்தியை தெரிவித்தனர்.

★ அது முதல் பிலாத்து அவரை விடுதலை செய்ய வகை தேடினான். (யோவான் 19:12) – வெளியீட்டாளர்.

வெளிப்படையில் பார்க்கும் போது இந்த கஷ்டங்களை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சந்திக்க வேண்டியதிருந்தது. அதாவது இந்த ஏழை எளிய மனிதருக்கு மன்னர் கெய்ஸருடனோ அவரது ஆட்சியாளர்களுடனோ எந்த தொடர்பும் இருக்கவில்லை. வெளிவேஷக்காரர்கள் மற்றும் உலக விரும்பிகள் போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு அவரைப் பற்றிய எந்த அறிமுகமும் இருந்ததில்லை. அவர்கள் இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

பெரும்பாலான யூத மத குருமார்கள் தமது உலகத்தை வணங்குதல், தந்திரம், முகஸ்துதி ஆகியவற்றின் மூலம் அரசாட்சியில் ஊடுருவி விட்டனர். உண்மையில் அவர்கள் பேரரசின் நண்பர்களாக இருக்கவில்லை. ஆனால் அவர்கள் நண்பர்களாக இருக்கின்றனர் என்று பேரரசும் கூட நிச்சயமாக ஏமாற்றத்திற்கு ஆளாகி இருந்தது. ஆகவே, அவர்களுக்காக ஒரு பாவமும் அறியாத இறைவனின் நபி எல்லா வகையிலும் இழிவுபடுத்தப்பட்டார். ஆனால் விண்ணிலிருந்து பார்க்கின்ற உள்ளங்களின் எஜமானனாக இருக்கின்ற அந்த இறைவனின் பார்வையில் தீங்கிழைத்த அந்த அனைவரும் மறைவானவர்களாக இருக்கவில்லை.

இறுதியில் முடிவு இவ்வாறு அமைந்தது. அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்த பிறகு இறைவன் மரணிப்பதிலிருந்து அவர்களை காப்பாற்றினான். அவர்கள் வேதனை நிறைந்த உள்ளத்துடன் தோட்டத்தில் செய்த பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டான்.

அது தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் இந்த தீய யூதர்கள் தனது உயிரின் எதிரிகளாக இருக்கின்றனர். இவர்கள் தன்னை விடமாட்டார்கள் என்பதில் ஈஸா (அலை) அவர்களுக்கு உறுதி ஏற்பட்டபோது அவர்கள் இரவு நேரத்தில் ஒரு தோட்டத்திற்குச் சென்று தேம்பித் தேம்பி அழுதார்கள்.

**மேலும் இறைவா! இந்த பாத்திரத்தை என்னை விட்டு அகற்றிவிடு. இது உன்னால் இயலாத காரியமல்ல. நீ விரும்பியதை செய்கின்றாய் என்று துஆ செய்தார்கள்.★**

இந்த இடத்தில் அரபி பைபிளில் இந்த வாசகம் எழுதப்பட்டிருக்–கின்றது. فبكىٰ بدموع جارية وعبرات متحدّرة فسُمِع لتقواه அதாவது மெஸாயாவான இயேசு எந்த அளவு அழுதார்கள் என்றால் அவர்களது கண்ணீர் தண்ணீரை போன்று அவரது கன்னங்களில் வழிந்தோட ஆரம்பித்தது. அவர் மிகுதியாக அழுதார். மிகவும் வேதனையுற்றார்.★ அப்போது அவரது இறையச்சத்தின் காரணமாக அவரது துஆ ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும் இறை அருள் சில காரணிகளை உருவாக்கியது. அதனால் அவர்கள் சிலுவையிலிருந்து உயிருடன் இறக்கப்பட்டார்கள். பிறகு அவர்கள் கல்லறையில் வைக்கப்பட்டிருந்த அந்த தோட்டத்திலிருந்து மறைவான முறையில் தோட்டக்காரனின் வேடத்தில் வெளியில் வந்தார்கள். இறைவனின் கட்டளைக்கேற்ப மற்றொரு நாட்டை நோக்கி அவர்கள் சென்று விட்டார்கள். அவர்களது தாயாரும் அவர்களுடன் சென்றார்கள்.

இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَّ اٰوَيْنٰهُمَآ اِلٰى رَبْوَةٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِيْنٍ (23:51)

அதாவது இந்த சிலுவை துன்பத்திற்குப் பிறகு நாம் ஈஸாவையும் அவரது தாயாரையும் உயர்ந்த நிலத்தையுடைய மற்றும் தூய தண்ணீரையுடைய ஒரு நாட்டை சென்றடையச் செய்தோம். அது மிகவும் சுகத்தை தரக்கூடிய இடமாக இருந்தது என்று கூறுகின்றான்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு மர்யமின் மகன் ஈஸா அவர்கள் தமது 120 வயது வரை உயிர் வாழ்ந்தார்கள்★ என்று நபிமொழிகளில்

---

★ மாற்கு 14:36, மத்தேயு 26:39 – வெளியீட்டாளர்.

★ லூக்கா 22:44 – வெளியீட்டாளர்.

★ கன்ஸுல் உம்மால் – உருது, தொகுதி 11, பக்கம் 229, ஹதீஸ் எண் 32262 – வெளியீட்டாளர்.

குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு மரணமடைந்து அவர்கள் தமது இறைவனை சென்றடைந்தார்கள். மறுவுலகிற்குச் சென்று ஹஸ்ரத் யஹ்யா (அலை) அவர்களுக்கு பக்கத்தில் அமர்ந்துள்ளார்கள். ஏனென்றால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பான சம்பவங்களுக்கும், ஹஸ்ரத் யஹ்யா (அலை) அவர்கள் தொடர்பான சம்பவங்களுக்கும் இடையில் ஒப்புமை இருக்கின்றது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒரு நல்ல மனிதராக இருந்தார்கள்; நபியாக இருந்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவரைப் பற்றி இறைவன் என்று கூறுவது குஃப்ர் அதாவது இறைவனை மறுக்கும் செயலாகும். அவர்களைப் போன்ற இலட்சக்கணக்கான மனிதர்கள் உலகில் வாழ்ந்துள்ளனர்; இனியும் வாழ்வார்கள். இறைவன் இப்படிப்பட்ட அடியார்களை மேன்மைப்படுத்துவதில் ஒருபோதும் சோர்வடைந்ததில்லை; சோர்வடையவும் மாட்டான்.

(6) ஆறாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தோன்றிய காலம் ரோமானிய அரசரான கெய்ஸரின் ஆட்சியின் கீழ் அந்த நாடு இருந்து வந்த காலமாகும்.

(7) ஏழாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது ரோமானிய பேரரசு கிறித்துவ மார்க்கத்திற்கு எதிரானதாக இருந்தது. ஆனால் இறுதி விளைவு எவ்வாறு இருந்தது என்றால் கிறித்தவ மார்க்கம் பேரரசர் கெய்ஸரின் சமுதாயத்திற்குள் ஊடுருவியது. சிறிது காலம் கழிந்த பிறகு ரோமானிய மன்னரான கெய்ஸர் தாமே கிறித்தவராக மாறி விட்டார்.

(8) எட்டாவது சிறப்புத்தன்மை இதுவாகும். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஈஸா என்று அழைக்கின்ற மெஸாயாவாகிய இயேசுவின் காலத்தில் ஒரு **புதிய நட்சத்திரம்** வெளிப்பட்டது.★

---

★ ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப்போகையில், இதோ அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன் சென்றது. (மத்தேயு 2:9)

(9) ஒன்பதாவது சிறப்புத்தன்மை இதுவாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைந்த நேரத்தில் **சூரியனுக்கு கிரகணம் ஏற்பட்டது.★**

(10) பத்தாவது சிறப்புத்தன்மை இதுவாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு துன்பம் தந்த பிறகு யூதர்களிடையே கடுமையான பிளேக் நோய் பரவியது.

(11) பதினொன்றாவது சிறப்புத்தன்மை இதுவாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது மத காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வழக்கு தொடரப்பட்டது. அன்னார் ரோமானிய பேரரசுக்கு எதிராக செயல்பட்டார்கள் என்றும் கிளர்ச்சி செய்வதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் வெளிப்படுத்தப்பட்டது.

(12) பன்னிரெண்டாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட நேரத்தில் அவருடன் ஒரு திருடனும் கூட சிலுவையில் அறையப்பட்டான்.★

(13) பதிமூன்றாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அவர்கள் பிலாத்துவிற்கு முன்னால் மரண தண்டனைக்காக நிறுத்தப்பட்ட போது நான் இவரிடம் எந்த பாவத்தையும் காணவில்லை என்று பிலாத்து கூறினார்.★

(14) பதினான்காவது சிறப்புத்தன்மை இதுவாகும். அவர்களுக்கு தந்தை இல்லாததன் காரணமாக அவர் இஸ்ரவேல் சந்ததிகளை சார்ந்தவராக இல்லாமல் இருந்தாலும் இஸ்ரவேல்

---

★ சூரியன் இருளடைந்தது. (லூக்கா 23:45) – வெளியீட்டாளர்.

★ அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவரோடே கூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். (யோவான் 19:18) – வெளியீட்டாளர்.

★ நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.
(யோவான் 19:4,6; லூக்கா 23:14) – வெளியீட்டாளர்.

சந்ததிகளின் தொடரில் மூஸாவிற்குப் பிறகு பதினான்காவது நூற்றாண்டில் தோன்றிய இறுதி தூதராக அவர்கள் இருந்தார்கள்.

(15) பதினைந்தாவது சிறப்புத்தன்மை இதுவாகும். மர்யமின் மகன் இயேசு தோன்றிய காலத்தில் இருந்த கெய்ஸரின் ஆட்சியில் குடிமக்களுக்கு சுகத்தை தருவதற்கும் பயணத்திலும் பயணமில்லாத நேரங்களிலும் அவர்களுக்கு வசதி செய்து தருவதற்காக பல புதிய திட்டங்கள் தீட்டப்பட்டன. சாலைகள் உருவாக்கப்பட்டன. தங்குமிடங்கள் ஆயத்தம் செய்யப்பட்டன. நீதிமன்றத்தின் புதிய வழிமுறைகள் வகுக்கப்பட்டன. அவை ஆங்கிலேய நீதிமன்றத்திற்கு ஒப்பானவையாக இருந்தன.

(16) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் காணப்பட்ட பதினாறாவது சிறப்புத்தன்மை இதுவாகும். தந்தை இல்லாமல் பிறந்ததில் அவர்கள் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு ஒப்பானவர்களாக இருந்தார்கள்.

இந்த பதினாறு சிறப்புத்தன்மைகளும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடரில் வந்த ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் இருந்தன. நபிமார்களின் ஏடுகளில் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது போன்று அல்லாஹ் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடரை அழித்து விட்டு முஹம்மதிய்ய நபித்துவ தொடரை நிலைநாட்டிய போது நுட்பமான ஞான –முள்ளவனும், எல்லாவற்றையும் நன்கு அறிந்தவனுமாகிய அந்த இறைவன் இந்த நபித்துவ தொடரின் ஆரம்பம் மற்றும் இறுதி ஆகிய இரண்டிலும் முழுமையான ஒப்புமையை உருவாக்க வேண்டும் என்று விரும்பினான். எனவே, அவன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அனுப்பி அவர்களை மூஸாவிற்கு ஒப்பானவராக ஆக்கி விட்டான். பின்வரும் வசனம் மூலம் இது தெரிய வருகின்றது.

اِنَّآ اَرْسَلْنَآ اِلَيْكُمْ رَسُوْلًا ۙ۬ شَاهِدًا عَلَيْكُمْ
كَمَآ اَرْسَلْنَآ اِلٰى فِرْعَوْنَ رَسُوْلًا (73:16)

அதாவது நாம் ஃபிர்அவ்னிடம் ஒரு தூதரை அனுப்பியது போன்று நிச்சயமாக நாம் உங்களுக்கு சாட்சியாக இருக்கக்கூடிய ஒரு தூதரை உங்களிடம் அனுப்பியுள்ளோம்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் காஃபிர்களுக்கு எதிராக வாளேந்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட மக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டு எதிரிகளால் பின்தொடரப்பட்ட போது முஸ்லிம்களை பாதுகாப்பதற்காக வாளேந்தினார்கள்.

எவ்வாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் கண்களுக்கு முன்னால் அவர்களது கடும் எதிரியான ஃபிர்அவ்ன் கடலில் மூழ்கடிக்கப்பட்டானோ அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அவர்களின் கடும் எதிரியான அபூஜஹ்ல் அழிந்து போனான். இவ்வாறு பல ஒப்புமைகள் உள்ளன.

அவற்றை எழுதுவதென்றால் அது மிக நீண்ட விஷயமாக ஆகுவதற்கு காரணமாகி விடும். இவை நபித்துவ தொடரின் ஆரம்பத்திலுள்ள ஒப்புமைகள் ஆகும். ஆனால் முஹம்மதிய்ய நபித்துவ தொடரின் இறுதி கலீஃபாவுடனும், மூஸவிய்ய நபித்துவ தொடரின் இறுதிய கலீஃபாவுடனும் ஒப்புமை இருக்க வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் முஹம்மதிய்ய நபித்துவ தொடர், இமாம்கள் மற்றும் கலீஃபாக்களின் தொடரின் அடிப்படையில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடருக்கு ஒப்பானதாக இருக்கின்றது என்று இறைவன் கூறியிருப்பது சரியானதாக ஆகிவிட வேண்டும். எப்போதும் ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ள ஒப்புமையே பார்க்கப்படுகின்றது. நீண்ட காலமாக இருக்கின்ற இடைப்பட்ட காலத்தை முழுமையான பார்வையுடன் ஆய்வு செய்து பார்ப்பதற்கான வாய்ப்பை அது கொண்டிருப்பதில்லை. ஆனால் ஆரம்பத்திலும் இறுதியிலும் உள்ள ஒப்புமையின் காரணமாக இடைப்பட்ட காலத்திலும் கூட கண்டிப்பாக ஒப்புமை இருக்கும் என்ற இந்த யூகம் உருவாகி விடுகின்றது.

அறிவின் பார்வை அது குறித்து முழுமையாக ஆய்வு செய்ய முடியாமல் போனாலும் சரியே. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் மார்க்க அம்சத்தின் அடிப்படையில் பதினாறு சிறப்புத்தன்மைகள் இருந்தன என்று நாம் எழுதி விட்டோம். அவை இஸ்லாத்தின் கடைசி கலீஃபாவிடம் இருக்க வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் அவருக்கும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கும் இடையில் முழுமையான ஒப்புமை இருப்பது நிரூபிக்கப்பட வேண்டும்.

(1) முதல் சிறப்புத்தன்மை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்டவராக இருந்தார்கள் என்பதாகும். இஸ்லாத்தில் ஆயிரக்கணக்கான இறை நேசர்களும் அல்லாஹ்விற்கு பிரியமானவர்களும் தோன்றியுள்ளனர். ஆனால் அவர்களில் எவரும் வாக்களிக்கப்பட்டவராக இருக்கவில்லை. ஆனால், மஸீஹ் என்ற பெயரில் வர இருந்தவர் வாக்களிக்கப்பட்டவராக இருந்தார். அவ்வாறே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு முன்னதாக எந்தவொரு நபியும் வாக்களிக்கப்பட்டவராக இருக்கவில்லை. மஸீஹ் மட்டுமே வாக்களிக்கப்பட்டவராக இருந்தார்.

(2) ஆட்சி அழிந்து போனது இரண்டாவது சிறப்புத்தன்மை ஆகும். மர்யமின் மகன் ஈஸா (அலை) அவர்கள் தோன்றுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக அந்நாட்டிலிருந்து இஸ்ரவேலர்களின் ஆட்சி முடிந்து போய் விட்டது. அவ்வாறே இந்த இறுதி மஸீஹின் பிறப்பிற்கு முன்னர் பல்வேறு வகையான தீய நடத்தைகளின் காரணமாக இஸ்லாமிய ஆட்சி இந்தியாவிலிருந்து மறைந்து போய் விட்டது. அதன் இடத்தில் ஆங்கிலேய ஆட்சி நிலை பெற்று விட்டது என்பதில் என்ன சந்தேகம் உள்ளது.

(3) முந்தைய மஸீஹ் (அலை) அவர்களிடம் காணப்பட்ட மூன்றாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்களது காலத்தில் யூத மக்கள் பல பிரிவுகளாக பிரிந்து விட்டனர். மேலும் அவர்களிடையே தீர்ப்பு வழங்கின்ற ஒருவரின் தேவையை

உடையவர்களாக அவர்களின் மனநிலை இருந்தது. அவ்வாறே இறுதி மஸீஹின் காலத்தில் முஸ்லிம்களில் அதிகமான பிரிவுகள் பரவியிருந்தன.

(4) முதல் மஸீஹிடம் இருந்த நான்காவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்கள் ஜிஹாது செய்வதற்காக நியமிக்கப்படவில்லை. அவ்வாறே இறுதி மஸீஹும் ஜிஹாதிற்காக நியமிக்கப்படவில்லை. அவ்வாறு ஏன் நியமிக்கப்பட வேண்டும்? வாளினால் எந்தவோர் உள்ளமும் திருப்தியை பெற முடியாது என்று கால ஓட்டம் சமுதாயத்தை எச்சரித்து விட்டது. மேலும் இப்போது மார்க்க விஷயங்களுக்காக நாகரிகமாக நடந்து கொள்கின்ற எவரும் வாளேந்த மாட்டார்.

இப்போது காலம் எப்படிப்பட்ட நிலைமையில் உள்ளது என்றால் முஸ்லிம்களிலுள்ள எந்த பிரிவினர் இரத்த வெறியுள்ள மஹ்தி அல்லது மஸீஹிற்காக காத்துக் கொண்டிருக்கின்றனரோ அவர்கள் அனைவரும் தவறில் இருக்கின்றனர் என்பதற்கு இக்காலமே சாட்சி பகர்கின்றது. அவர்களது எண்ணங்கள் இறைவனது விருப்பத்திற்கு மாற்றமானவையாக இருக்கின்றன. அறிவும் கூட இந்த சாட்சியைத்தான் கூறுகின்றன.

ஏனென்றால், முஸ்லிம்கள் மார்க்கத்திற்காக போர் செய்யலாம் என்பது இறைவனின் விருப்பமாக இருந்திருந்தால் தற்போதுள்ள போர்களுக்கான வழிமுறைகளை வகுப்பதில் எல்லாரையும் விட முஸ்லிம்களே மேலோங்கி இருப்பர். அவர்களே பீரங்கிகளை கண்டு பிடித்திருப்பர். அவர்களே புதிய புதிய துப்பாக்கிகளை கண்டு பிடித்திருப்பர். அவர்களுக்குத்தான் போருக்கான திறமைகளில் எல்லா அம்சத்தின் அடிப்படையிலும் சிறப்பு வழங்கப்பட்டிருக்கும்.

எதுவரையென்றால் எதிர்காலத்தில் நடக்கும் போர்களுக்கான போர் பலூன்களை உருவாக்கும் எண்ணம் அவர்களுக்குத்தான்

வந்திருக்கும். தண்ணீருக்கு அடியில் தாக்குதல் நடத்துகின்ற நீர்மூழ்கிக் கப்பல்களை அவர்கள்தான் கண்டுபிடித்திருப்பார்கள். அதனால் உலகை வியப்பில் ஆழ்த்தியிருப்பர். ஆனால், அப்படி எதுவும் நிகழவில்லை. மாறாக, நாளுக்கு நாள் கிறித்துவர்கள் இந்த விஷயங்களில் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இதிலிருந்தும் போர்கள் மூலமாக இஸ்லாம் பரவ வேண்டும் என்பது இறைவனின் விருப்பம் அல்ல என்பது தெரிய வருகிறது. எனினும் கிறித்துவ மார்க்கம் ஆதாரங்களின் அடிப்படையில் நாளுக்கு நாள் சோர்வடைந்து கொண்டிருக்கின்றது. மேலும் பெரும் பெரும் ஆராய்ச்சியாளர்கள் திரித்துவ கொள்கையை கைவிட்டுக் கொண்டே இருக்கின்றனர். எதுவரையென்றால் ஜெர்மனியின் அரசர் கூட இந்த கொள்கையை கைவிடுவது பற்றி சைகையாக கூறியுள்ளார்.

இதிலிருந்தும் இறைவன் ஆதாரங்கள் என்னும் ஆயுதங்கள் மூலமாக மட்டும் கிறித்தவர்களின் திரித்துவ கொள்கையை பூமியிலிருந்து அழித்து விட விரும்புகின்றான் என்பது நிரூபிக்கப் –படுகின்றது. நடைமுறை ரீதியாக பார்க்கும்போது எது நடக்க இருக்கின்றதோ அதற்கான அடையாளங்கள் முன்னரே வெளிப்பட ஆரம்பித்து விடுகின்றன. எனவே முஸ்லிம்களுக்கு போர் மூலம் கிடைக்கும் வெற்றிகளின் சில அடையாளங்கூட விண்ணிலிருந்து வெளிப்படவில்லை. இதற்கு எதிரில் மார்க்க ஆதாரங்களுக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. மேலும் கிறித்தவ மார்க்கம் தானாகவே தனது சக்தியை இழந்து கொண்டிருக்கின்றது. விரைவில் அது உலகிலிருந்து முற்றிலுமாக அழிந்து போக இருக்கின்றது.

(5) முதல் மஸீஹிடம் இருந்த ஐந்தாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவரது காலத்தில் யூதர்களின் நடத்தை சீர்குலைந்திருந்தது. குறிப்பாக அவர்களில் ஆலிம்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலார் கொடிய சூழ்ச்சிக்காரர்

–களாகவும் உலகை வணங்குபவர்களாகவும், உலக பேராசைகள் மற்றும் உலகாதாயத்தில் மூழ்கியவர்களாகவும் இருந்தனர். அவ்வாறே இறுதி மஸீஹின் காலத்தில் பொது மக்கள் மற்றும் இஸ்லாத்திலுள்ள பெரும்பாலான ஆலிம்களின் நிலைமை ஆகிக் கொண்டிருக்கின்றது. அதை விரிவாக எழுத வேண்டிய தேவையில்லை.

(6) ஆறாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் ரோம் நாட்டு மன்னரான கெய்ஸரின் கீழ் ஆட்சி இருந்த காலத்தில் தோன்றினார்கள். எனவே இந்த சிறப்புத்தன்மையில் இறுதி மஸீஹிற்கும் பங்கு இருக்கின்றது. ஏனென்றால் நானும் கெய்ஸரை போன்ற ஒருவரின் கீழ், ஆட்சி இருந்த காலத்தில் தோன்றியுள்ளேன். மஸீஹின் காலத்தில் இருந்த அந்த கெய்ஸரை விட இந்த கெய்ஸர் சிறந்தவர் ஆவார்.

ஏனென்றால் ரோம் நாட்டு அரசரான கெய்ஸருக்கு அவரது ஆளுநரான பிலாத்து தந்திரமாக செயல்பட்டு ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களை சிலுவையில் அறைந்து கொல்வதிலிருந்து காப்பாற்றி விட்டார் என்றும் மாறு வேடத்தில் வேறு ஒரு பக்கம் அவர்களைத் தப்பி ஓட வைத்தார் என்றும் தெரிய வந்ததும் அரசர் அவர் மீது மிகவும் வெறுப்படைந்தார். யூத புரோகிதர்கள்தான் இரகசியமாக இது பற்றி மன்னருக்கு தெரிவித்தனர் என்பது நிரூபிக்கப்பட்ட விஷயமாகும்.

அதாவது கெய்ஸர் மன்னருக்கு எதிராக கிளர்ச்சி செய்த ஒருவரை பிலாத்து தப்பி ஓட வைத்து விட்டார் என்ற இரகசிய தகவல் கொடுக்கப்பட்டதும் உடனடியாக பிலாத்து கெய்ஸர் அரசரின் கட்டளைக்கு ஏற்ப சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். இறுதி விளைவாக நிகழ்ந்தது என்னவென்றால், சிறைச்சாலையிலேயே அவரது தலை துண்டிக்கப்பட்டது. மேலும் இவ்வாறு பிலாத்து ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பின்

காரணமாக ஷஹீதாகி விட்டார். ஆட்சியிலும் அதிகாரத்திலும் இருப்பவர்கள் பெரும்பாலும் மார்க்கத்தை இழந்தவர்களாகவே இருக்கின்றனர் என்பது இதிலிருந்து தெரிய வருகின்றது. இந்த அறிவற்ற கெய்ஸர் யூத மதகுருமார்களை மிகவும் நம்பிக்கைக்கு உரியவராகக் கருதினார். அவர்களை கௌரவித்தார். அவர்கள் கூறியதற்கு ஏற்ப செயல்பட்டார். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கொலை செய்யப்படுவதை நாட்டின் நலன் கருதி செய்யப்படும் ஒரு செயலாகக் கருதினார். ஆனால் எனது கருத்தின்படி, இப்போது காலம் மிகவும் மாறிவிட்டது. எனவே அறிவீனராகவும், அநீதி இழைப்பவராகவும் இருந்த அந்த கெய்ஸரை விட நமது கெய்ஸர் தகுதியில் சிறந்தவராக இருக்கின்றார்.

(7) ஏழாவது சிறப்புத்தன்மை என்னவென்றால், கிறித்தவ மார்க்கம் இறுதியில் கெய்ஸரின் ஆட்சியின்கீழ் இருந்து வந்த ரோமானிய சமுதாயத்திடம் ஊடுருவி விட்டது. எனவே இந்த சிறப்புத்தன்மையிலும் கூட இறுதியில் தோன்றிய மஸீஹிற்கு ஒப்புமை இருக்கின்றது. ஏனென்றால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள மக்கள் எனது வாதத்தையும் அதற்கான ஆதாரங்களையும் மிகவும் ஆர்வத்துடன் பார்ப்பதை நான் காண்கின்றேன். அம்மக்கள் தாமாகவே நூற்றுக்கணக்கான செய்தித் தாள்களில் எனது வாதத்தையும் அதற்கான ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளனர். எனக்கு ஆதரவாகவும் என்னை உண்மைப்படுத்தும் விதத்திலும் எத்தகைய சொற்களை எழுதியுள்ளனர் என்றால் ஒரு கிறித்தவரின் எழுது கோலிலிருந்து அத்தகைய சொற்கள் வெளிவருவது மிகவும் கடினமான விஷயமாகும்.

எதுவரையென்றால் சிலர் இந்த நபர் உண்மையாளராகத் தெரிகின்றார் என்று தெளிவான சொற்களில் எழுதியுள்ளனர். மேலும் சிலர், உண்மையில் மெஸாயாவாகிய இயேசுவை

இறைவனாக ஆக்குவது ஒரு பெரும் தவறாகும் என்றும் கூட எழுதியுள்ளனர். மேலும் சிலர் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதம் சரியான காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றது. காலமே அதற்கு ஓர் ஆதாரமாகும் என்றும் எழுதியுள்ளனர்.

சுருக்கமாக, இந்த எல்லா கூற்றுகளிலிருந்தும், அவர்கள் எனது வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர் என்று தெளிவாக தெரிகிறது. இந்த நாடுகளில் நாளுக்கு நாள் கிறித்தவ மார்க்கம் தானாகவே பனியைப் போன்று கறைந்து கொண்டிருக்கின்றது.

(8) ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் இருந்த எட்டாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அவர்களது காலத்தில் ஒரு நட்சத்திரம் தோன்றியது.★ இந்த சிறப்புத்தன்மையிலும் கூட இறுதி மஸீஹாக ஆகியதில் நான் ஒப்புமை ஆக்கப்பட்டுள்ளேன். ஏனென்றால், ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் தோன்றிய அதே நட்சத்திரம் இரண்டாவது முறையாக எனது காலத்திலும் தோன்றி இருக்கின்றது. இந்த விஷயத்தை ஆங்கில செய்தித்தாள்களும் உண்மைப்படுத்தியிருக்கின்றன. இதிலிருந்து மெஸாயா தோன்றும் காலம் அருகில் இருக்கின்றது என்ற முடிவுக்கு அவர்கள் வந்துள்ளனர்.

(9) மெஸாயாவாகிய இயேசுவிடமிருந்த ஒன்பதாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்களை சிலுவையில் அறைந்த சமயத்தில் சூரியனுக்கு கிரகணம் பிடித்தது.★ இந்த சம்பவத்திலும் கூட இறைவன் எனக்கு ஒப்புமையை வழங்கியுள்ளான். ஏனென்றால் நான் பொய்ப்படுத்தப்பட்ட பிறகு சூரியனுக்கு மட்டும் அல்லாமல் சந்திரனுக்கும் ஒரே மாதத்தில் கிரகணம் பிடித்தது. அது ரமலான் மாதமாக இருந்தது.

---

★ மத்தேயு 2:9 – வெளியீட்டாளர்.

★ லூக்கா 23:45 – வெளியீட்டாளர்.

ஒருமுறை அல்ல! மாறாக, ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருந்தபடி இரண்டு முறை இந்த சம்பவம் நிகழ்ந்தது. இந்த இரண்டு கிரகணங்கள் குறித்து சுவிஷேசங்களிலும்★ கூட செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனிலும்★ இது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நபிமொழிகளிலும் குறிப்பிடப்பட்டிருக்–கின்றது. உதாரணமாக, தாரே குத்னியில்★ இது பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

(10) பத்தாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது மெஸாயாவாகிய இயேசுவிற்கு துன்பமிழைத்த பிறகு யூதர்களிடையே கடுமையான பிளேக் நோய் பரவியிருந்தது. அவ்வாறே எனது காலத்திலும் கூட கடுமையான பிளேக் நோய் பரவியிருக்கின்றது.

(11) மெஸாயாவாகிய இயேசுவிற்கு இருந்த பதினொன்–றாவது சிறப்புத்தன்மை இதுவாகும். யூதர்களின் மதகுருமார்கள் அவர் கிளர்ச்சி செய்தார் என்று நிரூபிக்க முயற்சி செய்தனர். அவர் மீது வழக்கு தொடர்ந்தனர். அவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இதுபோன்ற வழக்கிலும் கூட இறைநியதி எனக்கு ஒப்புமையை ஏற்படுத்தியிருக்கின்றது. அதாவது கொலை முயற்சியில் ஈடுபட்டதாக என்மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. இந்த குற்றச்சாட்டிற்கேற்ப என்னை கிளர்ச்சி செய்தவனாக ஆக்குவதற்கு முயற்சி செய்யப்பட்டது. எதிர் புறமிருந்து பட்டாலாவைச் சார்ந்த மவ்லவி அபூ சயீது முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்கள் எனக்கு எதிராக சாட்சி கூறுவதற்காக வந்திருந்த வழக்குதான் அந்த வழக்காகும்.

---

★ லூக்கா 23:45 – வெளியீட்டாளர்.

★ சூரியனும், சந்திரனும் ஒன்று சேர்க்கப்படும்போது (திருக்குர்ஆன் 75:10) – வெளியீட்டாளர்.

★ தாரே குத்னி – கிதாப் ஈதய்ன், பாபு ஸிஃபதி ஸலாதில் குஸூஃபி வல் குஸூஃபி வஹய்அதிஹிமா – வெளியீட்டாளர்.

**(12)** மெஸாயாவாகிய இயேசுவிடம் காணப்பட்ட பன்னிரெண்–டாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்கள் சிலுவையில் அறையப்பட்டபோது அவர்களுடன் ஒரு திருடனும் சிலுவையில் அறையப்பட்டான்.★ இந்த சம்பவத்திலும் கூட எனக்கு ஒப்புமை இருக்கின்றது. ஏனென்றால் எந்த நாளில் கொலை முயற்சி தொடர்பான வழக்கிலிருந்து மேலான இறைவன் என்னை விடுவித்தானோ, இறைவனிடமிருந்து உறுதியான இறையறிவிப்பை பெற்று நூற்றுக்கணக்கான மக்களுக்கு தெரியும் வகையில் நான் வெளியிட்டிருந்த முன்னறிவிப்பிற்கு ஏற்ப எந்த நாளில் குற்றமற்றவ–னாக அ(ந்த இறை)வன் என்னை ஆக்கினானோ அதே நாளில் என்னுடன் கிறித்தவனான ஒரு திருடனும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டான். இவன் கிறித்தவர்களின் புனித கூட்டமான இரட்சிப்புப் படையை சார்ந்தவனாக இருந்தான். அவன் சில ரூபாய்களை திருடியிருந்தான். இந்த திருடனுக்கு மூன்று மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. முதலில் வந்த மஸீஹுடன் இருந்த திருடனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது போன்று இவனுக்கு மரண தண்டனை வழங்கப்படவில்லை.

**(13)** மஸீஹிடம் இருந்த பதிமூன்றாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்கள் ஆளுநர் பிலாத்துவிற்கு முன்பு நிறுத்தப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனை வழங்குமாறு வேண்டப்பட்டபோது பிலாத்து நான் அவரிடம் எந்த குற்றத்தையும் பார்க்கவில்லை என்று கூறினார்.★ அவ்வாறே மாவட்ட மாஜிஸ்டிரேட் ஆன கேப்டன் டக்லஸ் அவர்கள் எனது ஒரு கேள்விக்கு பதில் கூறும் போது நான் உங்கள் மீது எந்த குற்றத்தையும் சுமத்தவில்லை என்று என்னிடம் கூறினார்.

எனது கருத்தின்படி கேப்டன் டக்லஸ் அவர்கள் தனது கொள்கையில் உறுதியாக நிலைநிற்பதிலும் தனது நீதியை

★ யோவான் **19:18 –** வெளியீட்டாளர்.

★ யோவான் **19:6 –** வெளியீட்டாளர்.

வெளிப்படுத்தும் வீரத்திலும் பிலாத்துவை விட மிகவும் சிறந்தவராக இருந்தார். ஏனென்றால், பிலாத்து இறுதியில் கோழைத்தனத்தைக் காட்டினார். யூதர்களின் தீங்கு விளைவிக்கின்ற மதகுருமார்களுக்கு அவர் அஞ்சினார். ஆனால், டக்லஸ் ஒருபோதும் அஞ்சவில்லை. அவரிடம் மவ்லவி முஹம்மது ஹுஸைன் தனக்கு நாற்காலி வழங்குமாறு கூறி தன்னிடம் லெஃப்டினென்ட் கவர்னர் பஹாதுர் அவர்கள் தந்த கடிதங்கள் உள்ளன என்று கூறினார்.

ஆனால், கேப்டன் டக்லஸ் அதை சிறிதும் பொருட்படுத்த –வில்லை. நான் குற்றம் சுமத்தப்பட்டவனாக இருந்தும் கூட எனக்கு அவர் நாற்காலி வழங்கினார். நாற்காலி வழங்குமாறு மவ்லவி சாஹிப் கோரிக்கை வைத்தபோது அவர் கடிந்து கொண்டு மறுத்து விட்டார். அவருக்கு நாற்காலி வழங்கவில்லை. வானத்திலிருந்து நாற்காலியை பெறுபவருக்கு பூமியிலுள்ள நாற்காலியின் எந்த தேவையும் இல்லை. எனினும் தனது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திய இந்த நம் காலத்து பிலாத்துவை எப்போதும் நாமும் எமது ஜமாஅத்தும் நினைவில் கொண்டிருப்போம். உலகம் முடியும் நாள் வரை அவரது பெயர் கண்ணியத்துடன் நினைவு கூரப்படும்.

(14) மெஸாயாவாகிய இயேசுவிற்கு இருக்கின்ற பதினான்காவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்களுக்கு தந்தையில்லாத காரணத்தால் அவர்கள் இஸ்ரவேல் சந்ததிகளை சார்ந்தவராக இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் கூட அன்னார் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பின்னர் பதினான்காம் நூற்றாண்டில் பிறந்த கடைசி நபியாக இருந்தார்கள். அவ்வாறே நானும் குரைஷியர்களின் குடும்பத்தைச் சார்ந்தவன் அல்லன். பதினான்காவது நூற்றாண்டில் நான் அனுப்பப்பட்டுள்ளேன். எல்லாரையும் விட கடைசியில் வந்துள்ளேன்.

(15) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம் இருந்த பதினைந்தாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அதாவது அவர்களது

காலத்தில் உலகம் ஒரு புதிய நாகரிகத்தில் முன்னேற்றத்தை அடைந்திருந்தது. சாலைகள் அமைக்கப்பட்டன. தபால் துறைக்கான சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இராணுவ ஏற்பாடுகளிலும் மிகவும் தகுதிவாய்ந்த நிலைமைகள் உருவாகி இருந்தன. பயணிகளின் ஓய்வுக்கு பல விஷயங்களும் கண்டு பிடிக்கப் –பட்டிருந்தன. முன்பை விட மிகவும் அதிகமாக நீதித்துறையின் சட்டங்களில் சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே எனது காலத்திலும் சுகத்தை தரக்கூடிய பொருட்கள் உருவாவதில் மிகுதியாக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. எதுவரையென்றால் தொடர் வண்டியில் பயணம் செய்வது கண்டுபிடிக்கப் –பட்டிருக்கின்றது. இதுபற்றி திருக்குர்ஆனில் காணப்படுகிறது.★ மற்ற விஷயங்களை, படிக்கின்றவர் தாமாகவே அறிந்து கொள்வார்.

(16) ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களிடம் இருந்த பதினாறாவது சிறப்புத்தன்மை இதுவாகும். அவர்கள் தந்தை இல்லாமல் பிறந்ததன் காரணமாக ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு ஒப்பானவர்களாக இருந்தார்கள். அவ்வாறே நானும் இரட்டைக் குழந்தையாக பிறந்ததன் காரணமாக ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு ஒப்பானவனாக இருக்கின்றேன்.

ஹஸ்ரத் முஹையுத்தீன் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் காத்தமுல் குலஃபா சீன தேசத்தைச் சார்ந்தவராக இருப்பார் அதாவது முகலாய சந்ததிகளிலிருந்து தோன்றுவார். மேலும் அவர் இரட்டைக் குழந்தையாகப் பிறப்பார். முதலில் பெண் குழந்தை பிறக்கும். அதற்குப் பிறகு அவர் பிறப்பார் என்று எழுதியுள்ளார்கள். அவர்களின் கூற்றிற்கேற்ப ஒரே சமயத்தில் அவ்வாறே எனது பிறப்பு நிகழ்ந்தது. அதாவது வெள்ளிக்கிழமை அன்று காலையில்

★ அவன் குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் நீங்கள் அவற்றின் மேல் ஏறிச் செல்வதற்காகவும், அழகிற்காகவும் (அவன் படைத்தான்). மேலும் நீங்கள் அறியாதவை(களான மேலும் பல்வேறு வாகனங்)களை அவன் (வருங்காலத்திலும்) படைப்பான். (திருக்குர்ஆன் 16:9) – வெளியீட்டாளர்.

இரட்டைக் குழந்தையாக நான் பிறந்தேன். முதலில் ஒரு பெண் குழந்தையும் அதற்குப் பிறகு நானும் பிறந்தேன். இந்த முன்னறிவிப்பை இப்னு அரபி அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. அது நிறைவேறி விட்டது. அவர்களது நூல்களில் இதுவரை இந்த முன்னறிவிப்பு இருக்கின்றது.

என்னிடமும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடமும் இருக்கின்ற 16 சிறப்புத்தன்மைகள் இவையாகும். இந்த பணி மனிதனுடைய பணியாக இருந்திருந்தால் எனக்கும் மர்யமின் மகன் ஈஸாவிற்குமிடையில் இந்த அளவு ஒப்புமை ஒருபோதும் இருந்திருக்காது என்பது வெளிப்படையானதாகும். எவரது பங்கில் நற்பேறு இல்லையோ அம்மக்கள் தொன்றுதொட்டே (நபிமார்களைப்) பொய்யாக்குவது அவர்களின் பணியாக இருந்திருக்கின்றது. ஆனால் இக்காலத்திலுள்ள மவ்லவிகளின் பொய்ப்படுத்துதல் வியப்பாக இருக்கின்றது. நான் சரியான நேரத்தில் தோன்றிய நபராக இருக்கின்றேன். திருக்குர்ஆன், ஹதீஸ், சுவிஷேசம் மற்றும் ஏனைய நபிமார்களின் முன்னறிவிப்பிற்கேற்ப ரமலான் மாதத்தில் வானத்தில் சந்திரனுக்கும், சூரியனுக்கும் கிரகணம் பிடித்தது. நான் எப்படிப்பட்ட நபராக இருக்கின்றேன் என்றால் எனது காலத்தில் எல்லா நபிமார்களின் முன்னறிவிப்பு மற்றும் திருக்குர்ஆனின் முன்னறிவிப்பிற்கேற்ப இந்த நாட்டில் வழக்கத்திக்கு மாற்றமாக பிளேக் நோய் பரவியது.

நான் எப்படிப்பட்ட நபராவேன் என்றால் ஆதாரப்பூர்வமான நபிமொழிக்கேற்ப எனது காலத்தில் ஹஜ் செய்வது தடை செய்யப்பட்டிருக்கின்றது. நான் எப்படிப்பட்ட நபராவேன் என்றால் மர்யமின் மகன் ஈஸா (அலை) அவர்கள் தோன்றிய காலத்தில் வெளிப்பட்ட நட்சத்திரம்★ எனது காலத்திலும் வெளிப்பட்டது. நான் எப்படிப்பட்ட நபர் என்றால் எனது காலத்தில் இந்த நாட்டில் தொடர்

★ மத்தேயு 2:9 – வெளியீட்டாளர்.

வண்டி இயங்கியதன் காரணமாக ஒட்டகம் பயன் இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. விரைவில் அந்த நேரம் வரவிருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் அது மிகவும் அருகில் இருக்கின்றது. அப்போது மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையில் தொடர் வண்டி இயக்கப்பட்டு எல்லா ஒட்டகங்களும் பயனற்றுப் போய்விடும். கடந்த 1300 வருடங்களாக அவை இந்த அருளுக்குரிய பயணத்தை மேற்கொண்டிருந்தன. ஆனால் அந்த சமயத்தில் ஒட்டகங்கள் தொடர்பாக சஹீஹ் முஸ்லிமிலுள்ள★ لَتُتْرَكَنَّ الْقِلَاصُ فَلَا يُسْعَى عَلَيْهَا என்ற அந்த நபிமொழி உண்மையாகி விடும். அதாவது மஸீஹின் காலத்தில் ஒட்டகங்கள் பயனில்லாமல் ஆகிவிடும். எவரும் அதில் பயணம் செய்ய மாட்டார்கள்.

அவ்வாறே நான் எத்தகைய நபராக இருக்கின்றேன் என்றால், எனது கைகளில் நூற்றுக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. அடையாளங்கள் காட்டுவதில் என்னுடன் போட்டி போட்டு அதில் என்னை வெற்றி கொள்கின்ற அத்தகைய மனிதர் எவராவது பூமியில் உயிருடன் இருக்கின்றாரா? **எனது உயிர் எவன் கையில் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! இது வரை இரண்டு லட்சத்திற்கும் அதிகமான அடையாளங்கள் எனது கைகளினால் வெளிப்பட்டிருக்கின்றன.** அநேகமாக ஏறக்குறைய 10000 பேர் அல்லது அதைவிட அதிகமான மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கனவில் கண்டுள்ளனர். பெருமானார் (ஸல்) அவர்கள் கனவில் என்னை உண்மைப்படுத்தியுள்ளார்கள்.

இந்த நாட்டில் மூன்று அல்லது நான்கு லட்சம் சீடர்களைக் கொண்டிருந்த, கஷ்ஃபு காட்சிகளை காண்கின்ற புகழ்பெற்ற சிலர் இருந்தனர். அவர்களுக்கு கனவில் இந்த மனிதர் இறைவன் புறமிருந்து வந்துள்ளார் என்பது காட்டப்பட்டது. அவர்களில் சிலர்

★ சஹீஹ் முஸ்லிம் – கிதாபுல் ஈமான், பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம ஹாகிமன் பிஷரீ அ(த்)தி நபிய்யினா முஹம்மதின் (ஸல்) – வெளியீட்டாளர்.

எத்தகையவர்களாக இருந்தனர் என்றால் நான் தோன்றுவதற்கு முப்பது வருடங்களுக்கு முன்னரே அவர்கள் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டனர். உதாரணமாக, லூதியானா மாவட்டத்தைச் சார்ந்த குலாப் ஷாஹ் என்ற பெயருடைய ஒரு பெருந்தகை இருந்தார். அவர் ஜமால்பூரில் வசித்து வந்த மர்ஹூம் மியான் கரீம் பக்ஷ் அவர்களுக்கு ஈஸா காதியானில் பிறந்து விட்டார். அவர் லூதியானாவிற்கு வருவார் என்று செய்தி தெரிவித்திருக்கின்றார்.

மியான் கரீம் பக்ஷ் அவர்கள் ஒரு நல்ல மனிதராகவும், ஓரிறை கொள்கையைக் கொண்டவராகவும் முதிய வயதை அடைந்த மனிதராகவும் இருந்தார். அவர் என்னை லூதியானாவில் சந்தித்தார். மேலும் இந்த எல்லா முன்னறிவிப்புகளையும் என்னிடம் கூறினார். இதனால் மவ்லவிகள் அவருக்கு அதிகமாக துன்பம் கொடுத்தனர். ஆனால் அவர் அதனை சிறிதும் பொருட்படுத்தவில்லை.

மர்யமின் மகன் ஈஸா உயிருடன் இல்லை. அவர் மரணித்து விட்டார். அவர் உலகிற்கு திரும்ப வர மாட்டார். இந்த உம்மத்திற்கு மிர்ஸா குலாம் அஹ்மதே ஈஸாவாக இருக்கின்றார். அவரை இறைவனின் நாட்டமும், வல்லமையும் முதல் ஈஸாவிற்கு ஒப்பானவராக ஆக்கி இருக்கின்றது. வானத்தில் அவருக்கு ஈஸா என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது என்று குலாப் ஷாஹ் அவர்கள் தன்னிடம் கூறியதாக அவர் என்னிடம் கூறினார்.

கரீம் பக்ஷ் அவர்களே! அந்த ஈஸா தோன்றும்போது மவ்லவிகள் எந்த அளவு அவரை எதிர்ப்பார்கள் என்பதை நீங்கள் பார்ப்பீர்கள். அவர்கள் அவரை மிகவும் கடுமையான முறையில் எதிர்ப்பார்கள். ஆனால் அவர்கள் தோல்வியடைந்து விடுவர். திருக்குர்ஆன் வசனங்களுக்கு கூறப்பட்டுள்ள பொய்யான பொருத்தமற்ற விளக்கங்களை அகற்றி திருக்குர்ஆனின் உண்மையான முகத்தை உலகத்திற்கு காட்டுவதற்காகவே அவர் உலகில் தோன்றுவார் என்று குலாப் ஷாஹ் தன்னிடம் கூறியதாக

அவர் என்னிடம் கூறினார். நீர் அந்த ஈஸா (அலை) அவர்களைப் பார்க்கும் அளவுக்கு, ஆயுளைப் பெற்றிருப்பீர் என்பதை அந்த சான்றோர் இந்த முன்னறிவிப்பில் தெளிவாக சுட்டிக் காட்டி இருக்கிறார்.

இப்போது இந்த எல்லா சாட்சிகளும் அற்புதங்களும் வலுவான அடையாளங்களும் இருந்தும் கூட மவ்லவிகள் என்னை பொய்ப்படுத்துகின்றனர். அவ்வாறு அவர்கள் செய்வது கண்டிப்பானதாக இருந்தது. அதன் மூலம் غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ என்ற வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னறிவிப்பு நிறைவேற வேண்டியதிருந்தது. இந்த எதிர்ப்பின் அசல் வேர் ஒரு முட்டாள்தனமாகும். அதாவது மவ்லவிகள் தம்மிடம் இருக்கின்ற அறிவுக்கு புறம்பான, பொருத்தமற்ற குவியலைக் கொண்ட அந்த அடையாளங்கள் அனைத்தும் சொல்லுக்கு சொல் அப்படியே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். இந்த எல்லா நபிமொழிகளிலிருந்தும் ஒரு நபிமொழி கூட அவருக்கு பொருந்தக்கூடியதாக இல்லாமல் இருந்தால் அவ்வாறு மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் வாதம் செய்பவரை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் தொன்றுதொட்டே இவ்விஷயம் சாத்தியமற்றதாகவே இருந்து வந்திருக்கின்றது. யூதர்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக எந்த அடையாளங்களை (கற்பனையாக) தமது வேதங்களில் உருவாக்கி இருந்தனரோ அவை நிறைவேறவில்லை.

பிறகு இதே பாக்கியமற்ற மக்கள் நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக எந்த அடையாளங்களை உருவாக்கி வைத்திருந்–தனரோ, எவற்றை பிரபலமாக்கி இருந்தனரோ அவையும் மிகக் குறைவாக நிறைவேறின. இந்த இறுதி நபி இஸ்ரவேலர்களிலிருந்து

வருவார் என்பது அவர்களது எண்ணமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்மவேல் சந்ததிகளில் பிறந்தார்கள். இறைவன் விரும்பியிருந்தால் இந்த நபியின் பெயர் முஹம்மது (ஸல்) ஆகும்; அவரது தந்தையின் பெயர் அப்துல்லாஹ் ஆகும்; அவரது பாட்டனாரின் பெயர் அப்துல் முத்தலிப் ஆகும்; அவர் மக்காவில் பிறப்பார்; அவர் இடம் பெயர்ந்து செல்லும் இடம் மதீனாவாக இருக்கும் என்று தவ்ராத்தில் எழுதியிருப்பான். ஆனால், இறைவன் அவ்வாறு எழுதவில்லை. ஏனென்றால் அத்தகைய முன்னறிவிப்புகளில் சில சோதனைகள் இருப்பது அவசியமானதாக இருந்தது. அசல் உண்மை இதுவாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொடர்பாக அவர் இஸ்லாத்திலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு நெறிநீதி தீர்ப்பவராக வருவார் என்று முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. இப்போது ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறு ஹதீஸ்களை சார்ந்து இருக்கின்றனர். எனவே அனைவரின் எண்ணங்களையும் அவர் உண்மைப்படுத்துவது என்பது எப்படி சாத்தியமாக முடியும். அவர் அஹ்லே ஹதீஸின் கருத்துக்களை உண்மைப்படுத்தினால் ஹனஃபிகள் அவர் மீது வெறுப்படைவர். ஹனஃபிகள் கூறுவதை உண்மைப்படுத்தினால் ஷாஃபிகள் கோபித்துக் கொள்வர். ஷியாக்கள் அவர்களது கொள்கைக்கேற்ப அவர் தோன்ற வேண்டும் என்று தனிக்கொள்கையை வகுப்பர்.

இந்நிலையில் எல்லாரையும் அவர் எவ்வாறு மகிழ்ச்சிப்படுத்த முடியும்**?** அதுமட்டுமின்றி, ஹகம் (நெறிநீதி தீர்ப்பவர்) என்ற சொல்லே எல்லா பரிவுகளும் ஏதாவதொரு வகையில் உண்மையை விட்டு விலகிச் சென்று விடுகின்ற நேரத்தில் அவர் வருவார் என்பதை சுட்டிக் காட்டுகின்றது.

இந்நிலையில் தத்தமது ஹதீஸ்களைக் கொண்டு அவரை சோதித்துப் பார்ப்பது பெரும் தவறாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொடர்பாக கூறப்பட்ட அடையாளங்களில் எவை அவரது காலத்தில்

வெளிப்பட்டனவோ அவற்றிலிருந்து பயன் பெறுவதும் ஏனையவற்றை இடைச்செருகல்களாகவும் மனிதனால் இட்டுக்கட்டி கூறப்பட்டவை –யாகவும் கருதுவது சரியான வழிமுறையாக இருக்கின்றது. இந்த வழிமுறையை பின்பற்றி நடந்த நற்பாக்கியமுள்ள யூதர்கள் முஸ்லிம்களாகி விட்டனர். ஏனென்றால் எந்த அடையாளங்கள் யூதர்களின் கூற்றுகளுக்கிணங்க நிறைவேறி இருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பொருந்தக் கூடியவையாக இருந்தனவோ அந்த அடையாளங்களை அவர்கள் உண்மை –யானவை என்று கருதினர். எவை நிறைவேறவில்லையோ அவற்றை இட்டுக்கட்டப்பட்டவையாக அவர்கள் கருதினர். அவர்கள் அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நபித்துவமும், யூதர்களின் பார்வையில் நிரூபிக்கப்–பட்டிருக்காது; அவ்வாறே நமது நபி (ஸல்) அவர்களின் நபித்துவமும் நிரூபிக்கப்பட்டிருக்க முடியாது. எவர்கள் முஸ்லிம்களாக ஆகிவிட்டார்களோ அவர்களுக்கு யூதர்களின் நூற்றுக்கணக்கான பொய்யான அறிவிப்புகளை கைவிட வேண்டியது வந்தது.

ஒருபுறம், கூறப்பட்ட அடையாளங்களில் சில அடையாளங்கள் நிறைவேறி இருப்பதையும் மறுபுறம் இறையுதவிகளின் ஒரு நதியே இறைவனின் தூதருக்காக ஓடிக் கொண்டிருப்பதையும் அந்த யூதர்கள் பார்த்தபோது அவர்கள் நிறைவேறியிருந்த அறிவிப்புகளில் இருந்து பலன் அடைந்தனர். அவ்வாறு அவர்கள் செய்யாமல் இருந்திருந்தால் அவர்களில் ஒரு நபர் கூட முஸ்லிமாகி இருக்க மாட்டார்.

இவையே பலமுறை பல கோணங்களில் நான் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களிடம் கூறிய விஷயங்களாகும். வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால் இந்த விஷயங்கள் முதலிலேயே எனது அறிவில் இருந்தது என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் மற்றும்

இதே காலத்தில் இதே உம்மத்திலிருந்துதான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வர வேண்டும் என்பதற்கும் வியக்கத்தக்க ஆதாரங்களை அவர்கள் கூறினார்கள். அதனால் எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் பஸ்ராவைச் சார்ந்த ஹஸன் மற்றும் அபிசீனியாவைச் சார்ந்த பிலால் ஆகியவரது கவிதை வரி எனக்கு நினைவில் வந்தன. பெரும்பாலும் அவர்கள் கூறிய ஆதாரங்கள் திருக்குர்ஆன் வசனங்களின் அடிப்படையிலேயே இருந்தன.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொடர்பான முன்னறிவிப்பு நபிமொழிகளில் மட்டுமே இருக்கின்றது என்று கருதுபவர்கள் எத்தகைய அறிவற்ற மக்களாக இருக்கின்றனர்**?** ஆனால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த உம்மத்திலிருந்தே வரக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதும் எந்த அளவு திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த அளவு ஆதாரங்கள் ஹதீஸ்களில் கிடைப்பதில்லை என்று மவ்லவி சாஹிப் மீண்டும் மீண்டும் கூறி வந்தார்கள்.

சுருக்கமாக, இறைவன் அவர்களது உள்ளத்தை நேரடியாக ஒன்றைக் கண்டு உணர்ந்து கொள்ளும் நிச்சய உறுதியினால் நிரப்பி விட்டான். ஒரு நபர் வானத்திலிருந்து மலக்குகளுடன் இறங்குவதை பார்ப்பதைப் போன்று அவர்கள் முழுமையான ஞானத்துடன் என்னை அடையாளங்கண்டு கொண்டார்கள். அந்த நேரத்தில் இருந்து எனக்கு இந்த எண்ணம் வந்தது. அதாவது நபிமொழிகளில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இறங்குவது பற்றி குறிப்பிடப்பட்டிருக் –கின்றது. இதற்காக பயன்படுத்தப்படும் நுஸூல் (இறங்குதல்) என்ற சொல் அரபு சொல் வழக்கில் கண்ணியத்திற்காகவும் மரியாதை நிமித்தமாகவும் வருகின்றது.

உதாரணமாக, இந்தப் படை இந்த இடத்தில் இறங்கியது என்று கூறுகின்றனர். ஒரு நகரத்திற்கு புதிதாக வந்திருப்பவரைப்

பார்த்து நீங்கள் எங்கு இறங்கினீர்கள் என்று கேட்கப்படுகின்றது. திருக்குர்ஆனில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக நானே இந்த தூதரை இறக்கினேன் என்று கூறுகின்றான்.★ மேலும் சுவிஷேசத்திலும் ஈஸாவும் யஹ்யாவும் விண்ணிலிருந்து இறங்கினர் என்று வருகிறது. ஆனால் இவ்வாறெல்லாம் இருந்தும் கூட நுஸூல் (இறங்குதல்) என்ற சொல்லில் இந்த விஷயத்தின் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவர்களுக்கு முன்னால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) வானத்திலிருந்தே இறங்கியதுபோன்று அறிவுள்ளவருக்கு முழுமையான உறுதி ஆகிவிடும் அளவுக்கு அந்த மஸீஹின் உண்மைக்கான சான்றுகள் சேர்ந்து விடும் என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது. அத்தகைய முழுமையான உறுதியின் முன்மாதிரியைத் தான் ஷஹ்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் காட்டியுள்ளார்கள். உயிரை அர்ப்பணிப்பதை விட பெரிய விஷயம் வேறு எதுவும் இருக்க முடியாது. இத்தகு உறுதியாக நிலைநிற்கும் மனப்பாங்குடன் உயிரை அர்ப்பணிப்பது தெளிவாக தெரிவிப்பது என்னவென்றால் நான் விண்ணிலிருந்து இறங்குவதை அவர்கள் பார்த்து விட்டார்கள். மற்ற மக்களுக்கும் கூட இந்த விஷயம் தெளிவாகவே இருக்கின்றது. அதாவது எனது வாதங்கள் தொடர்பான எல்லா அம்சங்களும் சூரியனைப் போன்று ஒளி வீசுகின்றது. முதலாவதாக திருக்குர்ஆன், மர்யமின் மகன் ஈஸா இறந்து விட்டார். அவர் மீண்டும் உலகிற்கு வர மாட்டார் என்று தீர்ப்பு கூறி விட்டது.

**ஒரு வாதத்திற்காக திருக்குர்ஆனுக்கு எதிராக ஒரு லட்சம் ஹதீஸ்கள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் கூட அவையெல்லாம் முற்றிலும் பொய்யானவையும், பொய்யை விரும்புகின்ற ஒருவரால் இட்டுக்கட்டி கூறப்பட்டவையும் ஆகும்.**

★ திருக்குர்ஆன் 65:11 – வெளியீட்டாளர்.

**திருக்குர்ஆன் கூறியிருப்பதே உண்மையாகும். திருக்குர்ஆன் கூறுகின்ற வரலாறுகளுக்கு முரண்படாத அத்தகைய ஹதீஸ்களே ஏற்றுக் கொள்வதற்கு தகுதியுள்ளவை ஆகும்.**

(திருக்குர்ஆனில்) நூர் அதிகாரத்தில் வருகின்ற 'மின்கும்' (உங்களிடமிருந்து) என்ற சொல்லை அத்துடன் இணைத்தவாறே திருக்குர்ஆன் தீர்ப்பு வழங்கி விட்டது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது எல்லா கலீஃபாக்களும் இந்த உம்மத்தில் இருந்தே தோன்றுவார்கள். மேலும் அந்த கலீஃபாக்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவ தொடருக்கு ஒப்பானவர்களாக இருப்பார்கள். அவரில் ஒருவர் மட்டும்தான் இந்த நபித்துவ தொடரின் இறுதியில் வருவார் என்றும் அவர் வாக்களிக்கப்பட்ட நபராக இருப்பார் என்றும் அவர் மர்யமின் மகன் ஈஸாவிற்கு ஒப்பானவராக இருப்பார். மற்றவர்கள் வாக்களிக்கப்பட்டவராக இருக்க மாட்டார்கள். அதாவது அவர்களது பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் தொடர்பாக எந்த முன்னறிவிப்பும் செய்யப்படாது.

மேலும் 'மின்கும்' (உங்களிலிருந்து) என்ற சொல் புகாரியிலும்★ முஸ்லிமிலும்★ இருக்கின்றது. அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த உம்மத்திலிருந்தே தோன்றுவார் என்பதே பொருளாகும். எனவே சிந்திக்கின்ற ஒருவர் இந்த இடத்தில் முழுமையாக சிந்தித்தால் நேர்மையற்ற வழிமுறையை கடைபிடிக்காமல் இருந்தால் அவர் இந்த மூன்று 'மின்கும்' (உங்களிலிருந்து) என்ற சொற்களின் மீது பார்வையை செலுத்துவதன் மூலம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த உம்மத்தில்

★ புகாரி – கிதாப் அஹாதீஸில் அன்பியா, பாபு நுஸூலு ஈஸப்னி மர்யம (அலை) – வெளியீட்டாளர்.

★ முஸ்லிம் – கிதாபுல் ஃபிதனி வஅஷ்ராதிஸ் ஸாஅ(த்)தி, பாபு ஃபீ ஃபத்ஹி குஸ்துன்தீனிய்யத வகுரூஜித் தஜ்ஜாலி வநுஸூலி ஈஸப்னி மர்யம். – வெளியீட்டாளர்.

இருந்தே பிறப்பார் என்ற இந்த விஷயம் உறுதியான முடிவை எட்டி விட்டது என்பதில் அவருக்கு உறுதி ஏற்பட்டு விடும்.

எனது வாதத்தைப் பொருத்தவரையில் அதற்கு எந்த அளவு ஆதாரங்கள் இருக்கின்றன என்றால் வெட்கமில்லாத மனிதராக மட்டும் ஒருவர் இல்லாமல் இருந்தால் அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை ஏற்றுக் கொண்டிருப்பதைப் போன்றே எனது வாதத்தையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி இருக்காது. எனது வாதத்தை நிரூபிப்பதற்காக உள்ள இந்த ஆதாரங்கள் குறைந்ததா என்ன? என்னைப் பற்றி திருக்குர்ஆனில் எந்த அளவு முழுமையான ஏற்றுக் கொள்ளத்தக்கச் சான்றுகளும் அடையாளங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்றால் ஒருவகையில் எனது பெயரும் அதில் கூறப்பட்டிருக்கின்றது.

நபிமொழிகளில் எனது கிராமத்தின் பெயர் கத்ஆ★ என்ற சொல்லில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நபிமொழிகளிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹிஜ்ரி 13 வது நூற்றாண்டில் பிறப்பார் என்பதும், ஹிஜ்ரி 14 வது நூற்றாண்டில் அவரது தோற்றம் நிகழும் (அதாவது அவர் தனது வாதத்தைப் பற்றிய அறிவிப்பைச் செய்வார்) என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. சஹீஹ் புகாரியில்★ எனது எல்லா அங்க அடையாளங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் முந்தைய மஸீஹை ஒப்பிடும்போது என்னிடத்தில் காணப்படும் அங்க அடையாளத்தின் வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

---

★ ஷேக் அலீ ஹம்ஸா பின் அலீ மலிகுத்தூஸி அவர்கள் ஹிஜ்ரி 804–ல் எழுதிய ʻஜவாஹிருல் அஸ்ரார்ʼ எனும் நூலின் கையெழுத்துப் பிரதி, பக்கம் 43 – வெளியீட்டாளர்.

★ மாநிறம் கோதுமை நிறம் கொண்ட மனிதர்களிலே அழகானவர்; அவருடைய முடி தோள்களில் படும். நேரான முடி கொண்டவராக இருப்பார். (புகாரி – கிதாப் அஹாதீஸில் அன்பியா, பாபு வஸ்குர் ஃபில் கிதாபி மர்யம இஸின் தபஸத் மின் அஹ்லிஹா, ஹதீஸ் எண் 3440) – வெளியீட்டாளர்.

அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்தியாவில் தோன்றுவார் என ஒரு ஹதீஸில் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில், தஜ்ஜாலுடைய பெரிய தலைமையகமாக கிழக்கு அதாவது இந்தியா இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் டமாஸ்கஸிற்கு கிழக்கிலிருந்து★ தோன்றுவார் என்றும் எழுதப்பட்டிருக்கின்றது. அதற்கேற்ப காதியான் டமாஸ்கஸிலிருந்து கிழக்குப் பக்கத்தில்தான் இருக்கின்றது. பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வாதம் செய்கின்ற நேரத்தில் மற்றும் மக்கள் அவரை பொய்ப்படுத்தும் நாட்களில் வானத்தில் ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணம் நிகழும் என்றும் பூமியில் பிளேக் நோய் பரவும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. திருக்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் குறிப்பிடப் பட்டிருப்பதைப் போன்று ரயிலில் பயணம் செய்யும் வசதி ஏற்பட்டு ஒட்டகங்கள் பயனற்றதாக ஆகிவிட்டன. மேலும் ஹஜ் தடை செய்யப்படுவது பற்றியும், கிறித்துவ சக்திகளின் ஆதிக்கம் மிகைத்திருக்கின்ற நேரமாக அது இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

**இறைவன் எனது கைகளினால் நூற்றுக்கணக்கான அடையாளங்களை வெளிப்படுத்தி இருப்பது, நபிமார்கள் முன்னறிவித்து நிர்ணயித்திருந்த அந்த நேரம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியுள்ள இதே நேரமாக இருப்பது, அதற்கேற்ப நூற்றாண்டின் ஆரம்பத்தில் நான் தோன்றியது, என்னை உண்மைப்படுத்தும் வகையில் ஆயிரக்கணக்கான நன்மக்கள் கனவுகளை கண்டிருப்பது, திருக்குர்ஆனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த உம்மத்திலிருந்தே தோன்றுவார் என்று கூறியிருப்பது, இறை உதவிகள் எனக்கு ஆதரவாக வெளிப்படுவது, ஏறக்குறைய**

★ சஹீஹ் முஸ்லிம் – கிதாபுல் ஃபிதனி வஅஷ்ரா(த்)திஸ் ஸாஅ(த்)தி, பாபு ஸிக்ரித் தஜ்ஜால், தமிழாக்கம் ஹதீஸ் எண் 5629) – வெளியீட்டாளர்.

**இரண்டு இலட்சம் பேர் எனது கைகளில் பைஅத் செய்து உண்மையையும் அகத்தூய்மையையும் கடைபிடித்திருப்பது, எனது காலத்தில் கிறித்துவ மதத்தில் பொதுவாக ஒரு நடுக்கம் ஏற்பட்டிருப்பது, எதுவரையென்றால் திரித்துவ கொள்கையின் வசீகரம் பனிக்கட்டியைப் போன்று கறைய ஆரம்பித்திருப்பது, எனது காலத்தில் முஸ்லிம்கள் பல பிரிவுகளாக பிரிந்து வீழ்ச்சியின் நிலையில் இருப்பது, பல்வேறு வகையான பித்அத்துகள், இணைவைத்தல், மது அருந்துதல், ஹராமான செயல்களில் ஈடுபடுதல், நம்பிக்கை துரோகம், ஏமாற்றுதல் ஆகியவை உலகில் பரவி பொதுவான ஒரு மாற்றம் உலகில் உருவாகி இருப்பது, எல்லா வகையிலும் ஒரு மகத்தான புரட்சி உருவாகி இந்த உலகில் இருப்பது, ஒவ்வோர் அறிவாளியின் சாட்சிக்கு ஏற்ப உலகம் ஒரு சீர்திருத்தவாதியின் தேவை உடையதாக இருப்பது, எனக்கு எதிரில் அற்புதகரமான வார்த்தைகளை கூறுவதிலும், வானத்தின் அடையாளங்களை காட்டுவதிலும் எல்லா மக்களும் தோல்வியடைந்திருப்பது, எனக்கு ஆதரவாக இறைவனின் லட்சக்கணக்கான முன்னறிவிப்புகள் நிறைவேறி இருப்பது ஆகிய இந்த எல்லா அடையாளங்களும், ஆதாரங்களும் இறைவனுக்கு அஞ்சுகின்ற ஒருவருக்கு என்னை ஏற்றுக் கொள்வதற்கு போதுமானதாகும்.**

சில அறிவீனர்கள் ஆத்தமின் மரணம், அஹ்மது பேகின் மருமகன் தொடர்பான எனது சில முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை என்று ஆட்சேபனை செய்கின்றனர். அவர்கள் இறைவனிடம் வெட்கப்பட வேண்டும். ஏனென்றால் இலட்சக்கணக்கான முன்னறிவிப்புகள் பகலின் ஒளியைப் போன்று தெளிவாக நிறைவேறியும், ஒவ்வொரு நாளும் புதுப்புது அடையாளங்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஒன்றிரண்டு முன்னறிவிப்புகள் அவர்களுக்கு புரியவில்லை என்பதற்காக இந்த தவறான புரிதலின் காரணமாக சுயமாகவே அவர்களின் தவறு

இதில் இருக்கும் போது மேலான இறைவனின் ஆயிரக்கணக்கான அடையாளங்களையும், ஆதாரங்களையும், அற்புதங்களையும் மறுப்பது முழுக்க முழுக்க அவர்களது முட்டாள்தனமாக இருக்கின்றது. இவ்வாறு மறுக்க முடியும் என்றால், தான் செய்த சில முன்னறிவிப்புகள் நிறைவேறவில்லை என்று கூறி மறுக்கப்படாத ஏதாவதொரு நபியின் பெயரையும் முகவரியையும் எனக்கு தெரிவியுங்கள். மலாக்கி நபியின் முன்னறிவிப்பு அதன் வெளிப்படையான சொற்களின் அடிப்படையில் இதுவரை நிறைவேறவில்லை.

எவருக்காக யூதர்கள் இன்று வரை காத்துக் கொண்டிருக்–கின்றனரோ அந்த இல்யாஸ் நபி (எலியா) உலகில் எங்கு வந்துள்ளார்? ஆனால் ஈஸா வந்து விட்டார். அவருக்கு முன்பு இல்யாஸ் (எலியா) வர வேண்டியது அவசியமானகும்.★ இந்த காலத்திலுள்ள மக்கள் இப்போது உயிருடன் இருக்கும் போதே நான் திரும்பி வந்து விடுவேன் என்ற மஸீஹின் முன்னறிவிப்பு எப்போது நிறைவேறியது?

---

★ எலியா சுழற்காற்றில் பரலோகத்திற்கு ஏறிப்போனார் என்ற வசனத்திற்கேற்ப (II இராஜாக்கள் 2:11) எலியா தீர்க்கதரிசி வானில் சென்றுள்ளார் என்றும், இதோ கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் வந்திருக்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன் (மல்கியா 4:5) என்ற வசனத்திற்கேற்ப அந்த எலியா குறித்து அவர் கிறிஸ்துவுக்கு முன்னே வருவார் என்றும் யூதர்கள் நம்பி வந்தனர். எலியா முந்தி வர வேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே என யூதர்கள் இயேசுவிடம் கேட்டதற்கு எலியா வந்தாயிற்று என்று இயேசு கூறினார். அவர் யோவான் ஸ்னானன் குறித்து தங்களுக்குச் சொன்னார் என சீஷர்கள் அறிந்து கொண்டனர் (மத்தேயு 17:11–14) என்றும் பைபிளில் வந்துள்ளது. – வெளியீட்டாளர்.

ஆக, எலியா வருவார் என்பதன் கருத்து இயேசுவுக்கு பல ஆண்டு–களுக்கு முன்னால் தோன்றிய அதே எலியா அல்ல. மாறாக, அவரது பண்பில் தோன்றிய இன்னொருவர்; அவர்தான் யோவான் ஸ்னானன் என்று இயேசு கிறிஸ்து விளக்கியிருக்கிறார். – வெளியீட்டாளர்.

பேதுருவின் கைகளில் பரலோகத்தின் திறவுகோல்கள் இருக்கும் என்ற அவர்களது இந்த முன்னறிவிப்பு எப்போது நிறைவேறியது?★ தாவூதின் சிம்மாசனத்தை நிலைநாட்டுவதாக அவர்கள் செய்த முன்னறிவிப்பு எப்போது நிறைவேறியது? அவர்களது 12 சீடர்களும் 12 சிம்மாசனங்களில் அமர்வர் என்று இயேசு கூறிய முன்னறிவிப்பு எப்போது நிறைவேறியது?★

ஏனென்றால் யூதாஸ் மார்க்கத்தை திறந்து விட்டுச் சென்றார். நரகில் வீழ்ந்து விட்டார்.★ எவருக்கு சிம்மாசனம் பற்றிய வாக்குறுதி கூறப்பட்டிருந்ததோ அவருக்கு பதிலாக இயேசுவின் யூகத்திலும் எண்ணத்திலும் கூட இருந்திராத ஒரு புதிய சீடர் பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளார். இவ்வாறே நபிமொழிகளிலும் எழுதப்பட்டிருக்கின்றது. துர்ரே மன்ஸூரிலும் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது யூனுஸ் நபி அவர்கள் எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் மிகவும் உறுதியுடன் நினிவே பட்டணத்தில் வசிப்பவர்கள் மீது நாற்பது நாட்களுக்குள் தண்டனை இறங்கும். அது அவர்களை இந்த கால அவகாசத்திற்குள் அழித்து விடும் என்று மிகவும் உறுதியாக முன்னறிவிப்புச் செய்திருந்தார்கள்.

ஆனால் எந்த தண்டனையும் இறங்கவில்லை. அவர்கள் அழிக்கப்படவும் இல்லை. இறுதியில் யூனுஸ் (அலை) அவர்கள் வெட்கப்பட்டு அந்த இடத்திலிருந்தே ஓட வேண்டியது வந்தது. இந்த

---

★ II சாமுவேல் 3:9 – வெளியீட்டாளர்.

★ என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்–களையும், நியாயத்தீர்க்கிறவர்களாய்ப் பன்னிரெண்டு சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருப்பீர்கள் என்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 19:28) – வெளியீட்டாளர்.

★ கலிலேயாகிய யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான். அவனும் அழிந்து போனான். அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 6:37) – வெளியீட்டாளர்.

முன்னறிவிப்புகள் பைபிளில் யோனா தீர்க்கதரிசியின் சுவிஷேசத்தில் இடம் பெற்றிருக்கின்றது.★ அதனை கிறித்தவர்கள் இறைவன் புறமிருந்து தோன்றியதாகவே கருதுகின்றனர். இந்த எல்லா விஷயங்களும் இருந்தும் கூட முஸ்லிம்கள் இந்த தூதர்கள் மீது நம்பிக்கையும் கொள்கின்றனர். மேலும் அவர்கள் மீது செய்யப்பட்டுள்ள இந்த சில ஆட்சேபனைகளை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு முன்னறிவிப்புகள் தொடர்பாக அதாவது ஆத்தம் மற்றும் அஹ்மது பேகின் மருமகன் தொடர்பாக உள்ள முன்னறிவிப்புகள் குறித்து அவர்களுக்கு ஆட்சேபனை இருக்கின்றது. அவை தொடர்பாக நாம் பலமுறை எழுதி விட்டோம். அதாவது ஆத்தமின் மரணம் தொடர்பான முன்னறிவிப்பு முழுமையான முறையில் தெளிவாக நிறைவேறி விட்டது. இப்போது ஆத்தம் எங்கிருக்கின்றார்? என்று தேடிப் பாருங்கள். அவர் உயிருடன் இருக்கின்றாரா? அல்லது மரணித்து விட்டாரா?

முன்னறிவிப்பின் சுருக்கம் இதுவாகும். அதாவது இரண்டு பிரிவினர்களாகிய நம்மில் எவர் பொய்யராக இருக்கின்றாரோ அவர் உண்மையாளருக்கு முன்னதாக மரணித்து விடுவார் என்றே முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆத்தம் மரணித்து வெகு காலம் ஆகிவிட்டது. ஆத்தம் பதினைந்து மாதங்களுக்குள் மரணித்து விடுவார் என்பதை விவரிக்கும் அந்த முன்னறிவிப்புடன் சேர்த்து அவர் உண்மையின் பக்கம் திரும்பாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் ஆத்தம் விவாதம் நடைபெற்ற அந்த சபையிலேயே தான் அவமரியாதையாக நடந்து கொண்டதிலிருந்து திரும்பி விட்டார். நான் அவரிடம், இந்த

---

★ யோனா, நகரத்தில் நுழைந்து ஒரு நாள் பிரயாணம் செய்து, இன்னும் 40 நாட்களில் நினிவே கவிழ்க்கப்படும் என்று கூறினான். (யோனா 3:4) – வெளியீட்டாளர்.

முன்னறிவிப்பு ஏன் செய்யப்பட்டிருக்கின்றது என்றால், நீங்கள் உங்களது நூலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தஜ்ஜால் என்று எழுதியுள்ளீர்கள் என்று கூறினேன். அதைக் கேட்டதும் அவரது முகம் வெளிறிப்போய் விட்டது. மிகவும் பணிவை வெளிப்படுத்தியவாறு அவர் தனது நாவை வாயிலிருந்து வெளியே நீட்டினார். தனது இரு கைகளையும் காதுகள் மீது வைத்தார். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகிமைக்கு எதிராக ஒருபோதும் அவ்வாறு கூறவில்லை என்று கூறினார். மிகவும் பணிவையும், மன்றாடலையும் அவர் வெளிப்படுத்தினார். அந்த சமயத்தில் அறுபதிற்கும் அதிகமான முஸ்லிம்களும், கிறித்தவர்களும் அங்கிருந்தனர். அவர் தற்பெருமையிலிருந்தும், அவமரியாதையாக நடந்து கொண்டதிலிருந்தும் திரும்பி விட்டார் என்று கருதும் வகையிலுள்ள சொற்களாக அவை இல்லையா?

பிறகு அவர் பதினைந்து மாதங்கள் வரை (என்னை) எதிர்ப்பதிலிருந்து முற்றிலும் விலகி அமைதியாக இருந்தார். பெரும்பாலும் கண்ணீர் வடித்து மன்றாடலிலேயே அவர் இருந்தார். தனது நிலையை முற்றிலுமாக அவர் மாற்றிக் கொண்டார். அவர் பதினைந்து மாதங்களுக்குள் தன்னை ஓரளவுக்கு மாற்றிக் கொண்டார். (அவருடைய இந்த மாற்றம்) ஈமானுள்ள, நல்லுள்ளம் படைத்த ஒருவருக்கு போதுமானதாக இல்லையா? அவர் இறைவனுக்கு அஞ்சியவாறு மென்மையையும், மன்றாடலையும் கடைபிடித்தார்.

தற்பெருமையையும், அவமரியாதையாக நடந்து கொள்வதையும் முற்றிலுமாக விட்டு விட்டார். அமிர்தஸரசில் இத்தகைய தீய இயல்பை உடைய மக்களுடன் அவருக்கு இருந்த அந்த நட்பையும், அந்த வீட்டையும் விட்டு விட்டு அவர் ஃபிரோஸ்பூரில் சென்று தங்கினார். அதனால் இந்த அளவு பச்சாதாபத்திலிருந்து பலன் பெறுவது அவருக்கு கண்டிப்பானதாக

இருந்தது. எனக்கு முன்பாக மிக விரைவாக அந்த நாட்களில் மரணிப்பதிலிருந்து அவர் பாதுகாப்பாக இருக்க முடியவில்லை என்றாலும் முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனையை நிறைவேற்றியதனால் ஓரளவு அவர் பலனடைந்தார்.

இதற்கு எதிராக லேக்ராமும் இருந்தார். அவர் முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த கால அவகாசத்திற்குள் எந்த மன்றாடலையும், அச்சத்தையும் வெளிப்படுத்தவில்லை. மாறாக, முன்பை விட அதிகமாக அவமரியாதையாக நடந்து கொண்டு கடை வீதிகளிலும், தெருக்களிலும், நகரங்களிலும், கிராமங்களிலும் இஸ்லாத்தை இழிவுபடுத்த ஆரம்பித்தார்.

அப்போது அவர் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் தனது தீய செயல்களின் காரணமாக பிடிக்கப்பட்டார். அவரது நாவு ஏசிப் பேசுவதிலும், தீய வார்த்தைகளை கூறுவதிலும் கூர்மையான கத்தி போன்று செயல்பட்டது. இந்த கத்தியே அவரை கொன்று விட்டது.

எஞ்சியிருப்பது அஹ்மது பேக்கின் மருமகன் தொடர்பான முன்னறிவிப்பாகும். இந்த முன்னறிவிப்பு இரண்டு நபர்களைப் பற்றியதாக இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஒன்று அஹ்மது பேக் தொடர்பானதாகும். மற்றொன்று அவரது மருமகன் தொடர்பானதாகும். இந்த முன்னறிவிப்பின் ஒரு பகுதி குறிப்பிடப்பட்ட கால அவகாசத்திற்குள் நிறைவேறி விட்டது. **அதாவது குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் அஹ்மது பேக் இறந்து விட்டார். இவ்வாறு முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவேறி விட்டது.** இப்போது எஞ்சியிருக்கின்ற இரண்டாவது பகுதி தொடர்பாக செய்யப்படும் ஆட்சேபனை நேர்மையாக எடுத்து வைக்கப்படுவதில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

**இன்று வரை ஆட்சேபனை செய்யக்கூடிய எவரது நாவிலிருந்தும் இந்த முன்னறிவிப்பின் ஒரு பகுதி நிறைவேறி**

**விட்டது; அது நிறைவேறி விட்டது என்பதை உண்மையான உள்ளத்துடன் நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இரண்டாவது பகுதி இதுவரை நிறைவேறவில்லை என்று கூறி அவர்கள் ஆட்சேபனை செய்ததை நான் கேட்டதில்லை.** மாறாக, யூதர்களைப் போன்று நிறைவேறி விட்ட பகுதியை முற்றிலும் மறைத்து விட்டு ஆட்சேபனை செய்கின்றனர். இத்தகைய நடைமுறை ஈமான், வெட்கம் மற்றும் உண்மைக்கு ஏற்ப இருக்கின்றதா?

இப்போது உண்மையை மறைத்து விட்டு பேசுகின்ற இந்த வழிமுறையை ஒரு புறம் வைத்தவாறு இதற்கான பதிலை நாம் கூறுகின்றோம். இந்த முன்னறிவிப்பும் கூட ஆத்தமின் முன்னறிவிப்பை போன்று நிபந்தனைக்கு உட்பட்டதாகும். அதாவது இந்த இருவரில் எந்தவொரு நபரும் தனது அச்சத்தையும் பீதியையும் வெளிப்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் அந்த முன்னறிவிப்பு குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் நிறைவேறும் என்று எழுதப்பட்டிருந்தது. ஆக, இந்த அபாயகரமான அறிகுறியை அஹ்மது பேக் எதிர்கொள்ள நேரவில்லை. அது ஒரு பொய்யான முன்னறிவிப்பு என்றே அவர் கருதி வந்தார். ஆனால் அஹ்மது பேகின் மருமகனுக்கும், அவரது உறவினர்களுக்கும் இந்த அபாயகரமான நிலைமை ஏற்பட்டது. ஏனெனில் அஹ்மது பேக்கின் மரணம் அவர்களது உள்ளத்தில் ஒரு பீதியை ஏற்படுத்தியது. மிகவும் கடுமையான இயல்பையுடைய மனிதன் கூட தனது கண் முன்னால் நடந்த சம்பவத்தைப் பார்த்த பிறகு கண்டிப்பாக பீதியை வெளிப்படுத்துவது மனித இயல்பிலுள்ள ஒரு விஷயமாகும். எனவே அஹ்மது பேகின் மருமகனுக்கு கால அவகாசம் வழங்குவது கண்டிப்பானதாக இருந்தது.

எனவே இந்த எல்லா ஆட்சேபனைகளும் அறியாமை, குருட்டுத்தன்மை, காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றின் காரணமாக செய்யப்படுகின்றது. அது அல்லாமல் நேர்மையுடனும், உண்மையை

தேட வேண்டும் என்பதற்காகவும் அவை செய்யப்படவில்லை. **எந்த நபரது கைகளின் மூலம் இதுவரை பத்து லட்சத்திற்கும் அதிகமான அடையாளங்கள் வெளிப்பட்டிருக்கின்றனவோ, மேலும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றனவோ** அவரது ஒன்று இரண்டு முன்னறிவிப்புகள் ஏதாவதொரு அறிவீனனுக்கு மற்றும் தீய எண்ணம் கொண்டவனுக்கு மற்றும் முட்டாளுக்கு புரியாமல் இருந்தால் அதனால் அவரது எல்லா முன்னறிவிப்புகளும் சரியானவை அல்ல என்ற முடிவுக்கு நாம் வர முடியுமா?

**நான் இந்த விஷயத்தை உறுதியான வாக்குறுதியுடன் எழுதுகின்றேன். அதாவது ஏதாவதோர் எதிரி அவர் கிறித்தவராக இருந்தாலும் சரி அல்லது பெயர்தாங்கி முஸ்லிமாக இருந்தாலும் சரி எனது முன்னறிவிப்புகளுக்கு எதிரில் வானத்திலிருந்து இறங்கப்போவதாக அவர்கள் கருதிக் கொண்டிருக்கும் அந்த நபரது முன்னறிவிப்புகள் அதன் தெளிவு, உறுதி மற்றும் நேர்வழியின் தகுதிகளின் அடிப்படையில் அதிகமாக இருப்பவையாக நிரூபிக்கப்பட்டால் நான் அவருக்கு ரொக்கமாக ஓராயிரம் ரூபாய் தருவதற்கு ஆயத்தமாக இருக்கின்றேன்.**

ஆனால் அதனை நிரூபிப்பதற்காக இந்த வழிமுறையை கடைபிடிக்கக் கூடாது. அதாவது திருக்குர்ஆனை முன் வைத்து திருக்குர்ஆன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை நபியாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அல்லது அவரை நபி என்று கூறியிருக்கின்றது என்று கூறக்கூடாது. **ஏனென்றால் இவ்வாறே நானும் கூட திருக்குர்ஆன் எனது உண்மைக்கும் சாட்சி பகர்கின்றது என்று வலுவாக வாதம் செய்கின்றேன்.** முழு திருக்குர்ஆனிலும் எங்குமே يسوع இயேசு என்ற சொல் இல்லை. ஆனால் என்னைப் பற்றி 'மின்கும்' (உங்களிலிருந்து) என்ற சொல் இருக்கின்றது. மற்ற பல அடையாளங்களும் உள்ளன. எனினும்

இந்த இடத்தில் நான் கூற வந்ததன் நோக்கம் இது மட்டுமேயாகும். அதாவது திருக்குர்ஆனை பார்க்காமல் எனது முன்னறிவிப்பு –களையும், இயேசுவின் முன்னறிவிப்புகளையும் மட்டும் நீதிமன்றங்களின் பொதுவான ஆராய்ச்சியின் வடிவில் பார்ப்பதாக இருந்தால் இந்த இரண்டிலும் எந்த முன்னறிவிப்புகள் அல்லது அவற்றின் பெரும்பாலான பகுதி அறிவிற்கு பொருந்தக்கூடிய வகையில் தெளிவாக நிறைவேறி விட்டது. மற்றும் எந்த முன்னறிவிப்புகள் இந்த தகுதியில் (நிறைவேற) இல்லை என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இந்த ஆராய்ச்சிகளும் போட்டியும் எவ்வகையில் இருக்க வேண்டும் என்றால் திருக்குர்ஆனை மறுக்கக்கூடிய ஒரு நபருக்கு கூட ஆதாரங்களை தருவதில் எவர் உண்மையில் இருக்கின்றார் என்று அவரால் தனது கருத்தை வெளிப்படுத்த இயல வேண்டும்.

இதைத் தவிர்த்து இவ்விடத்தில் எனக்கு வருத்தம் ஏற்படுகின்றது. அதாவது நமது எதிரிகள் முஸ்லிம்கள் என்று தம்மை கூறிக் கொள்கின்றனர். ஆனால் இஸ்லாத்தின் கொள்கையை அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். எந்த முன்னறிவிப்பு எச்சரிக்கை வடிவில் இருக்கின்றதோ அது தொடர்பாக இறைவன் அதை நிறைவேற்ற வேண்டும் என்பது கண்டிப்பானதல்ல என்பது இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விஷயமாகும். அதாவது எந்த முன்னறிவிப்பில் ஒரு நபர் மீது அல்லது ஒரு பிரிவினர் மீது இறைவனின் கோபம் இறங்கப் போகிறது என்று கூறப்பட்டிருந்ததோ அதில் இறைவன் அந்த துன்பத்தை அகற்றியும் விடலாம். இவ்வாறு தான் நாற்பது நாட்களுக்குப் பிறகு நிறைவேற வேண்டிய யூனுஸ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறாமல் அந்த துன்பம் முற்றிலுமாக விலகியது. எந்த முன்னறிவிப்பில் இறைவனின் வாக்குறுதி இருக்கின்றதோ அதாவது ஏதாவதோர் அருட்கொடை அல்லது வெகுமதி வழங்குவது தொடர்பாக முன்னறிவிப்பு

செய்யப்பட்டிருக்கின்றதோ அது ஒருபோதும் விலகுவதில்லை. இறைவன், (3:10) اِنَّ اللّٰهَ لَا يُخۡلِفُ الۡمِيۡعَادَ நிச்சயமாக அல்லாஹ் வாக்குறுதியை மீறுவதில்லை என்று கூறுகின்றான். ஆனால் எந்த இடத்திலும் நிச்சயமாக அல்லாஹ் தனது எச்சரிக்கைக்கு எதிராக செயல்படுவதில்லை என்று அவன் கூறவில்லை. எனவே இதிலுள்ள இரகசியம் என்னவென்றால் எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்பு அச்சம், துஆ, சதகா மற்றும் தான தர்மங்களை செய்வது ஆகியவற்றினால் விலகி விட முடியும். எல்லா தூதர்களும் இதில் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர்.

அதாவது சதகா, துஆ, அச்சம் மற்றும் பணிவை கடைபிடித்தல் ஆகியவற்றின் மூலமாக இறைவனது ஞானத்தில் இருக்கின்ற ஒரு நபர் மீது வரவிருக்கின்ற துன்பம் அகன்று விட முடியும். இப்போது சிந்தித்துப் பாருங்கள். இறைவனின் ஞானத்தில் இருக்கின்ற ஒவ்வொரு துன்பம் பற்றிய தகவல் ஒரு நபி அல்லது இறைநேசருக்கு தெரிவிக்கப்பட்டால் அந்த நபி அல்லது இறைநேசர் மற்றவர்களுக்கு அது பற்றி தெரிவிக்கும் போது தான் அது முன்னறிவிப்பாக ஆகின்றது. எனவே தண்டனை நீங்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்ட விஷயமாகும். அத்தகைய தண்டனை பற்றிய முன்னறிவிப்புகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம் என்ற முடிவிற்கு நாம் வர வேண்டும்.

பிறகு நாம் முதலில் கூறிய விஷயங்களின் பக்கம் திரும்பியவாறு எழுதுகின்றோம். அதாவது மவ்லவி சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் காதியான் வந்த சமயத்தில் விரிவான முறையில் எனது வாதத்திற்கான ஆதாரங்களைக் கேட்டு பயனடைந்ததுடன் மட்டுமல்லாமல் காதியானில் எனக்கு அருகில் சில மாதங்கள் இருந்த காலகட்டத்திலும் ஜிஹ்லம் வரை ஒரு பயணத்தில் என்னுடன் வந்த சமயத்திலும் எனக்கு ஆதரவாக இருக்கின்ற வானத்தின் சில அடையாளங்களை அவர்கள் கண்டு கொண்டார்கள்.

இந்த எல்லா சான்றுகளையும், ஒளிகளையும், அசாதாரண நிகழ்வுகளையும் பார்த்ததன் காரணமாக வழக்கத்திற்கு மாற்றமான உறுதியால் அவர்கள் நிறைந்து விட்டார்கள். ஒரு மேலான சக்தி அவர்களை இழுத்துக் கொண்டு சென்றது. நான் ஒரு சந்தர்ப்பத்தில் ஓர் ஆட்சேபனைக்கான பதிலையும் அவர்களுக்கு புரிய வைத்தேன். அதன் காரணமாக அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்த ஆட்சேபனை இதுவாகும்:

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு ஒப்பானவராக இருக்கின்றார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களது கலீஃபாக்கள் இஸ்ரவேல் சந்ததிகளின் நபிமார்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலையில் நபிமொழிகளில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் 'நபி' என்று ஏன் அழைக்கப்படுகின்றார்? ஆனால் ஏனைய எல்லா கலீஃபாக்களுக்கும் இந்த பெயர் வழங்கப்படவில்லையே என்பதே ஆட்சேபனையாகும்.

இதற்கு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களின் முத்திரையாக இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பிறகு எந்த நபியும் வர வேண்டியது இருந்ததில்லை. எனவே அனைத்து கலீஃபாக்களும் நபி என்ற பெயரில் அழைக்கப்பட்டால் அவர்களின் நபித்துவம் முற்றுப் பெறுவது சந்தேகத்திற்கு உரியதாக ஆகிவிடும். மேலும் ஏதாவதொரு நபர் கூட நபி என்ற பெயரில் அழைக்கப்படாமல் இருந்தால் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு ஒப்பானவர்களாக இருக்கவில்லை என்ற ஆட்சேபனை எஞ்சியிருக்கும் என அவர்களுக்கு பதிலளித்தேன். ஏனென்றால், மூஸா (அலை) அவர்களின் கலீஃபாக்கள் நபிமார்கள் ஆவர். எனவே, இறைவனின் நுட்பமான ஞானமானது ஆரம்பத்தில் பல கலீஃபாக்களையும் நபித்துவம் முற்றுப் பெற்று விட்டது என்ற கருத்திற்கேற்ப அனுப்ப வேண்டும் என்பதையும் நபி என்று

அவர்களுக்கு பெயர் வைக்கக்கூடாது என்பதையும் நபித்துவ முத்திரையின் மீது இந்த அடையாளம் இருக்கும் வகையில் இந்த தகுதியை அவர்களுக்கு வழங்கக் கூடாது என்பதையும் விரும்பியது. மேலும் இறுதி கலீஃபா அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் நபி என்ற பெயரால் அழைக்கப்பட்டு அதன் மூலம் கிலாஃபத் விஷயத்தில் இரண்டு நபித்துவ தொடர்புகளுக்கிடையில் ஒப்புமை நிரூபிக்கப்பட வேண்டும் என்பதையும் அது விரும்பியது.

**வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நபித்துவம் ஒரு நிழலான நபித்துவம் என்பதை நாம் பலமுறை எடுத்துக் கூறியுள்ளோம். ஏனென்றால், அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முழுமையான நிழலாக இருப்பதன் காரணமாக நபித்துவத்தின் அருளைப் பெற்று நபி என்று அழைக்கப்படுவதற்கு தகுதியானவராக ஆகிவிட்டார்.**

ஓர் இறையறிவிப்பில் இறைவன் என்னை நோக்கி, அஹ்மதே! நீர் தூதராக ஆக்கப்பட்டிருக்கின்றீர் என்று கூறியுள்ளான். இதன் பொருள் நிழலான முறையில் அஹ்மது என்ற பெயருக்கு தகுதியுடையவராக நீர் இருக்கின்றீர். ஆனால் உமது இயற்பெயர் 'குலாம் அஹ்மது' ஆகும். எனவே இவ்வாறே நிழலான முறையில் நபி என்ற பெயருக்கு தகுதியுடையவராக நீர் இருக்கின்றீர். ஏனென்றால் அஹ்மது ஒரு நபியாக இருக்கின்றார். அவரது நபித்துவத்தை அவரை விட்டு பிரிக்க முடியாது என்று நான் கூறினேன்.

ஒருமுறை அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இரண்டு மஞ்சள் நிறப் போர்வைகளை போர்த்தியவாறு இறங்குவார் என்று நபிமொழிகளில் இருக்கின்றது. ஒரு போர்வை உடலின் மேற்பகுதியில் இருக்கும் மற்றும் இரண்டாவது போர்வை உடலின் கீழ் பகுதியில் இருக்கும் என்ற கருத்து கூறப்பட்டது. அதற்கு நான் இது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இரண்டு நோய்களுடன் தோன்றுவார் என்பதை சுட்டிக்

காட்டுகின்றது என்று கூறினேன். ஏனென்றால் கனவுகளுக்கான விளக்கத்தில் மஞ்சள் நிற ஆடை நோயைக் குறிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்த இரண்டு நோய்களும் எனக்கு இருக்கின்றன. ஒன்று தலை வலி ஆகும். மற்றொன்று அடிக்கடி சிறுநீர் கழிப்பு ஏற்படுவதும், வயிற்றுப் போக்கும் ஆகும் என்று கூறினேன்.

மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் இங்கு தங்கி இருந்த போதே மிகவும் உறுதியான தீவிர மாற்றம் அவர்களிடம் ஏற்பட்டதன் விளைவாக அவர்களுக்கு இல்ஹாம் மற்றும் வஹீயின் கதவு திறந்து தரப்பட்டது. இறைவனிடமிருந்து தெளிவான சொற்களில் எனது உண்மை தொடர்பான சாட்சியங்களை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதன் காரணமாக இறுதியில் அவர்கள் இந்த ஷஹாதத் (எனும் உயிர்த் தியாகத்)தின் பானத்தை அருந்துவதை ஏற்றுக் கொண்டார்கள். அதைப் பற்றி விரிவாக எழுதுவதற்கான நேரம் இப்போது வந்து விட்டது.

உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். எவ்வாறு அவர்கள் என்னை உண்மைப்படுத்தும் வகையில் அதற்காக மரணத்தை ஏற்றுக் கொண்டார்களோ இஸ்லாத்தில் கடந்த 1300 வருடங்களில் நபித்தோழர்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களைத் தவிர வேறு எங்குமே அது போன்ற மரணத்தின் முன்மாதிரியை பார்க்க முடியாது.

எனவே இவ்வாறு அவர்கள் மரணித்திருப்பதும் என்னை உண்மைப்படுத்தும் வகையில் தனது உயிரை இறைவனுக்காக அர்ப்பணித்திருப்பதும் சந்தேகத்திற்கிடமின்றி எனது உண்மைக்கு ஒரு மகத்தான அடையாளமாக இருக்கின்றது. ஆனால் எவர்கள் புரியும் திறன் கொண்டவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்குத்தான் இது அடையாளமாக இருக்கின்றது. மனிதன் சந்தேகத்தில் இருக்கின்ற நிலையில் தனது உயிரை கொடுப்பதற்கும் தனது மனைவி மக்களை அழிவில் ஆழ்த்துவதற்கும் எப்போதாவது விரும்புவானா?

பிறகு வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், இந்த பெருந்தகை ஒரு சாதாரண மனிதரல்லர். இன்னும் சொல்வ–தென்றால் காபூல் பிரதேசத்தில் அவர்களுக்கு சொந்தமான பல இலட்ச மதிப்புள்ள சொத்துக்கள் இருந்தன. ஆங்கிலேய ஆளுகைப் பகுதியிலும் அவர்களுக்கு சொந்தமான பல நிலங்கள் இருந்தன. அறிவுத்திறன் எந்த அளவு உயர்வானதாக இருந்தது என்றால், அப்பகுதியிலுள்ள எல்லா மவ்லவிகளின் தலைவராக அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

அவர்கள் எல்லாரையும் விட அதிகமாக திருக்குர்ஆனின் அறிவு, நபிமொழி மற்றும் ஃபிக்ஹா (மார்க்கச் சட்டம்) ஆகியவற்றின் ஆலிமாகக் கருதப்பட்டார்கள். புதிய அமீருக்கு கிரீடம் சூட்டும் வைபவமும் அவர்களது கரங்களாலேயே நிறைவேற்றப்பட்டது. அமீர் மரணித்து விட்டால் அவருக்கு ஜனாஸா தொழ வைப்பதற்கும் அவர்களே நியமிக்கப்பட்டிருந்தார்கள். நம்பத்தகுந்த வழிவகைகள் மூலம் நம்மை வந்தடைந்துள்ள விபரங்கள் இவையாகும்.

காபூல் பிரதேசத்தில் ஏறக்குறைய ஐம்பதாயிரம் சீடர்கள் அவர்களுக்கு இருந்தனர் என்றும் அவர்களில் சிலர் அரசின் உயர் பதவிகளை வகித்து வந்தனர் என்றும் தனது நாவால் அவர்களே கூறியதை நான் கேட்டுள்ளேன். சுருக்கமாக, இந்த பெருந்தகை காபூல் நாட்டில் தனிச்சிறப்புமிக்க மனிதராக இருந்தார்கள். அறிவின் அடிப்படையிலும், இறையச்சத்தின் அடிப்படையிலும், தகுதியின் அடிப்படையிலும், குடும்ப பாரம்பரியத்தின் அடிப்படையிலும் அந்த நாட்டில் அவர்களுக்கு இணையாக வேறு எவரும் இருக்கவில்லை. மவ்லவி என்று அழைக்கப்பட்ட அவர்கள் 'சாஹிப்ஸாதா' மற்றும் 'இக்வன் ஸாதா' மற்றும் 'இளவரசர்' ஆகிய பட்டங்களுடன் அந்த நாட்டில் புகழ்பெற்று விளங்கினார்கள்.

நபிமொழிகள், (திருக்குர்ஆன்) விளக்கவுரை, ஃபிக்ஹா (மார்க்கச் சட்டம்) மற்றும் வரலாறு தொடர்பான நூல்கள் அடங்கிய

ஒரு பெரிய நூலகம் ஷஹீது மர்ஹூம் அவர்களிடம் இருந்தது. புதிய நூல்களை வாங்குவதில் எப்போதும் பேரார்வம் உடையவர்களாக அவர்கள் இருந்தார்கள். எப்போதும் பிறருக்கு கற்றுக் கொடுக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டு வந்தார்கள்.

நூற்றுக்கணக்கான மனிதர்கள் அவர்களுக்கு மாணவர் –களாக இருக்கின்ற பெருமையைப் பெற்று தங்களது படிப்பை நிறைவு செய்து மவ்லவி பட்டம் பெற்றிருக்கின்றனர். இவையெல்லாம் இருந்தும் கூட அவர்களிடமிருந்த சிறப்பு என்னவென்றால், தன்னலம் பாராமல் நடந்து கொள்வதிலும், தாழ்மை குணத்திலும் எத்தகைய தகுதியை அவர்கள் அடைந்திருந்தார்கள் என்றால் மனிதன் அல்லாஹ்விடம் தன்னை மாய்த்துக் கொள்ளாதவரை இந்த தகுதியை அவனால் பெற முடியாது. ஓரளவு புகழும் அறிவுத் திறனையும் முழுமையாக பெற்றிருக்கின்ற ஒவ்வொரு நபரும் தன்னை ஒரு பொருட்டாக கருத ஆரம்பித்து விடுகின்றார். அதே அறிவும் புகழும்தான் உண்மையைத் தேடுவதில் அவருக்கு தடையாக ஆகி விடுகின்றது.

ஆனால், இவர்கள் எத்தகைய தன்னலம் கருதாத மனிதராக இருந்தார்கள் என்றால் எல்லா வகையான சிறப்புகளின் ஒரு தொகுப்பாக அன்னார் இருந்தும் கூட உண்மையை ஏற்றுக் கொள்வதிலிருந்து அவரது அறிவோ, செயலோ, குடும்பப் பெருமையோ அன்னாருக்குத் தடையாக இருக்கவில்லை. இறுதியில் உண்மைக்காக அவர்கள் தமது உயிரை அர்ப்பணித்தார்கள். நமது ஜமாஅத்திற்கு எத்தகைய முன்மாதிரியை அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள் என்றால் அதைப் பின்பற்றி நடப்பதே இறைவனின் அசல் விருப்பமாக இருக்கின்றது.

அடுத்து வரும் பக்கங்களில் இந்த பெருந்தகை எவ்வளவு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை விவரிக்கின்ற அன்னாரது ஷஹாதத் (அல்லாஹ்வின் வழியில் உயிர்

தியாகம் செய்தல்) பற்றிய சம்பவத்தையும், இவ்வழியில் எத்தகு உறுதியுடன் நிலைநிற்கும் தன்மையை அவர்கள் வெளிக்காட்டி –னார்கள் என்பதையும் நாம் எழுத இருக்கின்றோம். இந்த மாய உலகில் முழுமையான ஈமானின் ஆற்றலைப் பெற்றவரைத் தவிர உறுதியிடன் நிலைநிற்கும் அத்தகைய பண்பை வேறு எவராலும் காட்ட முடியாது.

இறுதியில் நாம் இதையும் எழுதுவோம். இவ்வாறெல்லாம் கண்டிப்பாக நடக்க வேண்டியது இருந்தது. ஏனென்றால் இன்றிலிருந்து இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களது ஷஹாதத் தொடர்பாகவும் அவர்களது ஒரு மாணவரின் ஷஹாதத் தொடர்பாகவும் இறைவன் எனக்கு தெரிவித்திருந்தான். அதனை நான் அந்த காலத்திலேயே எனது நூலான பராஹீனே அஹ்மதிய்யாவில் வெளியிட்டிருந்தேன். எனவே, மர்ஹூம் அவர்கள் முழுமையான உறுதியுடன் நிலைநிற்கும் தன்மையின் வடிவில் அவர்கள் மூலமாக வெளிப்பட்ட அந்த அடையாளத்தை மட்டும் காட்டவில்லை. மாறாக, ஒரு நீண்ட காலத்திற்கு முன்பு செய்யப்பட்ட முன்னறிவிப்பு அவரது ஷஹாதத்தின் மூலம் நிறைவேறியதனால் இந்த இரண்டாவது அடையாளமும் கூட அவர்களின் மூலமாக வெளிப்பட்டு விட்டது. இறுதியில் நாம் இந்த முன்னறிவிப்பையும் குறிப்பிடுவோம். இன்ஷா அல்லாஹ்.

பராஹீனே அஹ்மதிய்யாவில் உள்ள முன்னறிவிப்பில் இரண்டு ஷஹாதத்துகள் (உயிர் தியாகங்கள்) பற்றி கூறப்பட்டிருக் –கின்றது. முதலாவது ஷஹாதத் மவ்லவி சாஹிப் அவர்களின் மாணவரான மியா(ன்) அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களுடைய –தாகும். இவர்களது ஷஹாதத் தற்போதைய அமீரின் தந்தையாக இருந்த அமீர் அப்துர் ரஹ்மான் மூலம் நிறைவேற்றப்பட்டது. எனவே காலத்தின் அடிப்படையில் முதலில் நிகழ்ந்த மர்ஹூம் மியா(ன்) அப்துர் ரஹ்மான் அவர்களின் ஷஹாதத் பற்றி நாம் இப்போது முதலில் குறிப்பிடுகின்றோம்.

## ஆப்கானிஸ்தான் நாட்டிலுள்ள கோஸ்த்தின் பெரும் தலைவரான மவ்லவி சாஹிப் ஸாதா அப்துல் லத்தீ.்ப் சாஹிப் அவர்களின் மாணவரான மர்ஹூம் மியா(ன்) அப்துர் ரஹ்மான் அவர்களின் ஷஹாதத் (உயிர்த் தியாகம்) பற்றிய சம்பவம்

மர்ஹூம் மவ்லவி சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் ஷஹாதத்திற்கு (உயிர் தியாகத்திற்கு) ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு முன்னரே அவர்களின் விருப்பத்திற்கும், வழிகாட்டலுக்கும் இணங்க அவர்களின் தூய மாணவரான மியா(ன்) அப்துர் ரஹ்மான் அவர்கள் இரண்டு அல்லது மூன்று முறை காதியான் வந்திருந்தார்கள். ஒவ்வொரு முறையும் பல மாதங்கள் வரை அவர்கள் தங்கியிருந்தார்கள். அவர்கள் தொடர்ந்து எனது நட்பில் இருந்து நான் கூறிய ஆதாரங்களையும், போதனைகளையும் கேட்ட பிறகு அவர்களது ஈமான் ஷஹீதுகளின் பண்பைப் பெற்றது.

இறுதியாக அவர்கள் காபூலுக்கு திரும்பிச் சென்றபோது எனது போதனைகளிலிருந்து முழுமையான பங்கை அவர்கள் பெற்றிருந்தார்கள். தற்செயலாக அவர்கள் இங்கு வந்து தங்கியிருந்த நாட்களில் (வாளேந்தி) ஜிஹாது செய்வதை தடை செய்வது தொடர்பான சில நூல்கள் என் தரப்பிலிருந்து வெளியிடப்பட்டிருந்தன. அதன் மூலமாக இத்தகைய ஜிஹாதை இந்த ஜமாஅத் எதிர்க்கிறது என்பதில் அவர்களுக்கு உறுதி ஏற்பட்டிருந்தது. அவர்கள் என்னிடமிருந்து விடை பெற்று பெஷாவர் சென்றடைந்த போது தற்செயலாக அங்கிருந்த எனது சீடரான வழக்குரைஞர் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களை சந்திக்க நேர்ந்தது. இதே நாட்களில் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்கள் ஜிஹாதை தடை செய்வது தொடர்பாக ஒரு சிறு நூலை எழுதி வெளியிட்டிருந்தார்கள். அது பற்றியும் அவர்களுக்கு தகவல் கிடைத்தது. அந்த கட்டுரை எந்த அளவு ஆழமாக அவர்களது உள்ளத்தில் பதிந்து விட்டது என்றால் காபூல் சென்ற பிறகு பல

இடங்களிலும் ஆங்கிலேயர்களை எதிர்த்து ஜிஹாது செய்வது சரியல்ல. ஏனென்றால் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம்களுக்கு ஆதரவாக இருந்து வருகின்றனர். மேலும் பல கோடி முஸ்லிம்கள் அமைதியுடனும் பாதுகாப்புடனும் அவர்களது நிழலின் கீழ் வாழ்ந்து வருகின்றனர் என்று பல இடங்களில் அவர்கள் கூற ஆரம்பித்தார்கள்.

அப்போது இந்த செய்தி படிப்படியாக அமீர் அப்துர் ரஹ்மானை எட்டியது. மேலும் அந்த அமீரின் கீழ் பணிபுரிந்து வந்த தீங்கு விளைவிக்கும் நோக்கமுடைய சில பஞ்சாபிகள் அமீரிடம், தன்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று கூறி வருகின்ற ஒரு பஞ்சாபி நபரின் சீடராக இவர் இருந்து வருகின்றார். ஆங்கிலேயர்களை எதிர்த்து ஜிஹாது செய்வது சரியல்ல என்பது அவரது போதனையாக இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால், இந்த காலத்தில் முற்றிலுமாக அவர் ஜிஹாதிற்கு எதிராக செயல்படுகின்றார் என்று கூறினர்.

அப்போது அமீர் இந்த விஷயங்களைக் கேட்டு மிகவும் ஆத்திரமடைந்தார். மேலும் விசாரணையின் மூலமாக அதிகமான விஷயங்களை தெரிந்து கொள்வதற்காக மியா(ன்) அப்துர் ரஹ்மான் அவர்களை கைது செய்யும்படி கட்டளையிட்டார். இறுதியில் இந்த நபர் கண்டிப்பாக காதியானி மஸீஹின் சீடராவார். மேலும் ஜிஹாதிற்கு அவர் எதிரானவர் என்ற விஷயம் நிரூபிக்கப்பட்டு விட்டது. அப்போது அநீதிக்கு ஆளாக்கப்பட்ட மியா(ன்) அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களது கழுத்தில் துணியைப் போட்டு குரல் வளையை நெறித்து மூச்சுத் திணர வைத்து எதிரிகள் அவர்களை ஷஹீதாக்கினர். அவர் ஷஹீதான நேரத்தில் வானத்தின் சில அடையாளங்கள் வெளிப்பட்டன என்றும் கூறப்படுகின்றது. இது ஷஹீது மியா(ன்) அப்துர் ரஹ்மான் பற்றிய நற்குறிப்பாகும்.

இப்போது நாம் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் கொடூரமான ஷஹாதத் பற்றி எடுத்துக் கூறுகின்றோம். மேலும் இதுபோன்ற ஈமானை பெறுவதற்காக துஆ செய்து கொண்டிருங்கள் என்று நாம் நமது ஜமாஅத்திற்கு அறிவுரை கூறுகின்றோம். ஏனென்றால் எதுவரை மனிதன் கொஞ்சம் இறைவனுக்காகவும், கொஞ்சம் உலகிற்காகவும் இருப்பானோ அதுவரை வானத்தில் அவனுக்கு நம்பிக்கை கொண்டவன் என்ற பெயர் கிட்டாது.

**காபுல் பிரதேசத்திலுள்ள கோஸ்த்தின் மகத்தான தலைவர் மர்ஹூம் மவ்லவி சாஹிப் ஸாதா அப்துல் லத்தீ.்ப் சாஹிப் அவர்களது ஷஹாதத் (உயிர்த் தியாகம்) பற்றிய சம்பவம்**

மவ்லவி சாஹிப் அவர்கள் காபூல் பிரதேசத்திலுள்ள கோஸ்த்திலிருந்து காதியானிற்கு வந்து பல மாதங்கள் எனக்கு எனது நட்பில் இருந்து வந்தார்கள் என்பதை நாம் ஏற்கனவே கூறியிருந்தோம். அதற்குப் பிறகு வானத்தில் அவர்கள் ஷஹாதத்தின் தகுதியைப் பெற வேண்டும் என்ற இந்த விஷயம் உறுதியாக தீர்மானிக்கப்பட்ட பிறகு அவர்களுக்காக இந்த நிகழ்வு உருவானது. அதாவது அவர்கள் என்னை விட்டு பிரிந்து தனது நாட்டிற்கு திரும்பிச் சென்றார்கள். இப்போது நம்பத்தகுந்த வழிமுறைகளின் மூலமாகவும், குறிப்பாக கண்களால் கண்டவர்கள் மூலமாகவும் இறைநியதிக்கேற் இந்த நிலை உருவானது பற்றி எனக்கு தெரிய வந்தது. அதாவது மவ்லவி சாஹிப் அவர்கள் காபூல் பிரதேசத்திற்கு அருகில் வந்ததும் ஆங்கிலேய ஆளுகைப் பகுதியில் தங்கியவாறு அவர்களின் மாணவராக இருந்த இராணுவ அதிகாரி முஹம்மது ஹுஸைன் அவர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதினார்கள். அதில் நீங்கள் அமீர் சாஹிபிடமிருந்து அனுமதியைப் பெற்று எனக்கு தகவல் தெரிவித்தால் அமீர் சாஹிபின் முன்னிலையில் காபூலில்

நான் ஆஜராகி விடுவேன் என்று எழுதியிருந்தார்கள். அவர்கள் அனுமதி பெறாமல் செல்லாமல் இருந்ததற்கான காரணம் என்னவென்றால், அவர்கள் காபூலிலிருந்து பயணம் மேற்கொண்ட நேரத்தில், தான் ஹஜ் செய்வதற்காக நான் செல்கின்றேன் என்று அமீர் சாஹிப் அவர்களுக்கு தகவல் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவர்களது அந்த எண்ணம் காதியானில் ஒரு நீண்ட காலம் வரை அவர்கள் தங்கி இருந்ததால் நிறைவேறாமல் போய் விட்டது. அந்த நேரமும் கைநழுவி போய் விட்டது. மேலும் என்னைப் பற்றி இந்த நபர்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றார் என்பதை அவர் அடையாளங்கண்டு கொண்டார். எனவே எனது நட்பில் இருப்பதற்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ (4:60) அதாவது அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடங்கள். அவனது தூதருக்கு கட்டுப்பட்டு நடங்கள் என்ற திருக்குர்ஆனின் கட்டளையை பின்பற்றி நடந்தவாறு ஹஜ் செய்யும் எண்ணத்தை வேறொரு வருடத்திற்குத் தள்ளி வைத்து விட்டார்கள்.

ஹஜ் செய்ய எண்ணுகின்ற ஒருவருக்கு ஆயிரத்தி முன்னூறு வருடங்களாக இஸ்லாமியர்கள் எவருக்காக காத்துக் கொண்டிருக்கின்றனரோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை காண நேரிட்டால் பிறகு திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் தெளிவான கட்டளைக்கு ஏற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹின் அனுமதியில்லாமல் அவர்கள் ஹஜ்ஜிற்குச் செல்ல முடியாது. எனினும் அவரது அனுமதியைப் பெற்று வேறொரு சமயத்தில் அவரால் செல்ல முடியும். சுருக்கமாக, ஷஹீதுகளின் தலைவரான மர்ஹூம் அவர்களுக்கு தகுந்த காரணத்தின் அடிப்படையிலேயே ஹஜ் செய்ய முடியாமல் போனது. மேலும் காதியானிலேயே அவரது நாட்கள் கழிந்தன. எனவே காபூல் மண்ணை அடைந்து அந்த

பிரதேசத்தின் எல்லைக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்னதாக ஆங்கிலேய ஆளுகைப் பகுதியில் இருந்தவாறே காபூலின் அமீருக்கு தனது நிலைமையைப் பற்றி விளக்கிக் கூறி ஹஜ் செய்ய முடியாமல் போனதற்கான காரணத்தை எடுத்துக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள்.

அவர்கள் இது பற்றி இராணுவத் தளபதியான முஹம்மது ஹுஸைன் அவர்களுக்கு கடிதம் எழுதுவதைப் பொருத்தமானதாகக் கருதினார்கள். அதன் மூலமாக சரியான சந்தர்ப்பத்தில் பொருத்தமான சொற்களில் அவர் அதுபற்றி அமீருக்கு விளக்கமாக எடுத்துக் கூறுவார் என்று அவர்கள் கருதினார்கள்.

அவர்கள் இந்த கடிதத்தில், நான் ஹஜ் செய்யும் எண்ணத்தில் புறப்பட்டிருந்தாலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹை நான் சந்திக்க நேர்ந்தது. மஸீஹை சந்திக்க வேண்டும். அவருக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதே இறைவன் மற்றும் அவனது தூதரின் கட்டளையாக இருப்பதால் வேறு வழியின்றி எனக்கு காதியானில் தங்க வேண்டியது வந்தது.

நான் என் புறமிருந்து இதனை செய்யவில்லை. மாறாக, திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியின் அடிப்படையில் இவ்வாறு செய்வது அவசியமானது என்று நான் கருதினேன் என்று அவர்கள் எழுதியிருந்தார்கள். இந்த கடிதம் இராணுவத் தளபதியான முஹம்மது ஹுஸைன் அவர்களுக்கு எட்டியதும் அவர் அந்த கடிதத்தை தனது முழங்காலுக்கு கீழே வைத்துக் கொண்டார். அந்த நேரத்தில் கடிதத்தை அவர் அமீரிடம் கொடுக்கவில்லை. ஆனால் எதிரியாகவும், தீய நபராகவும் இருந்த இராணுவத் தளபதியின் உதவியாளருக்கு இது மவ்லவி சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் கடிதமாகும் என்பதும் அவர்கள் காதியானில் தங்கியிருந்தார்கள் என்பதும் எப்படியோ தெரிய வந்த போது அவர் திட்டமிட்டு அந்த கடிதத்தை எடுத்து அமீர் சாஹிபிடம் கொடுத்து

விட்டார். அமீர் சாஹிப் இராணுவத் தளபதியான முஹம்மது ஹுஸைன் அவர்களிடம் இந்த கடிதம் உங்களது பெயரிலா வந்தது? என்று கேட்டார். அமீருக்கு தற்போது இருக்கின்ற கோபத்தையும், ஆத்திரத்தையும் பார்த்து பயந்து அவர் மறுத்து விட்டார். பிறகு தற்செயலாக இவ்வாறு நடந்தது. மவ்லவி சாஹிப் அவர்கள் பல நாட்கள் ஆகியும் முதலில் எழுதிய கடிதத்திற்கு எந்த பதிலும் வராத நிலையில் காத்திருந்த பிறகு இன்னொரு கடிதத்தை முஹம்மது ஹுஸைன் அவர்களுக்கு எழுதி தபால் மூலம் அதனை அனுப்பி வைத்தார்கள். தபால் துறை அதிகாரி அந்த கடிதத்தை பிரித்து பார்த்து விட்டு அதனை அமீர் சாஹிபிற்கு அனுப்பி வைத்தார்.

இறைநியதியில் மவ்லவி சாஹிப் அவர்களின் ஷஹாதத் விதிக்கப்பட்டிருந்ததால், மேலும் வானத்தில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உயிர் தியாகிகளின் அணியில் நுழைந்து விட்டதால் அமீர் சாஹிப், மவ்லவி சாஹிப் அவர்களை அழைப்பதற்காக தந்திரமாக செயல்பட்டார். மவ்லவி சாஹிப் அவர்களுக்கு அமீர் கடிதம் எழுதினார். அதில், நீங்கள் எவ்வித அச்சமுமின்றி வாருங்கள். (வாக்களிக்கப்பட்ட மஸீஹின்) இந்த வாதம் உண்மையானதாக இருந்தால் நானும் கூட (அவரது) சீடராக ஆகிவிடுவேன் என்று எழுதியிருந்தார். எவர்கள் நமக்கு இது பற்றி தெரிவித்துள்ளார்களோ அவர்கள், இந்த கடிதத்தை அமீர் சாஹிப் தபாலில் அனுப்பி வைத்தாரா அல்லது யாரிடமாவது கையில் கொடுத்து அனுப்பி விட்டாரா என்று எங்களுக்கு தெரியவில்லை என்று கூறியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், அந்த கடிதத்தை பார்த்து விட்டு மவ்லவி சாஹிப் அவர்கள் காபூலை நோக்கிச் செல்ல ஆரம்பித்தார்கள். மேலும் இறைநியதியும் இறங்க ஆரம்பித்தது. ஷஹீது மர்ஹூம் அவர்கள் காபூலின் கடை வீதியை கடந்து சென்ற போது அவர்கள் குதிரையில் அமர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்களை பின்

தொடர்ந்து அரசாங்கத்தின் எட்டு குதிரை வீரர்கள் வந்து கொண்டிருந்தனர்.

அவர்களது வருகைக்கு முன்னதாக அமீர் சாஹிப், சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களை ஏமாற்றி அழைத்துள்ளார் என்பதை பொதுவாக காபூலிலுள்ள அனைவரும் அறிந்திருந்தனர். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதை பார்த்தவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். அதாவது மர்ஹூம் சாஹிப் ஸாதா அவர்கள் கடை வீதியை கடந்து சென்ற போது நாங்களும் கடை வீதியிலிருந்த ஏனைய பல மக்களும் அவருடன் சென்றோம். கோஸ்த்திலிருந்தே எட்டு அரசாங்க வீரர்கள் அவர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது. ஏனென்றால் மவ்லவி சாஹிப் கோஸ்த்தை வந்தடைவதற்கு முன்னரே கோஸ்த்தின் ஆளுநர் பெயரில் மவ்லவி சாஹிபை கைது செய்வதற்கான அரசு உத்தரவு வந்திருந்தது. மவ்லவி சாஹிப் அமீர் சாஹிபின் முன்னிலையில் கொண்டு வருவதற்கு முன்னதாகவே எதிரிகள் பலவற்றையும் அவரது இயல்பையே மாற்றி இருந்தனர்.

எனவே அவர் மவ்லவி சாஹிபிடம் மிகவும் அநீதியுடன் நடந்து கொண்டார். எனக்கு இவரிடமிருந்து நாற்றம் வருகின்றது. அவரை சற்று தொலைவில் நிறுத்தி வையுங்கள் என்று அமீர் கட்டளையிட்டார். சிறிது நேரம் கழிந்த பிறகு அமீர், தாம் இருந்து வருகின்ற கோட்டையில் அவர்களை சிறைப்பிடித்து வைக்கும் படியும், அதிக எடை கொண்ட பெரிய சங்கிலியால் அவர்களை பிணைத்து வைக்கும் படியும் அமீர் சாஹிப் கட்டளையிட்டார். இந்த இரும்பு சங்கிலியின் எடை 130 பவுண்டுகளாகும். அது அவர்களது கழுத்திலிருந்து இடுப்பு வரை மாட்டப்பட்டிருந்தது. அதில் கைகளில் மாட்டப்பட்டிருந்த சங்கிலியும் அடங்கும்.

பிறகு அவர்களது கால்களில் 17 பவுண்டுகள் எடையுள்ள இரும்பு சங்கிலியை கால்களில் பிணைக்கும்படி அவர்

கட்டளையிட்டார். அதற்குப் பிறகு மர்ஹூம் மவ்லவி சாஹிப் அவர்கள் நான்கு மாதங்கள் சிறையில் இருந்தார்கள். இந்த காலகட்டத்தில் பல முறை அமீர் தரப்பிலிருந்தும் அவர்களிடம் இந்த கோரிக்கை வைக்கப்பட்டது. அதாவது காதியானில் இருக்கின்றவர் உண்மையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றார் என்ற எண்ணத்தில் இருந்து நீங்கள் தவ்பா செய்வதாக இருந்தால் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டது.

**அதற்கு, நான் அறிவுள்ள மனிதனாக இருக்கின்றேன். உண்மையையும் பொய்யையும் அடையாளங்கண்டு கொள்கின்ற ஆற்றலை இறைவன் எனக்கு வழங்கியுள்ளான். நான் முழுமையாக ஆராய்ந்து பார்த்த பிறகே இந்த நபர் உண்மையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றார் என்பதை தெரிந்து கொண்டேன். இந்த நம்பிக்கையின் காரணமாக நான் எனது உயிரை துறக்க வேண்டியது வரும். மேலும் எனது மனைவி மக்களின் அழிவு இதனால் ஏற்படும் என்பதை நான் முழுமையாக அறிந்திருக்கின்றேன். ஆனால் நான் இந்த சமயத்தில் எனது நம்பிக்கையை எனது உயிர் மற்றும் ஒவ்வொரு உலக சுகத்தை விடவும் முதன்மையானதாக கருதுகின்றேன் என்று மவ்லவி சாஹிப் அவர்கள் கூறினார்கள்.**

இவ்வாறு ஒருமுறை அல்ல. மாறாக, அன்னார் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் மீண்டும் மீண்டும் ஒவ்வொரு முறையும் மவ்லவி சாஹிப் அவர்கள் இந்த பதிலைத் தான் கூறினார்கள். அவர்களின் சிறைவாசம் மனித பலவீனங்களை ஓரளவு கருத்தில் கொண்டு நடக்கின்ற ஆங்கிலேயர்களின் சிறைவாசத்தைப் போன்று இருக்கவில்லை. மாறாக, மிகவும் கடுமையான சிறைவாசமாக அது இருந்தது. அதனை மனிதன் மரணத்தை விட மோசமானதாகவே கருதுகின்றான்.

இந்நிலையில் மக்கள் ஷஹீது அவர்கள் கொண்ட கொள்கையில் தொடர்ந்து உறுதியாக நிலைத்திருப்பதை மிகவும் வியப்புடன் பார்த்தனர். உண்மையிலேயே அது வியப்பிற்குரிய இடமாகவே இருந்தது. அந்த கம்பீரமிக்க மனிதருக்கு காபூல் பிரதேசத்தில் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் இருந்தன. தனது அறிவின் சிறப்புகள் மற்றும் இறையச்சத்தின் காரணமாக முழு காபூல் மண்ணின் தலைவராக அவர்கள் இருந்தார்கள். தமது வாழ்நாளில் ஏறக்குறைய ஐம்பது வருடங்கள் வரை செல்வச் செழிப்பாகவும், நிம்மதியாகவும் தமது வாழ்க்கையை அவர்கள் கழித்திருந்தார்கள். மனைவியும், பிரியமான பிள்ளைகளும் அவர்களுக்கு இருந்தனர்.

பிறகு திடீரென்று எத்தகைய கொடூரமான சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டார்கள் என்றால் அது மரணத்தை விடவும் மோசமானதாக இருந்தது. அதை கற்பனை செய்து பார்க்கும் போது கூட மனிதனின் உடல் நடுங்குகின்றது. மென்மையான இயல்பை உடைய, சுகமாக வாழ்ந்து வந்த அந்த மனிதர் தமது ஆன்மாவை உருக்குகின்ற எல்லா சோதனைகளையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள். தனது உயிரை தனது ஈமானுக்காக அவர்கள் அர்ப்பணித்து விட்டார்கள். குறிப்பாக காபூலின் அமீரிடமிருந்து மீண்டும் மீண்டும் அவர்களுக்கு இந்த காதியானி நபரின் வாதத்தை உண்மைப்படுத்துவதை நீங்கள் மறுத்து விட்டால் இப்போது நீங்கள் கண்ணியத்துடன் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று தூதுச் செய்தி வந்தது. ஆனால் உறுதியான ஈமானைக் கொண்டிருந்த அந்த பெருந்தகை மீண்டும் மீண்டும் தரப்பட்ட வாக்குறுதியை கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

**நான் எனது ஈமானை விட உலகிற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற நம்பிக்கையை என்மீது வைக்க வேண்டாம். எவரை நான் நன்றாக அடையாளங்கண்டு கொண்டேனோ,**

**எல்லா வகையிலும் அவரிடம் திருப்தியடைந்துள்ளேனோ அவரை எனது மரணத்திற்கு பயந்து எவ்வாறு என்னால் மறுக்க முடியும் ? இவ்வாறு என்னால் ஒருபோதும் மறுக்க முடியாது. உண்மையை பெற்றுக் கொண்டதை நான் காண்கின்றேன். எனவே, சில நாட்களின் வாழ்விற்காக நிரூபிக்கப்பட்ட உண்மையை கைவிட்டுவிடுகின்ற ஈமானில்லாத நிலையை என்னால் வெளிப்படுத்த இயலாது. நான் உயிரை விட்டு விட ஆயத்தமாக இருக்கின்றேன். உயிரை விடுவதற்கு தீர்மானித்து விட்டேன். ஆனால் உண்மை என்னுடன் இருக்கும் என்றே அவர்கள் மீண்டும் மீண்டும் பதில் கூறினார்கள். இந்த பெருந்தகை மீண்டும் மீண்டும் கூறிய இந்த பதில் எத்தகையது என்றால் காபூல் மண் ஒருபோதும் அவற்றை மறக்காது. காபூலிலுள்ள மக்கள் தங்களது முழு வாழ்நாளிலும் நேர்மை மற்றும் கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்கின்ற இந்த முன்மாதிரியை ஒருபோதும் பார்த்திருக்க மாட்டார்கள்.**

இந்த இடத்தில் இதையும் குறிப்பிடுவது பொருத்தமான –தாகும். அதாவது மீண்டும் மீண்டும் இந்த அளவு மன்னிப்பிற்கான வாக்குறுதியை வழங்கி ஒரு கொள்கையிலிருந்து ஒருவரை விடுவிப்பதற்காக கவனமூட்டுவது காபூலிலுள்ள அமீர்களின் வழிமுறையல்ல. ஆனால் மர்ஹூம் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களுக்கு இந்த குறிப்பான சலுகை வழங்கப்பட்டதற்கான காரணம் அவர்கள் ஒருவகையில் காபூல் பிரதேசத்தின் ஒரு தூணாகத் திகழ்ந்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அவர்கள் மீது பற்றுள்ளவர்களாக இருந்தார்கள்.

நான் மேலே எழுதியிருப்பதைப் போன்றே அவர்கள் காபூலின் அமீரின் பார்வையில் எந்த அளவு தேர்வு செய்யப்பட்டிருந்த ஆலிம் ஃபாஸிலாக இருந்தார்கள் என்றால் எல்லா ஆலிம்களின் மத்தியிலும் ஒரு சூரியனாக அவர்கள் கருதப்பட்டார்கள். அத்தகைய

நல்ல மனிதர் ஆலிம்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கண்டிப்பாக கொலை செய்யப்படுவார் என்று அமீருக்கு சுயமாகவே இவ்விஷயத்தில் வருத்தம் இருந்திருக்கலாம்.

இன்றைய நாட்களில் ஒருவகையில் பார்க்கும் போது காபூல் அரசாங்கத்தின் கடிவாளம் மவ்லவிகளின் கையில் இருப்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. எந்த விஷயத்தில் மவ்லவிகள் ஒருமித்த கருத்தையுடையவர்களாக ஆகிவிடுகின்றனரோ அமீர் அதற்கு எதிராக எதையாவது செய்வது என்பது சாத்தியமற்றதாகும். எனவே இந்த விஷயம் முற்றிலும் நான் யூகித்தது போன்றே நடந்திருக்கின்றது. அதாவது ஒருபுறம் இந்த அமீருக்கு மவ்லவிகளின் மீதுள்ள அச்சம் இருந்திருக்கின்றது. மறுபுறம் ஷஹீது மர்ஹூம் அவர்களை எந்த பாவமும் செய்யாதவராக அவர் காண்கின்றார்.

இதன் காரணமாகவே அவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்த முழு காலகட்டத்திலும் இந்த காதியானி நபரை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக ஏற்றுக் கொள்ள வேண்டாம். இந்த கொள்கையிலிருந்து நீங்கள் தவ்பா (பாவ மன்னிப்பு) செய்யுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் கண்ணியத்துடன் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று அமீர் அவர்களிடம் கூறி வந்தார். இந்த எண்ணத்தில்தான் அவர் தாம் வசித்து வந்த அதே கோட்டையில் ஷஹீது மர்ஹூம் அவர்களையும் கைது செய்து சிறைப்பிடித்து வைத்திருந்தார். அதன் மூலமாக பலமுறை இந்த கோரிக்கையை வைப்பதற்காக சந்தர்ப்பம் அவருக்கு கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்.

இந்த இடத்தில் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும். உண்மையில் அந்தவொரு விஷயம் தான் இந்த துன்பத்திற்கான காரணமாகவும் இருந்தது. அந்த காரணம் இதுவாகும். அதாவது அப்துர் ரஹ்மான் ஷஹீது

அவர்களின் காலத்திலிருந்தே இந்த விஷயம் அமீருக்கும் மவ்லவிகளுக்கும் நன்றாக தெரிந்திருந்தது. அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் செய்கின்ற காதியானி ஜிஹாதிற்கு கடுமையான எதிரியாக இருக்கின்றார். அவர் தமது நூல்களில் மீண்டும் மீண்டும் இந்த காலத்தில் வாளாலான ஜிஹாதை செய்வது சரியல்ல என்ற விஷயத்தை வலியுறுத்தி கூறி வருகின்றார் என்பது அமீருக்கு தெரிந்திருந்தது.

மேலும் தற்செயலாக இந்த அமீரின் தந்தை ஜிஹாது கட்டாயமாகி விட்டது என்பது தொடர்பாக ஒரு நூலை எழுதியிருந்தார். அதிலுள்ள கருத்துக்கள் நான் வெளியிட்டுள்ள நூல்களின் கருத்துக்கு முற்றிலும் எதிரானவையாக இருந்தன. தங்களை ஏகத்துவ வாதிகள் என்றும் அஹ்லே ஹதீஸ் என்ற பெயரிலும் அறிமுகம் செய்து கொண்ட பஞ்சாபைச் சார்ந்த தீங்கிழைக்கும் சில மனிதர்கள் அமீரிடம் சென்றனர். அவர்களிடம் இருந்து வாய்மொழியாக தற்போதைய அமீரின் தந்தையான அமீர் அப்துர் ரஹ்மான் எனது இந்த நூல்களிலுள்ள கருத்துக்களை கேட்டிருக்கக்கூடும். மேலும், மியா(ன்) அப்துர் ரஹ்மான் ஷஹீது அவர்கள் கொலை செய்யப்பட்டதற்கும் இதுவே காரணமாக இருந்தது. அதாவது, ஜிஹாது செய்வதை ஹராமாக (விலக்கப் –பட்டதாக)க் கருதுகின்ற அந்தப் பிரிவைச் சேர்ந்த மனிதர்தான் இவர் ஆவார் என்று அமீர் அப்துர் ரஹ்மான், மியா(ன்) அப்துர் ரஹ்மான் அவர்களைக் குறித்து கருதினார்.

இறைநியதியின் ஈர்ப்பின் காரணமாக மர்ஹூம் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களிடமிருந்தும் இந்த தவறு ஏற்பட்டது என்ற விஷயம் உறுதியானதாகும். அதாவது அவர்கள் சிறையில் இருந்த நிலையிலும் கூட, இப்போதுள்ள இந்த காலம் ஜிஹாது செய்வதற்கான காலமல்ல என்பதை வெளிப்படையாக கூறியிருந்தார்கள். உண்மையில் மஸீஹாக இருக்கின்ற அந்த

வாக்களிக்கப்பட்ட மஸீஹின் போதனையும் இதுவேயாகும். அதாவது இப்போதுள்ள இந்த காலம் ஆதாரங்களை எடுத்துக் கூறுகின்ற காலமாகும். வாளின் மூலமாக மார்க்கத்தை பரப்புவது ஆகுமானதல்ல. இப்போது இதைப் போன்ற செடி ஒருபோதும் செழித்து வளர முடியாது. மாறாக, விரைவில் அது காய்ந்து போய்விடும் என்று அவர்கள் கூறினார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்கள் உண்மையை எடுத்துக் கூற எவரையும் பொருட்படுத்தியதில்லை. உண்மையில் அவர்களுக்கு வாய்மையைப் பரப்பும் பணியில் தனது மரணத்தைப் பற்றிய அச்சமும் இருக்கவில்லை. அதனால்தான் அத்தகைய சொற்கள் அவர்களது நாவிலிருந்து வெளி வந்தன.

வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், அவர்கள் தமது நாட்டிற்கு சென்ற போது மீண்டும் மீண்டும் காபூலின் மண்ணுக்கு அதன் சீர்திருத்தத்திற்காக எனது இரத்தத்தின் தேவை உள்ளது என்று கூறிக் கொண்டிருந்தார்கள் என்று அவர்களது மாணவர்களில் சிலர் கூறுகின்றனர்.

உண்மையிலேயே அவர்கள் உண்மையைத்தான் கூறி –யுள்ளார்கள். ஏனென்றால் காபூல் மண்ணில் ஒரு கோடி பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தாலும் அவற்றில் வலுவான ஆதாரங்கள் மூலமாக நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருப்பது நிரூபிக்கப்பட்டிருந்தாலும் இந்த ஷஹீதின் இரத்தத்தால் ஏற்பட்டுள்ள தாக்கத்தைப் போன்று அந்த பிரசுரங்களால் ஒருபோதும் அத்தகைய தாக்கம் ஏற்பட்டிருக்க முடியாது. காபூல் மண்ணில் இந்த இரத்தம் ஒரு விதையைப் போன்று விழுந்திருக்கின்றது. அது சிறிது காலத்தில் பெரும் மரமாக ஆகிவிடும். ஆயிரக்கணக்கான பறவைகள் அதில் வந்து வாழும்.

இப்போது இந்த வேதனை நிறைந்த சம்பவத்தின் எஞ்சிய பகுதியை எனது ஜமாஅத்திற்காக எழுதி விட்டு இந்த கட்டுரையை

நான் நிறைவு செய்கின்றேன். அந்த சம்பவம் இதுவாகும். ஷஹீது மர்ஹூம் அவர்கள் கைது செய்யப்பட்டு நான்கு மாதங்கள் கழிந்த பிறகு அமீர் தனக்கு முன்னால் ஷஹீது மர்ஹூம் அவர்களை வரவழைத்து தனது பொது நீதிமன்றத்தில் நிறுத்தி தனது கொள்கையிலிருந்து தவ்பா செய்யுமாறு வேண்டினார். நீங்கள் இப்போதும் கூட அந்த காதியானியை உண்மைப்படுத்துவதில் இருந்தும் அவரது கொள்கையை உண்மைப்படுத்துவதிலிருந்தும் எனக்கு முன்னால் நேருக்கு நேர் மறுத்துக் கூறி விட்டால் உங்களது உயிர் காப்பாற்றப்பட்டு விடும். நீங்கள் கண்ணியத்துடன் விடுதலை செய்யப்படுவீர்கள் என மிகவும் கண்டிப்புடன் அவர்களுக்கு இதன் பக்கம் ஆர்வமூட்டினார்.

அதற்கு ஷஹீது மர்ஹூம் அவர்கள், **நான் உண்மையை கைவிட்டுவிட்டு தவ்பா செய்வது என்பது சாத்தியமற்றதாகும். இந்த உலகிலுள்ள ஆட்சியாளர்கள் வழங்கும் தண்டனை மரணிப்பதுடன் நிறைவடைந்து விடும். ஆனால் எந்த இறைவனின் தண்டனை ஒருபோதும் முடிவடையாதோ அந்த தண்டனைக்கு நான் அஞ்சுகின்றேன். எனினும் நான் உண்மையில் இருப்பதால் எனது கொள்கைக்கு எதிராக இருக்கின்ற இந்த மவ்லவிகளுடன் நான் விவாதம் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு நான் வேண்டுகின்றேன். ஆதாரங்களின் அடிப்படையில் நான் பொய்யனாக இருப்பது நிரூபிக்கப்பட்டால் எனக்கு தண்டனை வழங்கப்படட்டும் என்று அவர்கள் கூறினார்கள்.**

இந்த சம்பவத்தின் அறிவிப்பாளர் இவ்வாறு கூறுகின்றார். அந்த உரையாடலின்போது நாங்கள் அங்கு தான் இருந்தோம். அமீர், ஷஹீது மர்ஹூம் கூறிய அந்த விஷயத்தை விரும்பினார். அரசாங்கத்தின் பள்ளிவாயிலில் விவாதத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டு கான் முல்லா கான் மற்றும் எட்டு முஃப்திகள்

(மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர்கள்) இந்த விவாதத்திற்காக தேர்வு செய்யப்பட்டனர். சுயமாகவே பஞ்சாபியாக இருந்ததினால் கடுமையான எதிரியாக இருந்து வந்த லாஹூரைச் சார்ந்த ஒரு டாக்டர் நடுவராக நியமனம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டார். விவாதத்தின் போது கூட்டம் அதிகமாக இருந்தது. விவாதத்தைப் பார்த்தவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

விவாதம் நடந்த சமயத்தில் நாங்கள் அங்கிருந்தோம். எழுத்து வடிவிலான விவாதமாக அது இருந்தது. விவாதம் எழுத்துப்பூர்வமாக மட்டுமே நடைபெற்றது. விவாதத்தின் எந்தவொரு விஷயமும் பார்வையாளர்கள் கேட்கும் விதத்தில் கூறப்படவில்லை. எனவே இந்த விவாதத்தின் நிலைமை பற்றி எதுவுமே தெரியாமல் இருந்தது. காலை ஏழு மணியிலிருந்து நண்பகல் மூன்று மணி வரை விவாதம் நீடித்தது. பிறகு அஸர் வேளையின் கடைசி நேரத்தில் குஃப்ர் ஃபத்வா வழங்கப்பட்டது. விவாதத்தின் இறுதியில் ஷஹீது மர்ஹூம் அவர்களிடம், இந்த காதியானி நபர்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றால், பிறகு நீங்கள் ஈஸா (அலை) அவர்களைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? அவர்கள் திரும்ப உலகிற்கு வருவார்களா? அல்லது வர மாட்டார்களா? என்றும் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் தமது கொள்கையில் மிகவும் உறுதியுடன் நிலைத்திருந்தவாறு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணித்து விட்டார்கள். இனி அவர்கள் ஒருபோதும் திரும்ப வர மாட்டார்கள். அவர்கள் மரணித்து விட்டார்கள்; திரும்ப வர மாட்டார்கள் என்பதற்கு திருக்குர்ஆன் சாட்சியாக இருக்கின்றது என்று பதில் கூறினார்கள். அப்போது அம்மக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறிய விஷயத்தைக் கேட்டு விட்டு தமது ஆடைகளை கிழித்துக் கொண்ட அந்த மவ்லவிகளைப் போன்று ஏச ஆரம்பித்தனர். இப்போது இந்த நபரின் நிராகரிப்பில் என்ன சந்தேகம் இருக்கிறது? என்று கேட்டனர். மேலும் (அம்மக்கள்) மிகவும் ஆத்திரமடைந்த நிலையில் இந்த குஃப்ர்

ஃபத்வா எழுதப்பட்டது. இதற்குப் பிறகு அஹ்வந்த் ஸாதா ஹஸ்ரத் ஷஹீது மர்ஹூம் அவர்கள் தனது கால்களில் சங்கிலி மாட்டப்பட்டிருக்கும் நிலையில் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

இவ்விடத்தில் இந்த விஷயத்தையும் நான் கூறாமல் விட்டு விட்டேன். இந்த பாக்கியமற்ற மவ்லவிமார்களுடன் மர்ஹூம் சாஹிப் ஸாதா அவர்கள் விவாதம் செய்து கொண்டிருக்கும் போது எட்டு நபர்கள் உருவிய வாள்களுடன் ஷஹீது மர்ஹூம் அவர்களின் தலைக்கு அருகில் நின்று கொண்டிருந்தனர். அதற்குப் பிறகு அந்த குஃப்ர் ஃபத்வா இரவு நேரத்தில் அமீர் சாஹிபுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதிலும் கூட இந்த தந்திரம் கையாளப்பட்டது. அதாவது விவாதம் எழுதப்பட்டிருந்த காகிதங்கள் வேண்டுமென்றே அமீருக்கு அனுப்பப்படாமல் இருந்தது. பொது மக்கள் மத்தியிலும் அந்த காகிதங்களிலிருந்த கருத்துகள் வெளியிடப்படவில்லை. எதிரி மவ்லவிகளால் ஷஹீது மர்ஹூம் எடுத்துக் கூறிய சான்றுகளை எவ்விதத்திலும் மறுக்க முடியவில்லை என்பதற்கு இது தெளிவான அத்தாட்சியாகும்.

ஆனால் அந்த அமீரின் மீது அந்தோ பரிதாபம்! விவாதம் எழுதப்பட்டிருந்த காகிதங்களைக் கேட்டுப் பெறாமல் குஃப்ர் ஃபத்வாவின் அடிப்படையில் மட்டும் அவர் தனது தீர்ப்பைக் கூறி விட்டார். ஆனால் எந்த இறைவனிடத்தில் தமது எல்லா செல்வங்களையும் ஆட்சியையும் விட்டு விட்டு விரைவில் அவர் திரும்ப செல்ல இருக்கின்றாரோ அந்த உண்மையான நீதிபதிக்கு அஞ்சியவாறு அவர் தாமே விவாதம் நடைபெற்ற சமயத்தில் அங்கு ஆஜராகி இருக்க வேண்டும்.

குறிப்பாக, விவாதத்தின் விளைவாக, ஒரு பாவமும் செய்யாத ஓர் அப்பாவியின் உயிருக்கு இழப்பு ஏற்படும் என்பதை நன்றாக அறிந்திருக்கும் நிலையில் அவரது இறையச்சம்

எந்நிலையிலும் எல்லா துன்பங்களையும் சகித்தவாறும் அவரை அந்த சபைக்கு செல்ல வைத்திருக்க வேண்டும் என்பதையே எதிர் பார்க்கின்றது. மேலும் அநீதி இழைக்கப்பட்ட ஷஹீது அவர்கள் செய்த ஏதாவதொரு குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன்னதாகவே இத்தகைய கொடுமை அவர்கள் மீது இழைக்கப்பட்டிருக்கக் கூடாது. அதாவது எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் ஒரு நீண்ட காலம் வரை சிறை தண்டனையை அவர்கள் அனுபவித்து வந்தார்கள். சங்கிலிகள் மற்றும் விலங்குகளால் அன்னார் பிணைக்கப்பட்டு அழுத்தப்பட்டார்கள். எட்டு போர்க் காவலர்கள் உருவிய வாள்களுடன் அவர்களது தலைக்குப் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு ஒரு வேதனையையும் ஒரு திகிலையும் அவர்களிடம் ஏற்படுத்தி ஆதாரங்களைத் தருவதில் இருந்தும் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள். இவ்வாறெல்லாம் செய்யாதீர்கள் என்று அமீர் கட்டுப்பாடு விதித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றாலும் கூட நீதியுடன் தீர்ப்பு வழங்குவதற்காக விவாதம் எழுதப்பட்டிருந்த தாள்களை தன்னிடம் தருமாறு அவற்றைக் கேட்டுப் பெற வேண்டியது அவரது கடமையாக இருந்தது. இன்னும் சொல்வதென்றால் விவாதம் எழுதப்பட்டிருக்கும் தாள்கள் தனக்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஆரம்பத்திலேயே அவர் வலியுறுத்திக் கூறியிருக்க வேண்டும். இதை மட்டும் செய்து விட்டு சும்மா இருந்து விடாமல் தாமே அவர்களது அந்த விளக்கங்களை ஆய்வு செய்திருக்க வேண்டும்.

இன்னும் சொல்வதென்றால், இந்த நபர் எங்களது மவ்லவிமார்களுக்கு எதிரில் தோல்வியடைந்து விட்டதை பாருங்கள் என்பதை பறைசாற்றும் வகையில் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அந்த தாள்களை அச்சிட்டு வெளியிட்டிருக்க வேண்டும். ஷஹீது மர்ஹூம் அவர்கள் காதியானியாக இருக்கின்ற வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தொடர்பாகவும், ஜிஹாது தடை

செய்யப்பட்டிருப்பது தொடர்பாகவும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பது தொடர்பாகவும் எந்த ஆதாரத்தையும் தரவில்லை என்பதை அவர் நிரூபித்திருக்க வேண்டும்.

அந்தோ பரிதாபம்! அந்த அப்பாவி அந்த அமீரின் கண்களுக்கு முன்னாலேயே ஓர் ஆட்டைப் போன்று அறுக்கப்பட்டார்கள். அவர்கள் உண்மையாளராக இருந்தும், முழுமையான ஆதாரங்களை அவர்கள் எடுத்துக் கூறிய பிறகும், இறை நேசர்களுக்கு வழங்கப்படுகின்ற உறுதித்தன்மையை அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியிருந்தும் அவர்களது தூய உடல் கற்களால் சிதைக்கப்பட்டது. அவர்களது மனைவியும், அவர்களது அநாதை குழந்தைகளும் கோஸ்த்தில் இருந்து கைது செய்யப்பட்டு மிகவும் இழிவுடனும், தண்டனை வழங்கப்பட்ட நிலையிலும் காவலில் வைக்கப்படுவதற்காக வேறோர் இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**அறிவற்றவர்களே! முஸ்லிம்களிடையே மத ரீதியாக ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளுக்கு இவ்வாறுதான் தண்டனை வழங்கப்படுகின்றதா? நீங்கள் எந்த சிந்தனையில் இந்த கொலையை செய்துள்ளீர்கள்? ஆங்கிலேயே ஆட்சி இந்த அமீரின் பார்வையிலும் இந்த மவ்லவிமார்களின் பார்வையிலும் ஒரு கா∴பிரின் ஆட்சியாக இருக்கின்றது. எந்த அளவு பல்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்கள் இந்த ஆட்சியின் நிழலின் கீழ் இருந்து வருகின்றனர்? இன்று வரை இந்த அரசாங்கம் ஒரு முஸ்லிமையோ அல்லது ஓர் இந்துவையோ அவர் கூறிய கருத்து பாதிரிமார்களின் கருத்துக்கு எதிராக இருந்தது என்ற குற்றத்தின் காரணமாக அவரைத் தூக்கிலிட்டிருக்கின்றதா என்ன?**

அந்தோ பரிதாபம்! வானத்தின் கீழ் இந்த மாபெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒரு பாவமும் செய்யாத ஓர் அப்பாவி உண்மையாளராக இருந்தும், உண்மையை சார்ந்

–திருப்பவராக இருந்தும் அவர்கள் இறையச்சம் மற்றும் தூய்மையின் தூய ஆடையால் அலங்கரிக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கு கண்ணியத்திற்குரிய ஆயிரக்கணக்கான மக்கள் சாட்சி பகர்ந்திருந்தும் மார்க்கக் கோட்பாடுகளில் இருந்த கருத்து வேறுபாடுகளின் காரணமாக மட்டும் இந்த அளவு கருணை இல்லாமல் அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். தனக்கு கிடைத்த ஒரு தகவலின் அடிப்படையில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை கைது செய்த அந்த ஆளுநர் அதாவது பிலாத்து இந்த அமீரை விட தகுதியில் ஆயிரம் மடங்கு நல்லவராக இருந்தார். அவரைப் பற்றிய குறிப்பு இன்று வரை சுவிஷேசங்களில் காணப்படுகிறது. ஏனென்றால் அவரிடம் யூதர்களின் மவ்லவிகள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு எதிராக குஃப்ர் ஃபத்வாவை வழங்கி அவரை சிலுவையில் அறைந்து கொல்ல வேண்டும் என்று வேண்டிய போது நான் இந்த நபரிடம் எந்த பாவத்தையும் பார்க்கவில்லை என்று அவர் பதில் கூறினார்.★

ஆனால் அந்தோ பரிதாபம்! குறைந்தபட்சம் இந்த அமீர் தனது மவ்லவிகளிடம் இவ்வாறு கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்ற ஃபத்வா எந்தக் குஃப்ரின் காரணமாக வழங்கப்பட்டிருக்–கின்றது? என்றாவது கேட்டிருக்க வேண்டும். இந்த கருத்து வேறுபாட்டை அவர்கள் ஏன் குஃப்ரில் சேர்த்தார்கள்? என்று கேட்டிருக்க வேண்டும். உங்களது பிரிவுகளுக்குள்ளேயே அதிகமான கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அந்நிலையில் ஒரு பிரிவை விட்டு விட்டு மற்ற பிரிவுகளை சார்ந்தவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டுமா? என்று அவர்களிடம் ஏன் கேட்கவில்லை. எந்த அமீரிடம் இத்தகைய வழிமுறையும், இத்தகைய நெறியும் இருக்கின்றதோ அவர் இறைவனுக்கு என்ன பதில் கூறப்போகின்றார்? என்பது தெரியவில்லை. இவ்வாறு குஃப்ர்

★ யோவான் 19:4,6; லுக்கா 23:4 – வெளியீட்டாளர்.

ஃபத்வா கொடுக்கப்பட்ட பிறகு ஷஹீது மர்ஹூம் அவர்கள் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். திங்கட்கிழமை அன்று காலை அமீர் சாஹிபின் முக்கிய சபைக்கு வரும்படி அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் கூட அங்கு பெரும் கூட்டம் இருந்தது. அமீர் சாஹிப் தனது கோட்டையிலிருந்து வெளியே வந்ததும் வழியில் ஷஹீது மர்ஹூம் அவர்கள் ஓரிடத்தில் அமர்ந்திருப்பதைப் பார்த்தார். அவர்களைக் கடந்து செல்லும் போது அமீர் அவர்களிடம் அஹ்வந்த் ஸாதா சாஹிப், என்ன தீர்ப்பு கூறப்பட்டது**?** என்று கேட்டார். ஷஹீது மர்ஹூம் அவர்கள் அதற்கு எந்த பதிலும் கூறவில்லை. ஏனென்றால் இம்மக்கள் அநீதி இழைப்பதற்கு முழுமையாக ஆயத்தமாகி விட்டனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அப்போது படை வீரர்களில் ஒருவர் இழிவு ஏற்பட்டு விட்டது. குஃப்ர் ஃபத்வா கொடுக்கப்பட்டு விட்டது என்று கூறினார். பிறகு சபைக்கு வந்து அரியணையில் அமீர் அமர்ந்ததும், மர்ஹூம் அஹ்வந்த் ஸாதா சாஹிப் அவர்களை அழைத்தார்.

உங்களுக்கு எதிராக குஃப்ர் ஃபத்வா கொடுக்கப்பட்டிருக் –கின்றது. இப்போது நீங்கள் தவ்பா செய்வீர்களா**?** அல்லது தண்டனையை பெற்றுக் கொள்வீர்களா**?** என்பதை கூறுங்கள் என்று அமீர் அவர்களிடம் கேட்டார். அதற்கு அவர்கள் தெளிவான சொற்களில் அமீர் கூறியதை மறுத்தவாறு, **உண்மையிலிருந்து நான் தவ்பா செய்ய முடியாது. எனது உயிருக்கு அஞ்சியவாறு நான் பொய்யை ஏற்றுக் கொள்வேனா? அவ்வாறு என்னால் செய்ய முடியாது** என்று கூறினார்கள்.

அப்போது அமீர் மீண்டும் அவர்களிடம், தவ்பா செய்யுமாறு கூறினார். அவர்கள் தவ்பா செய்தால் அவர்களை விடுதலை செய்வதாக அமீர் அவர்களுக்கு பெரும் நம்பிக்கையூட்டியதுடன் அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதாகவும் வாக்குறுதி வழங்கினார்.

ஆனால் ஷஹீது மர்ஹூம் அவர்கள் மிகவும் வலுவாக அதை மறுத்து விட்டார்கள். **நான் உண்மையை கைவிட்டு விட்டு தவ்பா செய்து விடுவேன் என்று என்மீது நீங்கள் நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று ஷஹீது மர்ஹூம் அவர்கள் கூறினார்கள்.**

இவ்விஷயங்களை கூறுபவர்கள் இதையெல்லாம் நாங்கள் கேள்விப்பட்டு எடுத்துரைக்கும் விஷயங்கள் அல்ல; மாறாக, நாங்களே அந்த கூட்டத்தில் இருந்தோம். அப்போது ஒரு பெரும் கூட்டம் அங்கிருந்தது என்று கூறினர். மேலும் அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட ஒவ்வொரு கோரிக்கையையும் அவர்கள் கண்டிப்புடன் மறுத்து வந்தார்கள். நிச்சயமாக தாம் இவ்வழியில் தம் உயிரை அர்ப்பணித்து விட வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்திருந்–தார்கள். அப்போது அவர்கள், **நான் கொலை செய்யப்பட்ட பிறகு ஆறு நாட்கள் கழிந்த பிறகு மீண்டும் உயிர்பெற்று விடுவேன்** என்றும் கூறினார்கள்.

இதனை, அப்போது, அந்த நேரத்தில் அவர்களுக்கு வந்த வஹீயின் அடிப்படையிலேயே அன்னார் கூறியிருப்பார்கள் என்று இதை எழுதுபனாகிய நான் கூறுகின்றேன். ஏனென்றால் அந்த நேரத்தில் ஷஹீது மர்ஹூம் அவர்கள் (உலகை விட்டும்) துண்டிக்கப்–பட்டவருடன் நுழைந்து விட்டார்கள். மலக்குகள் அவர்களை கட்டித்தழுவிக் கொண்டிருந்தனர். அப்போது மலக்குகளிடமிருந்து இந்த செய்தியைப் பெற்றே அவர்கள் அவ்வாறு கூறினார்கள். அவர்கள் கூறியதன் பொருள் இதுவாகும். அதாவது இறை நேசர்களுக்கும் இறைவனுக்கு நெருக்கமானவர்களுக்கும் வழங்கப்படுகின்ற அந்த வாழ்க்கை ஆறு நாட்களுக்குள் தனக்கு கிடைக்கும். இறைவனின் நாள் வருவதற்கு முன்னதாக அதாவது ஏழாவது நாளுக்குள் தான் உயிர் பெற்று விடுவேன் என்று அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்களும் இறைவனின் வழியில் ஷஹீதாகின்ற சிறப்பான மக்களும் சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகின்றனர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ؕ بَلْ اَحْيَآءٌ (3:170)

அதாவது அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை நீங்கள் மரணித்தவர்கள் என்று கருத வேண்டாம். மாறாக, அவர்கள் உயிருடன் இருப்பவர்கள் ஆவர்.

எனவே, ஷஹீது மர்ஹூம் அவர்கள் தனக்கு கிடைக்க இருந்த இந்த அந்தஸ்தையே சைகையாக சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள்.

நான் ஒரு கஷ்ஃபு காட்சியில் இவ்வாறு பார்த்தேன். **மிகவும் அழகாகவும், பசுமையாகவும் இருந்த ஓர் ஊசி மரத்தின் பெரிய நீண்ட கிளை நமது தோட்டத்திலிருந்து வெட்டப்பட்டு விட்டது. அது ஒருவருடைய கையில் இருக்கிறது. அப்போது ஒருவர் இந்த கிளையை எனது வீட்டிற்கு அருகில் இருக்கின்ற நிலத்திலுள்ள இதற்கு முன்னர் வெட்டப்பட்டிருந்த அந்த இலந்தை மரத்திற்கு அருகில் நடுங்கள். அது மீண்டும் முளைக்கும் என்று கூறுகின்றார். அத்துடன் காபூலிலிருந்து வெட்டப்பட்டது நேரடியாக நம்மிடம் வந்தது என்ற இந்த வஹியும் எனக்கு வந்தது.**

**இதற்கு நான் இவ்வாறு விளக்கமளித்திருந்தேன். அதாவது ஷஹீது மர்ஹூம் அவர்களின் இரத்தம் விதையைப் போன்று இந்த நிலத்தில் விழுந்திருக்கின்றது. அது நன்றாக செழித்து வளர்ந்து அங்கு நமது ஜமாஅத்தை அதிகரிக்கச் செய்து விடும்.**

ஒருபுறம் நான் இந்த கனவை பார்த்துள்ளேன். மறுபுறம் நான் ஆறு நாட்களுக்குள் உயிர்பெற்று விடுவேன் என்று ஷஹீது

மர்ஹூம் அவர்கள் கூறியுள்ளார்கள். எனது கனவும் ஷஹீது மர்ஹூம் அவர்களின் இந்த கூற்றும் ஒரே விஷயத்தைதான் சுட்டிக் காட்டக் கூடியதாக இருக்கின்றது. **ஷஹீது மர்ஹூம் அவர்கள் மரணித்து எனது ஜமாஅத்திற்கு ஒரு முன்மாதிரியைக் காட்டியுள்ளார்கள். மேலும் உண்மையிலேயே எனது ஜமாஅத்திற்கு பெரும் முன்மாதிரியின் தேவை இருந்தது.** எனது ஜமாஅத்தில் இத்தகையோரும் உள்ளனர். அதாவது அவர்களில் ஒருவர் ஒரு சிறிய தொண்டினை செய்தாலும் ஒரு பெரும் பணியை செய்து விட்டதாக அவர் கருதுகின்றார். அவர் எம்மீது பேருதவி செய்திருப்பதாக அவர் நினைக்கலாம். ஆனால் இறைவன் அவர் மீது பேரருள் புரிந்துள்ளான். அந்த தொண்டினை செய்வதற்கான வாய்ப்பை அவன் அவருக்கு வழங்கியுள்ளான்.

சிலர் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் முழுமையான வலுவுடனும், முழுமையான உண்மையுடனும் இந்த பக்கம் வரவில்லை. எத்தகைய ஈமானின் ஆற்றலும் மிக உச்ச நிலையிலுள்ள உண்மையும், தூய்மையும் தங்களிடம் இருப்பதாக அவர்கள் வாதம் செய்கின்றனரோ அவற்றில் இறுதி வரை அவர்கள் நிலைத்திருப்பதில்லை. உலகின் மீதுள்ள நேசத்தால் அவர்கள் மார்க்கத்தை தொலைத்து விடுகின்றனர். ஒரு சிறிய சோதனையைக் கூட அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இறைவனின் இயக்கத்தில் நுழைந்த பிறகும் கூட அவர்களது உலகியல் விஷயங்கள் முடிவுக்கு வருவதில்லை. இறைவனுக்கு ஆயிரக்கணக்கான நன்றிகள் உரித்தாகுக. ஏனென்றால், இத்தகையவர்களும் இந்த இயக்கத்தில் இருக்கின்றனர். அவர்கள் உண்மையான உள்ளத்துடன் நம்பிக்கை கொண்டனர். மேலும் உண்மையான உள்ளத்துடன் இக்கொள்கையை கடைபிடித்தனர். இவ்வழியில் ஒவ்வொரு துன்பத்தையும் சுமப்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர். ஆனால் எத்தகைய

முன்மாதிரியை இந்த வீரமிக்க ஆண்மகன் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் என்றால் அந்த ஆற்றல்கள் ஜமாஅத்திற்கு மறைவாகவே இருக்கின்றன.

**இந்த ஷஹீது மர்ஹூம் அவர்கள் எத்தகைய முன்மாதிரியை காட்டியுள்ளார்களோ அதுபோன்ற ஈமானை இறைவன் எல்லாருக்கும் கற்றுத் தருவானாக. மேலும் அவர்கள் போன்றே, ஏற்றுக் கொண்ட கொள்கையில் நிலைநிற்கும் தன்மையை வழங்குவானாக.** இந்த உலக வாழ்க்கை ஷய்த்தானின் தாக்குதல்களுடன் இணைந்துள்ளது. அது முழுமை பெற்ற மனிதனாக உருவாவதிலிருந்து ஒருவரைத் தடுக்கின்றது. **இந்த இயக்கத்தில் பலரும் இணைவார்கள். ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இத்தகைய முன்மாதிரியை காட்டுபவர்கள் குறைவானவர்களாக இருப்பார்கள்.**

பிறகு நாம் அசல் சம்பவத்தின் பக்கம் திரும்பியவாறு எழுதுகின்றோம். ஷஹீது மர்ஹூம் அவர்களிடம் தவ்பா செய்யுமாறு ஒவ்வொரு முறை கோரப்பட்ட போதும் அதை மறுத்து விட்டார்கள். அப்போது அமீர், அவர்களிடம் நம்பிக்கையிழந்து தனது கைகளால் ஒரு நீண்ட பத்திரத்தை எழுதினார். அதில் மவ்லவிகளின் ஃபத்வாவை எழுதினார். மேலும் இத்தகைய காஃபிருக்கு கல்லெறிந்து கொல்வதே தண்டனையாக இருக்கும் என்று அதில் எழுதினார். அந்த ஃபத்வா மர்ஹூம் அஹ்வந்த் ஸாதா அவர்களின் கழுத்தில் தொங்கவிடப் பட்டது. பிறகு அமீர் ஷஹீது மர்ஹூம் அவர்களின் மூக்கில் துளையிட்டு அதில் கயிறை இடும் படியும், அதே கயிறால் ஷஹீது மர்ஹூம் அவர்களை கொலை செய்யப்படும் இடம் வரை அதாவது கல்லெறிந்து கொல்லப்படும் இடம் வரை இழுத்துச் செல்லுமாறும் கட்டளையிட்டார். பிறகு அநீதியிழைக்கும் இந்த அமீரின் கட்டளைக்கேற்ப அவ்வாறே செய்யப்பட்டது. அவர்களது மூக்கில் துளையிட்டு அவர்களை மிகவும் துன்புறுத்தியவாறு அதில்

கயிறு இடப்பட்டது. பிறகு அந்த கயிற்றின் மூலமாக ஷஹீது மர்ஹூம் அவர்களை மிகவும் எள்ளி நகையாடி பரிகாசம் செய்தவாறு, அவர்களை ஏசிப்பேசி அன்னார் மீது சாபமிட்டவாறு அவர்களை கொலை செய்யும் இடத்திற்கு கொண்டு சென்றனர். அமீர் தனது எல்லா தோழர்களுடனும், காஸிகளுடனும், முஃப்திகளுடனும், ஏனைய பணியாளர்களுடனும் இந்த வேதனை நிறைந்த காட்சியைப் பார்த்தவாறு அன்னார் கொலை செய்யப்படும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். எண்ணிப் பார்க்க முடியாத அளவில் இந்த நகரத்தைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டமும் இந்த சம்பவத்தை வேடிக்கை பார்ப்பதற்காக சென்றது.

அன்னார் கொல்லப்படும் இடத்திற்கு அனைவரும் வந்து சேர்ந்ததும் மர்ஹூம் ஷெஹ்ஸாதா சாஹிப் அவர்களை ஒரு குழியில் நிற்க வைத்து அவரது இடுப்பு வரை மண்ணை இட்டு அவர்கள் புதைத்தனர். அவர்கள் இடுப்பு வரை நிலத்தின்கீழ் இறக்கப்பட்டிருந்த நிலையில் அமீர், அன்னாரிடம் சென்றார். வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருப்பதாக வாதம் செய்கின்ற அந்த காதியானியை நீங்கள் மறுத்து விட்டால் இப்போது கூட நான் உம்மை காப்பாற்றி விடுவேன். இது உமது கடைசி நேரமாகும். இது உமக்கு வழங்கப்படுகின்ற இறுதி சந்தர்ப்பமாகும். உமது உயிரின் மீதும், உமது குடும்பத்தின் மீதும் கருணை காட்டுவீராக என்று அமீர் ஷஹீது மர்ஹூமிடம் கூறினார்.

**அப்போது ஷஹீது மர்ஹூம் அவர்கள், நவூதுபில்லாஹ் (நாங்கள் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகின்றோம்) உண்மையை நான் எவ்வாறு மறுக்க முடியும்? எனது உயிருக்கு என்ன மதிப்பு இருக்கின்றது? எனது குடும்பமும், பிள்ளைகளும் எம்மாத்திரம் ? அவர்களுக்காக நான் எனது ஈமானை கைவிட்டு விடுவேனா? அவ்வாறு ஒருபோதும் நடக்காது. நான் உண்மைக்காக மரணிப்பேன் என்று பதில் கூறினார்கள்.**

அப்போது காஸிகளும், மார்க்க சட்ட நிபுணர்களும் இவர் காஃபிர் ஆவார்; இவர் காஃபிர் ஆவார். இவரை விரைவாக கல்லெறிந்து கொல்லுங்கள் என்று கூச்சலிட்டனர். அப்போது அமீரும், அவரது சகோதரருமான நஸ்ருல்லாஹ் கானும், தலைமை காஸியும், துணைத் தலைமைக் காவலரான அப்துல் அஹதும் குதிரையில் சவாரி செய்து வந்தனர். மற்ற எல்லா மக்களும் நடந்து வந்தனர்.

**அத்தகைய இக்கட்டான சந்தர்ப்பத்தில் ஷஹீது மர்ஹூம் அவர்கள் மீண்டும் மீண்டும், நான் உயிரை விட ஈமானுக்கு முன்னுரிமை வழங்குகின்றேன் என்றே கூறி வந்தார்கள்.**

அப்போது அமீர் தனது காஸியிடம் நீங்கள்தான் குஃப்ர் ஃபத்வா கொடுத்துள்ளீர்கள். எனவே முதல் கல்லை நீங்கள் எறியுங்கள் என்று கட்டளையிட்டார். அதற்கு காஸி நீங்கள் தற்காலத்தின் அரசராக இருக்கின்றீர்கள். எனவே நீங்கள் முதலில் எறியுங்கள் என்று கூறினார். அதற்கு அமீர் ஷரீஅத்தின் (மார்க்க சட்டத்தின்) அரசராக நீங்கள்தான் இருக்கின்றீர்கள். மேலும் இது நீங்கள் கொடுத்த ஃபத்வா ஆகும். இதில் எனக்கு எந்த பங்கும் இல்லை என்று பதில் கூறினார். அப்போது காஸி குதிரையிலிருந்து இறங்கி ஒரு கல்லை எறிந்தார். அந்த கல்லடியால் ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு கடுமையான காயம் ஏற்பட்டு அவர்களது கழுத்து கீழே சரிந்து விட்டது. அதற்குப் பிறகு அந்த பேரிழந்த அமீர் தனது கையால் கல்லை எறிந்தார். பிறகு என்ன நடந்தது என்றால் அவரைப் பின்பற்றியவாறு ஆயிரக்கணக்கான கற்கள் ஷஹீது மர்ஹூமின் மீது விழ ஆரம்பித்தன. அங்கு வந்திருந்தவர்களில் எவருமே ஷஹீது மர்ஹூம் அவர்கள் மீது கல்லை எறியாமல் இருக்கவில்லை. எதுவரை என்றால் அதிகமான கற்கள் எறியப்பட்டதன் காரணமாக ஷஹீது மர்ஹூம் அவர்களின் தலை கற்குவியலுக்குள் புதைந்து விட்டது.

பிறகு அமீர் அங்கிருந்து திரும்பி செல்லும் நேரத்தில் இந்த நபர், தான் ஆறு நாட்களுக்குள் உயிர் பெற்று விடுவேன் என்று

கூறினார். எனவே ஆறு நாட்கள் வரை இவரை காவல் காத்து வர வேண்டும் என்று கூறினார். இந்த அநீதியான செயல் அதாவது கல்லெறிந்து கொல்லும் செயல் ஜூலை 14–ஆம் தேதியன்று நிகழ்ந்தது. இந்த சம்பவங்களை கூறியவர்களில் பெரும்பாலார் இந்த இயக்கத்தின் எதிரிகளாக இருந்த மக்களே ஆவர். அவர்கள் நாங்களும் கூட கல்லெறிந்தோம் என்று கூறி அதை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவற்றை கூறியவர்களில் ஷஹீது மர்ஹூம் அவர்களுக்கு மறைவான முறையில் மாணவர்களாக இருந்த சிலரும் அடங்குவர்.

இங்கு கூறப்பட்டதை விட இந்த சம்பவம் அதிக வேதனைக் –குரியதாக இருந்தது என்று தெரிய வருகின்றது. ஏனென்றால் அமீர் இழைத்த கொடுமைகளை முழுமையான முறையில் வெளிப்படுத்தி கூறுவதற்கு எவரும் விரும்பவில்லை. பல மக்களிடமிருந்து வந்த கடிதங்களில் விவரங்களை ஒன்று சேர்த்து அதன் சுருக்கத்தை நாம் எழுதியுள்ளோம். இது போன்ற சம்பவங்கள் பெரும்பாலும் மிகைப்படுத்தி கூறுப்படுபவையாக இருக்கும். ஆனால் இந்த சம்பவத்தைப் பொருத்தவரையில் மக்கள் அமீருக்கு அஞ்சியவாறு அவர் இழைத்த கொடுமைகளை முழுமையாக எடுத்துக் கூறவில்லை. அதில் பல விஷயங்களையும் அவர்கள் திரையிட்டு மறைக்க விரும்பினர்.

ஷெஹ்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களுக்காக விதிக்கப்பட்டிருந்த ஷஹாதத் நிகழ்ந்து விட்டது. இப்போது எஞ்சியிருப்பது அநீதியிழைத்தவருக்கு கிடைக்க வேண்டிய சரியான தண்டனையே ஆகும்.

اِنَّهٗ مَنْ يَّاْتِ رَبَّهٗ مُجْرِمًا فَاِنَّ لَهٗ جَهَنَّمَ ؕ لَا يَمُوْتُ فِيْهَا وَلَا يَحْيٰى (20:75)

நிச்சயமாக தம்முடைய இறைவனிடம் குற்றவாளியாக வருபவருக்கு கிடைப்பது நரகம் தான். அவர் அதில் மரணமடைவதும் இல்லை; வாழ்வதும் இல்லை.

அந்தோ பரிதாபம்! இப்போது இந்த அமீர் கீழ்க்காணும் இந்த வசனத்தின் அடிப்படையில் தண்டனைக்குரியவராக ஆகிவிட்டார்;

وَمَنْ يَّقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا فَجَزَآؤُهٗ جَهَنَّمُ خٰلِدًا فِيْهَا
وَغَضِبَ اللّٰهُ عَلَيْهِ وَلَعَنَهٗ وَاَعَدَّ لَهٗ عَذَابًا عَظِيْمًا (4:94)

அதாவது எவரேனும் நம்பிக்கை கொண்ட ஒருவனை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால் அவனுக்குரிய தண்டனை நரகமே ஆகும். அவன் அதில் நெடுங்காலம் தங்கி விடுவான். அல்லாஹ் அவனிடத்தில் கோபங்கொண்டு அவனைச் சபித்து விடுவான். மேலும் அவனுக்கு மாபெரும் தண்டனையையும் ஏற்பாடு செய்துள்ளான் .

அந்த அமீர் அணுவளவு கூட இறைவனுக்கு அஞ்சவில்லை. கொல்லப்பட்டவரும் எத்தகை நம்பிக்கைக்கு உரியவர் என்றால் காபூல் மண் முழுவதிலும் அவருக்கு இணையான ஒருவரைத் தேடினாலும் அத்தகைய நபரை தேடிக் கண்டுபிடிப்பது இயலாத விஷயமாகும். அத்தகைய நன்மக்கள் தங்களது உயிரை உண்மையை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்பதற்குத் தயங்குவ –தில்லை. அவர்கள் உண்மையான உள்ளத்துடன் ஈமானுக்காகவும் உண்மைக்காகவும் தமது உயிரை அர்ப்பணித்து விடுகின்றனர். இவ்வழியில் தனது மனைவி மக்களைக் கூட அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

**அப்துல் லத்தீ ஃப் அவர்களே! உம்மீது ஆயிரக்கணக்கான கருணைகள் இறங்கட்டும். நீர் எமது வாழ்நாளிலேயே உமது உண்மைக்கான முன்மாதிரியை காட்டி விட்டீர். எந்த மக்கள் எனது மரணத்திற்குப் பிறகு எனது ஜமாஅத்தில் இருப்பார்களோ அவர்கள் என்ன பணியை செய்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.**

ஃபார்ஸி கவிதையின் மொழியாக்கம்:

*அந்த வீரமிக்க மனிதர், படைப்பாளனாகிய இறைவனது நேசத்திற்குரியவர், இறுதியில் அவர் தனது மன உறுதியை நிரூபித்து விட்டார்.*

*உண்மையான நேசத்திற்குரியவனுக்காக அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார். இந்த அற்ப உலகின் மீது அவர் முற்றிலும் ஆர்வமற்றவராக இருந்தார்.*

*இந்த வாழ்வு எனும் காடு பலதரப்பட்ட அபாயங்களால் நிறைந்து காணப்படுகிறது. ஒவ்வொரு மூலையிலும் இலட்சக்கணக்கான பாம்புகள் காத்துக் கொண்டிருக்கின்றன.*

*விண்ணைத் தொடுகின்ற ஜுவாலைகளைக் கொண்ட இலட்சக்கணக்கான நெருப்புகள் தென்படுகின்றன. மேலும் பயங்கரமான மற்றும் கொடூரமான புயல்கள் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன.*

*உமக்கும் உமது நேசத்திற்குரியவனின் உறைவிடத்திற்கும் இடையே இலட்சக்கணக்கான மைல் தூரம் இருக்கிறது. மேலும் அதற்கிடையில் எண்ணற்ற முற்காடுகளும், அபாயங்களும் இருக்கின்றன.*

*அரேபியர் அல்லாதவராக இருந்த இந்த பெருந்தகையின் அறிவாற்றலையும் அற்புதமான செயல் திறனையும் பாருங்கள்: அவர் இந்த எல்லா ஆன்மீக தூரத்தையும் ஒரே பாய்ச்சலில் கடந்து விட்டார்.*

*எஜமானனுக்கு பணிவிடை செய்வதில் முழுமையாக மூழ்கியிருக்க வேண்டியது ஒரு சேவகனின் கடமையாகும். எந்த அளவிற்கென்றால் எஜமானனுக்கு சேவை செய்வதற்காக தன்னையே தியாகம் செய்ய எப்போதும் அவன் ஆயத்தமாக இருக்க வேண்டும்.*

*அந்த நேசத்திற்குரியவனுக்காக அவர் தனது உயிரைத் தியாகம் செய்தார். மேலும் அவனை அடைவதற்காக விஷத்தையும் கூட அவர் உட்கொண்டார்.*

*ஒருவர் அந்த நேசத்திற்குரியவனுக்காக விஷக் குவளையிலிருந்து அருந்தாதவரை உபயோகமற்றவராக இருக்கும் அவர் எவ்வாறு அமரத்துவம் அடைய முடியும் ?*

*அப்படிப்பட்ட மரணத்தின் கீழ் நூறு வாழ்வுகள் அடங்கியிருக்கின்றன. நீங்கள் நித்திய வாழ்வை விரும்பினால் மரணத்தால் நிரம்பப்பெற்ற குவளையிலிருந்து பருகுங்கள்.*

*பேராசையில் மூழ்கி இருப்பவர்களே! நேசத்திற்குரியவனுக்காக உண்மையான ஏக்கம் உங்களது தாழ்ந்த உள்ளங்களில் தோன்ற முடியாது.*

*அற்பப் பொருட்களை அடைவதில் தமது உள்ளங்களை முற்றிலுமாக மூழ்கியிருக்கச் செய்பவர்களே! பாவத்திற்குரிய ஆசைகளுக்காக தமது கண்ணியத்தை தியாகம் செய்தவர்களே!*

*லட்சக்கணக்கான ஷய்த்தான்களின் படைகள் உங்களை துரத்திக் கொண்டிருக்கின்றன. அதனால் நீங்கள் நரக நெருப்பில் வைக்கோல்களைப் போன்று எரிந்து போகலாம்.*

*சில பொய்யான நம்பிக்கைகள் அல்லது பயத்தின் காரணமாக உங்களது ஈமான் பலவீனமடைய துவங்குகிறது.*

*இந்த தங்குமிடத்திற்காக இறைவன் மீதான உண்மையான ஈமானை நீங்கள் காலால் நசுக்கி விடுவீர்களா?*

*இதுவே உண்மை மற்றும் தூய்மைக்கான வழியாகும். உண்மையான ஈமானைக் கொண்ட ஒவ்வொரு மனிதனின் இறுதி இலக்கு இதுவேயாகும்.*

*அவர்கள் அவனது விருப்பத்திற்காகவே வாழ்கின்றனர். மேலும் எவ்வித சுய இலக்குகளையும் கொண்டிருப்பதில்லை; இறைவனது வழியில் அவர்கள் தமது சொந்த உயிர்களை தூக்கி எறிந்து விடுகின்றனர்.*

*எல்லா விதமான உலகப் புகழ், கண்ணியம் மற்றும் அந்தஸ்திலிருந்து அவர்கள் தம்மைத் தாமே துண்டித்துக் கொள்கின்றனர். அவர்கள் தம்மையே அர்ப்பணித்து அவனது விருப்பத்திற்கேற்ப தமது தலையிலிருக்கும் மகுடங்களை எடுத்து செல்ல அனுமதிக்கின்றனர்.*

*தமது தற்பெருமையை விட்டொழித்த பிறகு அவனை நினைவு கூர்வதன் மூலமாக அவர்கள் அவனது அருகில் செல்கின்றனர். மேலும் தமது நேசத்திற்குரியவனின் கண்ணியத்திற்காக அவர்கள் தமது சுய கௌரவத்தை தியாகம் செய்கின்றனர்.*

*அவர்களது பெயர்களைக் குறிப்பிடுவது கூட இறைவனை நினைவு கூர்வதற்கான வாய்ப்பை நமக்கு வழங்குகிறது. இதன் மூலமாக இறைவனது உண்மையின் மீதான ஒருவரது நம்பிக்கை அதிகரிக்கிறது. மேலும் நமது உள்ளங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது.*

*நீங்கள் உண்மையான ஈமானை தேடுபவர்களாக இருந்தால் இதுவே உங்களது முன்மாதிரியாக இருக்கட்டும். இதன் மூலமாக உண்மையை தேடுபவர்களது பணி மிகவும் எளிதாகி விடும்.*

*ஆனால் நீங்கள் இவ்வுலகோடு பிணைக்கப்பட்டிருந்தால் மேலும் நீங்கள் அவனுக்காக மரணிக்கவில்லை என்றால் அந்த நேசத்திற்குரிய நண்பனை நீங்கள் எவ்வாறு அடைய முடியும்?*

*உலகைத் தேடித் திரியும் நாயே! நீ அந்த நேசத்திற்குரிய நண்பனை எவ்வாறு அடைய நினைக்கிறாய்?*

*அவனது வழியில் உங்களையே மாய்த்துக் கொள்வீர்களாக. அதன் காரணமாக ஆன்மீக அருள்களை உங்கள் சந்ததிகளுக்கு விட்டுச் செல்லலாம்; மேலும் உங்களது வாழ்வை அர்ப்பணியுங்கள். அதனால் உங்களுக்கு ஒரு புதிய வாழ்வு வழங்கப்படலாம்.*

உண்மை மற்றும் நம்பிக்கைக்கான வழியை காண்பதிலிருந்தும் உங்களது கண்களை மூடிக் கொண்டவாறு நீங்கள் உங்கள் வாழ்வை தற்பெருமையிலும், விரோதத்திலும் வீணடிக்கிறீர்கள்.

தூய உள்ளம் கொண்டவர்கள் தங்களுக்கிடையே ஒரு விநோதமான பிணைப்பைக் கொண்டுள்ளனர். ஆனால் தீய உள்ளம் கொண்டவர்களோ உண்மையான முத்துக்களை எப்போதும் வெறுக்கின்றனர்.

தன்னையே மாய்த்துக் கொள்வதற்கான விதையைத் தூவுவதே ஈமானின் இரகசியமாகும். இதனோடு சேர்ந்து ஒருவர் உலக வாழ்க்கையையும் புறந்தள்ளி விட வேண்டும்.

வல்லமைமிக்க இறைவன் முன்னால் அழுது புலம்புவதில் உங்களை நீங்களே உண்மையான முறையில் ஈடுபடுத்தும் போது அதன் விளைவாக மக்களை சரியாக பாதையில் வழிநடத்த எவராவது ஒருவர் எழுப்பப்படுகிறார். ஆன்மீக ரகசியங்களை அறிந்து கொண்டுள்ள உள்ளம் அறியாமையில் இருப்பவர்களின் பரிதாபத்திற்குரிய நிலையைக் கண்டு அழுது புலம்புகிறது. மேலும் உண்மையான ஞானத்தின் ஒளி அருளப்பட்டவர்கள் குருடர்களைக் கண்டு உள்ளத்தால் பரிதாபப்படுகின்றனர். பலவீனமானவர்களுக்கு உதவி செய்ய பலம் படைத்தவர்கள் முன்வர வேண்டும் என்பதே இயற்கை விதியாகும்.

## எனது ஜமாஅத்திற்கு சில அறிவுரைகள்

எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களே! இறைவன் உங்களுடன் இருப்பானாக. அந்த வல்லமையுள்ள கருணைமிக்க இறைவன் மறுமையின் பயணத்திற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளை ஆயத்தம் செய்தது போன்று உங்களையும் ஆயத்தப்படுத்துவானாக.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகம் ஒரு பொருட்டே அல்ல. உலகத்திற்காக மட்டுமே உள்ள வாழ்க்கை சாபத்திற்குரியதாகும். எவரது அனைத்து துக்கமும் துயரமும் உலகத்திற்காகவே இருக்கின்றதோ அவர் துர்பாக்கியசாலி ஆவார். அத்தகைய மனிதர் எனது ஜமாஅத்தில் இருக்கின்றார் என்றால் அவர் வீணாக எனது ஜமாஅத்தில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். ஏனென்றால் பழங்களைத் தராத காய்ந்து போன கிளையாக அவர் இருக்கின்றார்.

நற்பாக்கியம் பெற்ற மக்களே! உங்களது இரட்சிப்பிற்காக எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த போதனையை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இறைவன் ஒருவன் என்பதையும் அவனுக்கு இணையில்லை என்பதையும் நம்புங்கள். அவனுக்கு நிகராக வானத்திலோ பூமியிலோ எந்த பொருளையும் இணையாக வைத்து விடாதீர்கள்.

இறைவன் காரணிகளை பயன்படுத்துவதிலிருந்து உங்களை தடை செய்யவில்லை. ஆனால் எந்த நபர் இறைவனை விட்டு விட்டு காரணிகள் மீதே நம்பிக்கை வைக்கின்றாரோ அவர் இணை வைப்பவர் ஆவார். தூய உள்ளம் கொண்டவராக ஆகாதவரை இரட்சிப்பு கிடைக்காது என்பதை தொன்று தொட்டே இறைவன் கூறி வந்துள்ளான்.

எனவே நீங்கள் தூய உள்ளம் கொண்டவராக ஆகி விடுங்கள். மனதிலுள்ள வெறுப்புகளிலிருந்தும், கோபங்களில் இருந்தும் விலகி நில்லுங்கள். மனிதனிடமுள்ள தீமையை தூண்டுகின்ற ஆன்மாவில் பல்வேறு வகை அசுத்தங்கள் இருக்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் விட அதிகமாக அகங்காரத்தின் அசுத்தம் இருக்கின்றது. அகங்காரம் இல்லாமல் இருந்தால் எந்தவொரு நபரும் நிராகரிப்பவராக இருக்க மாட்டார்.

நீங்கள் உள்ளத்தால் ஏழையாக ஆகி விடுங்கள். பொதுவாக மனித இனத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் அவர்களுக்கு சொர்க்கத்தை பெற்றுத் தருவதற்கு அறிவுரை கூறுகின்றீர்கள். நீங்கள் இந்த சில நாட்களுக்கான உலக வாழ்க்கையில் அவர்களுக்காக தீமையை விரும்புபவராக இருந்தால் உங்களது இந்த அறிவுரை எப்படி சரியானதாக இருக்க முடியும்? இறைவனின் கடமையாக்கப்பட்டுள்ள கட்டளைகளை உள்ளத்தில் அச்சத்துடன் நிறைவேற்றுங்கள். அது குறித்து நீங்கள் கேட்கப்படுவீர்கள். தொழுகைகளில் அதிகமாக துஆ செய்யுங்கள். அதன் மூலமாக இறைவன் உங்ளை தன் பக்கம் ஈர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் உங்களது உள்ளங்களை அவன் தூய்மைப்படுத்த வேண்டும். ஏனென்றால் மனிதன் பலவீனமானவனாக இருக்கின்றான்.

விலகிப் போகின்ற ஒவ்வொரு தீமையும் இறைவனின் ஆற்றலின் மூலமாகவே விலகிப் போகின்றது. எதுவரை மனிதன் இறைவனிடமிருந்து ஆற்றலை பெறுவதில்லையோ அதுவரை எந்தவொரு தீமையையும் அகற்றுவதற்கான ஆற்றலை அவன் பெற முடியாது. வாயளவில் ஒருவர் தன்னை கலிமா கூறக்கூடியவராக கூறிக் கொள்வது மட்டும் இஸ்லாம் ஆகாது. மாறாக, இஸ்லாத்தின் உண்மை நிலை என்பது உங்களது ஆன்மாக்கள் இறைவன் முன்னிலையில் விழுந்து விடுவதாகும். மேலும் இறைவனும் அவனது

கட்டளைகளும் ஒவ்வோர் அம்சத்தின் அடிப்படையிலும் உங்களுக்கு உலகை விட முக்கியம் வாய்ந்ததாக ஆகிவிட வேண்டும்.

எனது அன்பிற்குரிய ஜமாஅத்தைச் சார்ந்து இருப்பவர்களே! காலம் அதன் இறுதி கட்டத்தை அடைந்து விட்டது என்பதை உறுதியாக நம்புங்கள். ஒரு தெளிவான புரட்சி வெளிப்பட்டிருக்–கின்றது. உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். மிக விரைவாக உண்மையை கைக்கொள்வதில் முழுமை அடைந்தவராக ஆகி விடுங்கள்.

திருக்குர்ஆனை உங்களது வழிகாட்டியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு விஷயத்திலும் அதனிடமிருந்து ஒளியை பெற்றுக் கொள்ளுங்கள். நபிமொழிகளையும் கூட பயனற்றவை–யாகக் கருதி தூக்கி எறிந்து விடாதீர்கள். அவை மிகவும் பயனளிக்கக் கூடியவையாகும். கடுமையான உழைப்பிற்குப் பின் அவை தொகுக்கப்பட்டுள்ளன.

ஆனால் திருக்குர்ஆனின் கூற்றுகளுக்கு ஹதீஸிலுள்ள ஏதாவதொரு கருத்து முரணாக இருந்தால் நீங்கள் வழிகேட்டில் செல்லாமல் இருப்பதற்காக அத்தகைய ஹதீஸை விட்டு விடுங்கள். இறைவன் திருக்குர்ஆனை மிகவும் பாதுகாத்து அதனை உங்களை வந்தடையச் செய்துள்ளான். எனவே நீங்கள் இந்த தூய வார்த்தைகளுக்கு கண்ணியம் அளியுங்கள். இதை விட எந்தவொரு பொருளையும் முதன்மையானதாகக் கருதாதீர்கள். எல்லாவிதமான உண்மையும், நேர்மையும் இதில் தான் அடங்கியிருக்கின்றது. எந்த அளவு ஒரு நபரது இறைஞானம் மற்றும் இறையச்சத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமோ அதே அளவில் தான் அந்த நபர் கூறும் விஷயங்கள் மக்களது உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கும்.

இப்போது பாருங்கள். இறைவன் தனது அத்தாட்சியை உங்கள் மீது இவ்வாறு நிறைவடையச் செய்து விட்டான். அதாவது எனது வாதத்திற்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான ஆதாரங்களை நிலைநாட்டி எந்த மனிதர் உங்களை இந்த இயக்கத்தின் பக்கம் அழைக்கின்றாரோ அவர் இறைஞானத்தின் எந்த தகுதியிலுள்ள மனிதராக இருக்கின்றார்; எந்த அளவு ஆதாரங்களை இவர் எடுத்துக் கூறுகின்றார் என்பதைப் பற்றி நீங்கள் சிந்திப்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தை அவன் உங்களுக்கு வழங்கியுள்ளான்.

நீங்கள் எந்தவொரு குறையையும் இட்டுக்கட்டையும் அல்லது பொய்யையும் அல்லது ஏமாற்று வேலையையும் எனது கடந்த கால வாழ்க்கையிலிருந்து சுட்டிக் காட்ட முடியாது. அவ்வாறு இருந்திருந்தால் எந்த நபர் ஆரம்பத்திலிருந்தே பொய் கூறுவது மற்றும் இட்டுக்கட்டி கூறும் பழக்கமுடையவராக இருக்கின்றாரோ அவர் இப்போதும் இந்த பொய்யை கூறியிருக்கலாம் என்று நீங்கள் எண்ணலாம். எனது வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஏதாவதொரு குறையை சுட்டிக் காட்டுபவர் உங்களில் எவராவது இருக்கின்றாரா? இது இறைவனின் அருளாகும். அதாவது ஆரம்பத்திலிருந்தே அவன் என்னை தக்வாவில் நிலைத்திருக்கும்படி செய்து விட்டான். சிந்திப்பவர்களுக்கு இது ஓர் ஆதாரமாகும்.

இதைத் தவிர சரியாக நூற்றாண்டின் ஆரம்பத்தில் என்னை தனது பணிக்காக எனது இறைவன் நியமித்தான். என்னை உண்மையாளராக ஏற்றுக் கொள்வதற்கு எந்த அளவு ஆதாரங்கள் தேவைப்படுகின்றனவோ அந்த எல்லா ஆதாரங்களையும் அவன் உங்களுக்கு கிடைக்கும்படிச் செய்துள்ளான். வானத்திலிருந்து பூமி வரை எனக்காக அவன் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். ஆரம்பத்திலிருந்து இன்று வரை எல்லா நபிமார்களும் என்னைப் பற்றி முன்னறிவிப்பு செய்துள்ளனர்.

எனவே இது மனிதனுடைய வேலையாக இருந்திருந்தால் இதற்காக இந்த அளவு ஆதாரங்கள் ஒருபோதும் ஒன்று சேர்ந்திருக்காது.

இதைத் தவிர இட்டுக்கட்டிக் கூறுபவனை இறைவன் விரைவாக பிடிக்கின்றான். அவனை மிகவும் இழிவுபடுத்தி அழித்து விடுகின்றான் என்பதற்கு இறைவனின் எல்லா வேதங்களும் சாட்சியாக இருக்கின்றன. ஆனால் இருபத்தி மூன்று வருடங்களுக்கும் அதிகமாக அல்லாஹ்வின் புறமிருந்து நான் வந்துள்ளேன் என்ற எனது வாதத்தை நீங்கள் பார்க்கின்றீர்கள். பராஹீனே அஹ்மதிய்யாவின் முதல் பாகத்தைப் பார்த்து இதை உங்களால் புரிந்து கொள்ள முடியும். எனவே ஒவ்வோர் அறிவுள்ள மனிதனாலும் இதை சிந்திக்க முடியும். அதாவது எப்போதாவது இறைவனின் நடைமுறை இவ்வாறு இருந்திருக்கின்றதா?

அவன் மனிதனை படைத்த நாளிலிருந்து எப்போதாவது அவன் இதுபோன்ற ஒரு பணியை செய்திருக்கின்றானா? அதாவது எந்த நபர் இத்தகைய தீய இயல்பை கொண்டவராகவும், தந்திரக்காரராகவும், அவமரியாதையாக நடந்து கொள்பவராகவும், பொய்யை புனைந்து கூறுபவராகவும் இருக்கின்றாரோ மேலும் இருபத்தி மூன்று வருடங்கள் வரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய பகலிலும், புதிய இரவிலும் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறியவாறு ஒரு புதிய வஹியையும், ஒரு புதிய இல்ஹாமையும் தமது உள்ளத்திலிருந்து உருவாக்கி பொய்யாக புனைந்து கூறுகின்றாரோ பிறகு மக்களிடம் இறைவனிடமிருந்து இந்த வஹி இறங்கியுள்ளது என்று கூறுகின்றாரோ அப்படிப்பட்டவரை இறைவன் அழிப்பதற்கு பகரமாக தனது வலுவான அடையாளங்கள் மூலமாக அவருக்கு உதவி செய்வானாக? அவரது வாதத்தை நிரூபிப்பதற்காக முன்னறிவிப்பிற்கேற்ப வானத்தில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் கிரகணம் பிடிக்கும் படி செய்வானா? இவ்வாறு முன்னுள்ள

வேதங்களிலும்★, திருக்குர்ஆனிலும்★, நபிமொழிகளிலும்★, சுயமே அவரது நூலான பராஹீனே அஹ்மதிய்யாவிலும் குறிப்பிடப்பட்டிருந்த முன்னறிவிப்பை நிறைவேற்றி உலகிற்கு அதை காட்டி இருப்பானா? உண்மையாளர்களைப் போன்று சரியாக நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவரை அனுப்பி இருப்பானா? சிலுவை கொள்கை மிகைத்து நின்ற காலத்தில்தான் சிலுவையை முறிப்பதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வர வேண்டியதிருந்தது.

சிலுவைக் கொள்கை மேலோங்கி இருந்த அதே காலத்தில் சிலுவையை முறிக்கும் வாதத்துடன் வர வேண்டியிருந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு அவரின் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கின்ற போதும் உதவி செய்து பத்து இலட்சத்திற்கும் அதிகமான அடையாளங்களை அவருக்கு ஆதரவாக அவன் காட்டியிருப்பானா? அவருக்கு உலகில் கண்ணியத்தை வழங்கி பூமியில் அவரது ஏற்புடைமையை பரவச் செய்து நூற்றுக்கணக்கான முன்னறிவிப்புகளை அவருக்கு சாதகமாக நிறைவேற்றி இருப்பானா? வாக்களிக்கப்பட்ட மஸீஹின் தோற்றத்திற்கென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தவை என நபிமார்களால் நிர்ணயிக்கப் –பட்டிருந்த அந்த நாட்களில் அவரை பிறக்கும்படி செய்திருப்பானா?

அவரது துஆக்களை ஏற்றுக் கொண்டு அவரது கூற்றில் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பானா? ஆனால் அவர் பொய்யர் என்றும் உண்மைக்கு மாற்றமாக தெரிந்து கொண்டே அவன் மீது

---

★ அப்பொழுது ஏறக்குறைய பகல் பன்னிரண்டு மணியாக இருந்தது; மூன்று மணி வரைக்கும் பூமியெங்கும் இருளுண்டானது. சூரியன் இருளடைந்தது. (லூக்கா 23:44,45, மத்தேயு 27:45) – வெளியீட்டாளர்.

★ சூரியனும், சந்திரனும் ஒன்று சேர்க்கப்படும்போது (75:10) – வெளியீட்டாளர்.

★ சந்திரனுக்கு (கிரகணம் பிடிக்கும் இரவுகளில்) முதல் இரவிலும், சூரியனுக்கு (கிரகணம் பிடிக்கும் நாட்களில்) மத்திய நாளிலும் கிரகணம் பிடிக்கும். (தாரே குத்னி – கிதாப் ஈதய்ன், பாபு ஸிஃபதி ஸலாதில் குஸூஃபி வல் குஸூஃபி வஹய் அதிஹிமா) – வெளியீட்டாளர்.

இட்டுக்கட்டி அவர் பொய் கூறுகின்றார் என்பதை அவன் அறிந்திருக்கும் நிலையில் இவ்வாறு எல்லா வகையிலும் அவருக்கு உதவி செய்வானா? இவ்வாறு அருளுடனும், கருணையுடனும் என்னுடன் நடந்து கொண்டது போன்று எனக்கு முன்னர் இட்டுக்கட்டி பொய் கூறிய ஒருவருடனும் அவ்வாறே அந்த இறைவன் நடந்து கொண்டான் என்று உங்களில் எவராவது கூற முடியுமா?

எனவே இறைவனின் அடியார்களே! நீங்கள் கவனமற்றவர் –களாக இருந்து விடாதீர்கள். ஷய்த்தான் உங்களை சந்தேகங்களில் ஆழ்த்தி விட வேண்டாம். உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள். தொன்று தொட்டே இறைவனின் தூய நபிமார்கள் செய்து வந்திருந்த அதே வாக்குறுதிதான் நிறைவேறி இருக்கின்றது. இன்று இறைவனின் தூதருக்கும், ஷய்த்தானுக்கும் இடையில் இறுதிப் போர் நடக்கின்றது. இது அதே நேரமாகவும் அதே காலமுமாக இருக்கின்றது. தானியேல் தீர்க்கதரிசியும் கூட இதன் பக்கமே சுட்டிக் காட்டியுள்ளார்.

நான் உண்மையை சார்ந்து இருப்பவர்களுக்கு ஓர் அருளாக வந்தேன். ஆனால் நான் பரிகாசத்துக்கு ஆளானேன். என்னை அவர்கள் காஃபிர் என்றும் தஜ்ஜால் என்றும் கூறினர். நான் ஈமான் இல்லாதவனாக கருதப்பட்டேன். அவ்வாறு நடக்க வேண்டியது அவசியமானதாக இருந்தது. அதன் மூலமாக غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ அதாவது உமது கோபத்திற்கு ஆளானவர்களின் பாதையில் (எங்களை வழிநடத்தாமல் இருப்பாயாக) என்ற வசனத்தில் மறைந்திருந்த அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.

ஏனென்றால் இறைவன் அருட்கொடையைப் பெற்ற பிரிவினரைக் குறித்த வாக்குறுதியை வழங்கி இவ்வசனத்தில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை சிலுவையில் அறைய விரும்பிய யூத ஆலிம்களை ஒத்திருக்கின்ற யூதர்கள் இந்த உம்மத்திலும் இருப்பார்கள் என்று கூறி விட்டான். அந்த யூதர்கள் ஹஸ்ரத்

ஈஸா (அலை) அவர்களை காஃபிர் என்றும் தஜ்ஜால் என்றும் மார்க்கமற்றவர் என்றும் கூறியிருந்தனர். இப்போது இது எந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது என்பதைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இந்த உம்மத்திலிருந்து வர இருக்கின்றார்.

எனவே அவரது காலத்தில் யூதர்களின் பண்புகளை கொண்ட மக்களும் கூட உருவாக்கப்படுவர். அவர்கள் தமது எண்ணத்தில், தாம் ஆலிம்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்ற தவறான நம்பிக்கையில் இருப்பார்கள். எனவே இன்று உங்களது நாட்டில் அந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது. இந்த ஆலிம்கள் இல்லாமல் இருந்திருந்தால் இதுவரை முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற இந்த நாட்டிலுள்ள எல்லா குடிமக்களும் என்னை ஏற்றுக் கொண்டிருப்பார்கள். எனவே மறுத்தவர்கள் அனைவரது பாவமும் இந்த ஆலிம்களின் கழுத்தின் மீது இருக்கின்றது.

உண்மையின் மாளிகையில் இவர்கள் தானும் நுழைவ –தில்லை. குறைந்த புரியும் திறன் கொண்ட மக்களை நுழைய விடுவதுமில்லை. அவர்கள் என்னென்ன சூழ்ச்சிகளை எல்லாம் செய்கின்றனர்? தங்களது வீடுகளுக்குள்ளே இருந்தவாறே என்னென்ன சதித்திட்டங்களை எல்லாம் அவர்கள் தீட்டுகின்றனர்? ஆனால் அவர்கள் இறைவனை எதிர்த்து வெற்றி பெற்று விடுவார்களா? அவர்கள் எல்லாவற்றின் மீதும் வல்லமையுள்ள அந்த இறைவனின் நாட்டத்தை தடுத்து விடுவார்களா? அந்த இறைவனின் நாட்டம் எல்லா நபிமார்களது நாவாலும் வெளிப் –படுத்தப்பட்டிருக்கின்றது. அவர்கள் இந்த நாட்டிலுள்ள தீங்கு விளைவிக்கும் அமீர்கள் மீதும், உலகவாதிகளான பேரிழந்த செல்வந்தர்கள் மீதும் நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால் இறைவனின் பார்வையில் அவர்கள் என்னவாக இருக்கின்றனர்? மரணித்துப் போன கிருமிகளாக மட்டுமே அவர்கள் இருக்கின்றனர்.

**மக்களே! நீங்கள் அனைவரும் இதனை (கவனத்துடன்) கேட்டுக் கொள்ளுங்கள். இது பூமியையும் வானத்தையும் உருவாக்கிய அந்த இறைவனின் முன்னறிவிப்பாகும். அவன் தனது இந்த ஜமாஅத்தை எல்லா நாடுகளிலும் பரவும்படி செய்து விடுவான். மேலும் அத்தாட்சி மற்றும் தெளிவான சான்றுகளின் அடிப்படையில் அனைவர் மீதும் அவர்களுக்கு வெற்றியை வழங்குவான். இந்த நாட்கள் வருகின்றன. இன்னும் சொல்வதென்றால் அவை மிக அருகில் இருக்கின்றன. அதாவது உலகில் இந்த ஒரு மார்க்கம் மட்டுமே இருக்கும். அது கண்ணியத்துடன் நினைவு கூரப்படும். இறைவன் இந்த மார்க்கத்திற்கும், இந்த இயக்கத்திற்கும் மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள வழக்கத்திற்கு அப்பாற்பட்ட நிலையிலுள்ள அருள்களை வழங்குவான். மேலும் இதை அழிப்பதற்காக கவலை கொண்டுள்ள ஒவ்வொருவரையும் அவன் தோல்வி அடையச் செய்வான். இந்த வெற்றி எப்போதும் இருந்து வரும். எதுவரையென்றால் கியாமத் வந்து விடும். இப்போது என்னை அவர்கள் பரிகாசம் செய்கின்றனர் என்றால் அந்த பரிகாசத்தால் என்ன இழப்பு ஏற்படப் போகின்றது? ஏனென்றால் எந்தவொரு நபியும் ஏளனம் செய்யப்படாமல் இருந்ததில்லை. எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹும் கூட ஏளனம் செய்யப்படுவது அவசியமானதாக இருந்தது.**

அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

يٰحَسْرَةً عَلَى الْعِبَادِ ۚ مَا يَأْتِيْهِمْ مِّنْ رَّسُوْلٍ اِلَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ (36:31)

(நிராகரிக்கும்) அடியார்களின் மீது பரிதாபமே! எந்தத் தூதர் அவர்களிடம் வந்தாலும் அவர்கள் அவரை ஏளனத்திற்குள்ளாக்கவே செய்கின்றனர்.

ஒவ்வொரு நபியும் ஏளனம் செய்யப்படுகின்றனர் என்பது இறைவனிடமிருந்துள்ள ஓர் அடையாளமாக இருக்கின்றது. ஆனால்

எந்த மனிதர் எல்லா மக்களது முன்னிலையில் வானத்திலிருந்து இறங்குவாரோ, மலக்குகளும் கூட அவருடன் இருப்பார்களோ அவரை யார்தான் ஏளனம் செய்யப் போகின்றார்? இந்த ஆதாரத்தில் இருந்தும் கூட வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வானத்திலிருந்து இறங்குவது என்பது ஒரு பொய்யான எண்ணம் மட்டுமே ஆகும் என்பதை அறிவுள்ளவரால் புரிந்து கொள்ள முடியும்.

**நினைவில் கொள்ளுங்கள். எவரும் வானத்திலிருந்து இறங்க மாட்டார். இப்போது உயிருடன் இருக்கின்ற நமது எல்லா எதிரிகளும் இறந்து விடுவார்கள். அவர்களில் எவரும் மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்குவதைப் பார்க்க மாட்டார். எஞ்சியிருக்கும் அவர்களது சந்ததிகள் கூட மரணித்து விடுவர். அவர்களில் கூட எந்தவொரு மனிதரும் மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்குவதைக் காண மாட்டார். பிறகு (அந்த) சந்ததிகளின் சந்ததிகளும் மரணித்து விடுவர். அவர்களும் கூட மர்யமின் மகன் வானத்திலிருந்து இறங்குவதைப் பார்க்க மாட்டார்கள். அப்போது இறைவன் அவர்களது உள்ளத்தில் பதற்றத்தை ஏற்படுத்துவான். அதாவது சிலுவை வெற்றி பெறும் காலமும் கூட கழிந்து விட்டது. உலகம் வேறொரு வடிவில் வந்து விட்டது. ஆனால் மர்யமின் மகனான ஈஸா இப்போது வரை வானத்திலிருந்து இறங்கவில்லை என்பதை அவர்கள் கண்டு கொள்வார்கள். அப்போது அறிவுள்ளவர்கள் முற்றிலுமாக இந்த பொய்யான கொள்கையை விட்டும் நிராசையடைந்து விலகி விடுவர். இன்றைய நாளிலிருந்து மூன்று நூற்றாண்டுகள் முழுமை அடைந்திருக்காது. ஈஸாவிற்காக எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற முஸ்லிம்களாயினும் சரி; கிறித்தவர்களாயினும் சரி மிகவும் நம்பிக்கை இழந்து, அவநம்பிக்கை கொண்டு இந்த பொய்யான கொள்கையை கைவிட்டு விடுவர்.**

**உலகில் ஒரு மார்க்கம்தான் இருக்கும். ஒரு தலைவர் மட்டுமே இருப்பார். நான் ஒரு விதையை விதைப்பதற்காகவே வந்துள்ளேள். எனவே எனது கைகளால் அந்த விதை விதைக்கப்பட்டு விட்டது. அது இப்போது வளரும்; மலரும். எவரும் அதை தடுத்து நிறுத்த முடியாது.**

ஆரியர்கள் அதாவது (சுவாமி) தயானந்தின் கொள்கையை பின்பற்றுகின்ற இந்துக்கள் பலம் மிக்கவர்களாக இருப்பதாக கருத வேண்டாம். அவர்கள் கொட்டுவதைத் தவிர வேறு எதைப் பற்றியும் தெரியாத குளவியைப் போன்றவர்கள் ஆவர். அவர்களுக்கு ஓரிறைமையைப் பற்றி எதுவும் தெரியாது. அவர்கள் **முழுக்க முழுக்க ஆன்மீகத்திலிருந்து எந்த பங்கையும் பெறாதவர்களாக இருக்கின்றனர்.** மற்றவர்களது குறைகளை தேடிக் கண்டு பிடிப்பதும் இறைவனின் தூய தூதர்களை ஏசிப் பேசுவதும் அவர்களது பணியாக இருந்து வருகிறது.

ஷய்த்தான் ஏற்படுத்தும் சந்தேகங்கள் மூலமாக ஆட்சேபனைகளின் குவியலை ஒன்று திரட்டுவதுதான் அவர்களின் மிகப்பெரும் சாதனையாக இருந்து வருகிறது. இறையச்சம் மற்றும் தூய்மையின் ஆன்மா அவர்களிடம் இல்லை. ஆன்மீகமில்லாமல் எந்தவொரு மதமும் நிலைத்திருக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆன்மீகம் இல்லாத மதம் எதற்கும் உதவாது. எந்த மதத்தில் இறைவனுடன் உரையாடுகின்ற தொடர்பு இல்லையோ, உண்மை மற்றும் தூய்மையின் ஆன்மா இல்லையோ, அம்மார்க்கத்துடன் வானத்தின் ஈர்ப்பு இல்லாமல் ஆகி விடும். வழக்கத்திற்கு மாற்றமான முன்மாதிரியை அதனால் கொண்டு வர முடியவில்லையென்றால் அது மரணித்து விட்ட மார்க்கமாகும். அதைக் கண்டு அஞ்சாதீர்கள்.

**இப்போது உங்களில் உயிருடன் இருக்கின்ற லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மனிதர்கள் இந்த மதம்**

**அழிவதை காண்பீர்கள். ஏனென்றால் இந்த மதம் ஆரியர்களின் மண்ணில் தோன்றியதாகும். இது இறைவனின் மார்க்கமல்ல. அது மண்ணிலுள்ளவர்கள் கூறும் விஷயங்களையே எடுத்துக் கூறுகின்றது. இறைவன் கூறுபவற்றை அது முன் வைப்பதில்லை.**

எனவே நீங்கள் மகிழ்ச்சி அடையுங்கள். இறைவன் உங்களுடன் இருக்கின்றான் என்பதால் மகிழ்ச்சியால் துள்ளிக் குதியுங்கள். நீங்கள் உண்மையிலும் ஈமானிலும் நிலைத்திருந்தால் மலக்குகள் உங்களுக்கு கற்றுக் கொடுப்பர். விண்ணின் நிம்மதி உங்கள் மீது இறங்கும். பரிசுத்த ஆவியின் மூலம் உங்களுக்கு உதவி செய்யப்படும். நீங்கள் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் இறைவன் உங்களுடன் இருப்பான். எவராலும் உங்களை வெற்றி கொள்ள முடியாது.

இறைவனது அருளுக்காக பொறுமையுடன் காத்திருங்கள். ஏச்சுப் பேச்சுகளை கேட்ட பிறகும் அமைதியாக இருங்கள். அடிகளை வாங்கிக் கொண்டு பொறுமையாக இருங்கள். முடிந்த வரை தீங்கை எதிர்த்து நிற்பதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். அதன் மூலம் நீங்கள் வானத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக எழுதப்படுவீர்கள்.

உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். எவர்கள் இறைவனுக்கு அஞ்சுகின்றனரோ, மேலும் அவர்களது உள்ளம் இறைவன் மீதான அச்சத்தால் உருகி விடுகின்றதோ அவர்களுடன்தான் இறைவன் இருக்கின்றான். அவன் அவர்களது எதிரிகளின் எதிரியாக இருக்கின்றான். உலகம் உண்மையாளரை பார்ப்பதில்லை. ஆனால் எல்லாவற்றையும் நன்கு அறிந்திருக்கின்ற, தெரிந்திருக்கின்ற அந்த இறைவன் உண்மையாளரை பார்க்கின்றான். தனது கைகளால் அவர்களை பாதுகாக்கின்றான். எந்த நபர் உண்மையான உள்ளத்துடன் உங்கள் மீது அன்பு கொள்கின்றாரோ, உண்மையிலேயே உங்களுக்காக மரணிப்பதற்கு

ஆயத்தமாக இருக்கின்றாரோ, உங்களது விருப்பத்திற்கேற்ப உங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றாரோ அப்படிப்பட்டவர் மீது நீங்கள் அன்பு கொள்வதில்லையா? நீங்கள் எல்லாரையும் விட உங்களுக்கு பிரியமானவராக அவரை கருதுவதில்லையா? நீங்கள் மனிதர்களாக இருக்கின்ற நிலையில் அன்பிற்கு பகரமாக அன்பு செலுத்தும் போது பிறகு இறைவன் அவ்வாறு செய்யாமல் இருப்பானா? உண்மையிலேயே அவனுக்கு நன்றி செலுத்துகின்ற நண்பர் யார் என்பதையும், நம்பிக்கை துரோகியாகவும் உலகிற்கு முன்னுரிமை வழங்குபவராகவும் இருப்பவர் யார் என்பதையும் இறைவன் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.நீங்கள் அத்தகைய நன்றி உணர்வுள்ளவர்களாக ஆகிவிட்டால் இறைவனது (உதவிக்)கரம் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை நிலைநாட்டிக் காட்டி விடும்.

## பராஹீனே அஹ்மதிய்யாவின் *511*–ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னறிவிப்பு. அத்துடன் அந்நூலின் *510*–ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ள முன்னறிவிப்பு அதாவது மர்ஹூம் சாஹிப்ஸாதா மவ்லவி முஹம்மது அப்துல் லத்தீஃப் சாஹிப் மற்றும் மர்ஹூம் மியா(ன்) அப்துர் ரஹ்மான் ஆகியோரின் ஷஹாதத் பற்றிய முன்னறிவிப்பு. மேலும் நான் பாதுகாப்பாக இருப்பது தொடர்பான அந்த முன்னறிவிப்பு

பராஹீனே அஹ்மதிய்யாவின் 510–ஆம் பக்கத்திலும், 511–ஆம் பக்கத்திலும் கீழ்க்காணும் முன்னறிவிப்புகள் இடம் பெற்றிருப்பதை தெரிந்து கொள்ளுங்கள்:

وان لم یعصمک الناس یعصمک الله من عنده. یعصمک اللّٰه من عنده وان لم یعصمک الناس. شاتان تذبحان. وکلّ من علیها فان. ولا تھنوا ولا تحزنوا. الیس اللّٰه بکافٍ عبده. الم تعلم انّ اللّٰه علیٰ کلّ شَیٔ ٍ قدیر. وجئنابک علی ھٰؤلاء شھیدا. وفی اللّٰه اجرک. ویرضٰی عنک ربّک. ویتمّ ا سمک وعسٰی ان تحبّوا شیئا وھوشرّلکم. وعسی ان تکرھوا شیئا وھو خیر لکم واللّٰه یعلم وانتم لا تعلمون.

பொருள்: நீர் கொலை செய்யப்படுவதிலிருந்து மக்கள் உம்மைக் காப்பாற்றாமல் இருந்தாலும் இறைவன் உம்மைக் காப்பாற்றுவான். மக்கள் உம்மைக் காப்பாற்றாமல் விட்டு விட்டாலும் இறைவன் கண்டிப்பாக நீர் கொலை செய்யப்படுவதிலிருந்து உம்மைக் காப்பாற்றுவான். இது மக்கள் உம்மைக் கொலை செய்வதற்காக முயற்சி செய்வர் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அதனை அவர்கள் தம் தரப்பிலிருந்து செய்தாலும் சரி அல்லது அரசாங்கத்தை ஏமாற்றி செய்தாலும் சரி. இறைவன் அவர்களது சூழ்ச்சிகளில் அவர்களைத் தோல்வியடையச் செய்வான். இறைவன் இவ்வாறு எண்ணியதன் நோக்கம் இதுவாகும். நம்பிக்கை கொண்டவருக்கு அவர் கொலை செய்யப்படுவது ஷஹாதத்தாக இருந்தாலும் அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறு இருக்கின்றது.

அதாவது அல்லாஹ்வின் இரு வகையான தூதர்கள் கொலை செய்யப்படுவதில்லை.

(1) முதலாமவர், நபித்துவத் தொடரின் ஆரம்பத்தில் தோன்றும் நபி. உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவத் தொடரில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களும், முஹம்மதிய்ய நபித்துவத் தொடரில் நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் நபித்துவத் தொடரின் ஆரம்பத்தில் தோன்றிய நபிமார்கள் ஆவர்.

(2) இரண்டாமவர், நபித்துவத் தொடரின் இறுதியின் தோன்றுகின்ற நபி அல்லது இறைவனால் நியமிக்கப்பட்டவர் ஆவார். உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவத் தொடரில் இறுதியாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும், முஹம்மதிய்ய நபித்துவத் தொடரின் இறுதியில் இந்த எளியவனும் தோன்றியுள்ளோம். இதுதான் அந்த இரகசியம் ஆகும். அதாவது எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக திருக்குர்ஆனில் 'அல்லாஹ் உம்மை பாதுகாப்பான்' என்ற நற்செய்தி கூறப்பட்டிருந்ததோ அவ்வாறே இறைவனின் வஹியில் எனக்காக يَعْصِمُكَ اللهُ அதாவது 'அல்லாஹ் உம்மை பாதுகாப்பான்' என்ற நற்செய்தி கூறப்பட்டுள்ளது.

நபித்துவத் தொடரின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வந்த தூதர்கள் கொலை செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பாக வைப்பதில் இறைவனின் நுட்பமான ஞானம் எதிர்பார்ப்பது என்னவெனில், நபித்துவத் தொடரின் ஆரம்பத்திலுள்ள தூதர் அந்தத் தொடரின் தலைவராக இருக்கின்றார். அவர் ஷஹீதாக்கப்பட்டால் பொது மக்களுக்கு அந்த தூதர் தொடர்பாக பல சந்தேகங்கள் உருவாகி விடுகின்றன. ஏனென்றால் இப்போது வரை அவர் இந்த நபித்துவத் தொடரின் முதல் செங்கலாக இருக்கின்றார். எனவே இந்த நபித்துவத் தொடரின் அடித்தளம் அமைக்கப்பட்டவுடன் இந்த

தொடரின் தோற்றுனரே கொலை செய்யப்படுகின்ற வகையில் இந்த செங்கல் விழுந்து விட்டால் இந்த சோதனை பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமானதாக இருக்கும். மேலும் கண்டிப்பாக அவர்கள் சந்தேகங்களில் வீழ்ந்து விடுவர். அத்தகையதொரு தோற்றுனரை அவர்கள் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவர் என்றே கூறுவர்.

உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஃபிர்அவ்னிடம் நேரடியாக சென்ற அதே நாளில் கொலை செய்யப்பட்டிருந்தால் அல்லது நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நாளில் அவர்களை கொலை செய்வதற்காக மக்காவில் அவர்களது வீடு முற்றுகையிடப்பட்டதோ அதே நாளில் நிராகரிப்பவர்களின் கைகளால் ஷஹீதாக்கப்பட்டிருந்தால் பிறகு ஷரீஅத்தும் நபித்துவத் தொடரும் அங்கேயே முடிந்து போயிக்கும்.

அதற்குப் பிறகு எவருமே அவர்களது பெயரைக் கூட கூறியிருக்க மாட்டார்கள். எனவே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் உயிரின் எதிரியாக ஆயிரக்கணக்கானோர் இருந்தும் கூட அவர்களை ஷஹீதாக்க முடியவில்லை. அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் ஷஹீதாக்க முடியவில்லை. எனவே இது தான் இதிலுள்ள நுட்பமான ஞானமாகும்.

நபித்துவத் தொடரின் இறுதியில் இருக்கின்ற தூதர் ஷஹீதாக்கப்பட்டிருந்தால் பொது மக்களின் பார்வையில் நபித்துவத் தொடரின் முடிவின் மீது தோல்வியின் கறை படிந்து விடும். ஆனால் நபித்துவத் தொடர் வெற்றிகரமாக அமைய வேண்டும் என்பதே இறைவனின் விருப்பமாகும். ஏனென்றால் நல்ல முடிவிற்கேற்பவே தீர்ப்பு அமைகின்றது. நபித்துவத் தொடரின் ஆரம்பத்திலேயே முதலாவது செங்கல் உடைவதன் மூலம் சபிக்கப்பட்ட எதிரி மகிழ்ச்சியைக் கொண்டாடுவது எவ்வாறு இறைவனின் விருப்பமாக இருக்கவில்லையோ அவ்வாறே நபித்துவ தொடரின் இறுதியிலும்

சபிக்கப்பட்ட எதிரியை எவ்வகையிலும் மகிழ்ச்சியடையச் செய்வது ஒருபோதும் இறைவனது விருப்பமாக இருக்கவில்லை. இந்த நுட்பமான இறை ஞானத்தின் அடிப்படையில்தான் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் நபித்துவத் தொடரில் இறுதியில் வந்த ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் சிலுவையில் மரணிப்பதிலிருந்தும் காப்பாற்றப்பட்டார்கள்.

முஹம்மதிய்ய நபித்துவத்தின் இறுதியிலும் இதே நோக்கத்துடன் முஹம்மதிய்ய மஸீஹை தூக்கிலிட வேண்டும் என்பதற்காக அவர் மீது கொலைக் குற்றத்தைச் சுமத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இறைவனின் அருளால் முதலாவது மஸீஹை விட இரண்டாவது மஸீஹிற்கு அல்லாஹ்வின் உதவி மிகவும் பிரகாசமாக வெளிப்பட்டது. மேலும் மரண தண்டனையில் இருந்தும் ஏனைய எல்லா தண்டனைகளிலிருந்தும் அவரைப் பாதுகாத்தது.

நபித்துவத் தொடரின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வரும் நபிமார்கள் இரண்டு சுவர்களாகவும் இரண்டு தாங்கும் தூண்களாகவும் இருக்கின்றனர். எனவே இறைவனின் நடைமுறை இவ்வாறே இருந்து வருகின்றது. அதாவது நபித்துவத் தொடரின் ஆரம்பத்திலும் இறுதியிலும் வரும் நபிமார்களை தீங்கு விளைவிக்கக் கூடிய, சூழ்ச்சிகளை செய்யக்கூடிய மனிதர்கள் கொலை செய்வதற்காக அதிகமாக முயற்சிகளை செய்த போதிலும் அவர்கள் கொலை செய்யப்படுவதிலிருந்து இறைவன் அவர்களை பாதுகாக்கின்றான். இறைவனின் கை அவர்களுடன் இருக்கின்றது. சில நேரங்களில் அறிவற்ற எதிரி ஏமாற்றத்தினால் இவ்வாறு எண்ண முற்படுகின்றான். அவன் தன்னிடமே நான் நல்லவன் அல்லவா? தொழுகையையும் நோன்பையும் பேணக் கூடியவனாக நான் இருக்கவில்லையா? என்று கேள்வி கேட்டுக் கொள்கின்றான். முற்றிலும் இவ்வாறு தான் யூதர்களில் மார்க்கச் சட்ட மேதைகளும், பழமைவாதிகளும் எண்ணி வந்தனர்.

இன்னும் சொல்வதென்றால் அவர்களில் சிலர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் தாங்கள் இறையறிவிப்பை பெறுவதாக கூட வாதம் செய்தனர். எவர்கள் இறைவனின் உண்மையான அடியார்களாக இருக்கின்றனரோ, அந்த இறைவனுடன் ஆழமான தொடர்பை உடையவர்களாக இருக்கின்றனரோ அவர்கள் எத்தகைய உண்மை, நன்றியுணர்வு, இறைநேசம் ஆகிய பண்புகளை கொண்டவர்களாக திகழ்கின்றனர் என்றால் இறைவன் எப்போதும் அவர்களுக்கு துணை நிற்க வேண்டியது வருகின்றது. இறைவன் அவர்களது எதிரிகளை அழித்து விடுகின்றான்.

இவ்வாறே 'பல்அம்' என்பவனும் கர்வத்தாலும், ஆணவத்தாலும் மூஸா என்னை விட சிறந்தவர் அல்ல என்று கருதினான். ஆனால் மூஸா (அலை) அவர்களுக்கு இறைவனுடன் ஒரு தொடர்பு இருந்தது. அதை சொற்களால் விவரிக்க முடியாது. விரிவாக கூறவும் முடியாது. எனவே தன்னை விட மிக உயர்ந்த தகுதியிலிருந்த ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இறைவனுடன் இருந்த தொடர்பை பற்றி குருடனான 'பல்அம்' அறியாதவனாக இருந்தான். அவர்களை எதிர்த்து நின்று அவன் அழிந்து போனான். எனவே இப்போதும் இவ்வாறே நடக்கின்றது. அதாவது இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்களுக்கும், அவனுக்கு நன்றியுள்ள அடியார்களாக இருப்பவர்களுக்கும் இறைவனுடனுள்ள தொடர்பின் உண்மை எந்த அளவு உச்சத்திற்குச் சென்று விடுகின்றது என்றால் உலகவாதிகளான குருடர்களால் அதைப் பார்க்க முடியாது. எனவே மார்க்க புரோகிதர்கள் மற்றும் மவ்லவிகளில் ஒவ்வொருவரும் அவர்களை எதிர்ப்பதற்காக எழுகின்றனர். ஆனால் அவர்கள் அவரை எதிர்க்கவில்லை. மாறாக, இறைவனை அவர்கள் எதிர்த்து நிற்கின்றனர். எந்த நபரை இறைவன் ஓர் உன்னதக் குறிக்கோளுக்காக படைத்திருக் –கின்றானோ, எவர் மூலமாக உலகில் ஒரு மகத்தான மாற்றம் ஏற்பட

வேண்டும் என இறைவன் விரும்புகின்றானோ அந்த நபரை சில அறிவற்ற, கோழைகளாக இருக்கின்ற, முழுமையான நம்பிக்கையில் நிலைத்திராத, நல்லொழுக்கமற்ற, நம்பிக்கை துரோகிகளான பெயர்தாங்கி முல்லாக்களுக்காக அவன் அழித்து விடுவானா என்ன?

இரண்டு கப்பல்கள் ஒன்று மற்றொன்றுடன் மோதும் நிலை உருவாகின்றது. அவற்றில் ஒன்றில் நீதியுடன் நடக்கின்ற, கருணைமிக்க, வள்ளல் தன்மையுள்ள, நல்ல இயல்புள்ள காலத்தின் அரசர் தனது பரிவாரத்துடன் பயணம் செய்கின்றார். இன்னொரு கப்பலில் கீழ்த்தரமான செயலைச் செய்யக் கூடிய, மோசமான, தீய நடத்தை கொண்ட மக்கள் அமர்ந்துள்ளனர். அவற்றில் ஒரு கப்பலை காப்பாற்றுவதற்காக இன்னொரு கப்பலை அத்துடன் பயணம் செய்பவர்களோடு சேர்த்து அழிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வது சிறந்ததாக இருக்கும் என்று நீங்களே கூறுங்கள். அந்த நீதியுடன் நடந்து கொள்கின்ற அரசனின் கப்பல் அழிக்கப்படுமா? அல்லது மிகவும் இழிவான செயல்களை செய்கின்ற தீய நடத்தையுள்ள கப்பல் அழிக்கப்படுமா? நான் உங்களுக்கு உண்மையாகவே கூறிக் கொள்கிறேன்! அரசர் இருக்கின்ற கப்பலே அதிக வலுவுடனும் ஆதரவுடனும் காப்பாற்றப்படும்.

மேலும், அந்த கீழ்த்தரமான செயலைச் செய்யும் மோசமான தீய நடத்தையை உடையவர்களுடைய கப்பல் முற்றிலும் பொருட்படுத்தாத நிலையில் அழிக்கப்பட்டு விடும். அதிலுள்ளவர்கள் அழிக்கப்படுவதால் மகிழ்ச்சி ஏற்படும். ஏனென்றால் உலகிற்கு நீதியுடன் நடந்து கொள்கின்ற அரசரின் தேவை மிக அதிகமாக இருக்கின்றது. அவர் மரணிப்பது ஓர் உலகம் மரணிப்பது போன்றதாகும். கீழ்த்தரமான செயலைச் செய்யும் தீய மக்கள் சிலர் மரணித்தால் உலகின் அமைப்பில் எந்த இடையூரும் ஏற்படப் போவதில்லை.

எனவே இதுவே இறைவனின் நடைமுறையாக இருக்கின்றது. அதாவது அவனது தூதருக்கு எதிராக இன்னொரு பிரிவினர் நிற்கின்ற போது அவர்கள் தமது எண்ணத்தில் எவ்வளவு தான் தம்மைத்தாமே நல்லவர்கள் என்று கூறிக்கொண்டாலும் அவர்களையே அல்லாஹ் அழிக்கின்றான். அவர்களின் அழிவிற்கான நேரம் வந்து விடுகின்றது. ஏனென்றால், எந்த நோக்கத்திற்காக அவன் தனது தூதர்களை அனுப்புகின்றானோ அந்த நோக்கம் வீணாவதை அவன் விரும்புவதில்லை. அவ்வாறு செய்தால் பிறகு அவனே தனது நோக்கத்திற்கு எதிரியாக செயல்படுபவனாக ஆகி விடுவான். அந்நிலையில் பூமியில் அவனை யார் வணங்குவார்கள்? உலகம் பெரும்பான்மையை பார்க்கின்றது. இந்த பிரிவு மிகவும் பெரிய பிரிவாக இருக்கின்றது. எனவே இது மிகவும் நல்ல பிரிவாகும் என்று உலகம் கருதுகின்றது. இத்தகைய ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்கள் பள்ளிவாயில்களில் ஒன்று கூடுகின்றனர். அத்தகையோர் தீயவர்களாக இருக்க முடியுமா? என்று அறிவற்றவன் நினைக்கின்றான். ஆனால் இறைவன் பெரும்பான்மையைப் பார்ப்பதில்லை. அவன் உள்ளங்களைப் பார்க்கின்றான். இறைவனின் சிறப்பான அடியார்களிடம் இறைநேசம், உண்மை மற்றும் நன்றி உணர்வின் எத்தகைய ஒரு சிறப்பான ஒளி இருக்குமென்றால் அதைப் பற்றி என்னால் கூற முடிந்திருந்தால் நான் கூறியிருப்பேன். ஆனால் நான் என்ன கூறுவது? உலகம் தோன்றிய நாள் முதல் இந்த ரகசியத்தை எந்த நபியாலும் அல்லது தூதராலும் எடுத்துக் கூற முடியவில்லை. இறைவனின் நன்றியுள்ள அடியார்களின் ஆன்மா இறைவனின் முன்னிலையில் எவ்வாறு வீழ்ந்து கிடக்கின்றது என்றால் அந்நிலையை எடுத்துக் காட்டுகின்ற விதத்தில் அதைப் பற்றி விவரித்துக் கூறுகின்ற எந்தவொரு சொல்லும் நம்மிடம் இல்லை.

இதற்குப் பிறகு (இறையறிவிப்பின்) ஏனைய பகுதியை மொழியாக்கம் செய்து விட்டு இந்த கட்டுரையை நான் நிறைவு செய்கின்றேன்.

இறைவன் கூறுகின்றான். அதாவது நான் உம்மைக் கொலை செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றினாலும் உமது ஜமாஅத்திலிருந்து இரண்டு ஆடுகள் அறுக்கப்படும். மேலும் பூமியிலுள்ள ஒவ்வொருவரும் இறுதியில் அழிந்து விடுவர். அதாவது பாவமற்றவர்களாகவும், அப்பாவிகளாக இருக்கும் நிலையில் அந்த ஆடுகள் கொலை செய்யப்படும். இது இறைவனின் வேதங்களில் உள்ள சொற்றொடராகும். அதாவது பாவம் செய்யாத அப்பாவிகள் கடா அல்லது ஆட்டிற்கு ஒப்பாக கூறப்படுகின்றனர். சில நேரங்களில் பசுக்களுக்கு ஒப்பானவராகவும் அவர்கள் கூறப்படுகின்றனர். எனவே இறைவனும் இந்த இடத்தில் மனிதன் என்ற சொல்லை விட்டு விட்டு ஆடு என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். ஏனென்றால் ஆட்டின் மூலம் இரண்டு உபயோகங்கள் உள்ளன. ஒன்று, அது பால் தருகின்றது. மற்றொன்று அதன் மாமிசமும் உண்ணப்படுகின்றது. இந்த முன்னறிவிப்பு ஷஹீது மர்ஹூம் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் மற்றும் அவர்களது மாணவரான மியா(ன்) அப்துர் ரஹ்மான் சாஹிப் பற்றியதாகும். இந்த முன்னறிவிப்பு பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டு முழுமையாக 23 வருடங்கள் கழிந்த பிறகு நிறைவேறி விட்டது. இதுவரை லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் இந்த முன்னறிவிப்பை எனது நூலான பராஹீனே அஹ்மதிய்யாவின் 511–வது பக்கத்தில் படித்திருப்பார்கள்.

நான் எழுதியது போன்றே இவ்விஷயம் வெளிப்படையாக தெரியக் கூடியதாகும். அதாவது ஆடுகளின் பண்புகளில் ஒன்று, அது பால் தருகின்றது. இன்னொன்று, அதன் மாமிசம் சாப்பிடப் –படுகின்றது. ஆட்டின் இந்த இரு பண்புகளும் மர்ஹூம் மவ்லவி

அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் ஷஹாதத் மூலமாக நிறைவேறி விட்டது. ஏனென்றால் மவ்லவி சாஹிப் அவர்கள் விவாதம் நடந்த நேரத்தில் பல்வேறு வகையான இறைஞானத்தையும், உண்மை –களையும் எடுத்துக் கூறி எதிரிகளுக்கு பாலை வழங்கினார்கள். ஆனால் பாக்கியமற்ற எதிரிகள் அந்தப் பாலை அருந்தவில்லை. அதை எறிந்து விட்டனர். மேலும் ஷஹீது மர்ஹூம் அவர்கள் தமது உயிரை தியாகம் செய்ததன் மூலம் தமது மாமிசத்தை வழங்கினார்கள். தமது இரத்தத்தைச் சிந்தினார்கள். அதன் மூலமாக எதிரிகள் அந்த மாமிசத்தை சாப்பிட வேண்டும். மேலும் அந்த இரத்தத்தைக் குடிக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். அதாவது பேரன்பின் வடிவில் தூய தியாகத்திலிருந்து எதிரிகள் பலன் பெற வேண்டும் என்பதற்காக (அவர்கள் அவ்வாறு செய்தார்கள்).

எந்த மதத்தில் எந்த கொள்கையில் அம்மக்கள் நிலைத்து நிற்கின்றார்களோ, மேலும் எந்தக் கொள்கையில் அவர்களது மூதாதையர்கள் மரணித்தார்களோ அவர்களில் எவராவது எப்போதாவது அத்தகைய தியாகத்தை செய்துள்ளார்களா? அத்தகைய உண்மையையும், கலப்பற்ற தன்மையையும் எவராவது எப்போதாவது வெளிப்படுத்திக்காட்டி இருக்கின்றனரா? என்று அவர்கள் சிந்திக்கட்டும். மனிதன் நிச்சய உறுதியால் நிரம்பி இருக்கும் நிலையில் இறைவனை காணாதவரை அவன் அத்தகைய தியாகத்தை செய்ய முடியுமா? சந்தேகமின்றி அத்தகைய இரத்தமும், அத்தகைய மாமிசமும் உலகம் அழியும் வரை எப்போதும் உண்மையைத் தேடுபவர்களைத் தன் பக்கம் அழைத்துக் கொண்டே இருக்கும்.

சுருக்கமாக, சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களுக்கு இந்த இரண்டு பண்புகளின் காரணமாக ஆட்டுடன் அதிகமாக ஒப்புமை இருந்தது. இவ்வாறே மியான் அப்துர் ரஹ்மான் அவர்களுக்கும் ஆட்டுடன் ஒப்புமை இருந்தது. எனவே இவர்கள்

ஆடு என்ற பெயரால் நினைவு கூரப்பட்டனர். இதை எழுதக்கூடிய இந்த எளியவனுக்கும், எனது ஜமாஅத்திற்கும் அநீதியாக நடைபெற்ற இந்தக் கொலையின் காரணமாக பெரும் துக்கத்தைக் கடந்து செல்ல வேண்டியது வரும் என்பதை இறைவன் அறிந்திருந்தான். எனவே, இந்த இறையறிவிப்பின் பிற்பகுதியில் வரும் சொற்றொடர்கள் துக்கம் விசாரிக்கும் வகையிலும், ஆறுதல் கூறும் வகையிலும் இருக்கும்படியான இறையறிவிப்பை அவன் இறக்கினான். இவ்வகையில் அந்த வார்த்தைகளை நான் அரபியில் தற்போது எழுதியிருந்தேன்.

அதன் மொழியாக்கம் இதுவாகும்: அதாவது இந்த துன்பம் மற்றும் கடுமையான துக்கத்தால் நீங்கள் வேதனையடைய வேண்டாம். துயரம் கொள்ளவும் வேண்டாம். ஏனென்றால் உங்களில் இருவர் கொலை செய்யப்பட்டிருந்தாலும் இறைவன் உம்முடன் இருக்கின்றான். அவன் இந்த இருவருக்கு பகரமாக ஒரு சமுதாயத்தை உம்மிடம் கொண்டு வருவான். அவன் தனது அடியானுக்கு போதுமானவனாக இருக்கின்றான். அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் உள்ளவன் என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்த அநீதியிழைக்கப்பட்ட இருவரை ஷஹீதாக்கிய இம்மக்கள் எந்த பாவத்திற்காக அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள் என்பதை அறிய இவர்கள் மீது கியாமத் நாளன்று நாம் உம்மை சாட்சியாக கொண்டு வருவோம். இறைவன் உமக்குரிய நற்கூலியை வழங்குவான். உம்மிடம் திருப்தியடைவான். உமது பெயரை நிறைவடையச் செய்வான். அதாவது ‘அஹ்மது’ என்ற பெயரை நிறைவடையச் செய்வான். அதற்கு ‘இறைவனை அதிகமாகப் புகழ்பவர்’ என்று பொருள்.

எவர் மீது இறைவனின் அருட்கொடைகள் இறங்கு –கின்றனவோ அந்த நபர்தான் இறைவனை அதிகமாக புகழ்வார். எனவே இறைவன் உம் மீது அருட்கொடைகளின் மழையைப்

பொழிவான் என்பதே இதன் கருத்தாகும். அதனால் எல்லாரையும் விட அதிகமாக நீர் அவனது புகழைப் பாடுபவராக இருப்பீர். அப்போது உமது பெயரான 'அஹ்மது' என்பது நிறைவு பெற்று விடும். இதற்குப் பிறகு இறைவன் இவ்வாறு கூறினான்:

அதாவது இந்த ஷஹீதுகள் ஷஹீதாக்கப்பட்டதனால் நீர் துக்கப்பட வேண்டாம். அவர்களது ஷஹாதத்தில் இறைவனின் நுட்பமான ஞானம் இருக்கின்றது. பல விஷயங்களும் நிகழ வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள். ஆனால் அவை நிகழ்வது உங்களுக்கு நல்லதல்ல. பல விஷயங்களும் நிகழ வேண்டாம் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள். ஆனால் அவை நிகழ்வது உமக்கு நல்லதாகும். உங்களுக்கு சிறந்தது எது என்பதை இறைவன் நன்கு அறிந்துள்ளான். ஆனால் உங்களுக்கு அது பற்றி தெரியாது.

இறைவனின் இந்த வஹியில் முழுமையாக இந்த விஷயம் தான் புரிய வைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது **மர்ஹூம் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் இவ்வாறு கருணையில்லாமல் கொலை செய்யப்பட்டிருப்பது எத்தகைய -தொரு விஷயமாக இருக்கின்றதென்றால் அதைக் கேட்கும் போதே நாம் மிகுந்த துக்கத்திற்கு ஆளாகின்றோம் (எங்களுக்கு இதை விட மிகுந்த துன்பத்தை தரக்கூடிய ஒரு கொடூரமான செயலை நாங்கள் கண்டதில்லை). ஆனால் இந்த இரத்தத்தில் பெரும் அருள்கள் இருக்கின்றன. அவை பின்னர் வெளிப்படும். இந்த இரத்தம் எத்தகைய பழங்களை கொண்டு வரப்போகின்றது என்பதை காபூல் மண் பார்க்கும். இந்த இரத்தம் ஒருபோதும் வீணாகாது.**

இதற்கு முன்னதாக எனது ஜமாஅத்தைச் சார்ந்த அப்பாவியான அப்துர் ரஹ்மான் அநீதியான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். அப்போது இறைவன் அமைதியாக இருந்தான்.

ஆனால் இந்த இரத்தத்தைப் பார்த்து விட்டு அவன் அமைதியாக இருக்க மாட்டான். மேலும் பெரும் பெரும் விளைவுகள் வெளிப்படும். நாம் கேள்விப்பட்டது என்னவென்றால், ஆயிரக்கணக்கான கற்கள் வீசப்பட்டு ஷஹீது மர்ஹூம் அவர்கள் கொலை செய்யப்பட்ட அதே நாட்களில் காபூலில் கடுமையான காலரா பரவியது. பெரும் பெரும் பிரதேசத்தின் முக்கிய பிரமுகர்கள் அதற்கு இரையாகி விட்டனர்.

குறிப்பாக அமீரின் சில உறவினர்களும், அவருக்கு நெருக்கமானவர்களும் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்று விட்டனர். ஆனால் அத்துடன் இது நின்றுவிடப் போவதில்லை. இந்தக் கொலை மிகவும் கருணையில்லாமல் செய்யப்பட்டிருக்–கின்றது. வானத்தின்கீழ் இக்காலத்தில் இதற்கு இணையான ஒரு கொலை இருக்க முடியாது. அந்தோ ! இந்த அறிவற்ற அமீர் என்ன செய்து விட்டார்? இத்தகைய அப்பாவி மனிதரை சிறிதும் ஈவு இரக்கம் காட்டாமல் கொன்று தன்னைத்தானே அவர் அழித்துக் கொண்டார்.

**காபூல் மண்ணே! நீ சாட்சியாக இரு. உனது மண்ணில் ஒரு கொடூரமான குற்றம் இழைக்கப்பட்டிருக்கின்றது. பாக்கியமிழந்த மண்ணே! இந்த மாபெரும் அநீதி நடைபெற்ற இடமாக நீ இருப்பதால் இறைவனின் பார்வையிலிருந்து நீ வீழ்ந்து விட்டாய்.**

## மர்ஹூம் மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் ஒரு புத்தம்புது அற்புதம்

நான் இந்த புத்தகத்தை எழுத ஆரம்பித்தபோது ஓர் எதிரியின் தரப்பிலிருந்து என்மீது தொடரப்பட்டிருந்த ஒரு கிரிமினல் வழக்கில் ஆஜராவதற்காக **16** அக்டோபர் **1903**–ல் எனக்கு குர்தாஸ்பூர் செல்ல வேண்டியதிருந்தது. அதற்கு முன்னதாக இப்புத்தகத்தை எழுதி முடித்து அதை நான் அங்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணியிருந்தேன். தற்செயலாக எனது சிறுநீரகத்தில் கடுமையான வலி ஏற்பட்டது. சில நாட்களே உள்ளன; இந்த பணி முழுமையடையாமல் இருந்து விடும். மனிதனைக் கொல்கின்ற நோயான சிறுநீரகத்தில் ஏற்பட்டுள்ள இந்த வலியால் இவ்வாறு நான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தால் இந்த நூலை என்னால் எழுத முடியாமல் போய் விடும் என்று நான் எண்ணினேன். அப்போது இறைவன் எனக்கு துஆவின் பக்கம் கவனமூட்டினான். நான் இரவு மூன்று மணிக்கு எனது வீட்டிலுள்ளவர்களிடம் இப்போது நான் துஆ செய்கின்றேன். நீங்கள் 'ஆமீன்' என்று கூறுங்கள் என்று கூறினேன். நான் கடுமையான வேதனை இருந்த இதே நிலைமையில் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களைப் பற்றி எண்ணியவாறு, இறைவா! இந்த மர்ஹூமிற்காக இப்புத்தகத்தை நான் எழுத விரும்பினேன் என்று துஆ செய்தேன். அத்துடன் எனக்கு சிற்றுறக்கம் ஏற்பட்டது. மேலும் سَلٰمٌ قَوْلًا مِّنْ رَّبٍّ رَّحِيْمٍ அதாவது 'சாந்தியும் பாதுகாப்பும் இருக்கின்றது; இது கருணைமிக்க இறைவனின் வார்த்தையாகும்' என்ற இல்ஹாம் வந்தது.

எவனது கையில் எனது உயிர் இருக்கின்றதோ அந்த இறைவன் மீது ஆணையாக! காலை ஆறு மணி கூட ஆகி இருக்கவில்லை. அப்போது நான் முற்றிலுமாக குணம் அடைந்திருந்தேன். அதே நாளில் இப்புத்தகத்தின் ஏறக்குறைய பாதி பகுதியை எழுதி விட்டேன். ஃபல்ஹம்துலில்லாஹி அலா தாலிக்.

## எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கிய விஷயம்

ஜமாஅத்திலுள்ள சில நபர்கள் இப்போது வரை தமது ஆன்மீகத்தில் பலவீனமான நிலைமையில் இருக்கின்றனர். எதுவரையென்றால் சிலருக்கு தமது வாக்குறுதிகளில் உறுதியாக நிலைத்திருப்பது கூட கடினமாக இருக்கின்றது என்பதை நான் நன்றாக அறிந்திருந்தும் கூட மர்ஹூம் சாஹிப் ஸாதா மவ்லவி முஹம்மது அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களிடமிருந்து வெளிப்பட்ட உறுதியாக நிலைநிற்கும் தன்மையையும், உயிர்த்தியாகத்தையும் காண்கின்ற போது எனக்கு எனது ஜமாஅத் தொடர்பாக இருக்கும் நம்பிக்கை மிகவும் அதிகரித்து விடுகின்றது.

**ஏனென்றால் எந்த இறைவன் இந்த ஜமாஅத்தைச் சார்ந்த சில நபர்களுக்கு தமது பொருளை மட்டுமல்லாமல் உயிரையும் கூட இவ்வழியில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பை தந்துள்ளானோ அந்த இறைவனின் தெளிவான நாட்டம் இதுவாகும் என்று கண்கூடாகத் தெரிகின்றது. அதாவது அவ்விறைவன் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் ஆன்மாவை கொண்டிருக்கின்ற பல நபர்களை இந்த ஜமாஅத்தில் பிறக்கச் செய்வான். அவர்கள் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களது ஆன்மீகத்தின் ஒரு புதிய செடியாக இருப்பர்.**

மவ்லவி சாஹிப் அவர்களது ஷஹாதத் சம்பவம் நிகழ்வதற்கு முன்னதாக நான் ஒரு கஷ்ஃபு (ஆன்மீகக்) காட்சியில் நமது தோட்டத்திலிருந்து ஓர் ஊசி மரத்தின் நீண்ட கிளை வெட்டப்படுவதை கண்டேன்.★

---

★ இதற்கு முன்னர் மர்ஹூம் சாஹிப் ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் தொடர்பாக அவர்கள் உயிருடன் இருந்தபோது ஒரு தெளிவான இறையறிவிப்பு வந்திருந்தது. இன்னும் சொல்வதென்றால் அவர்கள்

இந்தக் கிளையை மீண்டும் நிலத்தில் நடுங்கள். அதன் மூலம் அது வளரும்; மலரும் என்று நான் கூறுகின்றேன். இறைவன் அவருக்குப் பகரமாக அவரது இடத்தில் இருக்கக்கூடிய பலரையும் உருவாக்கி விடுவான். ஏதாவதொரு சமயத்தில் எனது இந்த கஷ்ஃபு காட்சியின் விளக்கம் வெளிப்பட்டு விடும். ஆனால் இப்போது வரையுள்ள நிலைமை எவ்வாறு இருக்கின்றது என்றால் இந்த இயக்கத்தை நிலைநாட்டுவதற்காக ஒரு சிறிய விஷயத்தைக் கூட நான் ஜமாஅத்திற்கு முன்னால் வைக்கின்ற போது இந்த விஷயத்தால் ஜமாஅத்திலுள்ள எவரும் சோதனைக்கு ஆளாகி விடக்கூடாதே என்ற எண்ணம் எனது உள்ளத்தில் தோன்றுகிறது.

இப்போது ஒரு முக்கியமான விஷயத்தை எனது ஜமாஅத்தின் முன்னால் நான் வைக்க விரும்புகின்றேன். அது இதுவாகும். அதாவது லங்கர் கானாவிற்காக (இலவச உணவகத்திற்காக) எந்த அளவு எனது ஜமாஅத் அவ்வப்போது உதவி செய்து வருகின்றதென்றால் அது புகழ்ந்து கூறுவதற்கு தகுதியுடையதாக இருக்கின்றது. எனினும், இந்த உதவியில் பஞ்சாப் பெரும் பங்கு வகித்திருக்கின்றது. இதற்கான காரணம் என்னவென்றால் பஞ்சாபிலுள்ள மக்கள் பெரும்பாலும் என்னை சந்திப்பதற்கு வந்து போய் இருக்கின்றனர். உள்ளங்களில் கவனமின்மையின் காரணமாக ஏதாவது கடுமை வந்து விட்டால்

---

அப்போது காதியானில் தான் இருந்தார்கள். 9 பிப்ரவரி 1903–ல் ஆங்கில பத்திரிகையிலும், 17 ஜனவரி 1903–ல் அல் ஹகம் பத்திரிகையிலும், 16 ஜனவரி 1903–ல் அல் பத்ர் பத்திரிகையின் இரண்டாவது பத்தியிலும் இந்த இல்ஹாம் வெளியிடப்பட்டிருக்கின்றது. அது மவ்லவி சாஹிப் கொல்லப்படுவது தொடர்பானதாகும். அந்த இறையறிவிப்பு இதுவாகும். قُتِلَ خَيْبَةً وَزِيْدَ هَيْبَةً அதாவது எந்த நிலைமையில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்றால் அவர் கூறிய விஷயத்தை எவரும் கேட்கவில்லை. அவர்கள் கொல்லப்பட்டது ஒரு கொடிய நிகழ்வாக இருந்தது. அதாவது மக்களுக்கு அது மிகவும் பயங்கரமான சம்பவமாகத் தெரிந்தது. அதன் பெரும் தாக்கம் உள்ளங்களில் ஏற்பட்டது.

நட்பு மற்றும் தொடர் சந்திப்புகளின் விளைவாக அந்த கடுமை மிக விரைவில் அகன்று விடுகின்றது.

எனவே பஞ்சாபிலுள்ள மக்கள் அதிலும் குறிப்பாக சில நபர்கள் தனது அன்பிலும் உண்மையிலும் கலப்பற்ற தன்மையிலும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றனர். இதன் காரணமாகவே ஒவ்வொரு தேவையின் போதும் மிகுந்த ஆர்வத்துடன் அதை அவர்கள் நிறைவேற்றிக் காட்டுகின்றனர். மேலும் உண்மையான கட்டுப்படுதலின் தாக்கம் அவர்களிடமிருந்து வெளிப்படுகின்றது. மேலும் இந்த பகுதியில் வாழ்கின்ற மக்கள் மற்ற பகுதியில் உள்ளவர்களை விட சிறிது மென்மையான உள்ளம் கொண்டவர்களாக இருக்கின்றனர். எனினும் தூரத்திலுள்ள எனது எல்லா சீடர்களையும் பற்றி அவர்கள் இப்போது கலப்பற்ற தன்மையிலும் ஆர்வத்துடன் செயல்படுவதிலும் எந்த பங்கும் வகிக்காமல் இருக்கின்றனர் என்று நான் கருதுவதாக இருந்தால் அது நீதிக்கு புறம்பானதாக இருக்கும். ஏனென்றால் தனது உயிரைத் தியாகம் செய்து இந்த முன்மாதிரியைக் காட்டிய சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களும் கூட, தூரத்திலுள்ள ஒரு பகுதியில் வசிப்பவர்களாகவே இருந்தார்கள்.

அவர்களது உண்மை, நன்றியுணர்வு, கலப்பற்ற தன்மை, ஏற்றுக் கொண்ட கொள்கையில் உறுதியுடன் நிலைநிற்கும் தன்மை ஆகியவற்றிற்கு எதிரில் பஞ்சாபிலுள்ள பெரும் பெரும் தூய உள்ளம் கொண்டவர்களுக்கு கூட வெட்கப்பட வேண்டிய நிலை வருகின்றது. மேலும் (சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப்) அவர்கள் நம் எல்லாருக்கும் பின்னால் வந்தார்கள். எல்லாரையும் விட முன்னேறி முன்னே சென்று விட்டார்கள் என்று கூற வேண்டியது வருகிறது. இவ்வாறே தொலை தூரப் பகுதியிலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் பெரும் பெரும் பொருளாதார உதவிகள் மூலம் தொண்டு செய்துள்ளனர்.

அவர்களது உண்மையிலும் தூய்மையிலும் ஒருபோதும் குறைவு ஏற்படவில்லை.

உதாரணமாக, மத்ராஸைச் சார்ந்த வியாபாரியும் எனது சகோதரருமான சேட் அப்துர் ரஹ்மான் அவர்களும், அவரைப் போன்ற வேறு சில நண்பர்களும் இதே பிரிவில் அடங்குவர். ஆனால் அதிக எண்ணிக்கையின் அடிப்படையில் பஞ்சாபிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால் பஞ்சாபிலுள்ள ஒவ்வொரு மட்டத்திலுள்ள மனிதர்களும் மார்க்கத் தொண்டாற்றுவதில் பெரும் பங்கு வகிக்கின்றனர். தொலைவிலுள்ள மக்கள் நமது இயக்கத்தில் இணைந்திருந்தாலும் அவர்களுக்கு நமது நட்பு குறைவாக கிடைக்கின்ற காரணத்தால் அவர்களது உள்ளம் முழுவதுமாக உலகத்தின் அழுக்குகளிலிருந்து தூய்மை அடையவில்லை. இறுதியில் அவர்கள் தூய்மையடைந்து விடுவர். அல்லது இத்தூய இயக்கத்துடன் அவர்களுக்கு இருக்கும் உறவை இறைவன் துண்டித்து விடுவான் என்பது தெரிய வருகின்றது. அவர்கள் அவமானத்துடன் மரணிப்பர்.

உலகத்தை வணங்குவதுதான் மனிதனின் பெரும் தவறாகும். இந்த துர்பாக்கியமுள்ள, தீய உலகமானது சில நேரங்களில் அச்சுறுத்துவதன் மூலமாகவும், சில நேரங்களில் நம்பிக்கையூட்டுவதன் மூலமாகவும் பெரும்பாலான மக்களை தனது வலையில் விழ வைக்கின்றது. அவர்கள் அதிலேயே மரணித்து விடுகின்றனர். நாங்கள் உலகை விட்டு விட வேண்டுமா என்ன? என்று அறிவற்றவர்கள் கேட்கின்றனர். மேலும் இந்த தவறு மனிதனை ஈமான் இல்லாதவனாக ஆக்கி அவனை அழிக்காத வரையில் அவனை விட்டு விடுவதில்லை.

அறிவற்றவனே! நீ காரணிகளை பயன்படுத்துவதை விட்டு விட வேண்டும் என்று யார் கூறுகின்றார்? ஆனால் உலகம் மற்றும் உலகத்தின் ஏமாற்றங்களிலிருந்து நீ உள்ளத்தை தனிமைப்

–படுத்துவாயாக. அதை செய்யவில்லை என்றால் நீ அழிக்கப்பட்டவனாக ஆகிவிடுவாய். எந்த குடும்பத்திற்காக நீ அளவுக்கு அதிகமாக உழைக்கின்றாயோ, எதுவரையென்றால் இறைவனுக்குரிய கடமைகளைக் கூட முற்றிலும் செய்யாமல் விட்டு விட்டு பல்வேறு வகையான சூழ்ச்சிகளில் ஈடுபட்டு ஒரு ஷய்த்தானாக ஆகிவிடுகின்றாயோ அந்த குடும்பத்திற்காக நீ தீமையின் விதையை விதைக்கின்றாய். அவர்களை அழிக்கின்றாய். ஏனென்றால் இறைவன் உனக்கு அடைக்கலம் வழங்கவில்லை. அதற்கு காரணம் நீ நல்லவனல்லன். இறைவன் உனது உள்ளத்தின் வேரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். நீ அகால மரணமடைவாய். மேலும் உமது குடும்பத்தை அழிவில் ஆழ்த்தி விடுவாய். ஆனால் எவர் அந்த இறைவனின் பக்கம் குனிந்திருக்கின்றாரோ அவருக்கு கிடைக்கும் நற்பாக்கியத்தில் இருந்து அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் கூட பங்கு கிடைக்கும். அவரது மரணத்திற்குப் பிறகு ஒருபோதும் அவர்கள் அழிந்து விட மாட்டார்கள்.

**எந்த மக்கள் என்னுடன் உண்மையான தொடர்பை வைத்திருக்கின்றனரோ அவர்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் கூட அவர்கள் எப்போதும் எனக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றனர். மேலும் இறைவன் அவர்களுக்கு எனது நட்பின் அருள்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்க அவர்கள் துஆக்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.**

**ஆனால் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். அவர்கள் என்னை சந்திக்காமலேயே பல வருடங்கள் கழிந்து விடுகின்றன. ஒரு அஞ்சல் அட்டை கூட அவர்களிடமிருந்து வருவதில்லை. இதன் மூலம் அவர்களது உள்ளங்கள் மரணித்து விட்டன என்பதை**

**நான் உணர்ந்து கொள்கின்றேன். அவர்களது அகத்தில் தொழு நோயின் கறை இருக்கின்றது.**

என்னைப் பொருத்தவரையில் நான் மிகவும் அதிகமாக துஆ செய்கின்றேன். அதாவது எனது ஜமாஅத்தைச் சார்ந்த அனைவரும் இறைவனுக்கு அஞ்சுபவர்களாகவும், தொழுகையில் நிலைத்திருப்பவர்களாகவும் ஆகிவிட வேண்டும். இரவில் எழுந்து பூமியில் விழுந்து இறைவன் முன்னிலையில் சிரம்பணிந்து அழுபவர்களாகவும், இறைவனுக்குரிய கடமைகளை வீணாக்காமல் இருப்பவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும். கருமித்தனம் கொண்டவர்களாகவும் நன்மைகளிலிருந்து தம்மை தடுத்துக் கொள்பவர்களாகவும், கவனமற்றவர்களாகவும், உலகின் கிருமிகளாகவும் அவர்கள் இருக்கக் கூடாது என்று நான் அதிகமாக துஆ செய்கின்றேன்.

எனது இந்த துஆக்களை இறைவன் ஏற்றுக் கொள்வான் என்று நாம் நம்புகின்றேன். அதாவது எனக்குப் பின்னால் அத்தகைய மக்களை நான் விட்டுச் செல்வதை இறைவன் எனக்குக் காட்டுவான். ஆனால் எந்த மக்களது கண்கள் விபச்சாரம் செய்கின்றதோ, மேலும் எவர்களது உள்ளங்கள் மலத்தை விட மிகவும் அசுத்தமானதாக இருக்கின்றதோ, எவர்களுக்கு மரணிப்பது ஒருபோதும் நினைவில் இருப்பதில்லையோ அத்தகையவர்களை விட்டு நானும் எனது இறைவனும் விலகி விட்டோம்.

அத்தகைய மக்கள் இந்த (ஜமாஅத்தின்) தொடர்பை துண்டித்துக் கொண்டால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். எவர்களது முன்மாதிரியின் மூலமாக மக்களுக்கு இறைவன் நினைவில் வருவானோ அத்தகைய மக்களைக் கொண்ட சமுதாயமாக இந்த ஜமாஅத்தை இறைவன் உருவாக்க விரும்புகின்றான். அவர்கள் இறையச்சத்திலும், தூய்மையிலும் முதல் தகுதியில் நிலைநிற்கின்றனர். அவர்கள் உண்மையிலேயே உலகை

விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளனர். ஆனால் எந்த குழப்பவாதிகள் எனது கைகளுக்கு கீழ் கைகளை வைத்தவாறு உலகத்தை விட நாங்கள் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளோம் என்று கூறிவிட்டு பிறகு தமது வீடுகளுக்குச் சென்று முழுக்க முழுக்க உலகம் மட்டுமே அவர்களது உள்ளங்களில் இருக்கின்ற வகையில் எத்தகைய குழப்பங்களில் ஈடுபடுகின்றனர் என்றால் அவர்களது பார்வையும் தூய்மையாக இருப்பதில்லை. அவர்களது உள்ளமும் தூய்மையாக இருப்பதில்லை. அவர்களது கைகளால் எந்தவொரு நன்மையும் ஏற்படுவதில்லை. அவர்களது பாதங்களும் ஒரு நல்ல பணியை செய்வதற்காக செல்வதில்லை.

அவர்கள் இருளிலேயே வளர்கின்ற எலியைப் போன்றவர்கள் ஆவர். அது அந்த இருளிலேயே வசித்து அதிலேயே மரணிக்கின்றது. அத்தகையவர்கள் வானத்தில் நமது இயக்கத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு விட்டனர். அவர்கள் தாங்கள் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் என்று வீணாக கூறுகின்றனர். ஏனென்றால் வானத்தில் அவர்கள் இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களாக கருதப்பட மாட்டார்கள்.

எந்த நபர் உண்மையில் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதையும் உண்மையிலேயே ஒரு தூய புரட்சி அவரிடம் ஏற்பட வேண்டும் என்பதையும், அவர் தூய உள்ளமும், தூய எண்ணமும் கொண்டவராகவும், அசுத்தம் மற்றும் ஹராமான செயல்களின் எல்லா ஆடையையும் தனது உடலிலிருந்து தூக்கி எறிந்து விட வேண்டும் என்பதையும், மனித இனத்தின் மீது அனுதாபம் காட்டுபவராகவும், இறைவனுக்கு உண்மையான முறையில் கீழ்ப்படிபவராகவும், தனது எல்லா சொந்த ஆசைகளுக்கும் பிரியா விடை கொடுத்து விட்டு என்னைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் நான் குறிப்பிட்டிருக்கின்ற எனது இந்த உயிலை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றாரோ நான் அத்தகைய

நபரை பிணங்கள் எறியப்படுகின்ற மற்றும் அழுகிப் போன உயிரற்ற சடலங்கள் இருக்கின்ற அந்த இடத்தை விட்டு விலகிச் செல்லாமல் இருக்கின்ற அந்த நாயுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றேன். அம்மக்கள் நாவளவில் என்னுடன் இருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறு வெளித் தோற்றத்தில் பார்ப்பதற்காக மட்டும் ஒரு ஜமாஅத்தாக இருக்க வேண்டும் என்பதன் தேவையை உடையவனாக நான் இருக்கின்றேனா என்ன?

**நான் உண்மையாகவே கூறிக் கொள்கின்றேன். எல்லா மக்களும் என்னை விட்டு விட்டுச் சென்றாலும் அவர்களில் ஒருவர் கூட என்னுடன் இல்லாமல் இருந்தாலும் எனது இறைவன் எனக்காக இன்னொரு சமுதாயத்தை உருவாக்குவான். அது உண்மையிலும் நன்றியுணர்விலும் அவர்களை விட சிறந்த சமுதாயமாக இருக்கும்.**

இந்த விண்ணின் ஈர்ப்பே வேலை செய்து கொண்டிருக் –கின்றது. அதன் காரணமாக நல்லுள்ளம் கொண்ட மக்கள் என் பக்கம் ஓடி வருகின்றனர். வானத்தின் ஈர்ப்பை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. சில மக்கள் இறைவனை விட அதிகமாக தனது திட்டம் மற்றும் தந்திரத்தின் மீது நம்பிக்கை வைக்கின்றனர். நபித்துவம் மற்றும் தூதுத்துவம் ஆகிய இவை அனைத்தும் மனிதனின் சூழ்ச்சியாக இருக்கின்றது என்றும் தற்செயலாகத்தான் இந்த புகழ்களும் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மையும் கிடைத்து விடுகின்றது என்ற விஷயமும் ஒருவேளை அவர்களது உள்ளங்களில் மறைவாக இருக்கலாம். இந்த எண்ணத்தை விட வேறு எந்த எண்ணமும் மிகவும் அசுத்தமானதாக இருக்காது.

எந்த இறைவனின் நாட்டம் இல்லாமல் ஓர் இலை கூட உதிர முடியாதோ அந்த இறைவன் மீது அத்தகைய மனிதனுக்கு நம்பிக்கை இல்லை. அத்தகைய உள்ளங்களும் அத்தகைய இயல்பை உடையவர்களும் சாபத்திற்கு உரியவர் ஆவர். இறைவன் அவர்களை

இழிவுடன் அழித்து விடுவான். ஏனென்றால் அவர்கள் இறைவனின் செயல் திட்டத்தின் எதிரிகளாக இருக்கின்றனர். அத்தகைய மக்கள் உண்மையிலேயே நாத்திகர்களாகவும் அசுத்தமான ஆன்மாவை உடையவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் நரக வாழ்க்கையின் நாட்களை கழித்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அவர்கள் மரணமடைந்த பிறகு நரக நெருப்பைத் தவிர அவர்களது பங்கில் வேறு எதுவும் இருக்காது.

இப்போது சுருக்கமாக நான் இதனைக் கூறுகின்றேன். அதாவது லங்கர் கானா (இலவச உணவகம்) மற்றும் ஆங்கிலத்திலும் உருதுவிலும் வெளிவருகின்ற பத்திரிகை –களுக்காக நமது பெரும்பாலான நண்பர்கள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி உள்ளனர். இதைத் தவிர ஒரு மதரஸாவும் கூட காதியானில் திறக்கப்பட்டிருக்கின்றது. இதனால் கிடைக்கும் பலன் என்னவென்றால், ஒருபுறம் நமது இளைய தலைமுறையினர் கல்வியை பெறுகின்றனர். மறுபுறம் நமது இயக்கத்தின் கொள்கைகள் பற்றியும் அவர்கள் தெரிந்து கொள்கின்றனர். இவ்வாறு மிக எளிதாக ஒரு ஜமாஅத் ஆயத்தமாகி விடுகின்றது.

இன்னும் சொல்வதென்றால் சில நேரங்களில் அவர்களது பெற்றோர்கள் கூட இந்த இயக்கத்தில் இணைந்து விடுகின்றனர். ஆனால் இந்த நாட்களில் நமது இந்த மதரஸா பெரும் கஷ்டங்களை சந்தித்து வருகின்றது. மாலேர் கோட்லாவின் தலைவரும், எனது நேசத்திற்குரிய நண்பரும் உறவினருமான எனது சகோதரர் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்கள் தன் தரப்பிலிருந்து மாதந்தோறும் இந்த மதரஸாவிற்காக 80 ரூபாயை வழங்கி உதவி செய்கின்றார்கள். அவ்வாறிருந்தும் கூட ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை மாதந்தோறும் முறையாக செலுத்த முடியவில்லை. நூற்றுக்கணக்கான ரூபாய்கள் கடனாக கொடுக்க வேண்டியதுள்ளது. இதைத்தவிர மதரஸாவை ஒட்டி

கட்டப்பட வேண்டிய தேவையான பல கட்டடங்களையும் இதுவரை கட்ட முடியவில்லை. ஏனைய துக்கங்களைத் தவிர்த்து இந்த துக்கமும் எனது உயிரைக் குடித்துக் கொண்டிருக்கின்றது. அது குறித்து நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி மிகவும் சிந்தித்தேன். இறுதியில் இந்த திட்டம் எனது எண்ணத்தில் வந்தது. அதாவது நான் இந்த நேரத்தில் எனது ஜமாஅத்தைச் சார்ந்த தூய உள்ளம் கொண்ட அன்பர்களுக்கு மிகவும் வலியுறுத்தி இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்ட வேண்டும். அதாவது இந்த மதரஸாவிற்காகவும், முழுமையான கவனத்துடன் அவர்கள் ஏதாவது மாதாந்திர சந்தாவை வாக்குறுதியாக நிர்ணயிக்க வேண்டும். அதாவது அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு கண்டிப்பான உடன்படிக்கையை செய்தவாறு ஏதாவதொரு தொகையை நிர்ணயம் செய்ய வேண்டும். இறைநியதிக்கேற்ப ஏதாவதொரு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டாலேயொழிய அவர்தான் செய்த வாக்குறுதியை ஒருபோதும் மீறக்கூடாது.

எவர்களால் இதில் பங்கு பெற முடியவில்லையோ அவர்களுக்கு மாற்றுத் திட்டமாக இந்த ஆலோசனை வழங்கப்படுகின்றது. அதாவது எவ்வளவு தொகையை அவர்கள் லங்கர் கானாவிற்காக அனுப்புகின்றனரோ அதில் நான்கில் ஒரு பங்கை (அதாவது கால் பங்கு தொகையை) நேரடியாக மதரஸாவிற்காக நவாப் சாஹிப் அவர்களது பெயரில் அனுப்பி வையுங்கள். அதை லங்கர் கானாவிற்காக அனுப்பும் தொகையுடன் சேர்த்து ஒருபோதும் அனுப்ப வேண்டாம். மாறாக, தனியாக Money Order (பண அஞ்சல்) மூலமாக அதை அனுப்பி வையுங்கள். லங்கர் கானாவின் தேவைகள் குறித்து ஒவ்வொரு நாளும் நான் கவலைப்பட வேண்டியது இருந்தாலும், அது பற்றிய துக்கம் நேரடியாக என்னைச் சார்ந்திருந்தாலும் எனது நேரங்களை கவலையுள்ளவையாக அவை ஆக்கினாலும் மதரஸா தொடர்பான

இந்த துக்கத்தையும் கூட என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. எனவே இதனை நான் எழுதுகின்றேன். அதாவது இந்த இயக்கத்தைச் சார்ந்த நன்மக்கள் எனது இந்த வேண்டுகோளை வீணான பொருள் போன்று தூக்கி எறிந்து விட மாட்டார்கள் என்றும், முழுமையான கவனத்துடன் செயல்படுவார்கள் என்றும் எல்லா வகையிலும் நான் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கின்றேன்.

நான் என் தரப்பிலிருந்து எதையும் கூறவில்லை. மாறாக, எதை இறைவன் எனது உள்ளத்தில் இட்டுள்ளானோ அதையே நான் கூறுகின்றேன். நான் நன்றாக சிந்தித்துள்ளேன். மீண்டும் மீண்டும் இது பற்றி ஆய்வு செய்துள்ளேன். நான் அறிந்த வரையில் காதியானிலுள்ள இந்த மதரஸா நிலைத்து நின்று விட்டால் அது பெரும் அருள்களுக்கு காரணமாகி விடும். மேலும் அதன் மூலமாக புதிதாக கல்வி கற்றவர்களின் ஒரு படை நம்மிடம் வர முடியும். பெரும்பாலான மாணவர்கள் மார்க்கத்திற்காக அல்லாமல் உலகத்தை பெற வேண்டும் என்பதற்காகவே படிக்கின்றனர். அவர்களது பெற்றோர்களின் எண்ணங்களும் கூட இந்த நோக்கங்களின் எல்லைக்குட்பட்டதாகவே இருக்கின்றன என்பதையும் கூட நான் அறிந்திருக்கின்றேன். ஆனால் அவ்வாறிருந்தும் கூட ஒவ்வொரு நாளும் அவர்கள் இருந்து வரும் நட்பினால் கண்டிப்பாக தாக்கம் ஏற்படும். இருபது மாணவர்களில் ஒருவரது இயல்பு மார்க்க விஷயங்களின் பக்கம் விருப்பமுடையதாக ஆகி விட்டால் மேலும் அவர் நமது இயக்கம் மற்றும் நமது போதனைகளுக்கேற்ப செயல்பட ஆரம்பித்து விட்டால் அப்போது கூட நாம் இந்த மதரஸாவின் அடித்தளத்தை நிறுவியதன் மூலமாக நமது நோக்கத்தை அடைந்து விட்டோம் என்றே நான் கருதுவேன்.

இறுதியில் இதையும் நினைவில் வைக்க வேண்டும். அதாவது இந்த மதரஸா எப்போதும் உறுதியற்ற மற்றும் பலவீனமான நிலையில் இருக்காது. மாறாக, இதில் படிப்பவர்கள் வழங்குகின்ற

கட்டணத் தொகை மூலமாக பல உதவிகளும் கிடைக்கும். அல்லது அதுவே போதுமானதாக ஆகிவிடும். எனவே அந்த நேரத்தில் லங்கர் கானாவிற்கு தேவையான தொகையிலிருந்து ஒரு பங்கை மதரஸாவிற்கு உதவி செய்வதற்காக கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது.

அந்த விரிவான உறுதியான நிலை உருவாகும் போது நமது இந்த வழிகாட்டல்கள் ரத்தாகி விடும். அப்போது உண்மையில் ஒரு மதரஸாவாக இருக்கின்ற லங்கர் கானாவும் கூட தனக்கு சொந்தமான நான்கில் ஒரு பகுதி தொகையை மீண்டும் திரும்பப் பெற்றுக் கொள்ளும். லங்கர் கானாவிற்கு துன்பத்தைத் தரக்கூடிய இந்த கஷ்டமான வழிமுறையை நான் மேற்கொண்டதற்கு இந்த காரணம் மட்டுமே வெளிப்படையாக இருப்பதாக எனக்குத் தெரிய வருகிறது.

அதாவது எந்த அளவு உதவி தேவைப்படுகின்றதோ ஒருவேளை அது இந்த புதிய சந்தாவின் மூலமாக நிறைவேறாமல் போய் விடலாம். ஆனால் இறைவனின் அருளால் அது நிறைவேறி விட்டால் மற்ற தொகையிலிருந்து இதற்காக பிரித்து எடுக்க வேண்டிய தேவை இருக்காது. லங்கர் கானாவும் கூட ஒரு மதரஸாவாகும் என்று நான் கூறுவதற்கு காரணம் எந்த விருந்தினர்கள் என்னிடம் வந்து போகின்றனரோ, எவர்களுக்காக லங்கர் கானா இயங்கி வருகின்றதோ அவர்கள் எனது போதனையைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். எந்த மக்கள் எல்லா நேரமும் எனது போதனைகளை கேட்கின்றனரோ இறைவன் அவர்களுக்கு நேர்வழியை வழங்குவான். மேலும் அவர்களது உள்ளங்களைத் திறப்பான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். இப்போது நான் இந்த அளவு கூறியதுடன் முடித்துக் கொள்கின்றேன். எந்த குறிக்கோளை நான் எடுத்து வைத்துள்ளேனோ எனது ஜமாஅத்திற்கு அதை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை

வழங்குமாறு நான் இறைவனிடம் வேண்டுகின்றேன். அவன் அவர்களது செல்வங்களில் அருள் புரிவானாக! இந்த நன்மையான பணிக்காக அவர்களது உள்ளங்களை திறப்பானாக! ஆமீன்; சும்ம ஆமீன்.

والسّلام علٰی من اتّبع الھُدیٰ

(நேர்வழியை பின்பற்றுபவர் மீது சாந்தி நிலவட்டுமாக!)

16 அக்டோபர் 1903

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

الوقتُ وقتُ الدّعاءِ لا وقت الملاحم وقتل الأعداء

**இந்த நேரம் துஆவிற்கான நேரமாகும். போர் செய்வதற்கான நேரமோ, எதிரிகளைக் கொலை செய்வதற்கான நேரமோ அல்ல**

அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியை வழங்குவானாக. ஜிஹாது செய்வதற்காக சமுதாயத்தை ஆயத்தம் செய்து அதற்கான தகுதியுடையவர்களை நகரத்திலிருந்தும் கிராமத்திலிருந்தும் அழைத்து மக்களைப் போரில் பங்கு பெற வைத்து அவர்கள் படையின் உதவியை பெறுவது, மக்களை ஒன்று திரட்டுவது, சிங்கங்களை களத்தில் கொண்டு வருவது ஆகியவற்றில் வெற்றி காண்பது இவை எல்லாவற்றையும் விட விவகாரம் தற்போது பெரியதாக ஆகிவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் நமது இந்த நாட்டிலும், அரேபியாவிலும், ரோமாபுரியிலும் மற்றும் சிரியாவிலும் கூட முஸ்லிம்கள் எல்லாரையும் விட பலவீனமான சமுதாயமாக இருப்பதை நாம் பார்க்கின்றோம்.

அவர்களிடத்திலும் போர் செய்வதற்கான ஆற்றல் எஞ்சியிருக்கவில்லை. அவ்வாறே அம்பு எய்வது மற்றும் வாள் வீச்சு பற்றி அறியாதவர்களாக அவர்கள் இருக்கின்றனர். ஆனால் நிராகரிப்பாளர்கள் போர் திறமைகளில் மிகவும் ஈடிணையற்றவர் –களாக உள்ளனர். அவர்கள் முஸ்லிம்களை வேரறுப்பதற்காக எல்லா வகையான ஆயத்தமும் செய்திருக்கின்றனர். எதிரிகள் ஒவ்வொரு உயரத்தையும் தாண்டி சென்று கொண்டிருக்கின்றனர். இரண்டு படைகளுக்கிடையில் மோதல் ஏற்படும் போதெல்லாம் எதிரிகளே வெற்றி பெறுகின்றனர் என்பது நமக்குத் தெரிகின்றது. இந்த காட்சியின் மூலமாக இந்த நேரம் துஆ செய்வது மற்றும்

மேலான இறைவன் முன்னிலையில் பணிவுடன் மன்றாடுவதற்கான நேரமாகும்; இது போர்கள் புரிவதற்கான மற்றும் எதிரிகளை கொலை செய்வதற்கான நேரம் அல்ல என்ற விஷயம் வெளிப்பட்டு விட்டது.

எவர் நெருக்கடியான நேரத்தை புரிந்து கொள்வதில்லையோ அவர் தம்மைத்தாமே அழிவில் ஆழ்த்திக் கொள்கின்றார். அப்படிப்பட்டவர் எல்லா வகையான மோசத்தையும், இழிவையும் சந்திப்பார். முஸ்லிம்களின் போர்க்கொடி தலைகீழாக ஆக்கப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? அம்புகளாலும், வாள்களாலும், கைகளாலும் போர் புரிபவர்கள் எங்கே? வாள்கள் உறைகளில் வைக்கப்பட்டு விட்டது. அம்புகள் உடைக்கப்பட்டு விட்டன. முஸ்லிம்களின் உள்ளங்களில் திகில் ஏற்பட்டு விட்டது.

நீர் ஒவ்வொரு களத்திலும் அவர்கள் புறமுதுகு காட்டி ஓடுவதைக் காண்கின்றீர். போர் அவர்களது வாழ்க்கைகளை பறித்து விட்டன. அவர்களது தங்கங்களையும், ரத்தினங்களையும், சொத்துக் –களையும் அது அழித்து விட்டது. இந்த போர்களின் மூலமாக மார்க்கத்தின் எந்த விவகாரத்திலும் இதுவரை சீர்திருத்தம் ஏற்படவில்லை. மாறாக, குழப்பங்கள் அலைஅலையாய் எழுந்தன. மேலும் அவை அதிகரித்துக் கொண்டே சென்றன. குழப்பத்தின் கொடுங்காற்று சமுதாயத்தை அழித்து நாசமாக்கி விட்டது. இஸ்லாத்தின் கோட்டையின் மேற்கூறை விழுந்து விட்டது. அவற்றின் மகத்துவங்கள் மண்ணில் புதைந்து விட்டன. பிறகு வாளையும் அம்புகளையும் தொங்க விடுவதனால் என்ன பலன் கிடைக்கப் போகின்றது?

இரத்தம் சிந்தப்பட்டது. செல்வங்கள் அழிக்கப்பட்டன. காலம் விரயமாகி விட்டன. ஏக்கங்கள் அதிகரித்துப் போயின. இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்பட்டதைத் தவிர இதுவரை உங்களது எந்த ஆசை நிறைவேறி இருக்கின்றது. படைகள் உங்களுக்கு எந்த பலனையும் தரவில்லை. எனினும் போர் கொளுந்து விட்டு எரிந்த போது நீங்கள் நசுக்கப்பட்டீர்கள்.

எனவே நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். இந்த காலத்தின் வெற்றிக்காக எனக்கு வானத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள ஆயுதம் 'துஆ' ஆகும். நண்பர்களே! இந்த ஆயுதம் இல்லாமல் நீங்கள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. எல்லா நபிமார்களும் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இந்த ஆயுதத்தைக் குறித்தே தெரிவித்துள்ளனர். அவர்கள் அனைவரும் "வாக்களிக்கப்பட்ட மஸீஹ் போர் மற்றும் சமுதாய மக்களின் இரத்தத்தை ஓடச் செய்யாமல் துஆ மற்றும் அல்லாஹ்வின் முன்னிலையில் மன்றாடுவதன் மூலமாகவே வெற்றியைப் பெறுவார்" என்றே கூறினர். துன்பத்தை அகற்றுவதற்காக முழுமையான தைரியத்துடனும் உண்மையுடனும், பொறுமையுடனும் அல்லாஹ்வின் பக்கம் குனிவதே துஆவின் உண்மை நிலையாகும்.

அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்கள் இழப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு பொருளை அகற்றுவதற்காக மன்றாடியவாறு உலகிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் தன்னைப் படைத்த இறைவனின் பக்கம் கவனம் செலுத்தும் போது இறைவன் அவர்களின் துஆவை சிறிது காலத்திற்கு பிறகோ அல்லது உடனடியாகவோ கண்டிப்பாக கேட்கின்றான். இவ்வாறே அல்லாஹ்வின் நடைமுறை செயல்படுகின்றது. அவர்கள் முழுமையான முறையில் அல்லாஹ்வுடன் ஒன்றிவிட்ட பிறகு தேவைகளற்றவனாகிய இறைவனின் அருளானது அவர்கள் மீது இறங்குகின்ற சோதனையையும் துன்பத்தையும் அகற்றுவதற்காக அவர்கள் மீது கவனம் செலுத்துகின்றது. பேரிடர்கள் இறங்குகின்ற போது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவது எல்லாவற்றையும் விட பெரிய அற்புதமாகும்.

பிறகு இவ்வாறே இறுதி காலத்திற்காக அதாவது ரஹ்மானாகிய இறைவனின் தூதராகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்திற்காக போர்க்களத்தின் அணி சுருட்டப்படுவதும்,

வார்த்தைகள் மூலமாக உள்ளங்கள் திறக்கப்படுவதும், நேர்வழியை காட்டுவதன் மூலமாக நெஞ்சங்கள் விரிவுபடுத்தப்படுவதும் விதிக்கப்பட்டிருந்தது. அல்லது பிளேக் அல்லது வேறொரு கடுமையான பெருந்துன்பம் மூலமாக மக்கள் கல்லறைகளின் பக்கம் கொண்டு செல்லப்படுவர்.

மேலும் அல்லாஹ் மறுப்பிற்கு இழிவை விதிக்கவும் விண்ணில் உயர்வான நிலையைப் பெற்றுள்ள அந்த மார்க்கத்திற்கு மண்ணிலும் மேன்மையை வழங்கவும் தீர்மானித்துள்ளான். சந்தேகமின்றி எனது இந்த பாதங்கள் மறுப்பவர்களின் யுத்த பூமியில் இருக்கின்றது. எனக்கு எனது இறைவனிடமிருந்து கண்டிப்பாக உதவி கிடைக்கும். இறைவனின் கட்டளை செயல்படுத்தப்படும். இறைவனின் வார்த்தை நிறைவேறும். இதுவே விண்ணிலிருந்து நான் இறங்குவதன் உண்மை நிலையாகும்.

நான் பூமியிலுள்ள படைகள் மூலமாக அல்லாமல் மேன்மைமிக்க இறைவனது மலக்குகள் மூலம் வெற்றி பெறுவேன். மறுக்க முடியாத விதி மற்றும் மாறாத இறைநியதி ஆகியவற்றிற்குப் பிறகு துஆவிற்கு என்ன பொருள்**?** என்று கேட்கப்படுகிறது. இந்த இரகசியம் எத்தகைய வழியாக இருக்கின்றது என்றால் அதில் மதி தடுமாற்றமடைந்து திசைமாறிச் சென்று விடுகின்றது. மேலும் வெளிப்படையான விஷயங்களைப் பின்பற்றிச் செல்பவர் அழிந்து விடுகின்றார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த ரகசித்தை பாவ மன்னிப்பு கேட்பவர் மட்டுமே அறிந்து கொள்கின்றார். பாவ மன்னிப்பு செய்வதன் மூலமாக அது உருகி விடுகின்றது.

எனவே குறைமதியுடையவர்களே! நீங்கள் சண்டைகளை அதிகரித்துக் கொண்டே செல்லாதீர்கள். நான் கூறுவதை மூளையில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், நான் அறிஞனாகவும், தளர்வில்லாமல் பணியாற்றக் கூடியவனாகவும் இருக்கின்றேன். இஸ்லாத்துடன் உங்களுக்கு இருக்கும் தொடர்பு வெறுமனே ஓர்

அடையாளமாகவும் பிறருக்கு காட்டுவதற்காக செய்யப்படும் ஒரு சடங்காக மட்டுமே இருக்கின்றது.

எனவே எந்த நபர் நான் கூறும் இந்த உண்மைகளை கவனமாக காது கொடுத்துக் கேட்பாரோ இன்பமும் ஆர்வமும் கொண்டுள்ள நிம்மதியிழந்த ஒரு நபரைப் போன்று நமது பக்கம் விரைவாக ஓடி வருவாரோ அப்படிப்பட்டவருக்கு நான் எத்தகைய பாதுகாப்பை வழங்குவேன் என்றால் அது அவரது எல்லா ஐயங்களையும், சந்தேகங்களையும் அகற்றி விடும். அது அவரது (உள்ளத்தின்) பாத்திரத்தை நிறைத்து விடும். அந்த இரகசியம் இதுவாகும்.

அதாவது அல்லாஹ் தொன்றுதொட்டே சில பொருட்களை மற்ற சில பொருட்களுடன் தொடர்புள்ளதாக ஆக்கியுள்ளான். அவ்வாறே அவன் இறைநியதியை கூட வேதனையுள்ள மற்றும் நிம்மதியிழந்த மனிதனின் துஆவுடன் தொடர்புடையதாக ஆக்கியுள்ளான். பிறகு எந்த நபர் வேதனையுடன் சிந்தப்படுகின்ற கண்ணீருடனும் அழும் கண்களுடனும் நெருப்பு எரியும் அடுப்பில் வைக்கப்பட்டதைப் போன்று அமைதியிழந்த உள்ளத்துடனும் கண்ணியமிக்க இறைவனின் பக்கம் ஓடி வருவாரோ அப்படிப் –பட்டவருக்காக அல்லாஹ்வின் புறமிருந்து துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அலையானது இயங்க ஆரம்பித்து விடுகின்றது.

அந்த நபருக்கு அவரது உயிரை அழிக்கின்ற வேதனையிலிருந்து இரட்சிப்பு வழங்கப்படுகின்றது. ஆனால் அல்லாஹ்விற்காக தன்னை மாய்த்துக் கொண்டவாறு எல்லாவற்றையும் நன்கு அறிந்துள்ள தனது அன்பிற்குரிய இறைவனுக்கு முன்னுரிமை வழங்குபவருக்கு மட்டுமே இந்த அந்தஸ்து கிடைக்கின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர் சிலைகளுக்கு ஒப்பாக இருக்கின்ற ஒவ்வொரு பொருளையும் விட்டு விட வேண்டும். குர்ஆனின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும்.

தனது அரசனின் முன்னிலையில் ஆஜராகி விட வேண்டும். தனது எஜமானனுக்கு எவ்வாறு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றால் அவனிடம் தன்னை மாய்த்துக் கொள்ள வேண்டும். எல்லா வகையான மன விருப்பங்களிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். மக்கள் சிற்றுறக்கத்தில் இருக்கின்ற காலத்தில் அவர் தன்னை விழித்திருக்கும் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

சந்தேகங்களை ஏற்படுத்துபவரை தொலைவில் வைத்திருக்க வேண்டும். தமது இறைவனிடத்திலும் அவனது நியதியிலும் திருப்தியடைய வேண்டும். நேசத்திற்குரிய இறைவனின் வீட்டில் சேர்க்கப்பட்ட பிறகு அவர் தனது பலவீனங்களையும் மனதின் விருப்பங்களின் விளைவாக உருவாகின்ற பாவத்தின் அந்த எல்லா அசுத்தங்களையும் தூய உள்ளம், உறுதியான எண்ணம், உயர்வான உண்மை ஆகியவற்றின் மூலம் அகற்றியவாறு அவற்றை அவன் முன்னால் எடுத்து வைக்க வேண்டும்.

இத்தகைய மக்களின் துஆக்கள் வீணாவதில்லை. அவர்களின் வார்த்தைகள் மறுக்கப்படுவதில்லை. மேலும் எவர் தமது இறைவனுக்காக மரணிப்பதற்கு முன்னுரிமை வழங்கினாரோ அவருக்கு வாழ்வு வழங்கப்படுகின்றது. மேலும் எவர் அவனுக்காக இழப்பை ஏற்றுக் கொள்வதில் திருப்தியடைவாரோ அவர் பக்கம் அருள்கள் திரும்ப அனுப்பப்படுகின்றன. ஆகவே, நீங்கள் கதவுக்கு வெளியில் நின்றவாறு அதற்கு ஆசைப்படாதீர்கள். காத்தோம்புபவர் –களுக்கு எல்லாம் இறைவனாக இருப்பவன் முன்னால் ஆஜராகக் கூடியவருக்கே இந்த அறிவு தரப்படுகின்றது. மேலும் இந்த உறுதியானது, அனுபவங்களினாலும் கிடைக்கின்றது. மேலும் அனுபவம் எப்படிப்பட்ட விஷயம் என்றால் அதன் மூலமாக வியப்பிற்குரிய விஷயங்களின் கதவுகள் திறக்கப்படுகின்றன.

எவர் இறைவனை அடையும் வழி பற்றிய உரையாடலில் ஈடுபடுவதில்லையோ, அரசர்களுக்கெல்லாம் அரசனான

இறைவனைப் பார்ப்பதற்காக நாட்டைத் துறந்து பாலைவனத்தை கடந்து செல்வதில்லையோ, அத்தகைய அறிவற்ற, அனுபவமற்ற மனிதர் மீது இறைவனின் இரகசியம் எப்படி வெளிப்படும்? எனினும் எவர் இறைஞானிகளின் வழியில் நடக்கின்றாரோ அவர் அகிலங்களின் இறைவனின் அழகிய அரிதான உரையாடலிலிருந்து கண்டிப்பாகப் பங்கை பெறுவார்.

எல்லாவற்றையும் விட இறைநெருக்கத்தை பெறும் வழியில் செல்பவர் காண்கின்ற அழகிய காட்சியானது துஆ ஏற்றுக் கொள்வத(ன் அடையாளம)ாகும். இறைநேசர்களின் துஆக்களை ஏற்றுக் கொள்கின்ற அந்த இறைவன் தூயவன் ஆவான். பரஸ்பரம் உங்களில் ஒருவர் மற்றவருடன் உரையாடுவது போன்று அவன் அவர்களிடம் உரையாடுகின்றான். இன்னும் சொல்லப்போனால், அவனது அந்த சொற்கள் ஆன்மீக ஆற்றலின் காரணமாக உங்களது சொற்களை விட மிக அதிகமாக தூய்மை கொண்டதாகவும், தெளிவானதாகவும் இருக்கின்றது. மேலும் அவன் தனது ஒளிமயமான இன்பமான சொற்களின் மூலமாக அவர்களை தன் பக்கம் ஈர்க்கின்றான். அதன் காரணமாக (இறைநேசர்களாகிய) அவர்கள் தங்கள் மனைவி, மக்கள், செல்வம், பொருள் ஆகிய எல்லாவற்றிற்கும் பிரியாவிடை கூறியவாறு தீங்கு விளைவிக்காத தன்னந்தனியாக செல்கின்ற உயர் ரக குதிரையில் சவாரி செய்தவாறு தமது ஏக இறைவனின் பக்கம் பயணம் மேற்கொள்கின்றனர். இவர்களே இறைவன் மீது ஆணையிட்டு இறைவனுக்கே முன்னுரிமை வழங்குவோம்; அவனது அடையாளங்களை மட்டுமே வேண்டுவோம்; அவனது வசனங்களையே பின்பற்றி நடப்போம் என்று அவனிடம் உடன்படிக்கை செய்திருக்கின்ற அந்த சமுதாயத்தினர் ஆவர். இறைவனின் வேதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கேற்ப முற்றிலும் செயல்படக் கூடியவர்களாக அவர்கள் இருப்பதை

அல்லாஹ் பார்க்கின்றபோது அவன் அவர்களுக்காக தனது இறைஞானத்தின் எல்லா கதவுகளையும் திறந்து விடுகின்றான்.

அதாவது இறைஞானம் மேலும் அதிகமாவதற்குரிய மகத்தான விஷயம், அடியானின் தரப்பிலிருந்து எழும் துஆவிற்கான வாசலாக இருக்கின்றது என்பதை நீர் அறிந்து கொள்வீராக. மேலும் இறைவன் தரப்பிலிருந்து இறையறிவிப்பு கிடைப்பதாக இருக்கின்றது. துஆ செய்து இறைவனிடம் மன்றாடுகின்ற வேளையில் இறைவன் கூறும் பதில் மூலம் கிடைக்கின்ற இறை தரிசனம் இல்லாமல் கண்கள் திறப்பதில்லை. எவருக்கு இறைவன் இந்த வாசலை திறந்து தரவில்லையோ அவர் பொய்யான விஷயங்களால் ஏமாற்றத்திற்கு ஆளாகி விடுவார்.

அவர் கம்பீரமிக்க இறைவனின் முகத்தை அறியாதவராக இருக்கின்றார். இதனால் அவர் தனது இறைவனை விட்டு விடுகின்றார். மேலும் இந்த கீழ்த்தரமான உலகப் பதவிகளின் பக்கம் குனிந்து விடுகின்றார். அவரது உள்ளம் அழிந்து போகின்ற பொருட்களின் மீது பேரன்பு கொள்கின்றது. மேலும் அப்படிப்பட்டவர் விருப்பங்களைக் கைவிட்டு விட்டு, வாழ்வின் முடிவை அடையும் தருணத்தில் ஏற்படும் ஏக்கம் குறித்தும் இந்த அழிந்து போகும் வீட்டை விட்டு விட்டுப் பயணம் மேற்கொள்ள வேண்டியதிருப்பது பற்றியும் அறியாதவராக இருக்கின்றார்.

அவர் மரணத்தை நினைவு கூர்வதில்லை. அது அவரது தங்குமிடத்தை ஏக்கம் மற்றும் ஏமாற்றத்தின் வீடாகவும், சிலந்தி வலையை விட மிக பலவீனமானதாகவும், சுகத்தை தரக்கூடிய பொருள்களை விட்டு வெகு தொலைவிலும் இருப்பதாக ஆக்கிவிடும். அல்லாஹ் தனது ஏதாவதோர் அடியாருக்கு நன்மையை நாடுகின்ற போது வெற்றியின் பக்கம் அழைப்பவர் (அதாவது வானவர்) அவரது உள்ளத்தில் குரல் கொடுக்கின்றார். அப்போது திடீரென்று இரவு விடியற்காலையை விடவும் அதிகமாக பிரகாசமாக ஆகி விடுகின்றது.

தூய்மைப்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் ஆன்மாவும் கருணைமிக்க இறைவனின் பேரருளால் உருவாக்கப்பட்டதாக இருக்கின்றது. மேலும் ஒப்புயர்வற்ற படைப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவனுமாகிய இறைவனின் தர்பிய்யத் இல்லை என்றால், மனிதன் ஒரு புழுவிற்கு ஒப்பானவனாய் ஆகி விடுகின்றான். நல்லவர்களின் உள்ளத்தில் எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஆரம்பமாகும் விஷயம் உலகை விட்டு விலகி இருப்பதும், அகிலங்களின் இறைவனின் பக்கம் (உலகத்தை விட்டு) துண்டிக்கப்பட்ட நிலையில் செல்வதாகும். இதுவே அந்த மகத்தான குறிக்கோளாகும். அது இறை நெருக்கத்தைப் பெறும் வழியில் சென்று கொண்டிருப்பவர்களது இடுப்பை உடைத்து விடுகின்றது. அது அவர்கள் மீது துக்கம், அழுகை மற்றும் மன்றாடுதல் ஆகியவற்றின் மழையைப் பொழிகின்றது. ஏனென்றால் தீமையின் பக்கம் தூண்டுகின்ற ஆன்மா ஒரு மலைப்பாம்பாகும். அது மன விருப்பங்களின் வலையை விரிக்கின்றது. எவர்கள் மீது அவர்களது இறைவன் கருணை காட்டுவானோ, மேலும் எவர் மீது தனது பரிவு மற்றும் நேர்வழி காட்டலின் சிறகை விரிக்கின்றானோ அவர்களைத் தவிர மற்ற எல்லா மக்களையும் அது அழித்து விடுகின்றது.

துஆ ஒரு விதையாகும். அதனை விதைக்கின்ற நேரத்தில் மன்றாடுதலின் மூலமாக அல்லாஹ் வளர்ச்சி அடையச் செய்கின்றான். மேலும் அடியார்களிடத்தில் இந்த செல்வத்தை தவிர வேறு எந்த செல்வமும் இல்லை. மேலும் இது எல்லாவற்றையும் விட பெரிய காரணியாக இருக்கின்றது. அதன் மூலமே இரட்சிப்பிற்கான நம்பிக்கை வைக்கப்பட்டு பேரிடர்கள் அகற்றப்படுகின்றன.

எந்த நபர் இறை நேசர்களின் அருகில் அமர்பவர்களாகவும் அனுபவமுள்ளவரது கூற்றுக்களை செவிமடுப்பவராகவும் இருக்கின்றாரோ அவருடைய கண் அந்த ஒளியை காண்பதற்காக திறக்கப்படுகின்றது. மேலும் அவர் அதில் இருக்கின்ற மறைவான

இரகசியத்தை பார்ப்பார். கண்ணியத்திற்குரிய இறைவனின் நேசர்களுக்கு அருகில் இருப்பவர்கள் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை. அவர்கள் கால்நடைகள் போன்று இருந்தாலும் சரியே. அல்லது இளமையின் ஆரம்ப இன்பத்தில் திளைத்திருப்பவர் –களாக இருந்தாலும் சரியே. மாறாக, அவர்கள் மாற்றப்படுகின்றனர். இளமை சென்று விட்ட முதியவரைப் போன்று அவர் ஆக்கப்படு –கின்றார். இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவரின் இடத்தை விட்டு சற்றும் விலகாமல் உறுதியுடன் அமர்ந்திருப்பவர்களுக்கே நற்செய்தி உள்ளது. அவர்கள் அந்த இறை நேசர்களின் கூற்றுக்களை கலப்பற்ற தூய திர்ஹம்கள் மற்றும் தீனார்கள் போன்று பாதுகாப்பாக வைக்கின்றனர். அதை கருமிகள் போன்று ஒன்று திரட்டுகின்றனர். மேலும் எவர்கள் அல்லாஹ்வின் அடியார்களை இழிவுபடுத்துவதற்காக தமது உள்ளங்களை வீராவேஷத்துடன் வைத்திருக்கின்றார்களோ, தமது உள்ளத்தில் தோன்றியதையெல்லாம் ஏச்சுப் பேச்சுக்களாகவும், வீணான விஷயங்களின் வடிவிலும் பேசி விடுகின்றார்களோ, நிச்சயமாக இத்தகைய சமுதாயம்தான் இத்தகைய துணிச்சலை காட்டியதன் விளைவாக தாமே, தங்களையும், தமது மனைவியரையும், தமது சந்ததிகளையும் அழிக்கின்றனர். அவர்களும் மரணித்து விடுகின்றனர். ஆனால் தமக்குப் பின்னால், கழுத்தில் மாட்டப்படும் சாபத்தின் விலங்குகளைப் பின் விட்டுச் செல்கின்றனர்.

அவர்கள் அல்லாஹ்வின் ஒளியை அணைக்க விரும்புகின்றனர். ஆனால் உண்மையின் சூரியனை எப்படி தடுத்து நிறுத்த முடியும்? அல்லாஹ்வின் ஒளியின் மீது எவ்வாறு திரையிட முடியும்? அவர்கள் உண்மையை மறைப்பதற்கு முயற்சி செய்கின்றனர். அல்லாஹ்வின் ஒளியைக் கூட மறைக்க முடியுமா என்ன? இது பொய்யா? மாறாக, அவர்களின் உள்ளங்களில் முத்திரை இடப்பட்டுள்ளது.

எவர்கள் என்னை ஏற்றுக் கொள்வதில்லையோ, தங்களைப் பற்றி நாங்கள் இந்த காலத்தின் ஆலிம்களாக இருக்கின்றோம் என்று கூறுகின்றனரோ உண்மையில் அவர்கள் ரஹ்மானாகிய இறைவனின் எதிரிகள் ஆவர். அவர்கள் கஹ்ஹாரான (கோபப்படுகின்ற) இறைவனின் வெறுப்பிற்கு அருகில் செல்கின்றனர். அவர்கள் தமது நாவுகளில் நூற்றுக்கணக்கான வார்த்தைகளை வெளிப்படுத்திக் கூறுகின்றனர். ஆனால் அவற்றில் ஒரு வார்த்தை கூட இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருப்பதில்லை. இது தான் நாங்கள் ஆலிம்கள் என்று கூறுகின்ற மக்களின் வாழ்க்கையாகும். ஆனால் அவர்கள் உண்மை மற்றும் நேர்வழியின் மீது பகைமை காட்டுகின்றனர். அழிவின் வழியில் வேகமாக செல்கின்றனர். அவர்கள் மரணிக்க மாட்டார்கள் என்றும் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப கொண்டு செல்லப்பட மாட்டார்கள் என்றும் அவர்களிடம் அவர்களது செயல்கள் தொடர்பாக கேள்வி கேட்கப்பட மாட்டாது என்றும் யார் அவர்களிடம் கூறினார்? அநீதியிழைப்பவர்களுக்கு அவர்கள் எந்த பக்கம் திரும்ப கொண்டு செல்லப்படுவர் என்பது மிக விரைவில் தெரிந்து விடும்.

எனவே அடியார்களே! அவன் உங்களை மறுமையின் பக்கம் இழுத்துச் செல்வதற்கு முன்னதாக எழுந்திருங்கள். உங்களது இறைவனை உருக்கம் நிறைந்த குரலுடனும், மன்றாடி, தேம்பி அழுவதன் மூலமும் அழையுங்கள். கல்லறைகளின் பக்கம் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னதாக அதிகமாக மன்னிக்கின்ற உங்களது இறைவனின் முன்னிலையில் பாவமன்னிப்பு கோரியவாறு ஆஜராகி விடுங்கள்.

தீயவர்களின் பூமியில் பயணம் செய்யாதீர்கள். நல்ல மக்களுடன் மட்டுமே அமருங்கள். உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள். தவ்பா செய்பவர்களுடன் சேர்ந்து தவ்பா செய்யுங்கள். அல்லாஹ்வின் கருணையில் நிராசை அடையாதீர்கள்.

நிராகரிப்பவர்களைப் போன்று உங்களது யூகங்களை நீண்டதாக ஆக்காதீர்கள். மேலும் ஆணவம் கொள்கின்ற மக்களைப் போன்று முகம் திருப்பியவாறு செல்லாதீர்கள். கீழ்த்தரமான மக்களைப் போன்று பொய் கூறுவதில் பிடிவாதமாக இருக்காதீர்கள். நான் உண்மையில் இருந்து நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் பிறகு மறுப்பவர்களின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்களா? நான் எனது விவகாரத்தை அல்லாஹ்விடம் ஒப்படைக்கின்றேன். அவன் என்னுடைய மற்றும் உங்களுடைய உள்ளத்திலுள்ள நிலைமைகளை நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். எந்நிலையிலும், எங்களில் அல்லது உங்களில் எவராவது ஒரு பிரிவினர் கண்டிப்பாக தெளிவான நேர்வழியில் நிலைத்திருக்கின்றனர். அல்லது பகிரங்கமான வழிகேட்டில் வீழ்ந்திருக்கின்றனர்.

எதிரிகள் கர்வம் மற்றும் குழப்பம் விளைவித்தல் ஆகியவற்றின் காரணமாக என்னை மறுக்கின்றனர் என்பதை நான் நிச்சயமாக பார்க்கின்றேன். அவர்கள் எனது இறைவனின் அடையாளங்களை உறுதியாகக் கண்டனர். அவ்வாறிருந்தும் அவர்கள் பகைமையிலேயே முன்னேறிச் சென்றனர். அவர்கள் தற்காலத்தின் நிலைமையையும் தொலைந்து போன அருள்களையும் பார்ப்பதில்லையா என்ன? காலம் தன் நிலையை வெளிப்படுத்தி அதனை சீர்திருத்த, அதன் மீது வந்துள்ள துன்பத்தை அகற்ற அத்தகையதொரு சீர்திருத்தவாதியை குரல் கொடுத்து அழைத்துக் கொண்டிருக்கவில்லையா?

தெளிவான அடையாளங்கள் வெளிப்படவில்லையா என்ன? தெளிவான அடையாளங்கள் பிரகாசமாக இல்லையா என்ன? எவையெல்லாம் கைநழுவிப் போய் விட்டதோ அவை வழங்கப் –படுகின்ற அந்த நேரம் வந்து விட்டது. உண்மை என்னவென்றால், அவர்களின் உள்ளம் இருளடைந்து போய் விட்டது. அவர்களது

நெஞ்சம் குறுகிப் போய் விட்டது. இந்த சமுதாயம் மிகவும் தீய ஒழுக்கத்தை உடையதாகவும், கடுமையான இயல்பைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

அவர்களின் ஒழுக்கம் பற்றி சொற்களின் வடிவில் கூறுவதென்றால், அது கொளுந்து விட்டு எரியும் நெருப்பாகும். அவர்களின் பேச்சுக்கள் தீப்பிழம்பு போன்று எழும்புகின்றன. அவர்களிடம் மென்மையான உள்ளத்திற்கான எந்த அடையாளமும் எஞ்சியிருக்கவில்லை. ஏழ்மையின் கண்ணீர்த் துளிகள் அவர்களின் கன்னங்களைத் தொடக்கூட இல்லை. அவர்கள் என்னை காஃபிர் என்று கூறுகின்றனர். அவர்கள் எதன் அடிப்படையில் என்னை காஃபிர் என்று கூறுகின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை. திருக்குர்ஆனில் கூறப்பட்டிருப்பவற்றை மட்டுமே நான் கூறியுள்ளேன்.

நான் அவர்களுக்கு முன்னால் ரஹ்மானாகிய இறைவனின் வசனங்களை மட்டுமே படித்துக் காட்டியுள்ளேன். இந்த விஷயங்கள் இட்டுக்கட்டி கூறப்பட்டவை அல்ல. மாறாக, இது நடந்த சம்பவமாகும். அதனை அல்லாஹ் அதற்குரிய நேரத்தில் வெளிப்படுத்திக் காட்டி விட்டான். மேலும் அல்லாஹ்வின் கருணையை அவனுக்குரிய உண்மையான அந்தஸ்துடன் புரிந்து கொள்பவருக்கே அவனைப் பற்றிய ஞானம் கிடைக்கின்றது.

இந்த எளியவனின் நூலான பராஹீனே அஹ்மதிய்யாவில் அல்லாஹ் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளான். அதாவது மக்கள் கூட்டம் கூட்டமாக என்னிடம் வருவார்கள். எனக்கு அருகில் ஒன்று சேருவார்கள். எனக்கு அன்பளிப்புகளை அனுப்புவார்கள். நான் தனிமையில் விட்டு விடப்பட மாட்டேன். மாறாக மக்கள் கூட்டம் கூட்டமாக என் பக்கம் ஓடி வருவார்கள். மேலும் என்னை ஏற்றுக் கொள்வார்கள்.

மக்கள் புறமிருந்தும், மக்கள் அறியாத வழிகளின் மூலமாகவும் எனக்குக் கருவூலங்கள் திறந்து தரப்படும். நான்

எதிரிகளின் தீங்கிலிருந்தும், அவர்களின் மறைவான திட்டங்களில் இருந்தும் காப்பற்றப்படுவேன். மேலும் அல்லாஹ் நாடியுள்ள அந்த எல்லாவற்றையும் முழுமையாக செய்து முடிக்கும் அளவிற்கு எனக்கு வாழ்நாள் வழங்கப்படும். அதைப் பார்த்து எதிரிகள் முகம் சுளித்து வெறுத்தாலும் சரியே.

எனக்கு பூமியில் அங்கீகாரம் வழங்கப்படும். நேர்வழியை பெறும் மக்கள் எனக்காக தங்களை அர்ப்பணித்து விடுவர். நீங்கள் பார்ப்பது போன்றே எனது இறைவன் கூறியவையெல்லாம் நிறைவேறி விட்டது. இது மாய மந்திரமா என்ன? அல்லது நீங்கள் பார்ப்ப –தில்லையா? இந்த பணிகள் அல்லாஹ் அல்லாதவற்றின் புறமிருந்து செய்யப்படுபவையாக இருந்தால் பிறகு இந்த முன்னறிவிப்புகள் நிறைவேறி இருக்காது. கண்டிப்பாக நான் பொய்யை புனைந்து கூறுபவர்களைப் போன்று அழிக்கப்பட்டிருப்பேன்.

எனது ஜமாஅத் ஒவ்வொரு வருடமும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள். எதிரிகள் அல்லாஹ்வின் ஒளியை அணைத்து விடுவதற்காக எந்தவொரு திட்டத்தையும் செய்யாமல் விட்டுவிடவில்லை. பிறகும் கூட அல்லாஹ்வின் ஒளி முழுமையடைந்து விட்டது. இதனால் எதிரிகள் பதற்றமடைந்துள்ளனர். அவர்கள் தமது பொந்துகளில் திரும்ப புகுந்து விட்டனர். மேலும் அறிந்த பிறகும் அவர்கள் வெறுப்பை விட்டுவிடவில்லை.

இவை அல்லாஹ் அல்லாதவற்றின் புறமிருந்து வந்தவையா என்ன? நீங்கள் வெட்கப்படாமலும் கொஞ்சம் கூட சிந்தனை செய்யாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? நீங்கள் உடைந்து போன ஆயுதங்கள் மற்றும் கட்டப்பட்ட கைகளுடன் அல்லாஹ்வுடன் போர் செய்கின்றீர்களா? உங்கள் மீதும் நீங்கள் செய்யும் செயல் மீதும் அழிவு தான் ஏற்படும். இது இட்டுக்கட்டி கூறும் பெரும் பொய்யனின் செயலாக இருக்க முடியுமா

என்ன? எப்போதாவது பொய்யர்களுக்கு இதுபோன்ற ஆதரவு கிடைத்திருக்கின்றதா என்ன? இதுவொரு பெரும் பொய்யனின் வார்த்தையாக இருக்க முடியுமா? நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்ப கொண்டு செல்லப்பப்பட மாட்டீர்களா? அல்லது நீங்கள் உங்கள் விருப்பங்களில் விட்டு விடப்படுவீர்களா என்ன? அவர்கள் நெருப்பை மூட்டியபோதெல்லாம் அல்லாஹ் அதை அணைத்து விட்டான். அவ்வாறிருந்தும் கூட அவர்கள் கவனம் செலுத்தி சிந்திப்பதில்லை.

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலீஃபாக்களுக்கு 'நபி' என்று ஏன் பெயர் வைக்கப்படவில்லை? என்று அவர்கள் கேட்கின்றனர். நீங்கள் கருதுவது போன்று அவ்வாறு பெயர் வைக்காததன் காரணம் என்னவென்றால், அதன் மூலம் கதமே நுபுவ்வத்தின் உண்மை நிலை மக்களுக்கு சந்தேகத்திற்குரியதாக இருக்கக் கூடாது. மேலும் இவ்விஷயத்தில் அவர்கள் மரியாதையை கடைபிடிக்க வேண்டியதிருந்தது.

பிறகு இந்நிலையில் ஒரு காலம் கழிந்த பிறகு கலீஃபாக்கள் பற்றி கூறப்பட்ட முன்னறிவிப்பு தொடர்பாக இந்த இரண்டு நபித்துவ தொடர்களின் ஒப்புமையையும் வெளிப்படுத்த அல்லாஹ் நாடினான். அதன் மூலமாக ஆட்சேபனை செய்பவர்களுக்கு ஆட்சேபனை செய்ய முடியாமல் போய் விடும். அதன் மூலமாக நபித்துவத்தில் ஒப்புமையைக் காண விரும்பி அதில் பிடிவாதமாக இருக்கும் மக்களின் சந்தேகங்களை அல்லாஹ் அகற்றி விடுகின்றான். எனவே அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான். மேலும் எந்த அர்த்தத்தில் அவன் எனக்கு நபி என்று பெயர் வைத்துள்ளான் என்பதை ஏற்கனவே நான் விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். இந்த தீமையை விரும்புபவர்கள் கருதுகின்ற அந்த அர்த்தத்தின்

அடிப்படையில் அவன் எனக்கு அப்பெயரை வைக்கவில்லை. இரண்டு ஆட்சேபனைகளையும் அவன் அகற்றி விட்டான். இந்த அம்சம், அந்த அம்சம் ஆகிய இரண்டையும் அவன் கருத்தில் கொண்டுள்ளான். இதில் சிந்திப்பர்களுக்கு நேர்வழி இருக்கின்றது. நான் ஒருவகையில் நபியாகவும், இன்னொரு வகையில் இந்த உம்மத்தைச் சார்ந்தவனாகவும் இருக்கின்றேன். என்னைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டிருப்பதை அவர்கள் படிப்பதில்லையா?

அவர் உங்களிலிருந்து தோன்றுவார்.★ அவர் நபியாக இருப்பார்★ என்று அவர்களிடம் இருக்கின்ற ரிவாயத்துகளில் (அறிவிப்புகளில்) படிக்கவில்லையா? இந்த இரண்டு பண்புகளும் ஈஸாவிடம் காணப்படுகின்றதா? அல்லது திருக்குர்ஆனில் அவர் தொடர்பாக இந்த இரு விஷயங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றதா? நீங்கள் உண்மையை கூறுவதாக இருந்தால் அவற்றை எமக்குக் காட்டுங்கள்.

ஆனால் உண்மை என்னவென்றால், ஈமானை விட நீங்கள் நிராகரிப்பதற்கு முன்னுரிமை வழங்கியுள்ளீர்கள். பிறகு திருக்குர்ஆனை தமக்கு பின்னால் எறிந்து விட்ட, அதைப் பொருட்படுத்தாத அத்தகைய மக்களுக்கு நான் எவ்வாறு நேர்வழியை வழங்க முடியும்? அல்லாஹ் மஸீஹின் கைகளினால் சிலுவையை தகர்க்கின்ற பணியை விதித்திருக்கின்றான். அதன் அடையாளங்கள் வெளிப்பட்டு விட்டன. ஆனால் ஆட்சேபனை செய்பவர்கள் சிந்திக்காமல் இருப்பது வியப்பிற்குரிய விஷயமாகும். கிறித்தவம் ஒவ்வொரு நாளும் கரைந்து கொண்டு போவதை அவர்கள் பார்க்கவில்லையா? ஒரு சமுதாயத்திற்குப் பிறகு

---

★ புகாரி – கிதாபு அஹாதீஸில் அன்பியா பாபு நுஸூலு ஈஸப்னி மர்யம் (அலை) – வெளியீட்டாளர்.

★ முஸ்லிம் – கிதாபுல் ஃபிதனி வஅஷ்ராத்திஸ் ஸாஅத் பாபு ஸிக்ரித் தஜ்ஜால் – வெளியீட்டாளர்.

இன்னொரு சமுதாயம் அதை கைவிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இது பற்றிய தகவல்கள் கிடைப்பதில்லையா? அல்லது இவர்கள் செவிமடுப்பதில்லையா? அந்த (கிறித்தவர்களின்) ஆலிம்கள் தமது கைகளாலேயே தமது கூடாரங்களை விழச் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களில் கண்ணியத்திற்குரியவர்கள் ஒரிறைமையின் பக்கம் வந்து நேர்வழியைப் பெறுகின்றனர். அவர்களது மார்க்கம் ஒவ்வொரு நாளும் கரைந்து கொண்டே செல்கிறது. மேலும் அவர்களது அம்புகள் உடைந்து கொண்டேஇருக்கின்றது.

எதுவரையென்றால், ஜெர்மனியின் சீஸர் இந்த கொள்கையை கைவிட்டு விட்டார் என்றும் நல்ல இயல்பை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார் என்றும் நாம் கேள்விப்படுகின்றோம். இவ்வாறே ஆராய்ச்சி செய்கின்ற அவர்களது அறிஞர்கள் தங்களது வீடுகளை தமது கைகளாலேயே பாழாக்கிக் கொண்டிருக்கின்றனர். மேலும் எவ்வாறு அவர்கள் நுழைந்தனரோ அவ்வாறே வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். பார்க்காத அந்த கண்களுக்கும், கேட்காத அந்த காதுகளுக்கும் அழிவு தான். எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை படித்த பிறகும் கூட அதை புரியாமல் இருக்கின்றனரோ அவர்களுக்கும் அழிவு தான்.

ஈஸா விண்ணிலிருந்து இறங்குவாரா என்ன? ஆனால் திருக்குர்ஆன் அவரைத் தடுத்து நிறுத்தியுள்ளது. நீங்கள் எண்ணுவது அறிவை விட்டு மிகத் தொலைவிலுள்ள விஷயங்கள் ஆகும். திருக்குர்ஆன் ஏற்படுத்தியுள்ள தடை சட்டம் இரும்பினால் உருவாக்கப்பட்ட தடையை விட உறுதிமிக்கதாகும். அல்லாஹ்வின் வேதத்தை சிந்திக்காமலும் பணிவை மேற்கொள்ளாமலும் இருக்கின்ற அந்த குருடர்களுக்கு அழிவு தான். (ஈஸாவின்) மரணம் (முஸ்லிம்களாகிய) அவர்களுக்கும், அவர்களது மார்க்கத்திற்கும் சிறப்பைத் தரும் என்பதை அவர்கள் புரிந்திருந்தால் எவ்வளவு

நன்றாக இருந்திருக்கும்! ஈஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஏழாவது நூற்றாண்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களிடம் வந்தார்கள். மேலும் நான் இ(ந்)த (ஏழாவதி)ன் இரு மடங்கான நூற்றாண்டில் (அதாவது பதினான்காவது நூற்றாண்டில்) உங்களிடம் வந்துள்ளேன். நிச்சயமாக இதில் சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு பெரும் நற்செய்தி உள்ளது.

எனவே அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் எல்லாரையும் விட பெரிய தீர்ப்பு வழங்குபவரை (அதாவது நமது எஜமனார் நபி கரீம் (ஸல்) அவர்களை) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஏழாவது நூற்றாண்டில் தோன்றச் செய்தான். அவன் அதை விட இரு மடங்கிலுள்ள காலகட்டத்தில் (பதினான்காவது நூற்றாண்டில்) படைப்பினங்களிடம் பரவியுள்ள இந்த குழப்பத்தை சீர்திருத்துவதற்காக இந்த நெறிநீதி தீர்ப்பவரை அனுப்பியதில் அறிவிற்குப் புறம்பான விஷயம் என்ன இருக்கிறது?

எனவே, அறிவுள்ளவர்களே! சிந்தனை செய்யுங்கள். இந்த காலத்திலுள்ள குழப்பம் நீங்கள் பார்ப்பது போன்றே முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத அனைத்து சமுதாயத்திலும் பரவியுள்ளது. மேலும் அ(ந்த குழப்பமான)து தேர்ந்தெடுக்கப்பட்ட நமது நபி (ஸல்) அவர்களுக்கு முன்னரே வழிதவறிச் சென்றிருந்த கிறித்தவர்களிடம் வெளிப்பட்ட அந்த குழப்பத்தை விட மிகப் பெரியதாகும். இன்னும் சொல்வதென்றால் இன்று நீங்கள் அவர்களை முன்னரை விட அதிகமாக வழிகேட்டில் உள்ளவர்களாகவும், தீயவர்களாகவும் காண்கின்றீர்கள். நமது இந்த காலமே ஒவ்வொரு பித்அத் (மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவை), இறைவனுக்கு இணை வைத்தல் மற்றும் வழிகேடு ஆகியவற்றின் புயலின் காலமாக இருக்கின்றது. **வாளுடன் நான் அனுப்பப்படவில்லை. ஆயினும் ஒரு மகத்தான போர் பற்றி எனக்கு கட்டளையிடப்பட்டிருக் -கின்றது. அந்த மகத்தான போர் என்ன என்பது பற்றி**

**உங்களுக்கு என்ன தெரியும்? அந்த போருக்கான ஆயுதம் இரும்பினாலான எழுதுகோலாகும். அது வாளோ, அம்போ அல்ல.**

நாம் அதே ஆயுதத்தை தரித்தவாறு எதிரிகளை எதிர்கொள்ள வந்துள்ளோம். எனவே நீங்கள் மகத்துவமிக்க மற்றும் கண்ணியமிக்க மேலான அல்லாஹ்விடமிருந்து சரியான நேரத்தில் உங்களிடம் வந்துள்ள அவரை மறுக்காதீர்கள். நான் இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறி இருக்கின்றேனா என்ன? மேலும் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவர் எப்போதும் தோல்வி அடைகின்றார். நிராகரிப்பவர்களை எதிர்த்து போர் செய்யாமலும் அவர்களை வாளால் வெட்டி வீழ்த்தாமலும் இருப்பதால் என்னை நீங்கள் தூற்றுகின்றீர்களா என்ன?

உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? நீங்கள் காலத்தை (அதை எதிர்பார்ப்பைப்) புரிந்து கொள்ளவில்லை. மேலும் பயனற்ற விஷயங்களை பேசுபவர்கள் போன்று பேசுகின்றீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வின் பார்வையில் முதல் தர காஃபிர்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தை கைவிட்டு விட்டீர்கள். மேலும் மற்ற வழிகளை பின்பற்றிச் செல்கின்றீர்கள். போர் செய்து மரணிப்பதில் திருப்தி அடைந்திருப்பவர்களே! உங்களது எண்ணத்திற்கேற்ப ஜிஹாது கடமையாக்கப்பட்டிருந்தால் பிறகு நீங்கள் தான் கொலை செய்யப்படுவதற்கு அதிகம் தகுதியுடையவர்களாக இருந்திருப்பீர்கள். ஏனென்றால் நீங்கள் அல்லாஹ்வின் நபிக்குக் கட்டுப்படாமல் இருக்கின்றீர்கள். உங்களிடம் அல்லாஹ்வின் தெளிவான வேதத்திலிருந்து எந்த ஆதாரமும் இல்லை.

மன விருப்பங்களை வணங்குபவர்களே! உங்களிடம் மார்க்கத்தின் எந்த விஷயம் எஞ்சியிருக்கின்றது? நீங்கள் உலகம் மற்றும் அதன் பெரும் அசுத்தங்களிலிருந்து எந்த பொருளைத்தான் விட்டுள்ளீர்கள்? ஆட்சியாளர்களின் நெருக்கத்தை பெறுவதற்காக

நீங்கள் எல்லா விதமான தந்திரங்களையும் கடைபிடிக்கின்றீர்கள். பூமியையும் உயர்ந்த வானங்களையும் படைத்த உங்களது எஜமானனான அந்த இறைவனை மறந்து விட்டீர்கள். மார்க்கத்தை விட உலக வாழ்க்கைக்கு நீங்கள் முன்னுரிமை வழங்குகின்ற நிலையிலும், உங்களிடம் இஸ்லாமிய வழிமுறைகளின் வெளிப்படையான தோற்றத்தைத் தவிர வேறு எதுவும் எஞ்சி இருக்காத நிலையிலும் உங்களால் ஏக இறைவனின் திருப்திக்கு அருகில் எவ்வாறு செல்ல முடியும்?

நீங்கள் அல்லாஹ் ஏவியவற்றையும், தடுத்தவற்றையும் முற்றிலுமாக மறந்து விட்டீர்கள். நீங்கள் உங்களது கைகளாலேயே இஸ்லாம் மற்றும் ஏக இறைவனின் மார்க்கத்தின் கட்டடத்தை வீழ்த்தி விட்டீர்கள். நீங்கள் எளிமை, தனிமை மற்றும் பணிவு ஆகியவற்றின் வழிமுறைகளை கைவிட்டு விட்டீர்கள். நீங்கள் மக்களிடம் மேலான அந்தஸ்தை பெற வேண்டும் என்று விரும்பினீர்கள். நீங்கள் இந்த உலகின் விஷத்தை உண்டீர்கள். மேலும் பேராசை வெளிவேஷம் மற்றும் ஆணவத்தின் பக்கம் சாய்ந்து விட்டீர்கள். மேலும் அரசர்களின் நெருக்கத்தையும் அவர்களிடமிருந்து தகுதிகளையும், பதவிகளையும் பெறுவதில் நீங்கள் மகிழ்ச்சி அடைகின்றீர்கள். நீங்கள் யூதர்களின் பழக்கவழக்கங்களில் எந்தவொரு பழக்கவழக்கங்களையும் கைவிட்டு விடவில்லை. மேலும் நீங்கள் அவர்களின் முடிவைப் பார்த்தும் இருக்கிறீர்கள். அறிவுள்ளவர்களே! நீங்கள் இத்தகைய அகத்தூய்மையுடன் நிராகரிப்பவருடன் போர் செய்வீர்களா என்ன? நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் பார்க்கின்றான். நிச்சயமாக நிராகரிப்பவர்களுக்கு எதிராக போர் செய்ய வேண்டும் என்பது அல்லாஹ்வின் நாட்டமாக இருந்திருந்தால் அவன் கண்டிப்பாக உங்களுக்கு அவர்களை விட அதிகமாக வழங்கி இருப்பான். மேலும் உங்களை எதிர்த்து நிற்கின்ற

ஒவ்வொரு நபர் மீதும் நீங்கள் வெற்றி பெற்றிருப்பீர்கள். இறைவனின் ஞானத்தின் அடிப்படையில் அனைத்து போர் திறமைகளும் நிராகரிப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள். இதன் காரணமாக கடலிலும், கரையிலுமுள்ள போர்க் களங்களில் அவர்கள் உங்கள் மீது மேன்மையை பெற்றிருக்கின்றனர்.

மேலும் அவர்களது பார்வையில் நீங்கள் ஓர் அணுத் துகளைப் போன்று மட்டுமே இருக்கின்றீர்கள். எனவே அல்லாஹ் எதை திறந்திருக்கின்றானோ அதை அடைப்பதும், எதனை அவன் அடைத்து வைத்துள்ளானோ அதனை திறப்பதும் உங்களது ஆற்றலில் இல்லை. எனவே நீங்கள் அல்லாஹ்வின் கருணையில் அவனது கதவுகள் மூலமாக நுழைந்து விடுங்கள். தனது இறைவனை வெறுப்படையச் செய்து அவனுக்கு கோபமூட்டிய அந்த நபரைப் போன்று நீங்கள் ஆகிவிட வேண்டாம். அவ்வாறே அல்லாஹ்வுடன் போர் செய்து அவனுக்கு கட்டுப்படாமல் இருந்த அந்த நபரைப் போன்றும் நீங்கள் ஆகிவிட வேண்டாம். வானத்திலிருந்து இறங்கி படைப்பினங்களின் இரத்தத்தை ஓடச் செய்து பல்வேறு வெற்றிகளின் மூலம் கிடைக்கின்ற செல்வங்களை உங்களுக்கு வழங்கப் போகின்ற அத்தகைய மஸீஹிற்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம். நீங்கள் உங்களுக்கு முன்னால் இது போன்ற எண்ணங்களில் திளைத்திருந்த மக்களின் உவமையை மேற்கொள்கிறீர்களா என்ன? மற்றவர்களிடமிருந்து படிப்பினையை பெறுவதும், தாம் கண்டவற்றிலிருந்து பயன் அடைவதுமே நம்பிக்கை கொண்டவரின் பண்பாகும். மேலும் மற்றவர்கள் சென்று அழிந்து போன அந்த காட்டில் அவர் நுழையக் கூடாது. இக்காலத்தில் எவருக்காக (மக்கள்) காத்துக் கொண்டிருந்தனரோ அந்த மஸீஹை உங்களிலிருந்து உங்களுக்கு அனுப்பி இருப்பது உங்களுக்குப் போதுமானதாக இல்லையா?

மேலும் நீங்கள் நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தீர்கள். அல்லாஹ் உங்களை அந்தக் கிடங்கிலிருந்து காப்பாற்ற விரும்பினான். மேலும் தனது மகத்தான அருளால் உங்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான். எவ்வாறு அடையாளங்கள் இறங்கின. மேலும் எவ்வாறு அடையாளங்கள் ஒன்று திரப்பட்டிருக்கின்றன என்ற இந்த விஷயத்தை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லையா? உங்களது கண்கள் அல்லாஹ்வின் அடையாளங்களை அற்பமாக கருதுகின்றனவா என்ன? அல்லது உண்மை உங்களிடம் வந்த பிறகும் அதிலிருந்து நீங்கள் முகம் திருப்பியவாறு செல்கின்றீர்களா? உங்களிடம் உங்களிலிருந்தே எச்சரிக்கை செய்பவர் வந்துள்ளார் என்பதில் நீங்கள் வியப்படைகின்றீர்களா?

மேலும் நீங்கள் அவரை மறுத்து விட்டீர்கள். உங்களது மேலான இறைவனுக்கு நீங்கள் நன்றி செலுத்தவில்லை. மேலும் நீங்கள் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் மீது நம்பிக்கை கொள்ளவில்லை. எவர்கள் துர்பாக்கியத்தை ஏற்றுக் கொண்டனரோ அல்லாஹ் அவர்களது உள்ளங்களில் இந்த வழிமுறையை நீடிக்கும்படி செய்து விட்டான். வரவிருக்கின்ற இமாம் தொடர்பாக உங்களது கருத்து உங்களை வழிகேட்டில் விட்டு விட்டது. அந்த இமாம் யூதர்களில் ஒருவராக இருப்பார் என்று நீங்கள் எண்ணினீர்கள். அவர் உங்களிலிருந்தே தோன்றுவார் என்று நீங்கள் உறுதி கொள்ளவில்லை. இந்த குருட்டுத்தன்மையே உங்களை அழித்து விட்டது. மேலும் இது போன்றே உங்களுக்கு முன்னர் வந்த பிரிவினரும் அழிந்து விட்டனர். அவர்களைப் பற்றிய செய்திகள் உங்களுக்கு வந்தன. ஆனால் நீங்கள் அவற்றை மறந்து விட்டீர்கள்.

சென்று போன மக்களைப் போன்றே உங்கள் தொடர்பாகவும் நமது இறைவனின் கூற்று நிறைவேறுவதற்காக நீங்கள் அவர்களது

வழியிலேயே சென்றீர்கள். (சென்று விட்ட) அம்மக்களிடம் நேர்வழி புதிய தோற்றத்தில் வந்த போதெல்லாம் எந்த விஷயங்கள் எங்களது முன்னவர்களிடமிருந்து (மூதாதையர்களிடமிருந்து) எங்களுக்கு வந்து சேர்ந்துள்ளதோ அந்த எல்லா விஷயங்களையும் நாங்கள் இந்த நபரிடம் காணவில்லை. எனவே எங்களுக்கு தரப்பட்டுள்ள செய்திகளுக்கேற்ப வருகின்ற அத்தகைய நபர் மீது மட்டுமே நாங்கள் நம்பிக்கை கொள்வோம். நாங்கள் புதிய விஷயங்களை கூறுபவரை பின்பற்ற மாட்டோம் என்று அவர்கள் கூறியதைத் தவிர அம்மக்கள் அதன் மீது நம்பிக்கை கொள்வதற்கு வேறு எந்த விஷயமும் தடையாக இருக்கவில்லை. முன்னவர்களுக்கும், பின்னவர்களுக்கும் இதே பழக்கவழக்கம்தான் இருந்து வந்துள்ளது. இந்த வழிமுறையைத்தான் கடைபிடிக்க வேண்டுமென்று அம்மக்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனரா? அவ்வாறன்று!

மாறாக, அவர்கள் தூதர்கள் மீது நம்பிக்கை கொள்ளாத மக்கள் ஆவர். அல்லாஹ் அனுப்பியவர் மீதும், (இறைவன்) அவருக்கு வழங்கியுள்ள அறிவின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கூறப்படும் போது இதற்கு முன்னர் எங்களது ஆலிம்களை எதிர்த்துக் கொண்டிருந்த அவர் மீதா நாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்? என்று அவர்கள் கேட்கின்றனர். அவர்களது ஆலிம்கள் தவறிழைப்பவர்களாக இருந்தாலும் கூட அவர்கள் அவ்வாறு கூறுவார்களா? உண்மையில் இவர்கள் உலக வாழ்க்கையில் திருப்தியடைந்துவிட்ட மக்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு (மறுமையைப் பற்றிய) அச்சமில்லை.

நீர் இறைவனால் அனுப்பப்பட்டவர் அல்லர் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் எந்த நாளில் இந்த அநீதி இழைப்பவர்கள் அல்லாஹ்வின் பக்கம் திருப்பப்படுவார்களோ அப்போது அநீதி இழைப்பவரின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பது அவர்களுக்கு

தெரிந்து விடும். இந்த விவகாரம் சுயமாகவே அவர் உருவாக்கிய –தாகும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஒருபோதும் அவ்வாறல்ல. ஆனால் அவர்களது (தீய) செயல்கள் அவர்களது உள்ளத்தை துருப்பிடிக்க வைத்துள்ளது. அதனால் அவர்கள் எதிர்ப்பில் முன்னேறி வருகின்றனர். மேலும் அவர்கள் கவனமாக பார்ப்பவர்கள் அல்ல. உண்மையில் அவர்களுக்குரிய சிகிச்சை இதுவாகும்: அதாவது அவர்கள் இரவு வேளைகளில் தொழுகைக்காக எழ வேண்டும். தமது அறைகளில் அவர்கள் தனிமையில் அமர வேண்டும். மேலும் கதவுகளை அடைத்து விட வேண்டும். கண்ணீர் சிந்த வேண்டும். தமது இரட்சிப்பிற்காக நிம்மதியிழந்தவர்களாக ஆகி விட வேண்டும். பணிவை மேற்கொள்பவர்கள் தொழுவது போன்று தொழ வேண்டும். மன்றாடி வேண்டுபவர்கள் சஜ்தா செய்வது போன்று சஜ்தா செய்ய வேண்டும். அதனால் ஒருவேளை அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டக்கூடும். அவனே கருணை காட்டுபவர்களில் எல்லாரையும் விட அதிகமாக கருணை காட்டுபவன் ஆவான். இந்நிலைமை அவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கப் போகின்றது? அவர்கள் பணிவு மற்றும் அழுகைக்குப் பகரமாக ஏளனம் செய்வதையும், பரிகாசம் செய்வதையும் மேற்கொள்கின்றனர். மேலும் அவர்கள் பொய்யாக்குவதில் தீவிரம் காட்டுகின்றனர். அவர்கள் தொலைவில் இருந்து அழைக்கப்படுகின்றனர். அதன் விளைவாக அழைப்பின் ஓர் எழுத்து கூட அவர்களின் காதுகளில் சென்று சேருவதில்லை. அவர்கள் சமுதாயத்திற்கு ஏற்பட்டுள்ள அத்துன்பங்களையும் நிராகரிப்பவர்களின் கைகளால் மார்க்கத்திற்கு ஏற்பட்டுள்ள அக்காயங்களையும் பார்ப்பதில்லை.

அந்த நாட்களில் இஸ்லாத்தின் நிலைமை எல்லா ஆண்களை விடவும் அழகான வலுவான சிறந்த மனிதனைப் போன்றதாக இருந்தது. பிறகு காலத்தின் சுழற்சி அதிகமாக

அழுததன் காரணமாக அந்த நபரது கண்களை அது பலவீனமானதாக ஆக்கி விட்டது. மேலும் அவரது கன்னங்களில் சுருக்கங்களை அது ஏற்படுத்தி விட்டன. மேலும் பற்களில் படிந்திருந்த மஞ்சள் நிறமும் பற்களை அழகற்றதாக ஆக்கும் நோயும் அவரது பற்களின் வெண்மையை அழித்து விட்டன. இஸ்லாத்தின் அழகும், பொலிவும் அதன் பிரகாசமும் அதனிடம் திரும்ப வர வேண்டும் என்பதற்காக இக்காலத்தின் மீது இவ்வாறு தனது கருணையைக் காட்ட வேண்டும் என்று அல்லாஹ் நாடினான். மேலும் மக்களில், கலப்பற்ற தன்மையை கொண்டவர்களின் ஆன்மாவும், நல்லவர்களிடம் காணப்படும் உண்மையும் (உலகிலிருந்து) துண்டிக்கப்பட்டு இறைவன் பக்கம் செல்பவர்களிடம் இருப்பது போன்ற அன்பும் எஞ்சியிருக்கவில்லை. அவர்கள் வரம்பு மீறியும் மிகவும் பின்தங்கிய நிலையிலும் செயல்பட்டனர். மேலும் நாத்திகர்களைப் போன்று ஆகிவிட்டனர். அவர்களின் இஸ்லாம் சில சடங்குகள் மட்டுமேயாகும். அவற்றை அவர்கள் அகப்பார்வை, இறைஞானம் மற்றும் விண்ணிலிருந்து இறங்கக்கூடிய நிம்மதி ஆகியவை ஏதும் இல்லாமல் தமது மூதாதையர்களிடமிருந்து மட்டுமே பெற்றுள்ளனர்.

எனவே இறைவன் தனது இருப்பிற்கு என்னை அடையாளமாக ஆக்குவதற்கும், தனது பரிவு மற்றும் கருணையின் தோற்றத்தில் மலர்ந்துள்ள அழகிய மலராக ஆக்குவதற்கும் என்னை அனுப்பியுள்ளான். நான் வந்தேன். என் மூலமாக அந்த இறைவனின் வழி வெளிப்பட்டது. அவனது வழிகாட்டல் தெளிவாகி விட்டது. அவன் மறைவாக இருக்கின்ற மூலைகள் எனக்கு தெரிந்து விட்டன. நான் அவனது நீரூற்றுகளில் இறங்கி விட்டேன். நிச்சயமாக வானமும் பூமியும் மூடப்பட்டிருந்தன. எனது வருகையால் அவை திறக்கப்பட்டு விட்டன. மாணவர்களுக்கு எனது ஞானங்களின் மூலமாக கற்றுக் கொடுக்கப்பட்டது. எனவே நான் நேர்வழியில்

நுழைவதற்கான கதவாக இருக்கின்றேன். வழிகாட்டுகின்ற அதே வேளையில் சுயமாக தென்படாத ஒளியாக நான் இருக்கின்றேன்.

நான் ரஹ்மானின் மிகப்பெரும் அருள்களில் ஒன்றாக இருக்கின்றேன். மேலும் தாராளமாக வழங்குகின்ற இறைவனின் மகத்துவமிக்க அருள்களில் ஒன்றாக இருக்கின்றேன். எனக்கு மார்க்கத்தின் வெளிப்புற மற்றும் உட்புற அறிவுகள் வழங்கப்பட்டுள்ளன. எனக்கு தூய்மையான வேதங்கள் மற்றும் அதில் இருப்பவை பற்றிய அறிவு வழங்கப்பட்டிருக்கின்றது. எனது அந்தஸ்தைப் பற்றி அறியாமலும், எனது அழைப்பை ஏற்காமலும், எனது உணவிலிருந்து உண்ணாமலும் முகம் திருப்பும் மனிதரை விட அதிக துர்பாக்கியசாலி வேறு எவரும் இருக்க முடியாது.

நான் சுயமாக வரவில்லை. மாறாக, இஸ்லாத்தை பாதுகாப்ப –தற்காகவும் அதன் சிறப்பம்சங்களையும் கட்டளைகளையும் கருத்தில் கொள்வதற்கும் எனது இறைவன் என்னை அனுப்பியுள்ளான். சிந்தனைகள் முடிந்து போய், விருப்பங்கள் சிதறுண்டு போய், இருள்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒளி கைவிடப்பட்ட அந்த நேரத்தில் நான் இறக்கப்பட்டிருக்கின்றேன். நீர் பெரியவர்களையும் ஆலிம்களையும் வெற்றுடலுடன் ஆடையின்றி இருக்கின்ற ஒரு நபரைப் போன்று காண்கின்றீர். அவரிடம் குர்ஆனின் தோல்கள் மற்றும் ஃபுர்கானின் ஒரு மெல்லிய நரம்பு தவிர வேறு எதுவுமே இல்லை. அவர்களது பால் வறண்டு விட்டது. அவர்களின் விலைமதிப்புள்ள முத்து வீணாகி விட்டது. அவ்வாறிருந்தும் அறியாமை மற்றும் குறைகளின் துர்நாற்றத்துடன் கூடிய அவர்களது கடுமையான ஆணவம் என்னை வியப்பில் ஆழ்த்துகின்றது.

அவர்கள் உண்மையாளரை ஏசிப்பேசி பொய்ப்படுத்தி அவதூறை அவர் மீது சுமத்தி அவருக்கு துன்பம் தருகின்றனர். இ(ந்த துன்பமிழைத்த)தன் நற்கூலி அருட்கொடைகளின்

சொர்க்கமாகும் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் (உண்மையாளராகிய) அவர் மறைவாக இருந்து சந்தேகங்களை ஏற்படுத்துபவர்களிடமிருந்து அவர்களை காப்பாற்றுவதற்கும், மக்களை சிற்றுறக்கத்திலிருந்து விடுவிப்பதற்காகவும் வந்திருந்தார். அவர்கள் பதவிகளை மிகவும் நேசிப்பவர்களாக இருக்கின்றனர். எல்லாவற்றையும் நன்கு அறிந்தவனும் கணக்கெடுப்பவனுமாகிய (இறை)வனை அவர்கள் கைவிட்டுக் கொண்டிருக்கின்றனர். கருணைமிக்க இறைவனிடமிருந்து வந்திருப்பவரிடமிருந்து அவர்கள் முகம் திருப்புகின்றனர். ஆனால் அவரோ கருணைமிக்க இறைவனிடமிருந்து அவர்களிடம் வந்துள்ளார். அனுதாபத்துடன் நடந்து கொள்பவர்கள், நோயாளிகளிடம் வருவதைப் போல் அவர் வந்துள்ளார். அவர்கள் (உண்மையாளரான) அவரை கடின உள்ளத்துடன் சபிக்கின்றனர். இதுவே அனுதாபத்துடன் நடந்து கொண்ட அவருக்கு அவர்கள் தரும் கூலியாகும். அவர்கள் அரசர்களிடத்தில் பெரும் பெரும் செல்வாக்கைப் பெற்று கண்ணியப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் இந்த கீழ்த்தரமான உலகத் தொடர்புகளை அவர்கள் விட்டு விட வேண்டும் என்றும், ஒளிமயமான மார்க்கத்தின் வழிகளில் குறுக்கிடுகின்ற தடைகளை அகற்ற வேண்டும் என்றும் அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அவர்கள் தமது விருப்பங்களின் பக்கம் நெருப்புக்கோழி போன்று விரைவாக ஓடுகின்றனர். மேலும் (அந்த விருப்பங்களாகிய) அவற்றை அவர்கள் தமது தங்குமிடமாக ஆக்கிக் கொண்டனர். இந்த உலகில் பயணியைப் போன்று வாழ்க்கையை கழிக்க வேண்டும். மேலும் தம்மைத் தாமே நாட்டைத் துறந்து வந்துள்ள எளிய நபரைப் போன்று ஆக்கிக் கொள்ள வேண்டும் என்றே அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் ஆட்சியாளர்களின் முன்னிலையில் கண்ணியத்தை விரும்பக் கூடியவர்களாக இருப்பதை இன்று நீர் காண்கின்றீர்.

ஆனால், உண்மையான கண்ணியம் எல்லாவற்றையும் நன்கு அறிந்திருக்கின்ற இறைவனிடமிருந்தே கிடைக்கின்றது. நாம் மக்களிடம் ரஹ்மானின் நாட்கள் (அல்லாஹ்வின் அருள்கள் மற்றும் தண்டனையின் நாட்கள்) பற்றி அவர்களுக்கு நினைவூட்டும் போது, மேலும் அவர்களை ஷய்த்தானிடமிருந்து அல்லாஹ்வின் பக்கம் இழுக்கின்ற போது திடீரென்று அவர்கள் ஓநாய்கள் போன்று நம் மீது தாக்குதல் நடத்துவதையும், பாம்பு போன்று தமது சீற்றத்தால் நம்மை அச்சுறுத்துவதையும் நாம் பார்க்கின்றோம். அவர்கள் ஒருபோதும் நமது சபையில் சரியான எண்ணத்துடனும், உண்மையான நாட்டத்துடனும் வரவில்லை. அவ்வாறிருந்தும் கூட எல்லாவற்றையும் நன்கு அறிந்துள்ள அறிஞர் ஆட்சேபனை செய்வது போன்று அவர்கள் ஆட்சேபனை செய்கின்றனர். அவர்களின் நிலைமை என்ன என்றும் எந்த பொருள் அவர்களுக்கு கொளுந்துவிட்டு எரிகின்ற நெருப்பை தாங்கிக் கொள்கின்ற ஆற்றலை வழங்கியது என்றும் நமக்குத் தெரியாது. அவர்களின் உலக ஆசைகள் நிறைவடைவதில்லை. அவர்களது உள்ளத்தில் அதன் நேசம் நுழைந்து விட்டது. அத்துடன் அவர்களுக்கு மார்க்கத்தின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது. அவர்கள் غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ (உனது கோபத்திற்கு ஆளானவர்களின் வழியில் அல்லாமல் நேரான வழியில் நடத்துவாயாக) என்று ஓதுகின்றனர். ஆனால் ரஹ்மானுக்கு கோபமூட்டுகின்ற வழிகளில் செல்கின்றனர். ஒரு வகையில், தண்டனை வழங்குகின்ற இறைவன் புறமிருந்து வந்தவருக்கு கட்டுப்பட்டு நடக்க மாட்டோம் என்று அவர்கள் ஆணையிட்டுள்ளனர். அவர்களிடம் வருபவர்கள் உண்மையை மறுக்கும்போது நான் பெருமூச்சு விடுகின்றேன். மேலும் அவர்கள் குருட்டுத்தன்மையின் காரணமாக என்னை காஃபிர் என்று கூறுகின்றனர்.

அந்தோ! இது எத்தகைய அறிவாக இருக்கின்றது! என்று நான் வியப்படைகின்றேன். அல்லாஹ்வே தீர்ப்பளிப்பவனாக

இருக்கின்றான். அவனே எனது துக்கம் மற்றும் துயரத்தின் வேதனையை நன்கு அறிந்துள்ளான். அவர்கள் தமது இறைவனிடம் நான் வேரறுக்கப்படுவதற்கு துஆ கேட்கின்றனர். மேலும் எனது உள்ளத்தில் இருப்பது அவர்களுக்குத் தெரியாது. குருட்டு ஒட்டகம் அடியெடுத்து வைப்பது போல் அவர்களின் துஆ உள்ளது. எனக்காக அவர்கள் விரும்புகின்ற அழிவும் துன்பமும் அவர்கள் மீதே திருப்பப்படும். ரஹ்மானின் கைகளால் நடப்பட்ட ஒரு தூய மரம் தொடர்பாக அவர்கள் செய்யும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுமா என்ன? அத்தூய அம்மரத்தின் நிழலை விரும்புகின்ற ஒவ்வொரு பறவையும் அதில் அடைக்கலம் பெற வேண்டும். பசித்திருக்கின்ற ஒருவனைப் போன்று அதன் பழங்களை விரும்ப வேண்டும். மேலும் ஷய்த்தானிய பண்பை உடைய பருந்துகளிடமிருந்து பாதுகாப்பை வேண்ட வேண்டும். அவர்களுக்கு திருக்குர்ஆன் மீது நம்பிக்கை இருக்கின்றதா? ஒருபோதும் இல்லை. இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் உலகின் பசுமை, செழிப்பு மற்றும் பொலிவு ஆகியவற்றில் அவர்கள் திருப்தியடைந்து விட்டனர். அதன் பக்கமே அவர்கள் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் எந்த மலைப்பாம்பின் மூலமாக இந்த துன்பம் அவர்கள் மீது வருமோ அதிலிருந்து அவர்கள் கவனமற்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் உலக விருப்பங்களை அடையும் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சிகளை கொண்டாடுகின்றனர். அதைப் பற்றி ஆணவத்துடனும், பெருமையை வெளிப்படுத்தும் சொற்களாலும் குறிப்பிடுகின்றனர். ஆனால் வாழ்நாள் கழிவது பற்றியும் மறுமையில் உயர் தகுதிகளை இழப்பது குறித்தும் அவர்கள் எந்த வேதனையையும் உணர்வதில்லை. நிச்சயமாக உலகம் சாபத்திற்குரியதாகும். அதில் இருப்பவையும் சபிக்கப்பட்டதாகும். அதன் வெளித்தோற்றம் இனிமையானதாகவும், அதன் உட்புறம் விஷமாகவும் இருக்கின்றது.

புத்தம்புது பேரித்தம் பழங்களுக்கு பகரமாக எரி பொருளாக பயன்படும் விறகுகளை அவர்கள் வாங்குகின்றனர். இப்படிப்பட்ட

மக்கள் மீது பரிதாபமே! அவர்கள் தம் குத்பாக்களில் கூறும் அறிவுரைகளை தம் வீடுகளில் மறந்து விடுகின்றனர். தாம் செய்யாதவற்றையே அவர்கள் கூறுகின்றனர். மக்களுக்கு எ(ந்த போ)தனை(களைக்) கூறுகின்றனரோ அதை தாம் எண்ணிக் கூட பார்ப்பதில்லை. அவர்கள் தாம் செல்லாத வழிகளின் பக்கம் பிறருக்கு வழிகாட்டுகின்றனர். மேலும் அவர்கள் தாம் அறியாத வழிகளின் பக்கம் பிறருக்கு வழிகாட்டுகின்றனர்.

உண்மைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அவர்கள் அறிவுரை கூறுகின்றனர். ஆனால் அவர்களே அதற்கு முன்னுரிமை வழங்குவதில்லை. நாய்கள் இறந்தவற்றின் மீது விழுவதைப் போன்று அவர்கள் உலகின் மீது விழுகின்றனர். தமது கீழ்த்தரமான விருப்பங்களின் அடிப்படையில் அவர்கள் செய்யாத பணிகளுக்காக அவர்கள் புகழ்ந்து கூறப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். அவர்கள் இறை நேசர்களாகவும், இறையச்சம் உள்ளவர்களாகவும், மாசற்றவர்களாகவும் கருதப்பட வேண்டும் என்பது அவர்களது விருப்பமாகும். ஆனால் உலகை மார்க்கத்–தோடும், மலக்குகளை ஷய்த்தானோடும் ஒன்றாக சேர்க்க முடியாது.

நான் எதிரிகளுக்கு கூற விரும்பிய இறுதி உயிலும், எந்த விஷயத்தைக் கூறுவதற்காக மறுப்பவர்களை அழைக்க நான் எண்ணியிருந்தேனோ அதுவும் இதுவாகும்: அதாவது இதன் மூலமே அல்லாஹ் இதற்கு முன்னர் யூதர்களை சோதனையில் ஆழ்த்தி இருந்தான். அதனால் அவர்கள் வழிதவறிச் சென்று விட்டனர். புறக்கணிக்கப்பட்டு உள்ளத்தை இருளாக்கி விட்டனர். ஏனென்றால் அல்லாஹ் அவர்களிடம் இல்யாஸை வானத்திலிருந்து திரும்ப அனுப்புவதாக வாக்குறுதி அளித்திருந்தான்.★ ஆனால் அவர் அவர்களிடம் ஈஸாவிற்கு முன்னதாக வரவில்லை. அதனால்

---

★ நான் உங்களிடத்து எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். (மக்கியா 4:5) – வெளியீட்டாளர்.

அவர்கள் இந்த சோதனையின் காரணமாக ஈஸாவை பொய்ப்படுத்தினர். விண்ணிலிருந்து இறங்குவது என்பதன் பொருள் உண்மையில் இறங்குவதாக நாம் வைத்துக் கொண்டால் அந்நிலையில் ஈஸா பொய்யராகத்தான் ஆகிவிடுவார். (மேலும் நாம் இந்த அவதூறிலிருந்தும் அல்லாஹ்விடம் அடைக்கலம் வேண்டுகின்றோம்.) ஆலிம்களில் நமக்கு எதிரிகளாக இருப்பவர்கள் யூதர்கள் கடைபிடித்த அதே வழிமுறைகளை ஏன் கடைபிடிக்கின்றனர்? என்று எனக்கு வியப்பாக இருக்கின்றது. அவர்கள் இந்த (யூத) சமுதாயத்தின் வரலாறையும், மிகவும் அன்பு செலுத்தக்கூடிய இறைவனின் கோபம் அவர்கள் மீது இறங்கியதையும் எவ்வாறு மறந்து விட்டனர்? ஈஸாவின் நாவால் யூதர்கள் மீது சாபம் இடப்பட்டது போன்று எனது நாவால் அவர்கள் மீது சாபம் இடப்படுவதை அவர்கள் விரும்புகின்றனரா? அவர்களது பார்வையில் ஈஸா இறங்குவது கண்டிப்பாக நிறைவேற வேண்டிய ஒன்றா என்ன? அதே சமயத்தில் கடந்த காலத்தில் இல்யாஸ் இறங்க வேண்டியது கண்டிப்பாக நிறைவேற வேண்டிய ஒன்றாக இருக்கவில்லையே! இது மிகவும் நியாயமற்ற பங்கீடாகும்.

அவர்கள் திருக்குர்ஆனை ஓதுவதில்லையா? அதாவது எவ்வாறு அவன் நமது எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், முஹம்மதே! நீர் கூறுவீராக. எனது இறைவன் தூயவன். நான் ஒரு மனிதத் தூதர் மட்டுமே ஆவேன்★ என்று கூறியுள்ளான். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? ஈஸா மனிதர் இல்லையா? அவரோ வானத்திற்கு ஏறிச் சென்று விட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட நமது நபி (ஸல்) அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டார்கள். மஸீஹ் இறங்குவது மற்றும் இல்யாஸ் இறங்குவது ஆகிய செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற ஒவ்வொரு நபருக்கும் இந்த இரண்டு முன்னறிவிப்புகளின் கருத்தும் ஒன்றே

★ திருக்குர்ஆன் **17:94** – வெளியீட்டாளர்.

ஆகும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இருக்காது. இல்யாஸ் மஸீஹின் காலத்தில் இறக்கப்பட்டாரா? என்று வேதம் கிடைக்கப் பெற்ற மக்களிடம் கேளுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! தெளிவான பொய்யின் மீது பிடிவாதம் கொள்ளாதீர்கள். அல்லாஹ்வின் நடைமுறையில் ஒருபோதும் எந்த மாற்றமும் ஏற்பட்டதில்லை. எனவே கருத்து தெளிவாகத்தான் இருக்கின்றது. அதில் எந்த முரண்பாடும் இல்லை. ஆதம் தோன்றியதிலிருந்து இன்று வரை எந்தவொரு மனிதரும் வானத்திலிருந்து இறங்கவில்லை. சந்தேகத்தையும் இது பொய்யாக புனைந்து கூறப்பட்டதாகும் என்ற யூகத்தையும் அகற்றுவதற்காக இல்யாஸ் இறங்க வேண்டியது மிகவும் அவசியமானதாக இருந்தது. ஆனால் அவ்வாறிருந்தும் கூட அவர் இறங்கவில்லை.★

நாம் ஈஸா இறங்குவது மற்றும் இல்யாஸ் இறங்குவது ஆகிய இரு நிகழ்வுகளுக்கிடையில் ஓரிடத்தில் உருவகமாகக் கூறப்பட்டுள்ளது என்றும், இன்னோரிடத்தில் உருவகமாகக் கூறப்படவில்லை என்றும் கருதுவது எத்தகைய அநீதியாக உள்ளது? அதனை எந்த முழுமையான அறிவும் ஏற்றுக் கொள்ளாது.

---

★ அப்பொழுது அவருடைய சீடர்கள் அவர்களைப் பார்த்து: அப்படியானால் எலியா முந்தி வர வேண்டும் என்று வேத பண்டிதர்கள் சொல்லுகிறார்களே, அது எப்படி என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக:..... உண்மைதான். ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்கிறேன். (மத்தேயு 17:10–12)

எலியா தீர்க்கதரிசி வானத்திற்கு சென்றுள்ளார் எனவும், இயேசுவுக்கு முன் அவர் வானத்திலிருந்து இறங்கி வருவார் என்றும் யூத பண்டிதர்கள் நம்பினர். (II ராஜாக்கள் 2:11)

அதாவது எலியா என்பது பல ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியது அதே எலியா தீர்க்கதரிசி அல்ல; மாறாக அவரது ஆவியிலும், தத்துவத்திலும் தோன்றிய யோவான் ஸ்நானன் என்று இயேசு தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது யோவான் ஸ்நானனைத்தான் உருவகமாக எலியா என்று முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது என்பதை இயேசு விளக்கி இருக்கிறார். – வெளியீட்டாளர்.

நடுநிலையைக் கடைபிடிப்பவர் அதனை உண்மைப்படுத்த மாட்டார். மேலும் அல்லாஹ் மக்களை மாறுபட்ட செயல்களின் மூலம் வழிகெடுத்து விட்டான் என்று கூற வேண்டியது வரும். ஓரிடத்தில் ஒரு வழிமுறையையும் இன்னோர் இடத்தில் வேறொரு வழிமுறையையும் அல்லாஹ் கடைபிடிக்கின்றான் என்ற விஷயத்தை அவனுடன் தொடர்புபடுத்தி நாம் எவ்வாறு கூற முடியும்?

நீர் உண்மையைத் தேடுபவராக இருந்தால் நன்றாக சிந்தனை செய்வீர். நீர் எதிரியாக இருந்தால் சிந்திக்கவே மாட்டீர் என்பது எனது எண்ணமாகும். மேலும் உமக்கு என்ன நேர்ந்து விட்டது. எந்தவொரு அறிவும் இல்லாமல் இறைவன் மற்றும் அவனது தூதருக்கு முன்னால் தேவையில்லாமல் நீர் பேசுகின்றீர். அல்லது உம்மிடம் ஏதாவது தெளிவான உறுதி இருக்கின்றதா? இது இறையச்சத்தின் வழிமுறையா?

நீர் இறையச்சமுடையவராக இருந்தால் நீர் ஆசைப்படுகின்ற வெற்றியை விட தோல்வி உமக்கு மிகவும் சிறந்ததாகும். உம்மிடம் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் உறுதிப்படுத்துகின்ற முத்திரையிடப்படாத சில அறிவிப்புகளைத் தவிர வேறு எதுவுமே இல்லை. இவை படைப்பினங்களின் தலைவராகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகு எழுதப்பட்ட பக்கங்கள் மட்டுமே ஆகும். நமது கண்ணியமிக்க மேலான இறைவனின் வேதத்திலுள்ள வரலாறுகளுடன் ஒத்திராத அந்த வரலாறுகள் மீது நாம் நம்பிக்கை கொள்வதில்லை.

இதற்கு முன்னர் இத்தகைய கொள்கையை கொண்டிருந்ததன் காரணமாக யூதர்கள் வழிதவறி விட்டனர். எனவே நீங்கள் அவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்ல வேண்டாம். அவர்களது விருப்பங்களின் வழிகளை பின்பற்ற வேண்டாம். அல்லாஹ்வின் கோபம் உங்கள் மீது இறங்குவதற்கு

அஞ்சுங்கள். எவர் மீது அல்லாஹ்வின் கோபம் இறங்கியதோ கண்டிப்பாக அவர் அழிந்து விட்டார்.

யூதர்களிடத்தில் கண்ணியத்திற்குரிய இறைவனின் வேதம் இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர்கள் தமது எண்ணத்திற்கேற்ப அதனை பின்பற்றி நடந்தனர். அவர்கள் அந்த வசனத்திலிருந்து எந்த கருத்தை புரிந்தார்களோ அதைப் பின்பற்றினர். மேலும் நாங்கள் எந்தவொரு சார்பு வாசகமும் இல்லாமல் அல்லாஹ்வின் வசனங்களை வெளிப்படையான கருத்திலிருந்து ஒருபோதும் திருப்ப மாட்டோம் என்று அவர்கள் கூறினர். எனவே அவர்கள் தங்களுக்கென்று ஒரு சாக்குப் போக்கினை உருவாக்கிக் கொண்டனர். அது வெளிப்படையில் உங்களின் சாக்குப்போக்குகளை விட எவ்வளவோ சிறந்ததாகும். அவர்கள் எவற்றையெல்லாம் பெற்றார்களோ அவையெல்லாம் அல்லாஹ்வின் வேதத்தில் தெளிவாக இருப்பதை அவர்கள் கண்டனர். உங்களிடம் இந்த வேதம் தவிர வேறு எந்த வேதமும் இல்லை. இன்னும் கூறுவதென்றால், உங்களின் எதிர்ப்பின் காரணமாக அல்லாஹ்வின் வேதமும் உங்களை பொய்ப்படுத்துகின்றது. மேலும் உங்களின் கன்னத்தில் அறைந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே நீங்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஒரு கைவிடப்பட்ட பொருளைப் போன்று ஆக்கிக் கொண்டிருக்கின்றீர்கள். மேலும் பாக்கியமற்ற வழியில் சென்று அதை உங்கள் முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்து விட்டீர்கள். யூதர்கள் தங்கள் வேதத்தை முதுகுக்குப் பின்னால் எறியவில்லை. அவ்வாறே தமது எழுத்துக்களில் அவர்கள் மனதில் தோன்றிய எந்த விஷயத்தையும் எழுதவில்லை. எனவே ஈஸா அவர்களின் கூற்றை மெய்ப்பித்தார்கள். இது அவர்களின் முதலாவது கூற்றாக இருந்தும் கூட அவ்வாறு செய்தார்கள்.

ஆனால் அதற்கு (ஈஸா அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் விளக்கம் கூறினார்கள். மேலும் இறங்கி வர வேண்டியவர் இறங்கி வந்து விட்டார்.★ அவர் யஹ்யா ஆவார் என்று (ஈஸா அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் கூறினார்கள். ஆனால் நீங்களோ மிகவும் அன்பு கொள்கின்ற அல்லாஹ்வின் வேதத்திற்கு எதிராக இருக்கின்ற கூற்றின் மீது பிடிவாதமாக இருக்கின்றீர்கள். எனவே சந்தேகமின்றி தரத்தைப் பொருத்தவரையில் நீங்கள் யூதர்களை விட மோசமானவர்களாக இருக்கின்றீர்கள்.

இந்த விஷயங்களிலிருந்து குறைந்தபட்சம் நாம் அடைகின்ற பயன் என்பது இந்த கருத்து வேறுபாடுள்ள விஷயங்களில் அல்லாஹ்வின் நடைமுறை எவ்வாறு இருந்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நீங்கள் கம்பீரமிக்க இறைவனுக்கு அஞ்சாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன ஆகிவிட்டது? உங்களுக்கு அல்லாஹ்வின் நடைமுறையில் ஏதாவது மாற்றம் தெரிகின்றதா? நீங்கள் உங்கள் அறைகளுக்குச் சென்று அழாமல் இருப்பதற்கும் அதிகமாக அழுது மன்றாடாமல் இருப்பதற்கும் என்ன காரணம்? அதன் மூலம் அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்ட வேண்டும்; உங்களுக்கு வழிகாட்ட வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் எனக்கும் உங்களுக்குமிடையில் தீர்ப்பு வழங்குவான். எனவே இவ்விஷயத்தில் அவசரம் காட்ட வேண்டாம். மேலும் அழகிய பொறுமையை கடைபிடியுங்கள். இறையச்சத்துடன் செயல்படாமல் இருப்பதற்கும், உங்களது அகத்திலுள்ள நோய்க்கு சிகிச்சை அளிக்காமல் இருப்பதற்கும், உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? நான் அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறுவதாக நீங்கள் கருதுகிறீர்களா? பெரும் சுமையாக இருக்கும் (மறுமை) நாளைக் குறித்து நீங்கள் அஞ்சாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

---

★ நீங்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவரே. (மத்தேயு 11:14) – வெளியீட்டாளர்.

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டி பொய் கூறுகின்றார்களோ அவர்களின் முடிவு நன்றாக இருப்பதில்லை. அல்லாஹ் அவர்களின் பகைவனாக ஆகிவிடுகின்றான். அவர்கள் துண்டு துண்டாக்கப்படுகின்றனர். அவர்களின் அணி சுருட்டப்பட்டு விடுகின்றது. ஆனால் எவர்கள் உண்மையாளர்களாக இருக்கின் –றார்களோ, தனது இறைவனிடமிருந்து வந்திருக்கின்றார்களோ அத்தகைய மக்களை எவரால் அழிக்க முடியும்? அல்லது இழிவுபடுத்த முடியும்? அவர்களின் இறைவன் அதிகாலையிலும், முற்பகலிலும், மதிய வேளையிலும், மாலையிலும் அவர்களுடன் இருக்கின்றான். அதே நேரத்தில் எவர்கள் அல்லாஹ்வின் தூதர்களை பொய்ப்படுத்துகின்றனரோ, மேலும் அல்லாஹ் தனது நண்பனாக ஆக்கிக் கொண்ட அந்த அடியாரிடம் பகைமை பாராட்டுகின்றார்களோ அத்தகைய மக்களுக்கு மறுமையில் நெருப்பு மட்டுமே எஞ்சியிருக்கும்.

அடர்த்தியான நிழல்கள் அவர்களுக்குக் கிடைக்காது. அவர்கள் நரகில் நுழையும்போது எங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது. எவர்களை நாங்கள் தீங்கு விளைவிப்பவர்களைச் சார்ந்தவர்கள் எனக் கருதி வந்தோமோ அம்மக்கள் இங்கு எங்களுக்கு தென்படவில்லையே என்று கூறுவார்கள். அப்போது உண்மை நிலை அவர்களுக்கு முழுமையாக விளக்கிக் கூறப்படும்.

நாம் மீண்டும் முதலில் கூறிய விஷயத்தின் பக்கம் திரும்பியவாறு இதனைக் கூறுகின்றோம். அதாவது இல்யாஸ் இறங்கியது பற்றிய வரலாறு மற்றும் ஈஸா (அலை) அவர்கள் மக்களுக்கு முன்னால் அது பற்றிய விளக்கம் கூறியது எத்தகையதொரு விஷயமென்றால் அது யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் எல்லா பிரிவுகளுக்கு மத்தியிலும் புகழ்பெற்று விளங்குகின்றது. இது தொடர்பாக அவர்களில் எவரும் எந்த எதிர்ப்பையும் கருத்து வேறுபாட்டையும் காட்டியதில்லை. மாறாக,

அவர்கள் அனைவரும் எவ்வித கருத்து வேறுபாடும் கொள்ளாமல் இவ்விஷயத்தில் முழுமையாக ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர். அவர்களில் எந்தவொரு மதகுருவுக்கும் இந்த வரலாறு பற்றிய அறிவு இல்லாமல் இல்லை. அல்லது இதுபற்றி அவர்களது உள்ளத்தில் எந்தவொரு சந்தேகமும் எழுந்ததில்லை.

எனவே சிந்தனை செய்யுங்கள்! யூதர்கள் நபிமார்களிடம் இருந்து கல்வி கற்றிருந்தும் மகத்துவமிக்க இறைவனின் புறமிருந்து அவர்களிடம் நபி அனுப்பப்படாத எந்தவொரு காலமும் இல்லாமல் இருந்தும் கூட இந்த வரலாற்றின் உண்மை நிலையைப் பற்றி அறியாதவர்களாக அவர்கள் இருந்தனர். இந்த இரகசியத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. (உருவகமாக கூறப்பட்டிருந்ததை) நேரடியாக அப்படியே நிறைவேற வேண்டும் என அவர்கள் கருதினர். ஈஸா (அலை) அவர்களிடம் வந்த போது அவர்களது சிந்தனைகளில் வடிவமைக்கப்பட்டு அவர்களது உள்ளத்தில் பதிந்திருந்த அத்தகைய அடையாளத்தை அவரிடம் அவர்கள் பார்க்கவில்லை. அதன் விளைவாக அவர்கள் அவரை மறுத்தனர். அவரை பொய்யர்களில் ஒருவராகக் கருதினர். அவருடன் எந்த அளவு (மோசமாக) நடந்து கொள்ள முடியுமோ அந்த அளவு (மோசமாக) நடந்து கொண்டனர். அவரை பொய்யை புனைந்து கூறுபவருடன் சேர்த்து விட்டனர்.

எனவே இறங்குதல் என்பதற்கு உண்மையிலேயே நேரடியாக இறங்குதல் என்பது கருத்தாக இருந்தால் பிறகு இதன் அடிப்படையில் ஈஸா (அலை) அவர்கள் உண்மையாளர் அல்லர். மேலும் எந்த யூதர்களைப் பற்றி இறைவன் தனது சாபம் இறங்கியிருப்பதாக கூறினானோ அவர்களுடன்தான் உண்மை இருக்கின்றது என்பது உறுதியாகி விடும். இதுவே இறை வேதத்தின் தெளிவான வசனங்கள் கூறுவதும், அதற்கு எதிராக பிடிவாதமாக இருக்கின்ற அம்மக்களின் நிலையுமாகும்.

ஈஸா இறங்குவார் என்ற கொள்கை தொடர்பாக உங்களது கருத்து என்ன? உங்களிடம் யூகங்களாக மட்டும் இருக்கின்ற, அழுக்குகள் கலந்திருக்கின்ற, இறைவனின் கூற்றிற்கு (அதாவது திருக்குர்ஆனுக்கு) எதிராக இருக்கின்ற அறிவிப்புகள் மட்டுமே இருக்கின்றன. நீங்கள் யூதர்களைப் பின்பற்றிச் செல்வதற்கும் உங்களது இயல்பை அவர்களது இயல்பிற்கு ஒத்ததாகவும் ஆக்கிக் கொள்வதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? அவர்களது சாபத்தில் பங்கு பெறுபவர்களாக ஆகுவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா என்ன? தவ்பா செய்யுங்கள். மீண்டும் தவ்பா செய்யுங்கள். அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். ஏற்கனவே நடந்தவைகளுக்காக வெட்கப்படுங்கள். ஏனென்றால் மரணம் அருகில் இருக்கின்றது. அல்லாஹ் கணக்கெடுப்பவனாக இருக்கின்றான். மக்களே! உங்களை மிகப்பெரும் சோதனை பற்றியிருக்கின்றது. எனவே அறைகளில் எழுந்து நில்லுங்கள். பிரபஞ்சத்தின் இறைவனின் சந்நிதியில் அழுது மன்றாடுங்கள். அல்லாஹ் மிகவும் கருணையும் பரிவும் காட்டக் கூடியவனாக இருக்கின்றான். நல்லுள்ளத்துடன் அவன் பக்கம் வருபவருக்காக அவனது கருணை அவனது கோபத்தை முந்திக் கொள்கிறது. நீங்கள் விரும்பினால் இந்த காலத்திலுள்ள யூதர்களிடம் கேட்டுப் பாருங்கள். அல்லது தக்வாவின் அடிகளை எடுத்து வைத்தவாறு என்னிடம் வாருங்கள். மேலும் எந்த சந்தேகம் உங்களது உள்ளங்களில் இடம் பெற்று இருக்கின்றதோ அதை எனக்கு முன்னால் எடுத்து வையுங்கள். நீங்கள் இந்த சோதனைக்கு அஞ்சாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன ஆகி விட்டது?

மேலும் மகத்துமிக்க இறைவனிடமிருந்து கிடைக்கக்கூடிய எந்தவொரு தெளிவான ஆதாரமும் இல்லாமலேயே அல்லாஹ்வின் நடைமுறையை நீங்கள் கைவிட்டு விடுகின்றீர்கள். எவற்றுடன் எந்தவொரு தெளிவான ஆதாரமும் இறங்கவில்லையோ, எவற்றை

திருக்குர்ஆனில் இருப்பதாகக் கூட நீங்கள் பார்க்கவில்லையோ அத்தகைய கூற்றுகளில் நீங்கள் பிடிவாதம் பிடிக்கின்றீர்கள். அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள் யூகங்களை மட்டுமே பின்பற்றுகின்றீர்கள். ஆனால் உண்மைக்கு எதிரில் யூகம் எந்த பயனையும் தராது. மேலும் அதனால் மன நிறைவும் கிடைப்பதில்லை. அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட நெறிநீதி தீர்ப்பவருக்கு அல்லாஹ்விடமிருந்து அறிவு வழங்கப்பட்ட பிறகும் கூட அவர் உங்களது யூகங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களா? நீங்கள் பகைமையின் காரணமாக வரம்புமீறி செயல்படுவதற்கும், சந்தேகத்தின் பெயரில் உறுதியான நம்பிக்கையை கைவிட்டு விடுவதற்கும் உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? இது தான் ஈமானா? மேலும் உலகம் கேளிக்கையும் விளையாட்டும் மட்டுமேயாகும். எனவே ஆரோக்கியமும், அமைதியும், பாதுகாப்பான வாழ்க்கையும் உங்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தி விடாமல் இருக்க வேண்டும். மரணம் திடீரென்று உங்களை ஆட்கொண்டு விடும். நீங்கள் வலுவான கோட்டைகளில் தங்கியிருந்தாலும் சரியே! கோபத்தை வெளிப்படுத்துகின்ற இறைவனின் கைகளிலிருந்து உதவி செய்கின்ற எவரும் உங்களை காப்பாற்ற முடியாது.

நீங்கள் திருக்குர்ஆனை விட உங்கள் சந்தேகங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றீர்களா? நீங்கள் கடைபிடிக்கின்ற வழி மிகவும் தீயதாகும். உங்களது கண்கள் குருடாகி விட்டன. எனவே ரஹ்மானிடமிருந்து வருகின்ற அடையாளங்களை நீங்கள் பார்க்காமல் இருக்கின்றீர்கள்.

எல்லாவற்றையும் நன்கு அறிந்த இறைவன் புறமிருந்து ஏறக்குறைய 20 வருடங்களாக நான் மஸீஹாக ஆக்கப்பட்டிருக் –கின்றேன். இந்த அந்தஸ்தைப் பெற, நான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று எனக்கு எந்த விருப்பமும் இருந்ததில்லை. நான்

பொது மக்கள் மத்தியில் பிரசித்தி பெறுவதை விரும்பியதில்லை. பிறகு எனது இறைவன் வலுக்கட்டாயமாக எனது அறையில் இருந்து என்னை வெளியேற்றினான். நான் எல்லாவற்றையும் நன்கு அறிந்த இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடந்தேன். மேலும் இவை எல்லாமே தாராளமாக வழங்கக்கூடிய எனது இறைவனின் நன்கொடையாகும். எல்லாவகையான பட்டங்களிலிருந்தும் தவிர்ந்திருந்த நான் என்னை தனிமைப்படுத்திக் கொண்டேன். எனக்கு புகழைக் கொண்டு என்ன ஆகப்போகின்றது? எனது இறைவன் எனக்கு போதுமானவனாக இருக்கின்றான். எனது உள்ளத்திலுள்ளதை அவன் அறிந்துள்ளான். இந்த உலகிலும் கணக்கெடுக்கும் நாளிலும் அவனே எனது கேடயமாகவும் சொர்க்கமாகவும் இருக்கின்றான்.

நான் இல்யாஸ் இறங்குவது பற்றிய வரலாற்றை அறிவையும் புரியும் திறனையும் கொண்டவர்களுக்காக எழுதியுள்ளேன். நான் என்னை எதிர்க்கின்ற சில ஆலிம்களை சந்தித்தேன். உங்களுக்கு முன்னால் தற்போது நான் எடுத்துக் கூறிய இந்த விஷயத்தை அவர்களுக்கு முன்னாலும் நான் எடுத்துக் கூறினேன். அப்போது அவர்கள் முற்றிலுமாக அமைதியாக இருந்து விட்டனர். எந்தவோர் அறிவுப் பூர்வமான விஷயத்தையும் அவர்கள் நாவில் கொண்டு வரவில்லை. அவர்கள் வாயடைத்துப் போய் விட்டனர். வெட்கப்படுகின்ற, இழிவிற்கு ஆளான ஒரு நபரைப் போன்று அவர்கள் ஓடிவிட்டனர்.

## (வஹி எனும்) இறையறிவிப்பின் உண்மை நிலை மற்றும் அதை பெறுவதற்கான வழிகள் பற்றிய குறிப்பு

இப்போது நாம் இந்த நூலை இறையறிவிப்பின் ஒளிகள், சிறப்புகள் மேலும் அதை பெறுவதற்கான வழிகள், வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி எடுத்துக் கூறியவாறு நிறைவு செய்கின்றேன். அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியை வழங்குவானாக! இறையறிவிப்பு அல்லாஹ்வின் வார்த்தையின் சூரியனாகும். அது இறைநேசர்களின் உள்ளங்களின் அடி வானத்திலிருந்து இந்த நோக்கத்திற்காக உதிக்கின்றது. அதன் மூலமாக அல்லாஹ் வழிகேட்டின் வீணான இருள்களை அழிக்கின்றான். அது ஒரு நீரூற்றாக இருக்கின்றது. அதன் தலையூற்று வரண்டு விடுவதில்லை. அதன் நீரோட்டம் துண்டிக்கப்படுவதில்லை.

வஹீ அந்த மினாராவாக இருக்கின்றது. அதன் விளக்கு எதிரிகளால் அணையாது. இது எத்தகையதோர் ஆயுதங்களால் சூழப்பட்டிருக்கும் கோட்டையாக இருக்கின்றதென்றால் அதன் படைகளை எண்ண முடியாது. இது எத்தகைய புனித பூமியாக இருக்கின்றதென்றால் அதை சென்றடையும் வழிகள் பற்றிய அறிமுகம் தேவையில்லை. மேலும் அது எத்தகைய தோட்டம் என்றால் அதன் மூலம் கண்களின் குளிர்ச்சியும் புத்துணர்வும் அதிகரிக்கின்றது. மனித அசுத்தங்களிலிருந்து தூய்மையாக்கப்பட்ட மக்களைத் தவிர மற்றவர்களால் அதைப் பெற முடியாது. அவர்களுக்கு இறை நல்லொழுக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் இறையச்சத்தை அதிகமாக்கினர். அதை அவர்கள் துண்டு துண்டாக்கவில்லை. அவர்கள் தக்வாவின் முடிகளை அலங்கரித்தனர். அவற்றை அலங்கோலமாக விட்டுவிடவில்லை.

அவர்கள் ஒரு தூய மரத்தைப் போன்று பூத்தனர்; கனிந்தனர். வேகமாக செல்லும் ஒரு பெண் ஒட்டகத்தைப் போன்று அவர்கள் தமது இறைவனின் பக்கம் விரைவாக சென்றனர்.

அவர்கள் ரஹ்மானின் வழிகளில் வரம்பு மீறி செல்லவும் இல்லை; பின்தங்கி விடவுமில்லை. மேலும் அவனுக்கு அஞ்சியவாறு அவர்கள் பணிவை மேற்கொண்டனர். அவர்கள் அவனுக்காக நாவின் மென்மையை தமது உள்ளத்தின் உணர்வுகளின் கேடயமாக ஆக்கினர். மேலும் வலுவான தைரியத்துடன் அல்லாஹ்வின் வழிகளில் ஒவ்வொரு நொடியும் ஆயத்தமாகி இருந்தனர். முழுமையான மனித ஆற்றல்களுடன் உண்மைக்காக ஒன்று திரண்டனர். அவர்கள் சந்தேகங்களின் இடுப்பை உடைத்து விட்டனர். மேலும் வானத்தின் தண்ணீரைப் பெறுவதற்காக தண்ணீரும், புற்களும் இல்லாத பாலைவனத்தின் பக்கம் சென்றனர். அவர்கள் அல்லாஹ்வின் வழிகளில் சோம்பலைக் காட்டுவதுமில்லை; தயங்குவதுமில்லை. அவர்கள் பூமியில் பணிவுடன் நடக்கின்றனர்; அகம்பாவத்துடன் நடப்பதில்லை. மீதமுள்ள உணவே போதுமானது என்று அவர்கள் இருந்து விடுவதில்லை. மேற்கொண்டு (எல்லாப் பொழுதும்) அவர்கள் வேண்டிக் கொண்டே இருக்கின்றனர். அவர்கள் மார்க்கத்தின் பூமியில் முன்னேறிச் சென்று கொண்டிக்கின்றனர். அவர்கள் நிற்பதில்லை.

அவர்களது நெஞ்சங்கள் கோபத்தால் வெருண்டெழுவ –தில்லை. நீர் அவர்களிடம் நிதானத்தைக் காண்பீர். அவர்கள் அவசரப்படுவதில்லை. அவர்களின் உரையாடல் துர்நாற்றம் வீசும் தண்ணீர் போன்று இருப்பதில்லை. அவர்கள் எப்போது பேசினாலும் மிகவும் நிதானத்துடன் பேசுகின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் எல்லாவற்றையும் அவனுக்காக கைவிட்ட நிலையில் செல்கின்றனர். அவர்கள் அமைதியாக இருக்கின்றனர். அவர்களைப் பேசுமாறு கூறாதவரை அவர்கள் பேசுவதில்லை. அவர்கள் தீய தோற்றத்தை உடையவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் ஒளிமயமான தோற்றத்தை உடையவர்கள் ஆவர். எந்தவொரு துன்பமும் அல்லாஹ்வின் மீது அவர்கள் கொண்டிருக்கும் அன்பை விட்டும் அவர்களை தடுப்பதில்லை.

அவர்கள் ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்வின் பக்கம் வேகமாக செல்கின்றனர். அவர்களது உள்ளங்கள், கண்கள் மற்றும் காதுகள் அவன் முன்னிலையில் குனிந்திருக்கின்றன. அவை அவனது அடிச்சுவட்டை பின்பற்றிச் செல்கின்றன. மேலும் அல்லாஹ் அவர்களை (தனது அன்பின் வெப்பத்தால்) எப்படி சூடாக்கி விடுகின்றான் என்றால் அது அவர்களின் குளிரை அகற்றி விடுகின்றது. அவர்கள் ஒவ்வொரு நொடியும் (இறையன்பின் வெப்பத்தால்) சூடாக்கப்படுகின்றனர். அவர்கள் இப்லீஸை விரட்டியடிக்கின்றனர். மேலும் உண்மைக்கு வலிமையை வழங்குகின்றனர். அ(ந்த இறை)வனுக்காக பழிவாங்கு –கின்றனர். அவர்கள் உலகை விரும்புவதில் திளைத்திருப்பதில்லை. மேலும் அவர்கள் அதை அற்பமாகக் கருதுகின்றனர். அதன் பக்கம் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவர்கள் ஒரே நிலைமையில் நின்று விடுவதில்லை; மாறாக ஒவ்வொரு நொடியும் அல்லாஹ்வின் பக்கம் அவர்கள் ஓடுகின்றனர். அவர்கள் அல்லாஹ்விற்கு அஞ்சுகின்றனர். அவனுக்காக தாழ்மைக் குணத்தைக் கைக்கொள்கின்றனர். அவர்கள் தமது மனதின் கடிவாளத்தை இழுத்து வைக்கின்றனர். மேலும் சுகத்திற்கான வாசல்களை தங்கள் மீது குறுகியதாக ஆக்கிக் கொள்கின்றனர். அவற்றை திறந்த நிலையில் அவர்கள் விட்டு விடுவதில்லை.

அவர்கள் தமது இறைவனின் நெருப்பின் பக்கம் அழைக்கப்படும்போது அவர்கள் அஞ்சுவதில்லை. அவர்கள் தமது கனியாத விளைச்சலை விற்பதில்லை. மாறாக, அவற்றை அவர்கள் பாதுகாக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வை அடைய விடா முயற்சி செய்கின்றனர். மேலும் அவனிடம் மன்றாடுகின்றனர். அவர்கள் (தமது) சந்ததிகள் இறப்பதைக் கண்டு அஞ்சுவதில்லை. துன்பம் அவர்களை அழித்து விட்டாலும் சரியே!

அவர்கள் அல்லாஹ்விற்காக கடினத்தை சகித்துக் கொள்கின்றனர். மேலும் அந்த மக்களிடத்தில் (அறிவின்) தண்ணீர்

மிகுதியாக இருக்கின்றது. அவர்களது அறிவு அடிமட்டத்தில் படிந்திருக்கும் பொருளைப் போன்றதன்று. அவர்களுக்கு இறைஞானம் வழங்கப்படுகின்றது. அதில் அவர்கள் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கின்றனர். அவர்கள் உலகின் மீது வெற்றி பெற்று விடுகின்றனர். அதனை அடித்து வீழ்த்தி விடுகின்றனர். அவர்களுக்கு அதன் மீது கோபம் வருகின்றது. பெரிய கோடரியால் அதன் இடுப்பை முறித்து விடுகின்றனர். எனவே அவர்கள் இ(ந்)த (உலகி)ன் கூச்சலிலிருந்து தொலைவில் வைக்கப்படுகின்றனர். நீர் அவர்களின் தைரியத்தை வலிமைமிக்க ஒட்டகங்களைப் போன்று காண்பீர். அவை பெரும் பெரும் பாலைவனங்களைக் கடந்து செல்கின்றன. மேலும் அவை சோர்ந்து விடுவதில்லை.

அவர்கள் தமது இறைவனின் கட்டளையிலிருந்து முகம் திருப்புவதில்லை. அவன் முன்பு அவர்கள் சிரம் பணிகின்றனர். அவர்களது பூமி செல்வச் செழிப்பானதாக இருக்கின்றது. அதன் தாவர வகைகள் அல்லாஹ்வுடன் ஒன்றி இருக்கின்றன. அதன் காரணமாகவே அவர்கள் அந்த புனிதமிக்க மரத்தின் மீது நிரந்தரமாக தங்க வைக்கப்படுகின்றனர்.

அல்லாஹ்வின் போர்வை அவர்களது தோற்றங்களை மறைத்து வைத்துள்ளது. எனவே அவர்கள் அந்த போர்வைக்கு கீழே மறைந்துள்ளனர். உலகம் மற்றும் அதில் இருப்பவற்றை அவர்கள் அற்பமாகக் கருதுகின்றனர். அவர்களது நிலைமை புதிதாக பிறந்துள்ள ஓர் அப்பாவி குழந்தை போன்று மாற்றப்படுகின்றது. அவர்கள் கைவிடப்படுவதில்லை. அவர்களிடத்தில் அநீதி, குறைமதி மற்றும் ஆணவம் இருப்பதில்லை. அவர்கள் ஒவ்வொரு துன்பத்தின் போதும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புகின்றனர். அவர்கள் எவர்களது கண்ணியத்தையும் எந்த உரிமையும் இல்லாமல் களங்கப்படுத்துவதில்லை; எவர்களிடத்திலும் தீய சொற்களைக் கூறுவதுமில்லை. அவர்கள் மிகத் தொலைவிலுள்ள துன்பங்கள்

நிறைந்த மலை சிகரங்கள் குறித்தோ வரண்ட பாலைவனம் குறித்தோ அஞ்சுவதில்லை; அவர்கள் துயரப்படுவதுமில்லை. அவர்கள் இயல்பிலுள்ள மறைவான ஆற்றல்களை வெளிப்படுத்து –வதற்காக இயல்பின் கண்ணாடி(க் குப்பி)யைத் திறக்கின்றனர். அவர்கள் உலகிலிருந்து மறுமைக்கான பயண உணவைப் பெறுகின்றனர். அவர்கள் சூழ்ச்சி செய்கின்ற மற்றும் கொடுமை இழைக்கின்ற காலத்தைப் பொருட்படுத்துவதில்லை. அவர்கள் இறைவனையே தன் கையாக ஆக்கிக் கொள்கின்றனர். மேலும் அவன் மீதே நம்பிக்கை கொள்கின்றனர். இம்மக்களே தம் அகத்திலிருந்து மன இச்சைகளின் வேர்களைப் பிடிங்கி எறிந்தவர்கள் ஆவர்.

நீர் அவர்கள் ஆயத்தமாக இருப்பதைக் காண்பீர். அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் அடியெடுத்து வைத்து முன்னேறிச் செல்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் நறுமணம் மற்றும் அவன் மீதுள்ள தனிப்பட்ட அன்பால் நிரம்பி இருக்கின்றனர். அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தாலும் நீர் அவர்கள் விழித்திருப்பதாகக் காண்கின்றீர். இத்தகைய மக்களே பகட்டான தூய்மையின் வலையிலிருந்து காப்பாற்றப்பட்டவர்கள்.

மேலும் உண்மையான தக்வாவின் நிறம் பூசப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டனர். (இறை)நேசத்தின் நெருப்பு அவர்களை மாய்த்து விட்டது. விரைவாக மூச்சு விட ஆரம்பிக்கின்ற மக்களைப் போன்று அவர்கள் இருப்பதில்லை. அவர்களது கூற்றுக்கள் வெட்டுகின்ற வாளைப் போன்று இருப்பதில்லை. அவர்கள் மீது ஏதாவது கடுமை ஏற்பட்டால் அவர்கள் பொறுமையை மேற்கொள்கின்றனர். அவர்கள் துன்பத்தை தருகின்ற தீய மக்களுக்கு நன்மை செய்கின்றனர். அம்மக்கள் கொள்ளையர்களின் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரியே. அவர்கள் அல்லாஹ்வின் முன்னிலையில் இருக்கின்றனர்; அவனை விட்டுப் பிரிவதில்லை. அவன் சந்நிதியிலிருந்து விலகாமல் உறுதியுடன்

அமர்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு தமது ஈமான் தொடர்பாக எப்போதும் அச்சம் இருந்து வருகின்றது. ஈமான் – பறந்து சென்று விடுவதில் பறவையை விட மிகவும் வேகமானதாக இருக்கின்றது என்றும், அச்சம் – துடைத்தெறிவதில் பல் துவக்கும் குச்சியைவிட வலுவானதாக இருக்கிறது என்றும் அவர்கள் கருதுகின்றனர். எனவே அவர்கள் லேசான மழை போதுமானது என்று அவர்கள் இருந்து விடுவதில்லை.

அவர்கள் (தமது நஃப்ஸின்) கற்பாறைகள் நிறைந்த நிலத்தை மென்மையானதாகவும், சமமானதாகவும் ஆக்குவதற்காக அதை உழுது கொண்டே இருக்கின்றனர். மேலும் அவர்கள் இவ்வாறே இந்த களத்தில் அனுபவமுள்ளவர்களாக இருக்கின்றனர். முதல் மற்றும் இறுதி இரவுகளில் பயணிக்கும்போது அவர்கள் சோதனையின் கடும் புயலுக்கு அஞ்சுகின்றனர். அவர்கள் காலையிலும் மாலையிலும் அமைதியிழந்த கண்ணுடனும், சுத்தமான, தூய உள்ளத்துடனும் அழுகின்றனர். அவர்கள் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றனர். அதில் அவர்கள் கருமித்தனத்துடன் நடந்து கொள்வதில்லை.

தம்மிடம் கடன் வாங்கியவர்களுக்கு அவர்கள் சலுகை வழங்குகின்றனர். அவர்களது செல்வத்தை அவர்கள் பறிப்பதில்லை. அவர்கள் கருமிகளாகவும் தீய ஒழுக்கம் உடையவர்களாகவும் இருப்பதில்லை. அவர்கள் பெருமையடிப்பதில்லை. அவர்கள் குழப்பம் விளைவிப்பதிலிருந்தும், பொருள்களை உடைத்து சேதப்படுத்து –வதிலிருந்தும் விலகிச் சென்று விடுவர். மார்க்க பலவீனத்தையும் நீர் அவர்களிடத்தில் காண மாட்டீர். (எதிரிகளின் சபையில்) அவர்கள் ஆமாம் போடுபவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்கள் இறை நெருக்கத்தைப் பெறும் வழிகளில் செல்கின்றனர். அவ்வழியில் தொடர்ந்து சென்று கொண்டே இருக்கின்றனர். அவர்கள் தமது அன்பான(இறை)வனுக்காக தமது சவாரியின்

கயிற்றை இழுக்கின்றனர். மேலும் உலகின் தொடர்பை துண்டித்துக் கொள்கின்றனர். அல்லாஹ்விடத்தில் மட்டுமே விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர். மறுமையின் மீது அவநம்பிக்கை கொண்ட மக்களைப் போன்று அவர்கள் அமர்ந்திருப்பதில்லை. மாறாக அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் ஓடிக் கொண்டேயிருக்கின்றனர். அவர்கள் தமது சவாரிகளிலிருந்து இறங்குவதில்லை. தமது ஒட்டகங்களையும் அவர்கள் ஓய்வெடுக்க விடுவதில்லை. அவர்கள் மக்களின் தேவையிலிருந்து தவிர்ந்து இருக்கின்றனர். எங்குமே அவர்கள் தங்கி விடுவதில்லை.

அவர்கள் தங்களின் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக சஜ்தா செய்தவாறும் நின்றவாறும் இரவைக் கழிக்கின்றனர். அவர்கள் சுகமான வாழ்க்கை வாழ்வதில்லை. அவர்கள் எல்லாத் திரைகளும் நீங்குவதற்காகவும் அல்லாஹ்வை காண்பதற்காகவும் நிம்மதியிழந்து இருக்கின்றனர். தம் மீது கருணை காட்டப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் முழுமையாக முயற்சி செய்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வுக்கு எதிரில் தமது மனதை திருப்திப்படுத்துவதில்லை. அதற்காக அவர்களுக்கு இரத்தம் சிந்த வேண்டியது வந்தாலும் சரியே. அவர்கள் தமது ஆன்மாக்களில் இறையன்பின் நெருப்புகளை மூட்டுகின்றனர். மேலும் எல்லா கணமும் அதனை பிரகாசமாக வைத்திருக்கின்றனர். அவர்கள் நன்றியுணர்வின் முடிச்சை வலுவாக கட்டுகின்றனர். மேலும் அதில் நிலைத்திருக்கின்றனர். அதற்காக அவர்கள் துண்டு துண்டாக்கப்பட்டாலும் சரியே.

இத்தகைய மக்கள்மீதே அல்லாஹ் கருணை காட்டுகின்றான். அவன் ஒவ்வொரு வாசல் வழியாகவும் அவர்கள் மீது தனது முகத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். அவர்கள் நினைத்துக் கூட பார்த்திராத இடத்திலிருந்தும் அவர்களுக்கு வழங்குகின்றான். ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதுடன் முழுமையான

இறையச்சத்தை மேற்கொள்கின்றனர். மேலும் அவனுக்கே அஞ்சுகின்றனர்.

நிச்சயமாக எவர்கள் உலகின் மாமிச துண்டுகளாக இருக்கின்றனரோ மேலும் உலகின் தண்ணீரின் அடிமட்டத்தில் விழுகின்றனரோ மேலும் அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடை –களின் மீது அவநம்பிக்கை அடைகின்றனரோ அத்தகைய மக்களிடம் அல்லாஹ் பேசுவதில்லை. அவர்கள் பாழடைந்த ஏதாவதொரு காட்டில் தூக்கி எறியப்படுகின்றனர். அவர்கள் குருடர்களாக இருக்கின்ற நிலையிலேயே மரணிக்கின்றனர். சூரிய ஒளிக்கதிர் அவர்கள் மீது வீசி இருந்தும் கூட அவர்கள் கண்களைத் திறக்காமல் இருக்கின்றனர். சூரியன் அவர்கள் மீது உதிக்காதது போன்றும், அதைப் பற்றி அறியாதவர்கள் போன்றும் அவர்கள் கண்களை அசைக்காமல் உள்ளனர்.

மேலும் அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே செயல்பட்டு வருகின்றது. அதாவது எந்த நபர் அவனது சந்நிதியில் அவனது திருப்தியைப் பெறுவதற்காக வந்தாரோ அவர் அவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்து வழிதவறி சென்று விட்ட நபரைப் போன்று இருக்க மாட்டார். சந்தேகமின்றி (அல்லாஹ்வாகிய) அவன் கவனமற்றவர்களைப் பொருட்படுத்துவதில்லை. அவன் பக்கம் நடந்து வருபவர்களை நோக்கி அவன் ஓடிச் செல்கிறான். மேலும் அவன் இறையச்சமுள்ளவர்கள் மீது அன்பு கொள்கின்றான். எவ்வாறு வெள்ளம் வந்த பிறகு நுரை எஞ்சியிருக்கின்றதோ அவ்வாறு அவனது நடைமுறை மறைவாக இருப்பதில்லை. கேளுங்கள்! கேளுங்கள்!! பிரகாசமான காலைப் பொழுதைப் போன்று அவனது நடைமுறை வெளிப்பட்டிருக்கின்றது. அதனை எல்லா நேரமும் பார்க்க முடியும். பொய்யன் அழிந்து விட்டான். உண்மையாளர் மேன்மையைப் பெற்று உயர்ந்த தகுதியில் உறுதியாக அமர்ந்து விட்டார். எனவே இறைவன் பக்கம் திரும்பி அவன் மீது

பேரன்பு கொண்டு அவனது வாசலில் அமர்ந்து அவனிடமே நேசம் கொள்பவருக்கு நற்செய்தி வழங்கப்படுகிறது.

சந்தேகமின்றி (இறைவனாகிய) அவன் தனக்காக துண்டு துண்டாக்கப்படுகின்ற அந்த நபரை நேசிக்கின்றான். அவன் சோம்பேறியாக இருக்கின்ற நபரை விரும்புவதில்லை. குருடான எலியைப் போன்று அசைவற்று அமர்ந்தே இருக்கின்றவர்களுக்கு அழிவு தான். அவர்களது சந்தேகங்கள் அதிக குழந்தைகளை உடைய பெண்ணின் குழந்தைகள் போன்று அதிகளவில் இருக்கின்றன. அல்லாஹ்வை வேண்டுவதில் அவர்களுக்கு தாகம் இல்லை. உலகின் பல்வேறு பயன்கள் அவர்களது உள்ளத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவர்களது ஆன்மாக்கள் பலவீனமாகி விட்டன.

எனவே ஈமானின் சுமை அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தி விட்டது. அதன் சுமையின் கீழ் அவர்கள் அமுங்கி விட்டனர். அவர்கள் எப்போதும் உலகத்தின் நினைவிலேயே இருந்து வருகின்றனர். அவர்களது நிம்மதியற்ற எல்லா நிலைகளும் உலகிற்காகவே இருக்கின்றது. விரைவில் அவர்கள் மார்க்கத்தின் ஆடையை கிழித்து விடுவர். அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வுடன் தவறான விஷயங்களை தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். எந்த சூழ்ச்சியை அவர்கள் கையாண்டனரோ அதன் மூலமாகவே அவர்கள் தமது கண்களைக் குருடாக்கிக் கொண்டனர். அவ்வாறிருந்தும் நாங்கள் பார்க்கின்ற சமுதாயமாக இருக்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் தமது பகுத்தறிவு என்னும் ஒட்டகத்தை கீழே கிடத்தி அதை அறுத்து விட்டனர். திருக்குர்ஆன் அவர்களை தனது கட்டளைகளை பேண வைக்கின்றது. அவர்கள் அதிலிருந்து முகம் திருப்பிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அதிகமான மழையின் காரணமாக மோசமடைந்து போன வயலைப் போன்றே அவர்களது நிலைமை இருக்கிறது. அல்லது கடும்

குளிரோ, தண்ணீர்ப் பற்றாக்குறையோ இழப்பை ஏற்படுத்தியுள்ள அந்த விளைச்சலைப் போன்றே அவர்களது நிலைமை இருக்கின்றது. அவர்களை அறிவில் முன்னேறிச் செல்லும்படி செய்ய வேண்டும் என்பது தான் அல்லாஹ்வின் நாட்டமாக இருந்தது. ஆனால் அவர்கள் தமது படிப்பினைகளை மறந்து விட்டனர். அல்லது அவர்களின் நிலைமை ஒருபோதும் வெயில் படாத ஓர் இடத்தில் அமர்ந்திருக்கின்ற அந்த நபரைப் போன்றதாகும். சூரியன் உதித்து விட்டது. எதுவரையென்றால் அது அவரது தலைக்கு மேல் வந்து விட்டது. ஆனால் அவர் இருட்டில்தான் இருக்கிறார். இன்னும் சில மக்கள் உள்ளனர். அவர்கள் கடுமையான வெப்பத்தில் இருப்பதையே விரும்புகின்றனர். அவர்களில் ஒருவர் மற்றவருடன் போட்டி போடுகின்றனர்.

நிச்சயமாக நான் துல்கர்னைன் போன்று வேகமாக செல்பவனாக இருக்கின்றேன். நான் ஒரு சமுதாயத்தை கடும் வெப்பத்திலும் இன்னொரு சமுதாயத்தை அவர்கள் தமது கண்களை இழந்து விட்டதன் காரணமாக கடுங் குளிரிலும், மாசடைந்துள்ள நீரூற்றுகளிலும் இருப்பதைக் கண்டேன். நான் நல்ல ஆலோசனையை கூறுபவன் ஆவேன். அல்லாஹ் காண்பிப்பதால் நான் பார்க்கின்றேன். இறைநியதி தனது அம்பை வெளியில் எடுத்து எய்து விட்டது என்று எனக்கு நன்றாக தெரியும்.

எனவே அறிவுள்ளவர்களே! கண்ணீர் வடிக்கின்ற கண்களுடன் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அதன் மூலம் நீங்கள் அவனது அருட்கொடையிலிருந்தும் கருணையிலிருந்தும் குறைவாகவோ அதிகமாகவோ உங்கள் பங்கை பெறுவீர்கள். நேர்வழியை பின்பற்றியவர் மீது அல்லாஹ்வின் சாந்தி நிலவட்டும். நான் ஏக இறைவனின் ஏழை அடியானாக இருக்கின்றேன்.

**- இறைவனின் மஸீஹாகிய குலாம் அஹ்மது காதியானி**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

علاماتُ المقرّبين

## இறைநெருக்கம் பெற்றவர்களின் அடையாளங்கள்

மக்களே! ஒன்று திரளுங்கள். நான் உங்களுக்கு இறை நெருக்கம் பெற்றவர்களின் அடையாளங்களை எடுத்துக் கூறுகிறேன். இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் இவர்களின் ஆன்மாக்களின் பசுமையை அல்லாஹ் பாதுகாத்திருக்கின்றான். அவர்கள் காய்ந்து போன மற்றும் குறைமதி கொண்ட நபர் போன்று இருக்க மாட்டார்கள். நீர் அவர்களை அழகிய வடிவத்தைக் கொண்டவர்களாகவும், அழகிய தோற்றமுடையவர்களாகவும், திடகாத்திரமான இளைஞர்களைப் போன்றும் இருக்கக் காண்பீர்.

எலும்புருக்கி நோயினால் மெலிந்து விட்ட நபரைப் போன்று நீர் அவர்களைக் காணமாட்டீர். அவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அவர்களது நெஞ்சங்கள் திறக்கப்பட்டு விட்டன. அவர்களது இடுப்புகள் வலுப்படுத்தப்பட்டு விட்டன. அவர்களது ஒளிக்கு பிரகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் தம்மை இறைவனிடம் ஒப்படைத்து விட்டனர். அவர்கள் அல்லாஹ்வின் வழியில் எந்தவொரு துன்பத்தையும் பொருட்படுத்துவதில்லை அவர்களின் உயிர்நாடியே துண்டிக்கப்பட்டாலும் சரியே. அவர்கள் எல்லா உலகங்களின் இறைவனுக்காக மட்டுமே மரணத்திலிருந்து தப்பிக்கின்றனர். அவர்களின் பாலினால் படைப்பினம் வளர்ச்சியடைகின்றது. உள்ளங்கள் அவர்களின் அருளினால் உறுதிப்படுத்தப்படுகின்றன. நோயினால் பாதிக்கப்பட்ட ஆடு செந்நிற பாலைத் தருவது போல் அவர்கள் இருக்க மாட்டார்கள். அவ்வாறே நோயின் காரணமாக எவரது கண்ணின் கருவிழிகள் நிரந்தர மாறு கண்ணாக ஆகி விட்டனவோ அவரைப் போன்றும்

அவர்கள் இருக்க மாட்டார்கள். அவர்கள் குளவிகள், தேள்கள் மற்றும் குள்ள நரிகள் இருக்கின்ற பூமியில் அனுப்பப்படுகின்றனர். தீய நடத்தையுடையவர்கள் அதிகமாக இருக்கின்ற அத்தகைய நேரத்தில் அவர்கள் அனுப்பப்படுகின்றனர். அசுத்தங்களிலிருந்து மிகவும் அதிகமாக தவிர்ந்திருப்பவர்களாக அவர்களை நீர் காண்பீர். நீர் அவர்களில் எவரையும் செழுமையற்றவர்களாகவும் காணமாட்டீர். கருமியாகவும் காணமாட்டீர்.

அவர்கள் அல்லாஹ்விற்காகவும் அவன்மீது கொண்டுள்ள கலப்பற்ற அன்பின் காரணமாகவும் தமது உயிர்களை விற்று விடுகின்றனர். அவனது திருப்தியை பெறுவதற்காக அவனது படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றனர். மேலும் நீர் அவர்களைப் பேரம் பேசும் வியாபாரிகளைப் போன்று இருக்கக் காணமாட்டீர். பழித்துப் பேசும் கீழ்த்தரமான மக்கள் அவர்களை பொய்யைப் புனைந்து கூறுபவர்களாக கருதுகின்றனர். ஆனால் அவர்களோ வானத்தின் ஒளியாகவும் பூமியின் பாதுகாப்பாகவும் உண்மையானவர்களின் தலைவர்களாகவும் இருக்கின்றனர். பூமி அவர்களை சந்திப்பதில் வெறுப்படைகின்றது. வானம் அவர்களின் ஆதாரங்களுக்கு ஒளியை வழங்குகின்றது. அவர்கள் கட்டுப்படாத மக்களுக்கு அல்லாஹ்வின் அத்தாட்சியாக இருக்கின்றனர். அவர்கள் தமது நஃப்ஸு(டைய விருப்பங்)களுக்கு கட்டுப்பட்டிருக்கின்ற நிலையில் எவரிடமும் அன்பு கொள்ளவும் மாட்டோம்; பகைமை கொள்ளவும் மாட்டோம் என்று ஆணையிட்டவாறு அல்லாஹ்விடம் உடன்படிக்கை செய்துள்ளனர். இவ்விஷயத்தில் வெருண்டோடுபவர்கள் போன்று அவர்கள் வெருண்டோடுகின்றனர். அவர்கள் தமது புறத்தையும், அகத்தையும் தனது இறைவன் முன்னிலையில் வைத்து விட்டனர். மேலும் அவன் சந்நிதியில் உலகிலிருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் வந்து விட்டனர். அவர்கள் நற்பேற்றின் கனியை பெறுவதற்காக தம்மையே

மாய்த்துக் கொண்டனர். அவர்கள் ஒரு புதிய பிறப்பிற்காக மரணத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் இறை நியதிக்கு ஏற்ப அவர்களுக்கு ஏற்படுகின்ற எல்லா அபாயங்களிலும் நுழைந்து அவற்றை பொறுமையுடன் சகித்து தனது இறைவனை திருப்திப்படுத்தி விட்டனர். அவர்கள் கலப்பற்ற தன்மை மற்றும் மற்றும் கலப்பற்ற தூய உள்ளம் கொண்டவர்களின் எல்லா நிபந்தனை –களையும் அதன் எல்லா எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப நிறைவேற்றி விட்டனர். சந்தேகமின்றி (இறைநெருக்கம் பெற்ற) அவர்கள் அல்லாஹ் தாம் மறைவாக இருப்பதைப் போன்று அவர்களை ஆக்கியுள்ளான். மேலும் அவன் தனது ஒளிகளை அவர்கள் மீது பொழிந்துள்ளான்.

அத்துடன் அவர்கள் தமது தோற்றம், நெற்றிகள் மற்றும் அடையாளங்கள் மூலம் அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர். மேலும் அல்லாஹ்வின் ஒளி அவர்களது முகங்களில் ஜொலிக்கின்றது. அவர்களின் முகங்களிலுள்ள பிரகாசத்தின் மூலமாக அது தென்படுகின்றது. அவர்களிடம் எத்தகைய ஒளி இருக்கின்றதென்றால் வீணான விஷயங்களை பேசுகின்ற மக்களை அது இழிவுபடுத்தி விடுகின்றது.

அவர்களின் எதிரிகளின் துர்பாக்கிய நிலை என்னவென்றால் அவர்கள் (இறைநெருக்கம் பெற்ற) இவர்களின் மீது தப்பெண்ணம் கொள்கின்றனர். ஆனால் தமது இந்த தப்பெண்ணத்தை அவர்களால் நிரூபிக்க முடியாது. மேலும் அவர்கள் இறையச்சம் உடையவர்கள் அல்ல. அவர்கள் இரட்டைப் பார்வையுடைய கண்களைக் கொண்டவர்கள், குழி விழுந்த கண்களை உடையவர்கள் அல்லது குருடர்களைப் போன்றவர்கள்; அவர்கள் பார்வை உடையவர்கள் அல்ல. அவர்களது நெற்றி கடும் மேடு பள்ளமாகவும் அவர்களது ஆன்மா மிகவும் மெலிந்த பெண் ஒட்டகம் போன்றும் உள்ளது.

அவர்களது கீழாடை ஆட்டின் இரு பின்னங்கால்கள் மட்டும் வெண்மையாக இருப்பதைப் போன்று வெண்மையாக இருக்கின்றன. ஆயினும் அவர்களது உள்ளங்கள் கருப்பாக இருக்கின்றன.அவர்கள் மலைப்பாம்பைப் போன்றவர்கள் ஆவர். அவர்கள் அல்லாஹ்வை சார்ந்திருப்பவர்களுடன் பகைமை கொள்கின்றனர். மேலும் அவர்கள் தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பிறக்காமல் இருந்திருந்தால் அது அவர்களுக்கு சிறந்ததாக இருந்திருக்கும். அவர்கள் தமது காலத்தின் இமாமை அடையாளங்கண்டு கொள்ளவில்லை. அறியாமையின் மரணத்தில் அவர்கள் திருப்தியடைந்து விட்டனர்.

எனவே அந்த குருட்டு சமுதாயத்திற்கு அழிவு தான்! சுகம் நிறைந்த வாழ்க்கையின் செல்வங்கள் அவர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தி விட்டன. அவர்கள் நிம்மதியின்மையின் அச்சுறுத்தல் –களையும், கசப்பான மிடறுகளையும் மறந்து விட்டனர். காலத்தின் இடர்களால் அவர்களுக்கு எந்தவித துன்பமும் ஏற்படாத காரணத்தால் அவர்கள் பூமியில் ஆணவத்துடன் நடக்கின்றனர். அவர்கள் ரஹ்மானின் அடியார்களுக்கு அருகில் பெருமை அடித்தவாறும், கர்வம் கொண்டவாறும் அவர்களைக் கடந்து செல்கின்றனர்.

அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்கள் இந்த உலக வாழ்க்கையின் சுகபோகங்களில் எவ்வித ஆர்வமும் கொள்வதில்லை. அல்லாஹ்விற்காகவே வறுமைக்கு அவர்கள் முன்னுரிமை வழங்குகின்றனர். மேலும் தமது ஆன்மாக்களை அவர்கள் தூய்மையாகவும், சுத்தமாகவும் வைக்கின்றனர். அவர்கள் இந்த உலகின் துன்பங்களை ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் மறுமையின் நரகத்திலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர். அந்த மறுமைக்காக முயற்சி செய்து கொண்டே இருக்கின்றனர்.

அவர்கள் மீது எப்போது ஒரு துன்பம் வந்தாலும் இறைஞானத்தில் அவர்கள் மேன்மேலும் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். ஒவ்வொரு சூரியனும் அவர்கள் மீது உதயமாகின்ற போது அவர்களது இன்றைய நாள் கடந்து சென்று விட்ட நேற்றைய நாளை விட எவ்வளவோ அதிகம் சிறந்ததாக இருப்பதை நீர் காண்பீர். அவர்கள் பின்வாங்குவதில்லை. மாறாக அவர்கள் ஒவ்வொரு நொடியும் முன்னேறிச் சென்று கொண்டே இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களது ஒளியில் மேலும் எந்த அளவுக்கு ஒளியை அதிகரிக்கும்படி செய்கின்றான் என்றால் அவர்கள் அடையாளங்கண்டு கொள்ளப்படுவதில்லை.

அறிவற்றவர் அவர்களை அசுத்தங்களால் நிறைந்த மனிதர்கள் என்று கருதுகின்றார். ஆனால் அவர்களோ தமது நஃப்ஸை விட்டு தொலைவில் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு ஏதேனும் ஷய்த்தானிய ஊசலாட்டம் பற்றி சிறிதளவு உணர்வு ஏற்பட்டாலும் அவர்கள் பணிவை மேற்கொண்டவாறு தமது முகத்தை அல்லாஹ்வின் பக்கம் திருப்புகின்றனர். மேலும் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் பக்கம் ஓடுகின்றனர். அப்போது அவர்கள் திடீரென்று அகப்பார்வையுடையவர்களாக ஆகி விடுகின்றனர். அவர்கள் சோம்பலாக இருக்கும் நிலையில் துஆ செய்வதற்காக நிற்பதில்லை. மாறாக, துஆ செய்தவாரே அவர்களது உயிர் பிரிந்து விடலாம்.

மேலும் அவர்களின் இந்த இறையச்சத்தின் காரணமாக அவர்களுடைய(பிரார்த்தனையான)து கேட்கப்படுகின்றது. மேலும் அவர்கள் உதவி பெற்றவர்களாக ஆகிவிடுகின்றனர். இவ்வாறு துஆ செய்யும் போது பலவீனத்திற்குப் பிறகு அவர்களுக்கு ஆற்றல் வழங்கப்படுகிறது. மேலும் அவர்கள் மீது நிம்மதி இறங்குகின்றது. மலக்குகள் அவர்களை வலுப்படுத்துகின்றனர். எனவே அவர்கள் ஒவ்வொரு தவறிலிருந்தும் அப்பழுக்கற்றவர்களாகவும்,

பாதுகாக்கப்படுபவர்களாகவும் ஆகி விடுகின்றனர். மேலும் அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் ஏறிச் செல்கின்றனர். அவனது திருப்தியில் தம்மை மாய்த்துக் கொள்கின்றனர். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அவர்களை அறிய மாட்டார். அவர்கள் மக்களின் பார்வையிலிருந்து மறைக்கப்படுகின்றனர். அவர்கள் ஒரு மறைவான சமுதாயத்தினர் ஆவர். இதன் காரணமாகவே அவர்களது விவகாரங்களில் அழிந்து விடக்கூடியவர்கள் அழிந்து போயினர்.

இந்த உலகிலுள்ள குருடர்கள் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றனர். இவரையா அல்லாஹ் அனுப்பினான்? (என்று கேட்கின்றனர்). அசல் விஷயம் என்னவென்றால், (பரிகாசம் செய்கின்ற) அவர்களே குருடர்கள் ஆவர். (இறைநெருக்கம் பெற்றுள்ள) இவர்களுக்கு சில அடையாளங்கள் இருக்கின்றன. அதன் மூலமாக அவர்கள் அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர். ஆனால் அவற்றை தொலைநோக்குப் பார்வையுடையவர்களும் தூய மக்களுமே அடையாளங்கண்டு கொள்கின்றனர்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர்கள் உலகிலிருந்து தொலைவில் வைக்கப்படுகின்றனர். அவர்களின் உள்ளங்களில் அணுவளவு கூட உலகம் இருப்பதில்லை. உலக விஷயங்களைக் கேட்பதிலிருந்தும் அவர்கள் விலக்கி வைக்கப்படுகின்றனர். அவர்கள் அதிகமாகப் பொழிகின்ற மேகத்தைப் போன்று இருக்கின்றனர். மேலும் அல்லாஹ்விற்காக அவர்கள் தயங்காமல் செலவு செய்கின்றனர். அவர்கள் எல்லா நேரமும் ஒளியால் நீராட்டப்படுகின்றனர்.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அல்லாஹ் அவர்களது உள்ளங்களில் எத்தகைய ஈர்ப்பை பதித்து விடுகின்றான் என்றால் படைப்பினம் அவர்கள் பக்கம் ஈர்க்கப்படுகின்றது. அவர்களது நிலைமை குளிர்ந்த நீர் கொண்ட பொங்கி வரும் நீரூற்று போன்று இருக்கின்றது. படைப்பினம் அதன்

பக்கம் ஓடி வருகின்றது. அவர்கள் மீது ரஹ்மானின் வஹியின் தண்ணீர் தெளிக்கப்படுகின்றது. மேலும் மக்கள் அவர்களது இந்த தண்ணீரிலிருந்து அருந்துகின்றனர்.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்கள் செழிப்பாகவும் வளமாகவும் வளர்ந்த நபரைப் போன்று வாழ்க்கையை கழிப்பதில்லை. மாறாக, அவர்கள் சோதனைகளின் கடல்களில் நீந்துகின்றனர். அவர்களது உயிர் நாடி எப்போதும் வெட்டப்படுவதற்கும், பிழியப்படுதற்கும் ஆயத்தமாக இருக்கின்றது. மேலும் மக்கள் அவர்களை பிழிகின்றனர்.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவாகும். அவர்கள் அல்லாஹ்வின் தூய்மையை எடுத்துரைக்கின்றனர். மேலும் அவனை நினைவு கூர்வதில் எப்போதும் அசைந்து கொண்டிருக்கின்ற மீனைப் போன்று நீந்துகின்றனர். மேலும் முழுமையாக அவர்கள் அவன் பக்கம் கவனம் செலுத்துகின்றனர். ஒரு கர்ப்பிணிப் பெண் பிரசவ வலியின் நேரத்தில் கதறுவதைப் போன்று அவர்கள் (அல்லாஹ்வின் முன்னிலையில்) கதறுகின்றனர். மேலும் அவர்கள் அதிலேயே இன்பம் காண்கின்றனர்.

அவர்களின் அடையாளங்களில் ஒன்று அவர்கள் உலக வாழ்க்கையை எளிமையாகவும், அல்லாஹ் அல்லாத விஷயங்களில் இருந்து தமது காதுகளை அடைத்துக் கொண்டும் உதவி கேட்பவர்கள் போன்று (இறைவனை) அழைத்தவாறு வாழ்க்கையை கழிக்கின்றனர். கூடுகள் வரை சென்று சேராத பறவைகள் போன்று (அல்லாஹ்வை) நினைவு கூர்வதும் அவர்களின் ஓர் அடையாளம் ஆகும். அவர்கள் அவனை (நினைவு கூர்வதன்) நறுமணத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் ஓர் அடையாளம் எல்லா வகையான அசுத்தத்திலிருந்தும் எரிச்சலிலிருந்தும் அவர்கள் தூய்மையாக

இருக்கின்றனர் என்பதாகும். மேலும் அவர்கள் களத்தின் வீரர்களாக இருக்கின்றனர். வளையல்களை அணிகின்றவர்களைப் போன்று இருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் தம்மிடமிருந்து கோழைத்தனத்தின் ஆடையை களைந்து விட்டனர். அவர்கள் உண்மையை பிறருக்கு எட்ட வைக்கின்றனர். அவர்கள் அஞ்சுவதில்லை.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது எந்த மக்கள் கலப்பற்ற மனத்தூய்மையுடன் அவர்களது பைஅத்தின் வட்டத்தில் வருகின்றனரோ அவர்களை குஞ்சுகள் வளர்த்துப் போஷிப்பது போன்று அவர்கள் வளர்த்து பாதுகாக்கின்றனர். மேலும் அவர்கள் அம்மக்களை ஷய்த்தானின் வலைகளிலிருந்து விடுவிக்கின்றனர். அவர்களுக்காக இருள் நிறைந்த இரவுகளில் அல்லாஹ்வின் முன்னிலையில் அவர்கள் நிற்கின்றனர். மேலும் சஜ்தா செய்கின்றனர். இதன் விளைவாக அவர்கள் மீது அருள் மழைப் பொழிகின்றது. மேலும் அவர்கள் மீது கருணை காட்டப்படுகின்றது.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவுமாகும். எதுவரை அவர்களது பணி முழுமையடைந்து விளைவை ஏற்படுத்தக் கூடியதாக ஆகவில்லையோ, அவர்களது கூட்டத்தினர் ஒன்று கூடுவதில்லையோ உண்மை அதன் முழுமைத்தன்மையுடன் தெளிவாகி வெளிப்படுவதில்லையோ அந்த நேரம் வரை அவர்கள் மரணிப்பதில்லை. அவர்களது பாத்திரம் முழுமையாக நிரப்பப்படுகின்றது. அதிலுள்ள தண்ணீரில் எந்த குறைவும் ஏற்பட விடுவதில்லை. அவர்கள் நறுமணம் கமழும் உடலுடன் தோன்றுகின்றனர். மணப்பெண்களின் அலங்காரப் பொருட்கள் உள்ள பெட்டியில் அழகிற்கான ஒவ்வொரு பொருளும் நிறைவாக இருப்பது போன்று அவர்கள் தமது அழகை முழுமைப்படுத்து –கின்றனர். அதன் மூலம் படைப்பினங்கள் அவர்களைப் பார்க்கின்றனர். அதன் விளைவாக அவர்கள் புகழப்படுகின்றனர்.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவுமாகும். உலகம் அவர்களை தனது திட்டங்களால் வீழ்த்த முடியாது. மாறாக, அவர்கள் அதன் தலையை துண்டித்து அதன் ஆயுதங்களின் கூர்மையை மழுங்க வைத்து விடுகின்றனர். மேலும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கின்றனர்.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அவர்கள் ஏக இறைவனின் திருப்தியை தேடுவதற்காக இருண்ட இரவுகளில் இறை வணக்கத்தை நிறைவேற்றுவதற்காக நிற்கின்றனர். மேலும் அவர்கள் நன்மைகளுக்கான விதையை விதைத்து தமது இந்த விளைச்சலைப் பாதுகாப்பதற்காக தமது தக்வா என்னும் குடிசையைக் கட்டுகின்றனர். பிறகு இந்த உலகிலும் மறுமையிலும் தமது விளைச்சலை அவர்கள் அறுவடை செய்கின்றனர்.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அவர்கள் முகம் சுளிப்பதில்லை. அவ்வாறே தீய இயல்புடன் அவர்கள் நடந்து கொள்வதுமில்லை. மக்களிடமிருந்து அவர்கள் முகம் திருப்பிக் கொள்வதுமில்லை. அவர்கள் நேர்வழியினுடைய மேய்ச்சல் வெளிகளில் எல்லா இடங்களிலும் மேய்கின்றனர். ஓரிடத்தில் விளைநிலமாகவும், இன்னோரிடத்தில் விளைவற்ற நிலம் போன்றும் அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் கடுமையான துன்பங்களுக்கு முன்னால் புறமுதுகு காட்டுவதில்லை. அதற்காக அவர்களுக்கு இருள்களில் செல்ல வேண்டியது வந்தாலும் சரியே. அவர்கள் வெருண்டோடுவதில்லை. அவர்கள் கொல்லப்பட்டாலும் சரியே.

மேலும் அவர்களது ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர்கள் வீணாக எவரோடும் கண்ணியக்குறைவாகவோ, அவமரியாதையுடனோ நடந்து கொள்ள மாட்டார்கள். அவர்கள் தமது நாவை உறையில் வைக்கின்றனர். அதை அவர்கள் உறையிலிருந்து வெளியில் எடுப்பதில்லை. அவர்கள் பொய்யான

விஷயங்களில் ஈடுபடுவதில்லை. அவர்கள் எவ்வளவு தான் தூண்டப்பட்டாலும் அவர்களின் கோபத்தின் நெருப்பு குளிர்ந்தே இருக்கின்றது. அவர்களுக்கு துன்பம் தருகின்ற ஏதாவதொரு விஷயம் வந்து சேர்ந்தால் புளித்த மாவு போன்று கோபத்தால் அவர்களது (கன்னங்கள்) பொங்குவதில்லை. ஏற்றுக் கொண்ட கொள்கையில் எப்போதும் உறுதியுடன் நிலைத்திருப்பர். அதை அவர்கள் கைவிட்டு விடுவதில்லை. தன்மானமற்ற உணர்வைக் கொண்டவர்களாக நீர் அவர்களை காண மாட்டீர். மாறாக, அவர்கள் மிகவும் தன்மானம் கொண்ட சமுதாயத்தினர் ஆவர். எவ்வாறு நீங்கள் ஒரு வாக்கியத்தைப் பார்த்து அப்படியே Copy செய்து எழுதுகின்றீர்களோ அவ்வாறே அவர்கள் அல்லாஹ்வின் நல்லொழுக்கத்தையும், தமது நபி (ஸல்) அவர்களது நல்லொழுக்கத் –தையும் Copy செய்கின்றனர்.

இறைநெருக்கம் பெற்ற இந்த அடியார்களிடம் இந்த ஓர் அடையாளமும் கூட இருக்கும். அவர்களின் வெளிப்புறத் தோற்றம் சாமானிய மனிதர்களைப் போன்றதாகவே இருக்கும். ஆனால் அவர்களிடம் இருக்கும் மறைவான தகுதிகளின் அடிப்படையில் அவர்கள் பொது மக்களை விட்டும் மாறுபட்டு இருப்பர். பாழடைந்த நகரங்களில் மேடான பகுதிகள் தெளிவாகத் தெரிவது போன்று அல்லாஹ் ஒரு மகத்தான தனிச்சிறப்பை அவர்களிடம் காணத்தக்க விதத்தில் வைத்துள்ளான். அவர்கள் செழிப்பானவர்களாகவும் பசுமை நிறைந்தவர்களாகவும், கனி தரக்கூடியவர்களாகவும் ஆக்கப்படுகின்றனர். மேலும் அவர்கள் குன்றின் மீது வளர்ந்த மரத்தைப் போன்று உயர்ந்து நிற்கின்றனர்.

இதுவும் கூட அவர்களிடம் இருக்கின்ற ஓர் அடையாளம் ஆகும். அவர்களுக்கு பகட்டின் கலப்படம் இல்லாத கலப்பற்ற மிகவும் தூய நல்லொழுக்கம் வழங்கப்படுகின்றது. அவர்களின் உள்ளங்கள் என்னும் நிலத்தை அந்த (ஆன்மீக) நீரை தன்னகத்தே ஈர்த்துக்

கொள்வதற்கு அல்லாஹ் ஆயத்தப்படுத்தி விடுகின்றான். அவர்கள் தமது முகத்தில் காணப்படும் செழிப்பின் மூலமாக அடையாளங் கண்டு கொள்ளப்படுகின்றனர். அவர்கள் தூயவர்களாகவும், நறுமணமிக்கவர்களாகவும் ஆக்கப்படுகின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அவர்கள் ஒவ்வொரு களத்தின் எஜமானர்களாகவும் இருக்கின்றனர். சோம்பேறியாக இருக்கின்ற பருமனான நபரைப் போன்று அவர்கள் இருப்பதில்லை. வானத்தின் ஆற்றல் அவர்களை ஈர்க்கின்றது. எல்லாவிதமான அசுத்தத்திலிருந்தும் அவர்கள் தூய்மையாக்கப் –படுகின்றனர். அவர்களின் மன விருப்பங்களை அல்லாஹ்வின் ஓர் அடி முற்றிலுமாக அழித்து விடுகின்றது. அவர்கள் தமது தூய்மையின் காரணமாக மன விருப்பங்களை விட்டு விடுகின்றனர். உலகின் எந்த அசுத்தமும் அவர்களைத் தொடுவதில்லை. அதனை விட்டு விடுவதில் அவர்கள் எந்த துன்பத்தையும் துயரத்தையும் உணர்வதில்லை.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது துன்பங்கள் இறங்குகின்ற நேரத்தில் அவர்களின் நட்பானது பூமியில் வாழ்பவர்களுக்கு விண்ணிலிருந்து பாதுகாப்பிற்கான வழிவகையாக இருக்கும். மேலும் உலக ஆசைகள் மற்றும் விருப்பங்களின் காரணமாக உருவாகின்ற கல் நெஞ்சத்திற்கான மருந்தாக அது ஆகிவிடுகின்றது. எவ்வாறு தண்ணீரை குறைவாக பயன்படுத்துவனால் உடலில் அழுக்கேறி விடுகின்றதோ அவ்வாறே அல்லாஹ்வின் நேசர்களுடன் கொள்கின்ற குறைவான நட்பு உள்ளங்களை அழுக்கடையச் செய்து விடுகிறது. அறிந்தவர்கள் இதனை நன்கு அறிந்திருக்கின்றனர்.

அவர்களின் அடையாளங்களில் ஒன்று இதுவாகும். அதாவது அவர்களின் நட்பு உள்ளங்களுக்கு வாழ்வை வழங்குகின்றது. பாவங்களை குறைக்கின்றது. மேலும் பலவீனமடைந்து சோர்வுக்

–குள்ளாகி இருப்போருக்கு அது ஆற்றலைத் தருகின்றது. அவர்களின் நட்பினால் மக்கள் தங்களது வழியில் உறுதியான பாதங்களுடன் நிலைத்து நிற்கின்றனர். மேலும் அவர்கள் பிரிவினையில் விழுந்து விடுவதில்லை.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அவர்கள் எதிரிகளுடன் எதிர்த்து நிற்பது ஒட்டகங்கள் ஒன்று மற்றொன்றை எதிர்த்து நிற்பது போன்று இருக்காது. இறைவன் புறமிருந்து போரிடுவது உறுதியாக்கப்பட்டு திட்டவட்டமாக்கப்படும் அந்த நேரத்தில் மட்டுமே அவர்கள் எதிரிகளை எதிர்த்துப் போரிடுகின்றனர். உண்மை சீர்குலைக்கப்படுகின்ற அந்த தருணத்தில் மட்டுமே அவர்கள் சண்டையிடுகின்றனர். அவர்கள் இறைவனின் கட்டளை இல்லாமல் எந்தவோர் அநீதியிழைப்பவருக்கும் கூட துன்பம் இழைப்பதில்லை. ஆரோக்கியமான இளம் ஆட்டுக்குட்டி அறுக்கப் –படுவது போல் அவர்கள் கொல்லப்பட்டாலும் சரியே. அவர்கள் அல்லாஹ்வின் நல்லொழுக்கத்தை மேற்கொண்டு நடக்கின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்கள் பொய், பகைமை, மன விருப்பங்கள், வெளி வேஷம், ஏசிப்பேசிவது மற்றும் துன்பம் இழைத்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருப்பர். அவர்கள் தமது கைகளையும், கால்களையும் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் கட்டளைக்கேற்பவே அசைக்கின்றனர். அதற்கு எதிராக செயல்பட அவர்கள் துணிய மாட்டார்கள். அவர்கள் உலகின் சாபத்தை பொருட்படுத்துவதேயில்லை. அல்லாஹ்வின் பார்வையில் இழிவிற்கும், அவமானத்திற்கும் காரணமாக இருக்கின்ற ஒவ்வொரு விஷயத்தை விட்டும் அவர்கள் விலகிச் சென்று விடுகின்றனர். அவர்கள் காலையிலும், மாலையிலும் அல்லாஹ்வின் மன்னிப்பை வேண்டுபவர்களாக இருப்பர்.

அவர்கள் மீது கவனக்குறைவு என்னும் கறை படிகின்ற போது அவர்கள் இறைவனை நினைவு கூர்தல் (எனும் தண்ணீர்)

மூலமாக அதைக் கழுவுகின்றனர். அவர்களது ஆடை இறையச்சம் எனும் ஆடையாகும். அதை அவர்கள் வெண்மையாக வைத்திருக்கின்றனர். அவர்கள் கிழிந்து போன பழைய ஆடைகளை அணிவதிலிருந்து தவிர்ந்திருப்பர். மேலும் தக்வாவில் வேகமாக முன்னேறிச் செல்பவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் (இறைவன் அல்லாத) அந்நியர்களின் நட்பில் வெறுப்பை உணர்கின்றனர். அவர்கள் கண்ணியமிக்க இறைவனின் சந்நிதியிலிருந்து சிறிதும் விலகாமல் அமர்ந்து விடுகின்றனர். அவனிடமிருந்து அவர்கள் பிரிந்து சென்று விடுவதில்லை.

உலகம் மற்றும் உலகவாதிகளை விட்டு விடுவதற்கான தைரியத்தை அவர்களுக்கு தரக்கூடியது முழுக்க முழுக்க அவர்கள் அந்த இறைவனின் திருப்தியை தேடுகின்றனர் என்பது மட்டுமே ஆகும். அதற்காக அவர்கள் எப்போதும் விழித்தே இருக்கின்றனர்.

அவர்களின் அடையாளங்களில் ஒன்று இதுவாகும். அதாவது அவர்கள் தேவையில்லாத வீணான விஷயங்களை பேசுவதில்லை. அவர்கள் ஏளனம் செய்வதிலிருந்து விலகி இருக்கின்றனர். அவர்கள் பரிகாசம் செய்வதும் இல்லை. அவர்கள் துயரமுள்ள வாழ்வைக் கழிக்கின்றனர். மேலும் அவர்களது நாவிலிருந்து வெளிவந்துள்ள ஏதாவதொரு சொல்லோ அல்லது அவர்களின் ஏதேனும் செயலோ அவர்களது (நல்ல) செயல்களை வீணாக்கி விடக்கூடாதே என்பதற்காக அவர்கள் பயந்து கொண்டே இருக்கின்றனர். அவர்களது பேச்சு வலுவான (அடித்தளத்தில்) நிலைத்திருக்கக் கூடியதாக மட்டுமே இருக்கும். அவர்கள் பொருளற்ற விஷயங்களைப் பேச மாட்டார்கள்.

இதுவும் கூட அவர்களின் அடையாளங்களில் ஒன்றாகும். அதாவது அல்லாஹ் அவர்களது பலவீனத்திற்குப் பிறகு ஆற்றலையும், அவர்களது வறுமைக்குப் பிறகு செழிப்பையும் அவர்களுக்கு வழங்கி இருப்பதை நீர் காண்கின்றீர். மேலும் அந்த

மக்கள் ஆதரவற்றவர்களாகவும் உதவி செய்யப்படாத நிலையிலும் கைவிடப்படுவதில்லை.

இதுவும் அவர்களின் அடையாளங்களில் ஒன்றாகும். அதாவது அவர்கள் மக்களின் கைகளால் எல்லா வகையான துன்பங்களுக்கும், தீய நடத்தைகளின் பாதிப்பிற்கும் ஆளாகின்றனர். எல்லா பக்கங்களிலிருந்தும் அவர்களுக்கு அவநம்பிக்கை தென்படுகின்றது. பிறகு அல்லாஹ் அவர்களை தாங்கிப் பிடித்துக் கொள்கின்றான். மேலும் அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். அவர்கள் மீது ஏதாவதொரு துன்பம் இறங்கும்போது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அவர்களுக்கு எத்தகையதொரு பொறுமை வழங்கப்படுகின்றதென்றால் அது வானவர்களை வியப்பில் ஆழ்த்தி விடுகின்றது. பிறகு அருள் இறங்குகிறது. அப்போது அவர்களுக்கு (துன்பங்களிலிருந்து) இரட்சிப்பு வழங்கப்படுகின்றது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர்கள் தாமே சம்பாதித்த செல்வம், வாரிசு என்ற நிலையில் கிடைத்த செல்வம் ஆகியவற்றின் மீதும் தந்தை, மகன் ஆகியோர் மீதும் நம்பிக்கை வைப்பதில்லை. மாறாக, தங்களது இறைவனான அல்லாஹ்வையே அவர்கள் சார்ந்து நிற்கின்றனர். எந்த இறைஞானங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு மகிழ்ச்சியை வழங்குவதில்லை. மேலும் இவை அவர்களுக்கு ஒவ்வொரு நொடியும் வழங்கப்படுகின்றன. அவர்கள் அல்லாஹ்வின் வழிகளில் துன்பங்களை மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்கின்றனர். மேலும் அதில் அவர்கள் எந்தக் கஷ்டத்தையும் உணர்வதில்லை. அவர்களுக்கு எதுவுமே தரப்படவில்லை என்றாலும் கூட அவர்கள் அல்லாஹ்விற்கு நன்றி தெரிவிக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பில் மகிழ்ச்சி அடைகின்றனர். ஏனெனில் ஒன்றின் மீது ஒன்றாகப் படிந்துள்ள வெண்ணிற மேகமூட்டங்களைப் போன்று

இருக்கும் இறைஞானம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு இறைஞானங்களின் கருவூலம் தரப்படுகின்றது. அவர்கள் (இறைஞானத்தின்) ஒவ்வொரு வாசல் வழியாகவும் நுழைகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு ஓடுகின்ற ஆறுகளைப் போன்ற உள்ளத்தை வழங்குகின்றான். அந்த உள்ளம் கிணற்றில் தேங்கிக் கிடக்கும் அழுக்கு படிந்திருக்கின்ற குறைந்த அளவிலான தண்ணீரைப் போன்று இருப்பதில்லை. (அல்லாஹ்வின்) உதவி (இறைநெருக்கம் பெற்றுள்ள) இவர்களிடமிருந்து துண்டிக்கப்படுவ –தில்லை. அவர்கள் எல்லா நேரத்திலும் உதவி செய்யப்படுகின்றனர்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர்களுக்கு அவர்களது இறைவனிடமிருந்து மதிப்பச்சம் வழங்கப்படுகின்றது. எனவே எதிரிகள் அவர்களை எதிர்த்து நிற்காமல் ஓடி விடுகின்றனர். மேலும் தம்மை மறைத்துக் கொண்டு திரிகின்றனர். அவர்களை சந்திக்கும்போது அவர்கள் தங்களை அந்நியர்களாக ஆக்கிக் கொள்கின்றனர். மேலும் வெருண்டோடி விடுகின்றனர். ஏதாவதொரு குற்றத்தின் காரணமாக மூக்கு வெட்டப்பட்ட ஒரு நபர் வெட்கத்தை மறைப்பதற்காக மக்களை சந்திப்பதை விட்டு விலகிச் சென்று தம்மை மறைத்துக் கொள்வது போன்று அவர்கள் தம்மை மறைத்துக் கொள்கின்றனர். இதுவே அல்லாஹ்விற்காக ஆகி விடும் அம்மக்களுக்கு கிடைக்கின்ற மதிப்பச்சமாகும்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர்கள் அல்லாஹ்வின் வழியில் இளமைப்பருவத்தில் அடியெடுத்து வைக்கின்ற வலிமை வாய்ந்த இளைஞர் முயற்சி செய்வது போன்று முயற்சி செய்கின்றனர். அவர்கள் இறை கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக நிற்கும் போது அவற்றை சுறுசுறுப்புடனும் மகிழ்ச்சியுடனும் நிறைவேற்றுகின்றனர்.

மேலும் நீர் அவர்களிடம் எந்தவொரு சோம்பலையோ பலவீனத்தையோ காண மாட்டீர். அவர்கள் தடுமாறவும் மாட்டார்கள்.

பூமி அவர்களின் ஒளியால் ஒளிமயமாகி விட்டது. அவர்களது அந்தஸ்தை நன்றாக அறிந்து கொண்டு வேண்டுமென்றே தெரியாதவரைப் போன்று இருப்பவர்களைத் தவிர வேறு எவருக்கும் அவர்களின் அந்தஸ்து தெரியாமல் இருப்பதில்லை. அவர்களது பகைவர்கள் அவர்களை அடையாளங்கண்டு கொள்கின்றனர். ஆனால் தெரிந்து கொண்டே (அவர்களை) மறுக்கின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அவர்களுக்கு அருகில் அல்லாஹ்வின் அருள்களின் நதி ஓடுகின்றது. அவர்கள் அதிலிருந்து ஒவ்வொரு நொடியும் கையளவு தண்ணீரை நிறைத்து அதனை அருந்துகின்றனர். மேலும் திடகாத்திரமான மனிதர்களைப் போன்று அவர்கள் அவன் பக்கம் விரைவாக ஓடுகின்றனர். அவர்களுக்கு எவ்வித சோர்வும் ஏற்படுவதில்லை. அவர்கள் பலவீனமடைவதும் இல்லை. அவர்கள் மீது இறுக்கத்தின் நிலை ஏற்படும்போது அவர்களுக்கு அது வலுவான பெண் ஒட்டகத்திற்கு ஏற்படுகின்ற பிரசவ வலி போன்று அல்லாமல் அதை விட அதிகமாக அவர்கள் கடும் வேதனையை உணர்கின்றனர். ஞானத்தால் பெருக்கெடுத்து ஓடும் அவர்களது உள்ளங்களை பனிக்கட்டிகளால் மறைக்கப் –பட்டுள்ள பூமியைப் போன்று நீர் பார்க்கின்றீர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது ஏதாவதொரு தீய ஒழுக்கமுள்ள ஒரு நபரை கடந்து செல்கின்ற போது அவர்கள் பாவமன்னிப்புக் கோருகின்றனர். இறையச்சத்தின் காரணமாக அவர்களது கண்கள் எவரையும் அற்பமான தகுதியை உடையவர்களாக பார்ப்பதில்லை. அவர்கள் ஆணவம் கொள்ளவும் மாட்டார்கள். அவர்கள் ஒரு பயணியைப் போன்று வாழ்வை கழிக்கின்றனர். அவர்கள் குறைவானவற்றில் திருப்தி அடைகின்றனர். துன்பங்கள் மற்றும் துயரங்கள் ஏற்படும்போது அவர்கள் போதுமென்ற மனம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இவர்களே தங்களது இறைவனுக்கு முன்னுரிமை வழங்கியுள்ள மக்கள் ஆவர். இவர்களே நடுநிலையைப் பேணுகின்ற ஆண் மக்கள் ஆவர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அவர்களின் வாழ்க்கை கடினங்கள் நிறைந்ததாக இருப்பதில்லை. அவர்கள் வாழ்வை கழிப்பதற்காக வறுமையின் தண்டனையில் ஆழ்த்தப்படுவதில்லை. அவர்கள் அறிந்திராத இடத்திலிருந்து அவர்களுக்கு வழங்கப்–படுகின்றது. அல்லாஹ் அவர்களுக்கு ஞானங்களை வழங்குகின்றான். அவற்றின் மூலமாக அவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்கள் குறைவான சேமிப்பில் (அதாவது குறைவான ஞானங்களைப் பெறுவதில்) மற்றும் குறைவான செயல்களில் திருப்தியடைவதில்லை. அவர்கள் வாகனத்தில் பயணம் மேற்கொள்ளும் போது சிறந்த முறையில் பயணம் செய்கின்றனர். மேலும் அவர்கள் பணி செய்யும் போது அதனை சிறந்த முறையில் செய்கின்றனர். அவர்கள் அசுத்தம் நிறைந்துள்ள செயல்களில் இருந்தும் குறைவுள்ள செயல்களிலிருந்தும் தவிர்ந்திருக்கின்றனர். அவர்கள் திரைகளை அகற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர். அவர்கள் ஒருவர் மீது பகைமை கொள்ளும்போது அல்லது அன்பு கொள்ளும்போது முழுமையான நிதானத்துடன் அவ்வாறு செய்கின்றனர். அவர்கள் நயவஞ்சகத் தன்மையுடன் நடந்து கொள்வதில்லை.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்களது உள்ளங்கள் கருணையின் மழை நன்றாக பொழிந்துள்ள நிலங்களாக இருக்கின்றன. மேலும் அவர்களுக்கு எத்தகைய தொலைநோக்குப் பார்வை கிடைத்துள்ளது என்றால் அது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அவர்கள் எல்லா வகையான

வழிகேட்டிலிருந்தும் குழப்பத்திலிருந்தும் காப்பாற்றப்படுகின்றனர். அவர்கள் பொய்யில் விழுவதில்லை. அவர்கள் இருளிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர். அவர்கள் (இறைவனின் ஒளியால்) ஒளிமயமாக்கப்படுகின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்களின் கழுத்துகள் ஒவ்வொரு முறையும் அமானிதத்தின் சுமையைச் சுமக்கின்ற நபரை விட அதிகமாக அல்லாஹ்வின் அமானிதங்களின் பெரும் சுமையை சுமந்து கொண்டிருக்கின்றது. அவர்களின் கழுத்துக்கள் இந்த சுமையால் வளைந்து விடுவதில்லை. மாறாக, (அமானிதங்களின் சுமையாகிய) அது அவர்களை ஓர் அழகான, நீண்ட கழுத்தை உடைய பெண்ணைப் போன்று அழகாக்கி விடுகின்றது. அதில் ஏற்றுக் கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைநிற்றலின் அழகு வெளிப்படுகின்றது. அது ஓர் அற்புதமாகவே தென்படுகின்றது. அல்லாஹ்வின் சந்நிதியிலும், மக்களுக்கு மத்தியிலும் அவர்களுக்கு கண்ணியம் வழங்கப்படுகின்றது.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்கள் தடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் தவிர்ந்திருப்பதால் அவர்களுக்கு (நன்மை செய்வதற்கான) நல்வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு சந்தேகங்களை அகற்றுவதற்கான தடுப்பு (ஏற்பாடு) வழங்கப்படுகிறது. அவர்களுக்காக தொடர்ச்சியாக உதவிகள் வருகின்றன. ஏனென்றால் அவர்கள் முற்றிலும் தனிச்சிறப்பு பெற்ற மக்களாக இருக்கின்றனர். அவர்கள் (உலகிலிருந்து) துண்டிக்கப்பட்ட நிலையில் இறைவன் பக்கம் வருகின்றனர். அவர்கள் தம்மை (உலகிலிருந்து) முற்றிலுமாக தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் தன்னந் தனியாக ஓடுகின்றனர். அவர்களைப் போன்று மூலையில் தனிமையில் இருக்கின்ற எவரையும் நீர் காண மாட்டீர்.

அவர்களது (ஆன்மாக்கள்) உயர் ரக ஒட்டகங்கள் செல்வது போல் தமது நேசத்திற்குரிய இறைவனின் பக்கம் தாமாகவே ஓடிச் செல்கின்றன. அவர்கள் (இறை) சந்திப்பிற்கு எல்லாவற்றையும் விட முன்னுரிமை வழங்கியுள்ளனர். இறைவனை விட்டுப் பிரிந்து விடுமோ என்னும் அச்சத்தால் அவர்கள் உருகிக் கொண்டிருக் –கின்றனர். ஞானம் அவர்களின் நாவின் வேரிலிருந்து வெளிப்படுகின்றது. அகப்பார்வை அவர்களின் நெற்றியில் மின்னுகின்றது. அவர்கள் அதிக தண்ணீருள்ள கிணற்றைப் போன்று அருள்களை பிறருக்கு எட்ட வைக்கின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்கள் அல்லாஹ்விற்காக அபாயங்களில் நுழைந்து விடுகின்றனர். அதிலிருந்து அவர்கள் தம்மை தடுத்துக் கொள்வதில்லை. இவ்விவகாரத்தில் அவர்களுக்கு இணையாக எவரும் இல்லை. இதில் அவர்கள் முற்றிலும் தனிச்சிறப்பு பெற்றுத் திகழ்கின்றனர். மறைவாக இருந்து வரும் மக்களில் ஒருவர் கூட அவர்களுக்கு ஒப்பானவர்களாக இல்லை. அதற்காக அம்மக்கள் பேராசை கொண்டிருந்தாலும் சரியே. அவர்களால் மிச்சம் வைக்கப்பட்ட(உணவு போன்ற)வை இல்லாமல் இருந்திருந்தால் மக்கள் அழிந்திருப்பர். அவர்களின் முயற்சி இல்லாமல் இருந்திருந்தால் மக்களது உள்ளங்களிலிருந்து அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு தணிந்து போயிருக்கும். தீய எண்ணங்களை உருவாக்கி விட்டு மறைந்து போய் விடுபவனின் பக்கம் மக்கள் ஓடியிருப்பர். அவ்வாறான நிலை ஏற்பட்டால் அல்லாஹ் கண்டிப்பாக இறைஞானிகளின் தலைமுறையின் தொடரை துண்டித்திருப்பான். ஈமானை அதன் அடித்தளத்திலிருந்து தகர்த்திருப்பான்.

எனவே (இறைநெருக்கம் பெற்றுள்ள) இவர்கள் அனுப்பப் –பட்டிருப்பது தனது படைப்பினங்களின் மீது அல்லாஹ் செய்துள்ள மகத்தான அருளாகும். மேலும் நிச்சயமாக எல்லா மக்களும்

கற்பாறைகள் கொண்ட நிலத்தைப் போன்றவர்கள் ஆவர். இவர்கள் அவர்களை சீர்திருத்துகின்றனர். (இறை நெருக்கம் பெற்றுள்ள) இவர்களை எவர் இழந்து விட்டாரோ அவர் அநாதையைப் போன்று இருக்கின்றார். எவர் சரியான இயல்பை இழந்து விட்டாரோ அவர் தாயில்லாத குழந்தையைப் போன்று இருக்கின்றார். எவர் இந்த இரண்டையும் இழந்து விட்டாரோ அவர் தாய் தந்தை (இருவரும்) மரணித்து விட்ட நிலையில் இருக்கின்ற நபரைப் போன்றவர் ஆவார். அவர் பேறிழந்தவர்களில் ஒருவர் ஆவார்.

எவர்களுக்கு எல்லா நற்பேறுகளும் வழங்கப்பட்டிருக்கின் –றனவோ அவர்கள் அருளுக்குரியவர்கள். மேலும் அவர்கள் (அவற்றை) ஒன்று திரட்டுகின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது அவர்கள் (இரத்தத்தை உறுஞ்சுகின்ற) பூச்சிகளுக்கு ஒப்பாக இருக்கின்ற பொறாமையிலிருந்து விலகி இருப்பார்கள். ஏனென்றால் இறைவன் புறமிருந்துள்ள ஆவியிலிருந்து அவர்கள் தமது பங்கைப் பெறுகின்றனர். அதன் விளைவாக பரந்த மனப்பான்மை அவர்களுக்குக் கிடைக்கின்றது. மேலும் உயர் தகுதிகள் வரை அவர்களுக்கு மேன்மை வழங்கப்படுகிறது. அவர்கள் குழிகளில் விழுவதில்லை. அவர்கள் மிகவும் தாழ்ந்த நிலையை அடைவதிலிருந்து காப்பாற்றப்படுகின்றனர். மேலும் அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது மக்களது நிலைமை அநாதைகள் போன்று ஆகுகின்ற சமயத்தில் அவர்கள் அனுப்பப்படுகின்றனர். அம்மக்களின் நிலைமையை சீர்திருத்த எவருமே அவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதில்லை. மறுப்பு மற்றும் குழப்பத்தின் மரணத்தால் அம்மக்கள் அழிந்து கொண்டிருப்பர். தீய ஆலிம்கள் இந்த மக்களின் அழிவைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர். அதனை

அவர்கள் பொருட்படுத்துவதே இல்லை. இவை யாவும் அவர்கள் முன்பாகவே வெளிப்படுகின்றன. ஆகவே, இதன் மூலமாக அவர்கள் அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர்.

மக்கள் இருள்களில் வீழ்ந்து கிடப்பதையும், பொய் கூறுவதையும், அல்லாஹ்விற்கு இணை வைப்பதையும், பாவங்களிலும், தீமைகளிலும் மூழ்கி இருப்பதையும், விபச்சாரம் செய்வதையும், இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு வெளியேறுவதையும், இவை எல்லாவற்றிலிருந்தும் அவர்கள் விலகாமல் இருப்பதையும் நீங்கள் காணும் போது தூதர் தோன்றுவதற்கான நேரம் வந்து விட்டது என்பதையும், நேர்வழியை மறந்து விட்டவருக்கு (அதுபற்றி) அறிவுரை கூற வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (அல்லாஹ் கூறுகின்ற இவ்விஷயங்களை) கவனமாக செவிமடுக்கின்ற அம்மக்கள் அருளுக்குரியவர்கள்.

இதுவும் கூட அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது மக்கள் தங்கள் வழிகளைத் தனித்தனியாக ஆக்கிக் கொள்ளும் போதுதான் அவர்கள் அனுப்பப்படுகின்றனர். அவர்கள் மீது எவர்கள் பகைமையும், வெறுப்பும் கொள்கின்றார்களோ அத்தகையவர்களின் எதிரியாக அல்லாஹ் ஆகிவிடுகின்றான். அவர்கள் வீழ்த்தப்படுகின்றனர். இறைவனின் சந்நிதியிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுகின்றனர். மேலும் அவர்கள் துண்டிக்கப்படுகின்றனர். அதற்குப் பிறகும் அவர்கள் தமது செயல்களிலிருந்து விலகாமல் இருந்தால் பிறகு அவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுகின்றனர். அல்லாஹ் தனது நேசத்திற்குரியவரின் உள்ளங்களில் ஈர்ப்பை வைத்து விடுகின்றான். இதன் காரணமாக அவர்கள் மக்களை தங்களுடன் ஒன்றச் செய்து விடுகின்றனர். தன் பக்கம் அவர்களை ஈர்த்துக் கொள்கின்றனர். மக்கள் அவர்களைப் பின்பற்றாமல் இருந்தால் கற்களும், கூளாங் கற்களும் அவர்களைப் பின்பற்றி நடக்கும். அவை மனிதர்களாக

ஆக்கப்படும். பிறகு அம்மனிதர்கள் உண்மைக்காக சாட்சி கூறுவார்கள்.

இதுவும் அவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது இவர்கள் எத்தகைய மக்களாக இருக்கின்றனர் என்றால் அல்லாஹ்வுடன் இவர்களுக்கு எத்தகைய உறுதியான பிணைப்பு இருக்கின்றதென்றால் அதன் மீது எந்தவொரு ஈட்டியாலும், வேலாலும், கூர்மையான வாளாளும், இலக்கை சென்றடைகின்ற எந்தவொரு அம்பாலும் பிளவை ஏற்படுத்த முடியாது. இறை நெருக்கம் பெற்றுள்ள இவர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்ற நிலையிலேயே மரணம் வருகின்றது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அவர்களை குறைபாடுள்ளவர்களாக ஆக்குகின்ற ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் தமது ஆன்மாவின் சிறப்பின் காரணமாக அவர்கள் தவிர்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு அழகூட்டக்கூடிய ஒவ்வொரு விஷயத்திற்கும் அவர்கள் கண்ணியம் அளிக்கின்றனர். கறை படிய வைக்கின்ற எல்லா செயல்களை விட்டும் அவர்கள் விலகி இருக்கின்றனர். அடையாளங்கள் மூலமாக அவர்களுக்கு உதவிகள் செய்யப்படுகின்றது. வானமும், பூமியும் அவர்களுக்காக சாட்சி பகர்வதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. அவர்களின் மரணத்தின்போது அவை அழுகின்றன. இவ்வாறு அவர்களுக்கு மதிப்பளிக்கப்படுகின்றது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அல்லாஹ் அவர்களின் வீடுகள், ஆடைகள், தலைப்பாகைகள், மேலாடைகள், போர்வைகள், உதடுகள், கைகள் மற்றும் முதுகுகள் ஆகியவற்றிலும் அவ்வாறே அவர்களது எல்லா உடல் உறுப்புகளிலும் அவர்களின் உணவு விரிப்புகளில் எஞ்சியிருக்கின்ற துண்டுகளிலும், அவர்கள் குடித்த பிறகு எஞ்சியிருக்கின்ற தண்ணீரிலும் அருள்களை வைத்து விடுகின்றான். அவர்களின்

பலவீனமான தருணத்திலும் அவர்கள் விழுந்து கிடக்கும் நேரத்திலும் அவன் அவர்களோடு இருக்கின்றான். மேலும் அவன் அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொள்கின்றான்.

அவர்களது உறையிலிருந்து எடுத்து ஏவப்பட்ட அம்பு ஒருபோதும் குறி தவறிப் போனதில்லை. அவர்கள் வறுமைக்கு அஞ்சுவதில்லை. இறைவனே தனது கைகளால் அவர்களின் பைகளில் செல்வத்தைப் போடுகிறான். மேலும் அவர்களின் நிறைவான இளமைப் பருவத்தில் அவர்களுக்கு இருந்த மதிப்பை அதிகரிக்கச் செய்து அவர்களுக்கு முதுமையிலும் கண்ணியத்தை வழங்குகின்றான். அவர்களிடம் ஒரு வலுவான ஈர்ப்பை அவன் உருவாக்கி விடுகின்றான். ஒரு பெரும் கூட்டத்தை அவர்களின் சமூகத்தில் கொண்டு வருகின்றான். அவர்களிடம் ஏதாவதொரு கேள்வி கேட்கப்படும் போது அவன் அவர்களுக்காக பதில் கூற நிற்கின்றான். அவன் செலுத்தும் அன்பின் மூலமாக அவர்கள் அடையாளங்கண்டு கொள்ளப்படுவதற்காகவும் அதன் மூலமாக (மக்களின்) நெஞ்சங்கள் அவர்களது அன்பைப் பெறுவதற்காக திறக்கப்படுவதற்கும் அவன் அவர்களுக்கு உதவி செய்கின்றான்.

அவர்களது கோபம் இறைவனது கோபத்தை தூண்டுகின்றது. அவர்களது வேதனை அவனது கருணையை பொங்கி எழச் செய்கின்றது. எனவே அவன் பக்கம் (உலகிலிருந்து) துண்டிக்கப்பட்ட நிலையில் வருகின்ற தனது அந்த தூய அடியார்களுக்கு உயர்வை வழங்கும் அந்த இறைவன் தூயவன் ஆவான்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது அவர்கள் தமது இறைவனை ஒருபோதும் முடிவுறாத கருவூலமாகவும், தடையின்றி ஓடிக் கொண்டிருக்கும் நீரூற்றாகவும், துயில் கொள்ளாத பாதுகாவலனாகவும், கடமையை நிறைவேற்றுவதிலிருந்து பின்வாங்காத கண்காணிப்பாளனாகவும், தனியாக விட்டு விடாமல் இருக்கும் அரசனாகவும், தொலைக்கக் கூடாத அன்பிற்குரியவ

–னாகவும், பொருட்படுத்தாமல் நடந்து கொள்ளாத தொண்டு செய்யப்படுபவனாகவும், எவ்வித தாழ்ந்த நிலையிலும் இல்லாத உயர் தகுதியை உடையவனாகவும், தண்ணீர் குறைந்து விடாத கடலாகவும், எவ்வித நோயுக்கும் ஆளாகாமல் உயிருடன் இருப்பவனாகவும், எவ்வித பலவீனமும் இல்லாத ஆற்றல் மிக்கவனாகவும், தனது தூதரை அனுப்பி தனது பிரதிநிதியாக இருக்கின்ற சிறப்பை அவருக்கு வழங்குகின்ற அரசனாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

இந்த எல்லா படைப்பினங்களும் அவ்விறைவனது வார்த்தைகளினால் படைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவன் பக்கமே அவை திரும்பிச் செல்லும் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்கள் பலமுறை சோதிக்கப்படுகின்றனர். பின்னர் அவர்களது இறைவன் அவர்களை காப்பாற்றுகின்றான். மேலும் அவர்களுக்கு உதவி செய்யப்படுகின்றது. அவர்கள் மீது அல்லாஹ்வின் அருள் வெளிப்பட வேண்டும்; மேலும் அறிவீனர்கள் அதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமே அவர்கள் மீது இந்த சோதனை வருகின்றது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்கள் தூய பானத்தை ஒவ்வொரு மிடராக சுவைத்து அருந்துகின்றனர். அவர்களது உள்ளங்கள் ஒளியால் நிறைக்கப்படுகின்றன. நீர் அவர்களது முகங்களில் அல்லாஹ்வின் மீதுள்ள கண்ணியம், மகிழ்ச்சி ஆகியவற்றின் அடையாளங்களைக் காண்பீர். மேலும் அல்லாஹ்வின் கைகளினால் அவர்களுக்கு எல்லா வகையான அருட்களும் வழங்கப்படுகின்றது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்கள் அசாதாரணமான, உறுதியான உள்ளம் உடையவர்களாக

இருக்கின்றனர். தைரியமிக்கவர்கள் மட்டுமே நுழைய முடிகின்ற காடுகளில் அவர்கள் நுழைந்து விடுகின்றனர். அவர்கள் தமது உயிர்களை வல்லமையுள்ள இறைவனின் திருப்தியை பெறுவதற்காக தியாகம் செய்து விடுகின்றனர். தாம் செய்தவற்றை நினைத்து வருந்துபவர்களாக நீர் அவர்களைக் காண மாட்டீர். மாறாக அவர்கள் தமது செல்வங்களை வானத்தில் ஒன்று திரட்டிக் கொண்டிருக்கின்றனர் என்று அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். அங்கு எந்தத் திருடனாலும் திருட முடியாது. அவர்களிடமிருந்து எவரும் (எதையும்) பறிக்க முடியாது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது இம்மக்கள் கஃப்பார் (அதிகமாக மன்னிப்பவன்) ஆக இருக்கின்ற இறைவனின் கைகளால் பிழியப்பட்ட தேனைப் போன்றவர்கள் ஆவர். அவர்கள் மற்றவர்கள் மூலமாக அல்லாமல் தமது இறைவனிடமிருந்து மட்டுமே கல்வியைப் பெறுகின்றனர். மேலும் அவர்கள் விரும்புவது அவர்களுக்குத் தரப்படுகின்றது. அல்லது மேய்ப்பன் தனது தடியால் குனிய வைக்கின்ற கிளைகளுள்ள மரங்களைப் போன்று அவர்கள் இருக்கின்றனர். மேய்ப்பன் குலுக்காமல் மரத்திலிருந்து தானே விழுகின்ற அந்த இலைகளைப் போன்று அவர்கள் இருக்க மாட்டார்கள். அவர்களின் பார்வைகள் அவர்களது இறைவனின் பக்கம் இருக்கும். அவர்கள் திரை மறைவில் வைக்கப்பட மாட்டார்கள்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அவர்கள் அல்லாஹ்வைப் பெறுவதற்காக கடிவாளம் இல்லாமல் (எவ்வித தடையுமின்றி) முழுமையாக முயற்சி செய்கின்றனர். அவர்களின் உள்ளத்தில் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் எனும்) நெருப்பு தீப்பிழம்பாக எரிந்து கொண்டிருக்கின்றது. மேலும் அவர்கள் அந்த தீ மூட்டத்தைக் கொளுந்து விட்டு எரிய வைத்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அ(ந்த நேசத்)தி(ன் தீப்பிழம்பி)

–லிருந்து சிரமத்திற்கு ஆளாகியவாறு முக்கியமான பெரும் காரியங்களை அவர்கள் செய்து முடிக்கின்றனர். மேலும் இந்த நெருப்பின் ஆற்றலினால் அவர்கள் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட எத்தகைய செயல்களை செய்து முடிக்கின்றனர் என்றால் அது படைப்பினங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகின்றது. அறிவும், புரியும் திறனும் வியப்படைகின்றது. நீர் அவர்களது செயல்களில் சுறுசுறுப்பைக் காண்பீர். சோம்பலையும், பிடிவாதத்தையும் அதில் நீர் காண மாட்டீர்.

கேட்பவரே! இதில் நீர் வியப்படைந்தால் நீர் அகப்பார்வை உடையவர்களை சார்ந்தவர் அல்லர் (என்பதே இதன் பொருளாகும்).

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அதாவது அவர்களுக்கு தண்டனை தரப்பட மாட்டாது. அவர்களுக்காக துக்கமும் வேதனையும் அருட்கொடையைப் போன்று ஆக்கப்படுகின்றது. அவர்களுக்காக கருணையின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. அவர்கள் எதிர்பார்க்காத இடங்களிலிருந்து அவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கப்படுகின்றது. இது ஏனென்றால் கம்பீரமிக்க, உடைந்த உள்ளங்களை இணைக்கின்ற இறைவனின் கண்ணியத்துடன் அவர்களுக்கு நெருக்கமும், உயர் தகுதியும் கிடைத்திருக்கின்றது. எனவே (இறைவனின்) சந்நிதியுடன் தொடர்புள்ளவர்களை எவ்வாறு நெருப்பில் போட முடியும்? எவ்வாறு அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட முடியும்? அவர்களின் சந்ததிகளுக்கும், இன்னும் சொல்வதென்றால், அவர்களின் சந்ததிகளின் சந்ததிகளுக்கும் கூட தண்டனை வழங்கப்பட மாட்டாது. அவர்களில் ஒவ்வொருவர் மீதும் கருணை காட்டப்படும். அல்லாஹ் அவர்களின் தலைமுறையில் அருளை வைத்து விடுகின்றான்.

எனவே, அவர்கள் ஒவ்வொரு நாளும் அருள்களில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். அல்லாஹ் இந்த எல்லா

சலுகைகளையும் அவர்களுக்கு வழங்குவதை கட்டாயமாக்கிக் கொண்டதற்கான காரணத்தையும் நாம் தெரிவிக்கின்றோம். அவர்களது மகன்களையும், மகன்களது மகன்களையும் பெருகும்படிச் செய்வதையும், அவர்களுக்கு சுகத்தை வழங்கவும், எல்லா துன்பங்களையும் அவர்களிடமிருந்து அகற்றுவதையும் அவன் விரும்புகின்றான். அதற்கான காரணம் என்னவென்றால், அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தம்மையே தியாகம் செய்து விடுகின்றனர். அவனது வழியில் உயிரைக் கொடுக்க விரும்புகின்றனர். மேலும் அவர்கள் வாழ்வதற்கு விருப்பமில்லாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் எதை வழங்கினார்களோ அதை தன் தரப்பிலிருந்து அதிகரிக்கச் செய்து அதை அவர்களுக்கு திரும்ப வழங்குவதையும், அவர்கள் முறித்துக் கொண்டிருந்த உறவை இணைப்பதையும் அல்லாஹ்வின் கருணை எதிர்பார்க்கின்றது.

இவ்வாறே அவனது நடைமுறை அவனது அடியார்களிடம் செயல்படுகின்றது. அதாவது அவன் நன்மை செய்தவர்களுக்கான நற்கூலியை ஒருபோதும் வீணாக்குவதில்லை. மேலும் எவர்கள் அவனுக்காக பணிவை மேற்கொள்கின்றனரோ அவர்களை அவன் இழிவுபடுத்துவதில்லை. மாறாக, அவர்களுக்கு கண்ணியம் வழங்கப்படுகின்றது. மேலும் எந்த நபர் தனது இறைவனுடன் கலப்பற்ற தன்மையுடன் நடந்து கொள்கின்றாரோ, தான் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றினாரோ, மேலும் நிலையை எவருக்கும் தெரியாமல் மறைவாக வைத்திருந்தாரோ அத்தகைய நபரை அல்லாஹ்வும் எவரும் அறியாத நிலையில் மூலைகளில் இருக்கும்படி விட்டு விட மாட்டான்.

மாறாக, அவன் அவர்களுக்கு மதிப்பையும் மரியாதையையும் வழங்குகின்றான். பொது மக்கள் மற்றும் தமது சகோதரர்களுக்கு மத்தியில் அவரது கண்ணியத்தை அதிகரிக்கச்

செய்வதற்கு அந்த இறைவனின் பரிவும் கருணையும் பொங்கி எழுகின்றது. எவ்வாறு பசியுள்ள ஒரு நபர் சாப்பிடுவதற்கு மிகவும் விரும்புவாரோ அவ்வாறே அந்த இறைவன் அந்த நபரைப் பற்றிய குறிப்பை தொலைதூரங்களிலுள்ள நாடுகளில் உயர்த்துவதை விரும்புகின்றான். அல்லாஹ்வின் நெருக்கம் பெற்ற அடியார் மைசூர் பருப்பை உண்பதையே போதுமானதாக ஆக்கிக் கொள்கின்றார். மேலும் செழிப்பாக வாழ்வை கழிப்பதையும், உல்லாசத்தையும் அவர் வெறுக்கின்றார். அப்போது அவரது இறைவன் (அவருடன்) அதற்கு நேர் மாறாக நடந்து கொள்கின்றான். அவருக்கு பழங்களின் கொத்துக்களையும், மாதுளையும் அவன் வழங்குகின்றான். மரணிக்கின்ற வரை மறைவாக வாழ்வை கழிப்பதற்காக அவர் தனிமையின் மூலையில் இருக்கின்றார். ஆனால் அல்லாஹ் வஹியின் மூலமாக அவரை அவரது அறையிலிருந்து வெளியில் கொண்டு வருகின்றான். பிறகு அவன் தனது படைப்பினங்களை அவர் பக்கம் திரும்ப வைக்கின்றான். அவர்கள் அவரிடம் அன்பளிப்புகளையும், அருட்கொடைகளையும் கொண்டு வருகின்றனர். அவருக்கு தொண்டு செய்கின்றனர். பூமியில் அவருக்காக ஏற்புடைமை வைக்கப்படுகின்றது. அல்லாஹ் நேசிக்கின்ற மக்களாக அவர்கள் இருக்கின்றனர்; அவர்களும் அவன் மீது அன்பு கொள்கின்றனர்; கலப்பற்ற தன்மையுடன் அவனுடன் நடந்து கொள்கின்றனர் என்று வானத்து வாசிகளிடையே அறிவிப்பு செய்யப்படுகின்றது.

அல்லாஹ் அத்தகைய இறைநெருக்கம் பெற்ற அடியார் காண்கின்ற கண்ணாக ஆகி விடுகின்றான். அவர் கேட்கின்ற காதாக ஆகி விடுகின்றான். அவர் பிடிக்கின்ற கையாக ஆகி விடுகின்றான். தங்களது முழுமையான இருப்புடன் அல்லாஹ்விற்காக ஆகிவிடுகின்ற அத்தகைய மக்களுக்கு கிடைக்கின்ற நற்கூலியாக இது இருக்கின்றது. அவர்கள்

இறைவனுக்கு இணை வைக்க மாட்டார்கள். அவர்கள் அவனுக்காகவே இருக்கின்றனர் என்று அவர்கள் முடிவெடுத்து விடுகின்றனர். அதற்குப் பிறகு மரணிக்கும் வரை அவர்கள் தமது கூற்றையும், உறுதி மொழியையும் மாற்றிக் கொள்வதில்லை. மேலும் அவன் பக்கமே அவர்கள் திரும்புகின்றனர்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அதாவது பாம்பு தனது சட்டையை கழற்றி விட்டு வெளியில் வருவது போன்று அவர்கள் தமது மன இச்சைகளிலிருந்து வெளியேறி விடுகின்றனர். அவர்களது (விருப்பங்களின்) நெருப்பு கொளுந்து விட்டு எரிந்த பிறகு அணைந்து விடுகின்றன. அதற்குப் பிறகு அவர்களுக்குள் புதிய, தூய விருப்பங்கள் உருவாகின்றன. அவர்களின் நிம்மதியடைந்த ஆன்மாக்கள் எதை விரும்பினாலும் அது அவர்களுக்காக ஆயத்தம் செய்யப்படுகின்றது.

மேலும் பஞ்சத்தின் காலத்தில் அவர்களுக்காக ஆன்மீக விருந்திற்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. அதனை அவர்கள் சாதாரணமாக உண்ண மாட்டார்கள். மாறாக, அதனை அவர்கள் நன்றாக மென்று உண்கின்றனர். ஒவ்வொரு வருடமும் குழந்தைகளைப் பெற்றெடுக்கின்ற பெண்ணைப் போன்று அவர்கள் நன்மைகளை ஒன்று திரட்டுகின்றனர். மேலும் குறைபாடுள்ள விஷயங்களிலிருந்து அவர்கள் தவிர்ந்திருக்கின்றனர். (அவற்றிற்கு) அருகில் கூட அவர்கள் செல்வதில்லை. அவர்கள் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்கின்றனர். அவர்கள் தமது ஆன்மாவை கருப்பாக இருக்கின்ற நிலையில் விட்டு விடுவதில்லை. மாறாக, அவற்றை அவர்கள் வெண்மையானதாக ஆக்குகின்றனர்.

இதுவும் அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அவர்கள் உண்மையான வார்த்தையையும் தமது காலத்தின் இமாமையும் மறுப்பதில்லை. அதற்காக அவர்கள் நெருப்பில் இடப்பட்டாலும் சரியே. கூர் தீட்டப்பட்ட வாள்களால் அவர்கள்

கொலை செய்யப்பட்டாலும் அல்லது கல்லெறிந்து கொல்லப் –பட்டாலும் அவர்கள் தமது ஈமானை வீணாக்குவதில்லை. அவர்களின் உண்மை மலக்குகளை வியப்பில் ஆழ்த்துகின்றது. மேலும் வானத்தில் அவர்கள் புகழப்படுகின்றனர். ஒவ்வொரு வீரரையும் முந்திச் செல்கின்ற மக்களாக அவர்கள் இருக்கின்றனர். பலவீனமானவர்களைப் போன்றும், கோழைகளைப் போன்றும் அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் முன்னுரிமை வழங்குகின்ற அந்த நேசத்திற்குரியவனுக்காக தமது இருப்பின் மாளிகையை இடித்து விட்டனர்.

அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் எல்லா நல்லவர்களும், சான்றோர்களும் கூட அவர்கள் மீது தரூது ஓதுகின்றனர். அவர்கள் தாம் செய்த உடன்படிக்கையை உண்மைப்படுத்திக் காட்டி விட்டனர். மேலும் அவர்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக தமது உயிர்களை அர்ப்பணித்து விட்டனர். எனவே 'ஈமான்' என்பது இத்தகைய ஈமானையே குறிக்கும். இத்தகைய ஈமானைப் பெற்றிருக்கின்ற அம்மக்கள் அருளுக்குரியவர் ஆவர்.

(இறை நெருக்கம் பெற்ற) இவர்களின் உதாரணம் அப்துல் லத்தீஃபின் உதாரணத்தைப் போன்றதாகும். அவர்கள் எனது ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு நபர் ஆவார்கள். அவர்கள் காபூல் மண்ணைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமது சமுதாயத்தின் தலைவராகவும், எல்லாரைவிடவும் உயர்ந்தவராகவும், எல்லாரையும் விட சிறந்த ஆலிமாகவும், இறையச்சமுள்ளவராகவும், தைரியமிக்கவராகவும் திகழ்ந்தார்கள். அவர்கள் தலைவராக இருப்பதற்கு முதல் தரமான தகுதியைப் பெற்றவராக இருந்தார்கள். அவர்கள் அங்கிருந்த அனைவரையும் விட ஒளிமிக்கவராகத் திகழ்ந்தார்கள். அவர்கள் எத்தகைய ஈமானை வெளிப்படுத்திக் காட்டினார்கள் என்றால், அவர்களது எதிரிகள் அவர்கள் உண்மையை விட்டு விட வேண்டும் என்பதற்காக அவர்களை

கல்லெறிந்து கொன்று விடுவதாக மிரட்டினர். ஆனால் அவர்கள் மரணிப்பதற்கு முன்னுரிமை வழங்கினார்கள். மேலும் ரஹ்மானை திருப்திப்படுத்தினார்கள். அமீரின் கட்டளைக்கு ஏற்ப அவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள். அல்லாஹ் அவர்களை தன் அளவில் உயர்த்திக் கொண்டான். அவர்களைப் பார்த்து பொறாமை கொள்பவர்களுக்கு சந்தேகமின்றி அவர்களிடம் மிகவும் உயர்ந்த ஒரு முன்மாதிரி உள்ளது.

எவர்கள் அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுகின்றனரோ நீங்கள் அவர்களை மரணித்தவர்கள் என்று கூறாதீர்கள். மாறாக அவர்கள் உயிருடன் இருப்பவர்கள் ஆவர். அல்லாஹ்வின் சந்நிதியில் அவர்களுக்கு உணவு வழங்கப்படுகின்றது. எவர் நம்பிக்கை கொண்ட ஒருவரை வேண்டுமென்றே கொலை செய்தாரோ அவருக்குரிய தண்டனை நரகமாகும். அதில் அவர் நீண்ட காலம் வரை தங்குவார். அல்லாஹ் அவர் மீது கோபம் கொள்வான். அவர் மீது சாபமிடுவான். அவன் அவருக்காக வேதனைமிக்க தண்டனையை ஆயத்தம் செய்துள்ளான். அநீதி இழைப்பவர்கள் எவ்வாறு தலைகீழாகப் புரட்டிப் போடப்படுகின்றனர் என்பது அவர்களுக்கு விரைவில் தெரிந்து விடும். வானம் இந்த ஷஹீதின் (ஷஹாதத்தின்) காரணமாக அழுதது. அவர்களுக்காக அவன் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டினான்.

இவ்வாறே நடக்க வேண்டும் என்று வானங்களைப் படைத்த அல்லாஹ்விடத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. நீங்கள் பராஹீனே அஹ்மதிய்யாவில் படித்தது போன்றே அல்லது கேட்டது போன்றே எனது இறைவன் இந்த விவகாரம் தொடர்பாக தனது தெளிவான வஹீயின் மூலம் முதலிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தான். அதாவது நீர் ஒரு விஷயத்தை வெறுத்திருக்கலாம். ஆனால் அது உமக்கு சிறந்ததாக இருக்கும். ஏனென்றால் அல்லாஹ் அதனை

அறிந்திருக்கின்றான். உமக்கு அது பற்றி தெரியாது என்று அவன் கூறியுள்ளான். ஷஹீது மர்ஹூம் அவர்கள் அழிந்து போகும் இந்த வீட்டிலிருந்து செல்லும்போது அவர்கள் தனது ஆன்மாவை உள்ளத்தில் மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் தனது இறைவனிடம் ஒப்படைத்தவாறு சென்றார்கள். இந்த அநீதியிழைத்தவர்கள் காலைப் பொழுதைக் கூட கழித்திருக்க மாட்டார்கள்; அப்போது அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் நிலையிலேயே வானத்தின் தண்டனைக்கு ஆளாகி விட்டனர். அவர்கள் காபூல் மண்ணை விட்டே ஓட ஆரம்பித்தனர். பிறகு அவர்கள் எங்கிருந்தாலும் இறைவனின் பிடியில் வந்து விட்டனர். இந்த தீயவர்கள் தப்பியோடி எங்கு செல்ல முடியும்? சந்தேகமின்றி இந்த சம்பவத்தில் இறைவனுக்கு அஞ்சுபவர்களுக்கு படிப்பினைக்கான விஷயம் இருக்கின்றது.

இதுவும் இறைநெருக்கம் பெற்றவர்களின் ஓர் அடையாளமாகும். அதாவது மலக்குகள் அவர்கள் மீது அருள்களை கொண்டு வந்தவாறு இறங்குகின்றனர். அல்லாஹ் அவர்களுடன் உரையாடுவதன் மூலமாக அவர்களுக்கு கண்ணியத்தை வழங்குகின்றான். அவர்கள் சுவர்க்கத்திலுள்ள தலைவர்களில் ஒருவராக இருக்கின்றார்கள்; அவர்கள் இறைநெருக்கம் பெற்றவர்கள் ஆவர்; சொர்க்கத்தில் அவர்களின் உள்ளம் எதை விரும்புகிறதோ அது அவர்களுக்குக் கிடைக்கும் என்று அவர்களுக்கு வஹியின் மூலம் இறைவன் தெரிவிக்கின்றான். மேலும் அவர்கள் எதனை விரும்பினாலும் அது அவர்களுக்கு அ(ந்த சொர்க்கத்)தில் கிடைக்கும்.

கண்ணியமிக்க இறைவனிடமிருந்து அவர்கள் மீது இன்பம் தரும் நன்மொழிகளும், சொற்செறிவுள்ள வார்த்தைகளும் இறங்குகின்றன. அவர்களுக்கு வல்லமையுள்ள, கருணைமிக்க இறைவிடமிருந்து மறைவான செய்திகளும், ஒவ்வொரு மகத்தான

செய்தியைப் பற்றிய தகவலும் தெரிவிக்கப்படுகின்றது. பஞ்சம் ஏற்படும் போது அவர்களின் மூலமாக மக்களின் வேண்டுதல் கேட்கப்பட்டு அவர்களுக்கு வந்துள்ள பேரழிவுகளிலிருந்து அவர்களுக்கு இரட்சிப்பு வழங்கப்படுகிறது.

அவர்களின் மன்றாடுதலின் விளைவாக சமுதாயத்தின் நிலைமையில் முற்றிலும் மாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. அவர்கள் செய்கின்ற அதிகமான துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வழக்கத்திற்கு மாற்றமான விஷயங்கள் வெளிப்படுகின்றன. மேலும் அத்துடன், தனது கருத்தை பிறர் மீது திணிப்பதில் எந்தக் குறையும் வைக்காத அத்தகைய சமுதாயத்திற்கு தண்டனை வழங்கப்படுவது தொடர்பாக அல்லாஹ்வின் புறமிருந்து அவர்களுக்கு தகவலும் செய்தியும் தரப்படுகிறது.

இவ்வாறே இறைநெருக்கம் பெற்றவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. அவர்களுக்கு நற்செய்திகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு உதவிகள் செய்யப்படுகின்றன. அவர்கள் ஒளிமயமானவர்களாகவும். பலனளிப்பவர்களாகவும் ஆக்கப்படு –கின்றனர். அவர்கள் பலமுறை அழிக்கப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்கு மீண்டும் பிறப்பு வழங்கப்படுகின்றது. எதுவரை என்றால் அவர்கள் தமது இறைவனை காண்கின்றனர் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ்வின் நெருக்கத்தில் இன்னும் முன்னேற்றம் கண்டிராத நிலையில் அவர்கள் மீது எந்த சூரியனும் உதயமாவதில்லை. அவ்வாறே எந்த இரவும் அவர்களை சூழ்ந்து கொள்வதுமில்லை. முன்னர் இருந்ததை விட அவர்களது அறிவு பல மடங்கு அதிகரிக்கின்றது.

அவர்கள் முதிய வயதை அடைகின்றபோது ஈமானைப் பொருத்தவரை முழுமையான இளமைப் பருவத்தில் இருக்கிறார்கள். அப்பருவத்தில் காலெடுத்து வைத்திருக்கின்ற இளைஞராகவும்,

அழகான ஆண் மகனைப் போன்றும் அவர்கள் காட்சியளிக் –கின்றனர். இவ்வாறு வயது அதிகமாவதுடன் அவர்களது ஈமானும் இறைஞானமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அவர்கள் இறையச்சத்தில் எந்த அளவு முன்னேறுகின்றனர் என்றால் அவர்களிடம் எதுவுமே எஞ்சியிருப்பதில்லை. அவற்றின் அடையாளங்கள் கூட எஞ்சியிருப்பதில்லை.

ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் அவர்கள் மாற்றப்படு –கின்றனர். அவர்கள் ஓர் இறைஞானத்தைக் கடந்து மற்றோர் இறைஞானத்தின் பக்கம் கொண்டு செல்லப்படுகின்றனர். அது தனது ஒளியில் முன்னரை விட பிரகாசமிக்கதாக இருக்கின்றது. இவ்வாறே அவர்களின் இறைவன் தனது அருளாலும் கருணையாலும் அவர்களை வளர்த்து காத்தோம்புகின்றான். அவன் அவர்களை பயனற்ற பழைய அம்பு போன்று இருக்க விட மாட்டான். மாறாக, புதிய வடிவில் அவர்களின் உள்ளத்திலுள்ள ஒளியை அவன் புதுப்பிக்கின்றான். அவற்றை வலப்புறமும், இடப்புறமும் அவன் புரட்டிக் கொண்டே இருப்பான். அவர்களின் மனதில் ஆசைகள் தோன்றுகின்றன. அழகிய இறைவனைக் கண்டதன் விளைவாக அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர்.

நீர் அவர்கள் விழித்திருப்பதாகக் கருதுகின்றீர். ஆனால் அவர்களோ இறை சந்திப்பின் தொட்டிலில் கனவில் திளைத்திருப்பவர்களாக இருக்கின்றனர். ஒன்றுமற்றவர்களாக இருக்கின்ற நிலையில் அவர்கள் கைவிடப்படுவதில்லை. மாறாக, மலராத மொட்டுக்களாக இருந்த அவர்கள் பழக்குலைகளாக ஆக்கப்படுகின்றனர். அவர்களிடம் மாற்றம் உருவாக்கப்படுகின்றது. அவர்கள் உலகிலிருந்து தொலைவில் வைக்கப்படுகின்றனர். நன்கு செயலாற்றும் இறைவனின் கட்டளையினால் அவர்கள் முன்னர் இருந்த தகுதிகளை விடவும் மிக உயர்ந்த தகுதிகளுக்கு உயர்த்தப்படுகின்றனர்.

அவர்களது விஷயங்களின் உச்ச நிலை எவ்வாறு இருக்கும் என்றால், அவர்கள் மரணத்திற்குப் பிறகு உயிர்ப்பிக்கப்படுகின்றனர். உடைந்த பிறகு ஒன்று சேர்க்கப்படுகின்றனர். அவர்கள் மீது ஒரு மரணத்திற்குப் பிறகு இன்னொரு மரணம் வருகின்றது. பிறகு அவர்களின் கலப்பற்ற தன்மையின் காரணமாக அவர்களுக்கு நிரந்தரமான வாழ்க்கை வழங்கப்படுகின்றது. மேலும் இப்லீஸின் வழிகெடுக்கின்ற அழைப்பு, இறைவனை நினைவு கூர்வதிலிருந்து முகம் திருப்பிச் சென்று விடக்கூடிய இத்தகையவர்களின் பகைமையிலிருந்து அவர்கள் காப்பாற்றப்படுகின்றனர். அவர்கள் தமது குறிக்கோளை அடைந்து விடும் போது படைப்பினங்கள் அறிந்திராத அத்தகையதொரு அந்தஸ்து அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

மேலும் தீயவர்களின் சகவாசத்தை விட்டு அவர்கள் தொலைவில் இருக்கின்றனர். பார்க்கின்ற கண்கள் மங்கலாகி விடும் அளவுக்கு அவர்கள் ஒளியாக ஆகிவிடுகின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் ஒளியில் மாய்ந்து போய் விடுகின்றனர். அவர்களின் உண்மை நிலையைப் பற்றி எவருக்கு அல்லாஹ் தெரிவித்து இருக்கின்றானோ அவரைத் தவிர வேறு எவராலும் அறிந்து கொள்ள முடியாது. அவர்கள் மறைவிலும் மறைவானவர்களாகவும், ஆன்மாவின் ஆன்மாவாகவும், மறைவாக இருக்கின்ற ஒவ்வொன்றையும் விட அதிகமாக மறைவாக இருக்கின்ற இருப்பாகவும் ஆகி விடுகின்றனர். அதாவது அவர்கள் மீது விழுகின்ற பார்வை மங்கலாகித் திரும்பி விடுகின்றது. அவற்றால் அவர்களைப் பார்க்க முடியாது. வானத்தில், உயர்வான இறைவனிடம் இருக்கும் அவர்களது பெயர், அதன் முழுமைத் தன்மையை எய்தி விடும்போது, அல்லாஹ் எந்தப் பணியை நாடி, அது முற்றுப் பெற வேண்டும் என்று தீர்மானித்திருந்தானோ, அப்பணி நிறைவடையும்போது வானத்தின் பக்கம் அவர்கள் திரும்பிச்

செல்வது தொடர்பாக விண்ணில் அறிவிப்பு செய்யப்பட்டு அவர்கள் தம் இறைவனின் பக்கம் சென்று விடுகின்றனர்.

அவர்கள் அல்லாஹ்விடம் திருப்தியடைந்து அல்லாஹ்வும் அவர்களிடம் திருப்தியடைந்திருக்கும் நிலைமையில் அவர்களின் உயிர்கள் பிரிந்து அல்லாஹ்வின் பக்கம் செல்கின்றன. வாள் உறையிலிருந்து உறுவப்படுவது போன்று அவர்களது உயிர்கள் அவர்களது உடல்களிலிருந்து பிரிந்து விடுகின்றன.

உலகிற்காக எந்தவொரு துக்கமும் வருத்தமும் அவர்களுக்கு இல்லாத நிலையிலேயே அவர்கள் உலகை விட்டு விடுகின்றனர். அவர்கள் உலகை சிறிதளவு பால் கறக்கின்ற ஆட்டைப் போன்று அல்லது துர்நாற்றம் வீசும் பிணத்தைப் போன்று பார்க்கின்றனர்.

மேலும் உலகின் பக்கம் அவர்களின் பார்வை விழுவதில்லை. மேலும் இந்த உலகை விட்டு விடுவதன் காரணமாக அவர்களுக்கு எந்த வருத்தமும் ஏற்படுவதில்லை. அவர்கள் தமது நேசத்திற்குரியவனின் வீட்டில் முகாமிட்டுக் கொண்டிருக்கின்றனர். கூர்மையான வாள்களை எதிர்கொள்ள வேண்டியது வந்தாலும் (தமது நேசத்திற்குரியவனின் வீட்டை) அவர்கள் விட்டு விடுவதில்லை. வெட்கமற்ற நபரைத் தவிர அவர்கள் தொடர்பாக வேறு எவரும் பழித்துப் பேச மாட்டார். பார்வையற்ற சமுதாயத்தைத் தவிர வேறு எவரும் அவர்களை மறுப்பதில்லை.

ஏசிப் பேசுகின்றவர்கள் மீது பரிதாபமே! நிச்சயமாக அவர்கள் அழிக்கப்படுவர். இருள்களில் வழிவதறிச் சென்று விட்டவர்களுக்கு தீங்கு ஏற்பட்டு விட்டது. அவர்கள் கொள்ளையடிக்கப்படுவார்கள்.

பொய்யை புனைந்து கூறுபவர்கள் மீது பரிதாபமே! அவர்களிடம் கேள்வி கேட்கப்படும். ரஹ்மானின் அடியார்களை

இழிவாக பார்க்கின்ற கண்களை கொண்டுள்ள மக்கள் மீது பரிதாபமே! அவர்கள் கண்டிப்பாக குருடர்களாகவே மரணிப்பர். உண்மையான விஷயத்தை கேட்கும்போது ஆத்திரமடைபவர்கள் மீது தீங்கு ஏற்பட்டு விட்டது. அவர்கள் தாம் மூட்டிய நெருப்பிலேயே எரிக்கப்படுவர்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்களுக்கு அவர்கள் இறைவன் புறமிருந்து சொற்செறிவுள்ள வார்த்தைகள் வழங்கப்படுகின்றன. அத்தகைய வார்த்தைகளை பேசுவது எந்தவொரு மனிதனாலும் இயலாததாகும். அவர்களை எதிர்த்து எவரும் போட்டி போடவும் முடியாது. ரஹ்மானின் அடியார்கள் சிறந்த இறைஞானத்தைப் பெறுவதற்கு ஆசைப்படுவது போன்றே சொற்செறிவுள்ள வார்த்தைகளை பெறவும் ஆசைப்படுகின்றனர். அவர்கள் என்ன வேண்டினாலும் அது அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. தனது நேசர்கள் தொடர்பாக அல்லாஹ்வின் நடைமுறை என்னவென்றால், (தூய) உள்ளம் போன்று (சொற்செறிவுள்ள) நாவும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அல்லாஹ் அவர்களைப் பேச வைக்கின்றான். அவன் பேச வைத்ததனால் அவர்கள் பேசுகின்றனர். ஒரு பெண் கருவுற்றிருக்கும் நிலையில் ஏதாவது சாப்பிடுவதற்கு அவளுக்கு அதிக விருப்பம் தோன்றினால் அவளது கணவர் அவளது விருப்பத்திற்கேற்ப அந்த உணவுக்கான ஏற்பாட்டை எவ்வாறு செய்வாரோ முற்றிலும் அதே போன்று இந்த இறைநெருக்கம் பெற்றவர்களுக்குள்ளும் ஆவி ஊதப்படும்போது அல்லாஹ்வின் புறமிருந்து அவர்களுக்குள் ஆசைகள் உருவாக்கப்படுகின்றன. தீமையைத் தூண்டும் ஆன்மாவின் புறமிருந்து அவை உருவாக்கப்படுவதில்லை. அவர்கள் விரும்புவது அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. (அதை விட்டு) அவர்கள் விலக்கி வைக்கப்படுவதில்லை.

இவ்வாறே அல்லாஹ்வின் புறமிருந்து அவனது வார்த்தைகள் எனக்கும் அருளப்பட்டிருக்கின்றது. நீங்கள் சந்தேகம் கொள்பவராக இருந்தால் நமது இந்த நூலுக்கு ஒப்பான ஒரு நூலை கொண்டு வந்து காட்டுங்கள்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவாகும். அவர்கள் வானத்திலிருந்து எந்த விளைச்சலும் இல்லாத பூமியின் பக்கம் கொண்டு செல்லப்படுகின்ற கருணையின் மழையைப் போன்று இறங்குகின்றனர். (இறைநெருக்கம் பெற்றவர்களாகிய) அவர்கள் மக்களை தங்களது தண்ணீரின் பக்கம் துணியை அசைத்து சைகை செய்தவாறு அழைக்கின்றனர். மேலும் தமது ஈர்ப்பின் சக்தியினால் மக்களின் உள்ளங்களை அவர்களது நெஞ்சங்களிலிருந்து ஈர்த்து விடுகின்றனர். மேலும் அம்மக்கள் அவர்களின் பக்கம் ஓடுகின்றனர். அவர்கள் உடனடியாக பற்றிப் பிடித்துக் கொள்ளப்படுகின்றனர்.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்கள் மற்றவர்கள் வரை ஒளியை எட்ட வைப்பதில் கருமியாக இருக்கின்ற ஒரு நபரைப் போன்று இருப்பதில்லை. அவ்வாறே குறைந்த பாலைத் தருகின்ற பெண் ஒட்டகத்தைப் போன்றும் அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் கருமித்தனம் காட்டுவதில்லை. இவர்கள் எத்தகைய மக்களாக இருக்கின்றனர் என்றால் இவர்களுடன் அமர்பவர்களும் கூட பாக்கியமற்றவர்களாக ஆகிவிட மாட்டார்கள். மேலும் அவர்கள் மீது அன்பு கொள்பவர்கள் ஒருபோதும் இழிவடைவதில்லை. அவர்களே அருளுக்குரியவர்களாக இருக்கின்றனர். மேலும் அவர்கள் மற்றவர்களுக்கு அருள்களையும் நற்பாக்கியத்தையும் வழங்குகின்றனர். அவர்கள் விளைச்சல் இல்லாத நிலத்தை பசுமையானதாகவும் செழிப்பானதாகவும் ஆக்கி விடுகின்றனர். மரணித்துப் போன உள்ளங்களை அவர்கள் உயிர்ப்பிக்கின்றனர்.

சென்று விட்ட செல்வங்களை அவர்கள் மீண்டும் பெற வைக்கின்றனர். மேலும் வர இருக்கின்ற துன்பங்களை அகற்றி

விடுகின்றனர். துண்டிக்கப்பட்ட உறவுகளை இணைத்து விடுகின்றனர். எந்த நதிகளின் தண்ணீர் உறிஞ்சப்பட்டு அவை வெறுமையாக ஆகிவிட்டதோ அவற்றை அவர்கள் நிரப்பி விடுகின்றனர். மார்க்கத்தின் எந்தப் பகுதி வெறிச்சோடி இருக்கின்றதோ அவற்றை அவர்கள் நிரப்பி விடுகின்றனர். அவர்களது நெஞ்சங்கள் ஒளியாலும் உள்ளங்கள் மகிழ்ச்சியாலும் நிறைந்து காணப்படுகின்றன. அவர்கள் வானத்தின் நட்சத்திரங்களாகவும், காய்ந்து போன பூமியின் (மீதுள்ள) கடல்களாகவும், உடலின் ஆன்மாவாகவும் இருக்கின்றனர். மேலும் பூமிக்கு முளைகளைப் போன்று அவர்கள் உள்ளனர்.

அல்லாஹ்வுடன் செய்துள்ள நன்றியுணர்வுடன் கூடிய உடன்படிக்கையை அவர்கள் மாற்றிக் கொள்வதில்லை. அவர்கள் மாற்றப்படுகின்றனர். அவர்கள் இறை நேசம் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர். அவர்களுக்குள் அல்லாஹ்வே மாற்றத்தை உருவாக்குகின்றான். அவர்கள் தடுமாற்றம் அடையாத குதுபுகளாக (இறைவனிடத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவர்களாக) இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ்விற்காக தூயவர்களாக ஆகி விடுகின்றனர். மேலும் தீமையை தூண்டுகின்ற ஆன்மாவை அதன் வேரோடு வெட்டி விடுகின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையிலும் நிலைத்து நிற்கின்றனர். அவர்கள் துயரங்களில் வாழ்வைக் கழிக்கின்றனர். அதிகமாக உண்ணும் நபரைப் போன்று அவர்கள் வாழ்க்கையை கழிப்பதில்லை. சம்பிரதாய விரும்பியைப் போன்று வெளிப்படையாக குளிப்பதை மட்டும் அவர்கள் போதுமானதாக கருதுவதில்லை. மாறாக, முன்னேறிச் சென்றவாறு அவர்களது ஆன்மாக்களைச் சுத்தப்படுத்தி தூய்மையாக்குகின்ற ஓடிக்கொண்டிருக்கின்ற நீரூற்றுகளின் பக்கம் அவர்கள் விரைந்து செல்கின்றனர். அசுத்தம் நிறைந்த தண்ணீரை அவர்கள் நாடிச் செல்லவில்லை.

அவர்கள் போரின் சந்தர்ப்பங்களில் மக்களுக்காக அல்லாஹ்வின் புறமிருந்து பாதுகாவலர்களாக இருக்கின்றனர். அவர்கள் படைப்பினங்களின் இருப்பிற்கு தலையைப் போன்று விளங்குகின்றனர். இறைவனின் படைப்பினங்கள் எனும் கடலில் மறைந்திருக்கும் முத்துக்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்கள் தீமையைத் தூண்டும் ஆன்மாவுடன் நடைபெறும் பெரும் போரில் வெற்றி பெறுகின்றனர். அதற்குப் பிறகு கண்ணியமிக்க இறைவனின் கட்டளையினால் அவர்கள் உள்ளங்களை வெற்றி கொள்கின்றனர். மேலும் அவர்கள் மேலோங்கி விடுகின்றனர்.

மரணத்திற்குப் பிறகு அவர்கள் புது வாழ்க்கையை பெறுகின்றனர். மக்கள் அவர்களை வெறுக்கின்ற போது அவர்கள் அன்பின் நறுமணத்தை பரப்புகின்றனர். வெள்ளப்பெருக்கு ஏற்படும் போதும், துன்பம் கடுமையாக இருக்கின்ற போதும், அழுகுரல்கள் எழுகின்றபோதும் அவர்களைப் போன்ற பாதுகாவலர்களை நீர் காண மாட்டீர்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களை தூதராக அனுப்பி இருக்கின்ற அந்த இறைவனின் கட்டளையினால் பரிந்துரை செய்பவர்களாக அவர்கள் இருப்பார்கள். உள்ளங்க(ளின் துயரங்க)ள் தொண்டை வரை வந்தடைகின்றபோது அவர்கள் (இறைவனிடம்) மன்றாடுகின்ற நிலையில் நிற்கின்றனர். மேலும் அவர்கள் சஜ்தாவில் வீழ்ந்து விடுகின்றனர்.

அப்போது அவர்களது துஆ வானத்தை நிரப்பி விடுகின்றது. அவர்களது அழுகை வானவர்களை அழ வைக்கின்றது. அவர்களது தக்வாவின் காரணமாக அவர்களது துஆ கேட்கப்படுகிறது. அதனால் மக்கள் நிம்மதியிழந்திருந்த அந்த சோதனையிலிருந்து காப்பாற்றப்படுகின்றனர். இவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அவர்கள் பூமியோடு ஒன்றி விடுகின்றனர். தொடர்ச்சியாக வருகின்ற பேரழிவுகளின் நேரத்தில் தொடர்ந்து சஜ்தாக்கள்

செய்தவாறு பூமியில் வீழ்ந்து கிடக்கின்றனர். கண்ணீரால் பூமியை ஈரமாக்கி விடுகின்றனர். மேலும் எல்லா துன்பங்களையும் அகற்றுபவனாகிய அல்லாஹ்வின் முன்னிலையில் இருள் நிறைந்த இரவுகளில் அவர்கள் நிற்கின்றனர்.

பிரபஞ்சத்தைப் படைத்தவனை திருப்திபடுத்த உண்மையான உள்ளத்துடன் தங்களை படைத்தவனின் பக்கம் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர். மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருக்கின்ற மக்களை உயிர்ப்பிப்பதற்காக தாமே மரணத்தை ஏற்றுக் கொள்கின்றனர். எனவே அவர்கள் விதியை மாற்றி விடுகின்றனர். மரணத்தை மேற்கொண்டவாறு அவர்கள் பரிந்துரை செய்கின்றனர். துன்பங்களைச் சகித்தவாறு அவர்கள் சுகத்தை வழங்குகின்றனர். துக்கத்தைத் தாங்கியவாறு அவர்கள் அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்கின்றனர்.

அவர்கள் அல்லாஹ்வின் படைப்புகளுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்கின்றனர். துன்பங்களின் நேரத்தில் அவர்களை கருத்தில் கொள்கின்றனர். விண்ணில் இருக்கும் வானவர்களைக் கூட வியக்க வைக்கின்ற பணியை அவர்கள் செய்கின்றனர். மேலும் நன்மைகளில் அவர்கள் முன்னேறிச் செல்கின்றனர். அவர்களது உள்ளங்களில் வீரம் வைக்கப்படுகின்றது. எனவே அவர்கள் மறுமை நாள் வரை நீடித்துக் கொண்டே இருக்கும் அந்த கஷ்டங்களில் எப்போதும் இருந்து வருகின்றனர்.

மேலும் அவர்கள் அச்சத்திற்கு ஆளாவதில்லை. அதிகப்பிரசங்கியாக எவரிடமும் தீய சொற்களை கூறுவதில்லை; மாறாக மக்கள் தீயவற்றை பேசும் போது அவர்கள் அமைதியாக இருக்கின்றனர். தமது கோபத்தை அவர்கள் விழுங்கி விடுகின்றனர். அவர்கள் உலகின் பிணத்தின் பக்கம் சாய்ந்து விட மாட்டார்கள். அவற்றை நாய்களுக்காக அவர்கள் விட்டு விடுகின்றனர். அவற்றை அவர்கள் எலும்புத்துண்டாகவும் இன்னும்

சொல்வதென்றால் ஈக்களின் எச்சமாகவும் மட்டுமே அவர்கள் நினைக்கின்றனர். அவர்களின் பார்வை அவற்றின் பக்கம் செல்வதில்லை. அவர்கள் அதன் பக்கம் எந்த கவனமும் செலுத்துவதில்லை.

அவர்கள் தங்களை கிளைகள் நிறைந்த மரங்களைப் போன்று ஆக்கிக் கொள்கின்றனர். ஒவ்வொரு திசையிலிருந்தும் வருகின்ற பசியுள்ள மனிதர்கள் அவற்றின் பழங்களை உண்கின்றனர். விருந்தினர்களும் விருந்தோம்பல் செய்பவர்களும் எத்துணை நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனர்! இம்மக்கள் முழுமையான அழகுடையவர்களாக இருக்கின்றனர். தீமையை நன்மையின் மூலமாக அகற்றுகின்றனர். அவர்கள் படைப்பினங்–களுக்கு தொண்டு செய்கின்றனர். அவர்களைத் துன்புறுத்து–பவர்களுக்கும் அவர்கள் தீங்கு செய்வதில்லை. மன்னிப்பை வேண்டுபவர்களின் மன்னிப்பை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். கீழ்த்தரமான எதிரிகளிடமிருந்து அவர்கள் மீது கடுமை காட்டப்படும் போது அதற்கு பதிலாக அவர்கள் அந்த எதிரிகளுக்கு நன்மையே செய்கின்றனர். அவர்கள் ஏச்சுப் பேச்சுகளுக்கு எதிராக ஏசுவதற்கு முயற்சி கூட செய்வதில்லை. அதை விட்டு தவிர்ந்திருக்கின்றனர்.

அவர்கள் தமது எதிரிக்காக அல்லாஹ்விடமிருந்து நன்மையும், அமைதியும், நலமும், பாதுகாப்பும், நேர்வழியும் கிடைப்பதற்காக துஆ செய்கின்றனர். மேலும் அவர்கள் தமது நெஞ்சங்களில் எவருக்காகவும் அணுவளவு கூட காழ்ப்புணர்வு கொண்டிருப்பதில்லை. மேலும் அவர்கள் மீது அசுத்தமான குற்றச்சாட்டுகளை சுமத்துபவர்களுக்காகவும் அவர்களை அற்பமாக கருதுபவர்களுக்காகவும் அவர்கள் துஆ செய்கின்றனர். அவர்கள் பாவிகளுக்குக் கூட தங்களது ஜமாஅத்தில் அடைக்கலம் தருகின்றனர். எனவே அல்லாஹ் அவர்களுக்கு தோற்றம் அளிக்கின்றான். ஏனென்றால் அவர்கள் அவனுக்கு முன்னுரிமை

வழங்குகின்றனர். அவர்கள் கலப்பற்ற தன்மையை கொண்டவர்களாக இருப்பதன் காரணத்தால் அவனது அடியார்கள் மீது கருணை காட்டுகின்றனர். உண்மையிலேயே இம்மக்கள்தான் இறை நெருக்கம் பெற்றவர்களாகவும், அல்லாஹ்வின் நண்பர்களாகவும் இருக்கின்றனர்.

மேலும் இம்மக்களே வெற்றி பெறுபவர்கள் ஆவர். அவர்களின் வருகையால் பூமிக்கு அருள் வழங்கப்படுகின்றது. மேலும் மக்களுக்கு அவர்களின் துக்கங்களிலிருந்து இரட்சிப்பு வழங்கப்படுகின்றது. இவர்களுடன் தொடர்பு வைத்திருக்கின்ற மக்களுக்கு வாழ்த்துக்கள்.

என் இறைவா! என்னை அவர்களில் ஒருவராக ஆக்குவாயாக. மேலும் நீ எனக்குரியவனாக ஆகி விடுவாயாக. மக்கள் எழுப்பப்பட்டு நிறுத்தப்படுகின்ற அந்நாள் வரை நீ என்னுடன் இருப்பாயாக. என் இறைவா! என்னுடன் பகைமை கொள்கின்ற அம்மக்களை நீ தண்டித்து விடாதே. ஏனென்றால் அவர்கள் என்னை அடையாளங்கண்டு கொள்ளவில்லை. அவர்களுக்கு அகப் பார்வையும் கிடைக்கவில்லை. எனவே என் இறைவா! உன் புறமிருந்து அவர்கள் மீது கருணை காட்டுவாயாக. மேலும் அவர்களை நேர்வழி பெற்ற மக்களுடன் இணைத்து விடுவாயாக.

மறுப்பவர்களே! நீங்கள் நன்றி செலுத்தினால் மேலும் நம்பிக்கை கொண்டால் அவன் உங்களுக்கு தண்டனை வழங்குவதற்கான தேவை என்ன வந்து விட்டது? நீங்கள் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த மாட்டீர்களா? அவனே நீங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த தருணத்தில், நீங்கள் மேலே கொண்டு செல்லப்பட்ட தருணத்தில் உங்களை தாங்கி பிடித்துக் கொண்டான். நீங்கள் நன்றி செலுத்தினால் அவன் உங்களுக்கு அதிகமாக வழங்குவான். நீங்கள் ஆசைப்பட்டதும் விரும்பியதும் உங்களுக்கு வழங்கப்படும். நீங்கள் நன்றிகேடு காட்டினால் பிறகு

நரகம் நன்றிகேடு காட்டும் மக்களை சுற்றி வளைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அவர்களின் ஓர் அடையாளம் இதுவுமாகும். அவர்கள் சிறிதிலும் சிறிதாக இருக்கின்ற எந்த உயிருக்கும், எறும்புக்கும் கூட துன்பம் இழைக்க மாட்டார்கள். பலவீனமானவர்கள் மீது அவர்கள் கருணை காட்டுகின்றார்கள். (எவரிடமும்) முழுமையான முறையில் அவர்கள் உறவை முறித்துக் கொள்வதில்லை. தீங்கு விளைவிப்பவர்கள் அவர்கள் மீது பகைமை கொண்டு எல்லா வகையிலும் அவர்களுக்கு துன்பம் இழைத்து அவர்கள் மீது அநீதியிழைத்தாலும் சரியே.

மாறாக, அவர்கள் தமது பகைவர்கள் நேர்வழியைப் பெற வேண்டும் என்பதற்காக துஆ செய்கின்றனர். நீர் அவர்களை தீய ஒழுக்கமுடையவர்களாய் கடின உள்ளம் கொண்டவர்களாய் இருக்கக் காண மாட்டீர். அவர்களைப் போன்று கருணை உள்ளம் கொண்டவர்களையும் அவ்வாறே மக்களுக்கு நல்லதை நாடுகின்ற வேறு எவரையும் நீர் காண மாட்டீர். இத்தகையவர்களை கிழக்கிலும், மேற்கிலும் தேடிப் பார்த்தாலும் சரியே.

அவர்கள் துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்ற மக்களுக்காக துஆ செய்கின்றனர். எதுவரையென்றால் அதற்காக அவர்கள் தமது உயிரையும் கூட மாய்த்துக் கொள்கின்றனர். எனவே இத்தகைய நிலை அவர்களது ஆன்மாக்களில் ஏற்படும்போது அவர்களின் துஆ ஏக இறைவனால் கேட்கப்படுகின்றது. பிறகு அவர்களுக்கு அது தொடர்பாக செய்தி தெரிவிக்கப்படுகின்றது. ஏனென்றால் அவர்கள் தமது துஆக்களை அதன் உச்சம் வரை கொண்டு சென்று விடுகின்றனர். மேலும் (இறைவனது படைப்பினங்களுடன்) அனுதாபத்துடன் நடந்து கொள்வதற்காக முழுமையான உரிமையை அவர்கள் செலுத்துகின்றனர். அதில் அவர்கள் எவ்வகையிலும் கவனமற்றிருப்பதில்லை. அவர்கள் தம்மைத்தாமே உருக்கிக்

கொள்கின்றனர். தமது உயிர்களை அழிவில் போட்டுக் கொள்கின்றனர்.

எனவே அதன் மூலமாக பல உயிர்களையும் அவர்கள் அழிவிலிருந்து காப்பாற்றி விடுகின்றனர். இவ்வாறே அவர்களுக்கு மகத்தான (தூய) இயல்பு வழங்கப்படுகின்றது. அவர்கள் அதற்கு ஏற்ப செயல்படுகின்றனர். இருள் நிறைந்த இரவுகளில் மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவர்கள் (இறைவனை வணங்குவதற்காக) நிற்கின்றனர். அவர்கள் தமது (நல்ல) செயல்களின் ஒளியை இவ்வுலகிலேயே கண்டு கொள்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு நாளும் தமது ஒளியில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். மேலும் எவற்றை (அதாவது, நற்செயல்களை) அவர்கள் தமது ஆன்மாக்களுக்காக முன்னே அனுப்பி இருக்கின்றனரோ அவற்றின் செழிப்பைக் கண்டு கொள்கின்றனர். அவர்கள் போதையில் இருப்பவர்களைப் போன்று இருப்பதில்லை. அவர்கள் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விலகி இருக்கின்றனர். அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரியே. அவர்கள் அதன் அருகில் கூட செல்வதில்லை. அவர்கள் அதனை அற்பமாகக் கருதுவதும் இல்லை. அவர்கள் நற்செயல்களை மதிக்கின்றனர்; அவற்றை அவர்கள் அற்பமாக கருதுவது இல்லை.

மேலும் நான் அல்லாஹ்வின் அருளால் அவனது நண்பர்களில் ஒருவனாக இருக்கின்றேன். நீங்கள் அடையாளங்கண்டு கொள்வதில்லையா? மேலும் நான் உங்களிடம் தெளிவான அடையாளங்களைக் கொண்டு வந்துள்ளேன். நீங்கள் பார்ப்பதில்லையா? சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் நிகழவில்லையா? எல்லா நாடுகளிலும் பெண் ஒட்டகங்கள் கைவிடப்படவில்லையா? நீங்கள் சிந்திக்காமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ரஹ்மானாகிய இறைவனிடம் இருந்து தெளிவான அடையாளங்கள் வந்து விட்டன. அவன்

புறமிருந்து தெளிவான ஆதாரம் இறங்கி விட்டது. இதற்குப் பிறகு உங்களது உள்ளங்களில் எந்த சந்தேகம் சலனத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது?

முகம் திரும்பிச் செல்பவர்களே! இப்போது உங்களிடம் எந்த சாக்குப் போக்கு எஞ்சியிருக்கின்றது? பிளேக் பரவவில்லையா? அதிகமாக மரணங்கள் நிகழவில்லையா? பொய், பாவம், தீய நடத்தை போன்றவை பொதுவானதாக ஆகி விடவில்லையா? இணை வைக்கின்ற சமுதாயம் மேலோங்கி விடவில்லையா? உலகில் ஒரு மகத்தான புரட்சியின் துவக்கம் ஏற்படவில்லையா? எவற்றை எதிர்பார்த்து நீங்கள் காத்துக் கொண்டிருந்தீர்களோ அவற்றின் பெரும்பாலான அடையாளங்கள் வெளிப்படவில்லையா? நீங்கள் நல்லெண்ணம் கொள்ளாமல் இருப்பதற்கும் வரம்பு மீறுவதற்கும் உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?

மக்களே! நீங்கள் இறையச்சம் உடையவர்களாக இருந்தால் பிறகு அல்லாஹ் மற்றும் அவனது நீதியாளரைத் தாண்டி ஏன் முன்னே செல்கின்றீர்கள்? உங்களுக்கு முழுமையாக அது பற்றி தெரியாமல் இருந்த நிலையில் நீங்கள் என்னை நிராகரித்து இருப்பது தான் உங்களிடம் இருக்கும் இறையச்சமா? மேலும் நீங்கள் தூய உள்ளங்களுடன் கேள்வி கேட்பதில்லை. மேலும் உங்களிடம் கேள்வி கேட்கப்பட்டால் நீங்கள் ஆத்திரப்படுகின்றீர்கள்.

ஈஸாவை வணக்கத்திற்குரியவராக ஆக்குவதில் (நேர்மைக் கேடாக) எல்லை மீறி மிகைப்படுத்தி இருக்கின்ற அந்த சமுதாயத்தை வாயடைக்கும்படி செய்வதற்கும், அவர்கள் உயர்த்தி பிடித்துக் கொண்டும் வணங்கிக் கொண்டும் இருக்கின்ற சிலுவையை உடைப்பதற்கும், அல்லாஹ் என்னை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பி, அல்லாஹ்வின் மார்க்கத்தை சிறந்த முறையில் புதுப்பிப்பதற்காக அவன் என்னை தேர்ந்தெடுத்திருப்பது உங்களுக்கு தீயதாக தோன்றுகின்றதா?

அல்லது எனது இறைவன் தனது வஹியில் உங்களை எதிர்த்திருப்பது உங்களை ஆத்திரமடையும்படி செய்திருக்கின்றதா? இவ்வாறே இதற்கு முன்னர் யூதர்களும் கூட ஆத்திரமடைந்திருந்தனர். நீங்கள் படிப்பினை பெறாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?

மக்களே! நிச்சயமாக உரிய நேரத்தில் வந்துள்ள, விண்ணிலிருந்து ஒளிமயமான சான்றுகளுடன் இறங்கியுள்ள அந்த மஸீஹ் நானே ஆவேன். உங்களுக்கு அவர் அல்லாஹ்வின் அடையாளங்களை உங்களிடத்திலும் தனது இருப்பிலும் தனக்கு உதவி செய்பவர்களிடத்திலும் காட்டியுள்ளார். மேலும் காலம் அவருக்காக தனது நிலைமையால் சாட்சி பகர்ந்திருக்கின்றது.

அல்லாஹ் அவருக்காக தனது குர்ஆனில் சாட்சி பகர்ந்துள்ளான். எனவே அல்லாஹ்வின் சாட்சிக்கும் அவனது கூற்றிற்கும் எதிராக நீங்கள் எந்த விஷயத்தின் மீது நம்பிக்கை கொள்வீர்கள்? அல்லாஹ்விற்கும் அவனை சந்திக்க இருக்கின்ற நாளிற்கும் அஞ்ச வேண்டிய காலம் உங்களுக்கு வரவில்லையா? தோல்களை நெருப்பால் பொசுக்கி விடும் அந்த நாளுக்கு அஞ்ச வேண்டிய நேரம் உங்களுக்கு வரவில்லையா?

அல்லாஹ்வின் வசனங்கள் தொடர்பாக நீங்கள் ஏன் சிந்திப்பதில்லை? மேலும் அவனது (வேதமாகிய) ஃபுர்கானை விட மேலாக வேறு என்ன சாட்சி இருக்க முடியும்? நான் அல்லாஹ்விடம் இருந்து வந்திருந்து நீங்கள் என்னை மறுத்து விட்டால் உங்களுக்கு எவ்வாறு அவனது பாதுகாப்பிலிருந்து பங்கு கிடைக்கும் என்பதை நீங்கள் சிந்திக்கமாட்டீர்களா? நீங்கள் யூதர்களின் சம்பவங்களைப் படிப்பதில்லையா? அவர்கள் எவ்வாறு குரங்குகளாக ஆக்கப்பட்டனர்? நீங்கள் கூறும் அதே சாக்குப்போக்குகள் அவர்களிடம் இருக்க –வில்லையா? எனவே நீங்கள் உங்களது உயிர்கள் மீது கருணை காட்டுங்கள். எப்போது வரை எதிர்த்து நிற்பீர்கள்?

அறிவற்றவர்களே! அல்லாஹ்வுடன் போர் செய்யாதீர்கள். நீங்கள் உங்கள் மரணத்தை நினைவு கூராமலும் அஞ்சாமலும் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? எந்த தன்மானமுள்ள (இறை)வன் என்னை அனுப்பியுள்ளானோ, எவனுக்கு நீங்கள் கீழ்ப்படியாமல் இருக்கின்றீர்களோ சந்தேகமின்றி அவன் இடி மின்னலாக இருக்கின்றான். குற்றம் புரிந்துள்ள சமுதாயத்திடமிருந்து அவனது தண்டனையை அகற்றி விட முடியாது. நிச்சயமாக உங்களது நாவிலிருந்து வெளி வந்துள்ள விஷயங்களை அவன் கேட்கின்றான். மேலும் உங்களது ரகசிய ஆலோசனைகளையும் எல்லா சூழ்ச்சிகளையும் அவன் பார்க்கின்றான். எந்த இடத்திற்கு அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டியதிருக்கும் என்பதை அநீதியிழைக்கின்ற மக்கள் கண்டிப்பாக தெரிந்து கொள்வர்.

உண்மையாளரையும் பொய்யரையும் பிரித்தறிந்து பார்க்க முடியாதவர்களுக்கும் அஞ்சாமல் இருப்பவர்களுக்கும் அழிவு தான்! அவர்கள் உண்மையாளர்களை அவர்களின் முகங்களின் மூலம் அடையாளங்கண்டு கொள்வதில்லை. அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுவதில்லை. இறைநெருக்கம் பெற்றவர்களின் சொற்களில் அவர்களுக்கு இன்பம் கிடைப்பதில்லை. அடையாளங்–களிலிருந்து அவர்கள் பயன் பெறுவதும் இல்லை. அல்லாஹ் அவர்களது உள்ளங்களில் முத்திரையிட்டு விட்டான். அவர்கள் சிந்திப்பதில்லை.

மக்களே! என்னைப் பொய்ப்படுத்துவதில் நீங்கள் ஏன் அவசரம் காட்டுகின்றீர்கள்? இறையச்சமுள்ளவர்களைப் போன்று நடந்து கொள்ளாததற்கும், வீண் பேச்சுகளைப் பேசுவதற்கும் ஒழுங்கை கடைபிடிக்காமல் இருப்பதற்கும் உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? நீங்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக கண்ணியத்திற்குரிய கம்பீரமிக்க அல்லாஹ்வின்

கூற்றாகிய فَلَمَّا تَوَفَّيْتَنِي (என்னை நீ மரணிக்கச் செய்த பிறகு★) என்பதைக் குறித்து ஏன் சிந்திப்பதில்லை? நீங்கள் மரணிக்க –மாட்டீர்களா? எப்போதும் உயிருடன் இருப்பீர்களா? நாங்கள் நேரடியாக பார்த்தவற்றை எவ்வாறு எங்களால் விட முடியும் என்று கேட்கின்ற நீங்கள் ஈஸா (அலை) அவர்கள் வானத்தில் ஏறிச் சென்றதை பார்த்தீர்களா? உங்கள் மீது அழிவு உண்டாகட்டும்! எவ்வித அறிவும் இன்றி பொது மக்களை ஏன் வழிதவறிச் செல்ல வைக்கின்றீர்கள்? எவன் பக்கம் நீங்கள் திரும்ப அனுப்பப்படுவீர் –களோ அவனுக்கு நீங்கள் அஞ்சுவதில்லையா?

நீங்கள் பொய் கூறுவதில் பிடிவாதமாக இருக்கின்றீர்கள். நீங்கள் பொய் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று தெரிந்திருந்தும் கூட பொய் கூறுவதில் துணிச்சலைக் காட்டிக் கொண்டிருக்கின்றீர்கள். நான் உங்களிடம் அனுப்பப்படாமல் இருந்திருந்தால் உங்களால் காரணம் கூறியிருக்க முடியும். ஆனால் அல்லாஹ் என்னை அனுப்பிய பிறகு இப்போது உங்களிடம் எந்த காரணமும் எஞ்சியிருக்கவில்லை. நீங்கள் அஞ்சாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? அல்லாஹ்வின் நீதி நெறி தீர்ப்பவருடன் நீங்கள் நடந்து கொண்டது மிகவும் மோசமானதாகும். நீங்கள் இட்டுக்கட்டிப் பொய் கூறுவது மிகவும் தீயதாகும்.

உங்கள் மீது பரிதாபமே! நீங்கள் காலத்தை அடையாளங் –கண்டு கொள்ளவில்லை. மேலும் நபிமார்கள் கூறியவற்றை நீங்கள் நினைவில் கொள்ளவில்லை. அல்லாஹ் தன் புறமிருந்து உங்கள் மீது அடையாளங்கள் மூலமாக பேரருள் புரிந்துள்ளான். ஆனால் நீங்கள் அவற்றை பார்க்கவே இல்லை. நீங்கள் உங்களையே செவிடர் –களாகவும், குருடர்களாகவும் ஆக்கியுள்ளீர்கள். நீங்கள் மரணிப்பவர்களுடன் சேர்ந்து விட்டீர்கள். உங்களை வழிகேட்டில் கொண்டு செல்பவற்றை ஓர் அணுவளவு கூட நீங்கள் கைவிட

★ திருக்குர்ஆன் 5:118 – வெளியீட்டாளர்.

–வில்லை. மாறாக, அவற்றின் மீது நீங்கள் பிடிவாதமாக இருந்தீர்கள். அல்லாஹ் உங்களுக்கு மஸீஹின் வருகைக்கான நேரத்தை முழுமையான முறையில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளான். எந்த ஆதாரத்தையும் அவன் விட்டு வைக்கவில்லை. நீங்கள் பலவீனமாக இருந்த நிலையில் அல்லாஹ் உங்களுக்கு பத்(ர் போ)ரில் உதவி செய்தான். இந்த இரகசியத்தைப் புரிந்து கொள்ளாமலும், இதன் பக்கம் கவனம் செலுத்தாமல் இருப்பதற்கும் உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? இது பத்ரின் (பதினான்காம்) நூற்றாண்டு இல்லையா? பிறகு அல்லாஹ்வின் வசனங்களுக்கு உண்மையான முறையில் நீங்கள் ஏன் மதிப்பளிப்பதில்லை? அவற்றிலிருந்து ஏன் பயனடைவதில்லை? தனியாகப் பிரிந்து சென்று விட்ட இந்த நபரை நாங்கள் எவ்வாறு பின்பற்ற முடியும்? மேலும் பெரும்பான்மையை எவ்வாறு நாங்கள் கைவிட முடியும்? என்று அறிவற்றவர்கள் கேட்கின்றனர்.

பெரும்பான்மையை விட்டு துண்டிக்கப்பட்டு, வழிகேட்டில் இருந்து தூய்மையாக இருக்கும் நிலையிலும் அல்லாமல் எந்த நபியும் வந்ததில்லை. பாருங்கள்! நாம் அவர்களது சந்தேகங்களை எவ்வாறு அகற்றுகின்றோம்? பிறகு எவ்வாறு அவர்கள் குருடர்களாக ஆகிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் பாருங்கள். அவர்கள் ஒவ்வொருவராக அவன் முன்பு திரும்ப அனுப்பப்படுகின்ற அந்த நாளை மறந்து விட்டனர். பிறகு அவர்களிடம் அவர்களது செயல்கள் தொடர்பாக கேட்கப்படும். அவர்கள் மூஸா (அலை), ஈஸா (அலை) மற்றும் நமது கண்ணியமிக்க நபிகள் நாயகம் (ஸல்) ஆகியோர் ஆரம்பத்தில் (பெரும்பான்மையான மக்களிடமிருந்து) எவ்வாறு தனியாக அனுப்பப்பட்டார்கள் என்பதைப் பார்க்காமல் இருப்பதற்கு அவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது?

பிறகு நரகத்திற்காக உருவாக்கப்பட்டிருப்பவனைத் தவிர மற்ற நல்லவர்களின் ஒரு ஜமாஅத் அவர்களைச் சுற்றி ஒன்று

சேர்ந்தனர். அனைவரும் அன்னாரை மெய்ப்பித்தனர். அவர்கள் முன்னால் தலை குனிந்தனர். தனியாக இருந்த அவர்கள் மீது நம்பிக்கை கொண்டனர். தமது பெரும்பான்மையை கைவிட்டு விட்டனர்.

தமது காலத்து நபியை கைவிட்டு விட்டவர்கள் மீது அழிவு தான்! இவர்களே (ஜமாஅத்தை விட்டு விட்டு) தனியாகச் சென்று விட்ட மக்கள் ஆவர். இவர்களுக்கே கோணலான காலகட்டத்தை சார்ந்தவர்கள் என்றும் தீய சகுனத்தை உடையவர்கள் என்றும் நமது நபியான பெருமானார் (ஸல்) அவர்கள் பெயர் சூட்டினார்கள். மேலும் அவர்கள் என்னைச் சார்ந்தவர்கள் அல்ல. நானும் அவர்களைச் சார்ந்தவன் அல்லன் என்று கூறினார்கள்.

முதலில் கூறப்பட்டிருப்பது போன்று இதுவே தனியாகப் பிரிந்திருப்பதாகும். அவர்களிடம் அவர்களின் இறைவனிடமிருந்து தீர்ப்பளிப்பவர் வந்தபோது அவர்கள் தமது கண்களை குருடாக்கிக் கொண்டனர். தமது காதுகளை செவிடாக்கிக் கொண்டனர். அவர் தொடர்பாக அவர்கள் ஆராய்ந்து பார்க்கவில்லை. அவர்கள் ஊமைகளைப் போன்று ஆகிவிட்டனர்.

நிச்சயமாக அல்லாஹ் என்னை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அனுப்பியுள்ளான். ஏனென்றால் அவன் இஸ்லாத்தை பலவீனத்தின் குழியில் வீழ்ந்து கிடப்பதை பார்த்தான். அதனை மிகவும் பயனற்ற கருப்பு நிலமாகவும் அல்லது அழுகிப் போன தாவரமாகவும் அல்லது துர்நாற்றம் வீசும் மாமிசம் போன்றும் இருக்கக் கண்டான். அது முற்றிலும் அழுகி மிகவும் துர்நாற்றம் வீசுகின்ற மரத்தைப் போன்று ஆக இருந்தது. கிறித்தவர்கள் உண்மையை சார்ந்திருப்பவர்களை வழிகெடுத்துக் கொண்டிருப்பதையும் அவர்களை கிறித்தவர்களாக ஆக்கிக் கொண்டிப்பதையும், அநீதியிழைத்தும், பொய் கூறியும் நமது நபி (ஸல்) அவர்களை ஏசிப் பேசுவதையும் அதிலிருந்து விலகாமல் இருப்பதையும் அவன் பார்த்தான். அவர்களை பதில் கூற முடியாமல் ஆக்குவதற்கான ஆற்றல் ஆலிம்களிடம் எஞ்சியிருக்கவில்லை

என்பதையும், அவர்களிடம் பொருள் செறிந்த முறையில் பேசும் திறன் இல்லாததையும், அவர்கள் கூறும் விஷயம் உள்ளத்தில் இறங்காமல் இருப்பதையும் அவன் பார்த்தான்.

ஏனென்றால் அல்லாஹ்வின் ஆவியினால் அவர்கள் பேசுவதில்லை. பொருள் செறிந்த சொற்களால் பேசுபவர்களாக அவர்கள் இல்லை. மாறாக, அவர்களிடம் வலிப்பு நோய் காணப்படுகின்றது. அவர்கள் தெளிவில்லாமல் பேசுகின்றனர். செயலுடன் ஒத்திருக்காத பேச்சுக்களினால் அவர்கள் தமது இறைவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதுதான் இதற்கான காரணமாக இருக்கின்றது. மேலும் அவர்கள் பிறருக்கு காட்டுவதற்காக செய்வது தான் இதற்கு காரணமாக இருக்கின்றது. நான் எனது இறைவனிடமிருந்து அவர்களிடம் வந்தபோது அவர்கள் முகம் திரும்பிச் சென்று விட்டனர்.

இவர் பொய்யராக அல்லது பைத்தியக்காரராக இருக்கிறார் என்று கூறினர். நான் அவர்களிடம் வருகை தந்தபோது அவர்களது நிலை இவ்வாறானதாக இருந்தது. அதாவது அவர்கள் நன்மைகளை மறந்து விட்டிருந்தனர்; நன்மைகளை விட்டு தொலைவில் இருந்தனர். நறுமணமிக்க மரத்தை அவர்கள் முதுகுக்குப் பின்னால் எறிந்து கொண்டிருந்தனர். அழுகிப் போன துர்நாற்றம் வீசுகின்ற மரத்தினால் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். மேலும் அவர்களுக்காக தெளிவான அடையாளங்கள் இருக்கின்ற சில நூல்களை அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக நான் எழுதியிருக்கின்றேன். ஆனால் எள்ளி நகையாடுதல் மற்றும் பரிகாசம் செய்தல் ஆகியவற்றைத் தவிர அவர்களிடம் வேறு எந்த பதிலும் இல்லை. அவர்கள் அறிந்து கொண்டே அல்லாஹ்வின் வசனங்களை பொய்ப்படுத்தினர். இவையெல்லாம் முழுக்க முழுக்க பொய்யாக புனைந்து கூறப்பட்டவையாகும் என்றும் இதற்காக ஏனைய மக்கள் அவருக்கு உதவி செய்துள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

சிலர், இவர் நாத்திகராக இருக்கின்றார். அல்லாஹ் மீது அவர் நம்பிக்கை கொள்ளவில்லை என்று கூறுகின்றனர். எனவே பார்க்கின்றவர்களே! நாம் எழுதியிருப்பதையும் வெயியிட்டிருப்ப –வற்றையும் படித்துப் பாருங்கள். பிறகு இம்மக்கள் எத்தகைய வீணான விஷயங்களை கூறிக் கொண்டிருக்கின்றனர் என்பதை சிந்தித்துப் பாருங்கள். நிச்சயமாக காது, கண், மனம் ஆகிய எல்லாவற்றிடமும் இது குறித்து விசாரிக்கப்படும். எனவே எந்த நாளில் அவர்கள் அல்லாஹ்வை சந்திப்பார்களோ, மேலும் அவர்களிடம் கேள்வி கேட்கப்படுமோ அப்போது அவர்களுக்கு அழிவுதான்! எவர் அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டி பொய் கூறுவாரோ அல்லது அல்லாஹ்வின் அடையாளங்களை பொய்ப்படுத்துவாரோ அவரை விட மிகப்பெரிய அநியாயக்காரனாக வேறு யார் இருக்க முடியும்? அநீதியிழைப்பவன் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை என்பதே உண்மையாகும். நீர் அல்லாஹ்வின் புறமிருந்து எந்தவொரு வலுவான ஆதாரத்தையும் கொண்டு வரவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களுக்கு கண்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவற்றால் அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுக்கு உள்ளங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவற்றால் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்களுக்கு காதுகள் இருக்கின்றன. ஆனால் அவற்றால் அவர்கள் கேட்பதில்லை. அவர்களின் நிலைமை கடிவாளம் இல்லாமல் திரிந்து கொண்டும் மேய்ந்து கொண்டும் இருக்கின்ற விலங்குகள் போன்றதாகும். உண்மை வெளிப்பட்டு விட்டது. அவர்கள் உண்மையிலிருந்து முகம் திருப்பி சென்று கொண்டிருக் –கின்றனர். அவர்கள் உண்மையை மறைக்கும் நோக்கத்துடன் நூல்களை எழுதுகின்றனர். நாம் அவர்களது கைகளை கட்டிப் போட்டு விட்டோம். எனவே, அவர்களால் எழுத முடியாது.

நான் எப்போதும் அவர்களை ஆணையிடக் கூறினேன். நீங்கள் உண்மையாளர்கள் என்றால் போட்டி போடுவதற்கு முன் வாருங்கள் என்று கூறினேன். அவர்கள் தமது இடத்திலேயே பிணைக்கப்பட்ட நிலையில் இருக்கின்றனர். பூமி அவர்களை தனக்குள் மறைத்துக் கொண்டது போன்று அவர்கள் வெளியேறாமல் இருக்கின்றனர். அவர்கள் முற்றிலும் இல்லாதது போன்று ஆகிவிட்டனர். பிறகு நான் அவர்களுக்காக அருளுக்குரிய இரவுகளில் நின்றவாறு அவர்கள் மீது கருணை காட்டப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்காக துஆ செய்தேன். அல்லாஹ் தவ்பா செய்கின்ற மக்களை தவிர வேறு எவர் மீதும் கருணையுடன் திரும்புவதில்லை.

அவர்களில் சிலர் வரம்பு மீறிச் சென்று விட்டனர். சிலர் வரம்பு மீறிச் சென்று விட்ட இவர்களுக்கு அருகில் இருந்தனர். அவர்களது கொள்கை சரியானதாக இருக்கவில்லை. அதற்கேற்ப நடப்பதற்கு அவர்கள் விரும்பவுமில்லை. எவர் இறைவனுக்கு அருகில் ஒரு ஜாண் அளவு வருகின்றாரோ அல்லாஹ் ஒரு கையளவு அவருக்கு அருகில் வருகின்றான். ஆனால், அநீதியிழைப்பவர்கள் கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் அல்லாஹ்வுடன் உள்ள தொடர்புகளை துண்டித்துக் கொண்டனர். மேலும் உலகின் பக்கம் குனிந்து விட்டனர். அவர்கள் மீது கவனமற்ற நிலையின் கடுங்குளிர் வந்திருக்கின்றது. அதனால் அவர்கள் சுருண்டு போய் விட்டார்கள். இதன் காரணமாக ஒவ்வொரு நொடியும் அவர்கள் வீழ்த்தப்படுகின்றனர்.

அவர்கள் நல்லவற்றையும் தீயவற்றையும் ஒன்றாக கலந்து விட்டனர். அவர்கள் ஈமானின் (படர்) கொடியை வெட்டி விட்டனர். மேலும் அவர்கள் முற்றிலும் பொருட்படுத்தாதவர்களாக ஆகிவிட்டனர். அல்லாஹ் உங்களுக்கு எதிராக கடுங்கோபம் கொண்டவனாக ஆகி விட்டான்; அவன் பிளேக்கை அனுப்பியுள்ளான்

என்று அவர்களிடம் கூறும் போது இது வந்து செல்கின்ற ஒரு நோய் தான். எங்களுக்கு மரணம் வராது என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் எவ்வாறு விழிப்பூட்டப்படுகின்றனர் என்பதை சிந்தனை செய்யுங்கள். அவர்கள் எவ்வாறு பார்வைகளைத் திருப்பிக் கொள்கின்றனர் எனப் பாருங்கள்!

அவர்கள் மரணத்தை காண்கின்றனர். ஆயினும் படிப்பினை பெறுவதில்லை. அவர்கள் உலகின் அலங்காரங்களை மிகவும் விரும்பக் கூடியவர்களாக உள்ளனர். அவர்களின் வயிறு நிரம்புவதில்லை. அல்லாஹ்வால் இறக்கப்பட்ட வார்த்தை அவர்களுக்கு படித்துக் காட்டப்படும்போது அவர்கள் ஓடியவாறும், ஏசிப் பேசியவாறும் முகம் திருப்பி சென்று விடுகின்றனர். நீர் அவர்களை அவர்களது இரவுகளில் மரணித்தவர்களாகவும் அவர்களது பகல்களில் எல்லா நேரமும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற கிருமிகளை போன்றும் காண்கின்றீர். அவர்கள் தமது உலகத்திற்காக அங்கும் இங்கும் சுற்றித் திரிகின்றனர். மேலும் மறுமையைப் பற்றி கவனமற்றவர்களாக இருக்கின்றனர். காலத்தின் விபத்துக்கள் அவர்களைப் பின் தொடர்வதை விடுவதில்லை. அவ்வாறிருந்தும் அவர்கள் விழித்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு முன்னால் உண்மையின் விஷயங்கள் எடுத்து வைக்கப்படும்போது அவர்கள் அவற்றை ஆத்திரமடைந்த நிலையில் கேட்கின்றனர். எதனை அவர்கள் கேட்கின்றனரோ அதனை அவர்கள் வெறுக்கின்றனர். எவை அவர்களிடம் படித்துக் காட்டப்படுகின்றதோ அவற்றை அவர்கள் அற்பமாகக் கருதுகின்றனர். அவர்கள் மரணிக்கப் போகின்றவர்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்கின்றனர். பிறகும் கூட வேண்டுமென்றே அவர்கள் கவனமற்றிருக்கின்றனர். அவர்கள் உலகிற்காக குருடர்களைப் போன்று அழுகின்றனர். மறுமை பற்றி கவனமற்றவர்களாக இருக்கின்றனர். ஷய்த்தான் அவர்களுக்கு

முன்னால் அவர்களின் மனதின் விருப்பங்களை அழகுபடுத்திக் காட்டியுள்ளான். அவர்கள் அந்த விருப்பங்களின் பக்கம் ஈர்க்கப்படுகின்றனர்.

அல்லாஹ் அவர்களின் செயல்களை வீணாக்கி விட்டான். அவர்களின் பொருள்களை செல்லாதவையாகவும் கீழ்த்தரமானவை –யாகவும் ஆக்கி விட்டான். அவர்கள் சபிக்கப்பட்டுள்ளனர். அதனை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. குழியில் கிடக்கும் அசுத்தமான துர்நாற்றம் அடிக்கின்ற குறைவான தண்ணீரை அவர்கள் பயன்படுத்துகின்றனர். ஆழத்தில் இருக்கின்ற தூய்மையான தெளிந்த தண்ணீரை அவர்கள் கைவிட்டு விடுகின்றனர். இதற்கு காரணம் அவர்கள் கோழைகளாகவும், சோம்பேறிகளாகவும் இருக்கின்றனர் என்பதாகும்.

அவர்கள் குறைவான பொருளைப் போதுமானதாக கருதுகின்றனர். அவர்கள் கறையில்லாத நிறத்தை விட்டு விட்டு கறை படிந்தவற்றைக் கைக்கொள்கின்றனர். மேலும் வெயிலுக்கும் நிழலுக்கும் இடையில் அவர்கள் அமர்ந்துள்ளனர். (அதாவது தெளிவான நிலைபாட்டை அவர்கள் மேற்கொள்வதில்லை). இப்லீஸின் சபைகளை அவர்கள் விட்டு விடுவதில்லை. அவற்றில் இருந்து அவர்கள் விலகுவதில்லை. அவர்கள் மீது உலகின் கதவுகள் திறக்கப்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு இந்த உலகிலுள்ள எல்லா பழங்களிலிருந்தும் கனிகள் தரப்பட வேண்டும் என்பதே அவர்களின் உள்ளத்தின் ஆசையாக இருக்கின்றது. எனினும் அவர்களுக்கு நன்றாகவே உண்பதற்கும் குடிப்பதற்கும் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் என்னை நிராகரிக்கின்றனர்.

ஆனால் எதன் அடிப்படையில் அவர்கள் என்னை நிராகரிக்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் மறைக்கின்ற இந்த விஷயத்தை வெளிப்படுத்திக் கூற வேண்டும் என்பதற்காக நாம் அவர்களை ஆணையிடுமாறு கூறியிருந்தோம்.

ஆனால் அவர்கள் எதுவுமே கூறவில்லை. அவர்களின் தண்ணீர் இருக்கின்ற தோல் பைகள் எவ்வளவு வலுவான கயிறால் கட்டப்பட்டுள்ளது என்றால் அதிலிருந்து ஒரு சிறு துளி கூட வெளியே சிந்தவில்லை.

அவர்கள் மஸீஹ் இறங்க வேண்டிய நேரத்தை, பிரசவத்திற்காக நேரம் கடந்து சென்ற பிறகும் இதுவரை பிரசவிக்காத நிலையில் இருக்கின்ற பெண் ஒட்டகத்தைப் போன்று கருதுகின்றனர். ஆனால் (மஸீஹ் இறங்குவதற்கான) எல்லா(அடையாளங்களு)ம் வெளிப்பட்டு விட்டதை அவர்கள் பார்க்கின்றனர். பிறகும் அவர்கள் விழித்தெழவில்லை.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் பிடிக்கவில்லையா? அவை ரமலான் மாதத்தில் நிகழவில்லையா? பூமியின் சுமை (கருவூலங்கள்) எவ்வாறு வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அவர்கள் பார்ப்பதில்லையா? தொடர் வண்டி சென்று கொண்டிருக்கின்றது. கப்பல் கடலின் நெஞ்சத்தை பிளந்து கொண்டிருக்கின்றது. மக்கள் ஒன்று திரட்டப்படுகின்றனர். இளம் பெண் ஒட்டகங்கள் கைவிடப்பட்டன. வாகனங்கள் மாற்றப்பட்டு விட்டன. அவர்கள் யூகித்தவை அனைத்தும் வெளிப்பட்டு விட்டன.

ஈஸாவின் களிம்பு (மர்ஹமே ஈஸா) ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்திற்கு ஒரு பகிரங்கமான அடையாளமாக இருக்கின்றது. பிறகு இந்த ஆதாரத்தைக் குறித்து அவர்கள் ஏன் சிந்திப்பதில்லை? அதிலிருந்து ஏன் அவர்கள் பயன்பெறவில்லை? வாக்களிக்கப்பட்ட மஸீஹின் உதாரணம் துல்கர்னைன்–க்கு ஒப்பானதாகும். கண்களை உடையவர்களே! அதன் பக்கமே திருக்குர்ஆன் சுட்டிக் காட்டுகின்றது. நீங்கள் சிந்திப்பவர்களாக இருந்தால் இந்த உதாரணம் உங்களுக்கு போதுமானதாகும்.

உண்மை என்னவென்றால் நான் துல்கர்னைன் போன்று அனைத்து விஷயங்களிலும் திறமை பெற்றவனாக இருக்கின்றேன். எனக்காக பூமியின் அனைத்து பகுதிகளிலுள்ள ஆன்மாக்களையும் ஒன்று திரட்டுவதற்கான வழிவகைகள் மக்களுக்கு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நான் இதே இடத்தில் இருந்தும் கூட (நாடுகளுக்கும் நகரங்களுக்கும்) சுற்றுப் பயணம் செல்லும் பணியை நிறைவு செய்து விட்டேன். இஸ்லாத்தில் மக்காவிற்கும் மதீனாவிற்கும் சுற்றுப் பயணம் செல்வதைத் தவிர வேறு எந்தவோர் இடத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்காகவும் பயணத்திற்கான ஆயத்தம் செய்வது கடமை அல்ல. எனவே ஈருலகங்களின் இறைவன் அந்த வழிமுறையின் மூலமாக எனக்காக நாடுகளுக்கும் நகரங்களுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கான வழிவகையை உருவாக்கி விட்டான். நான் எனது இந்த சுற்றுப் பயணத்தின் போது ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்த இரு சமுதாயங்களைக் கண்டேன்.

ஒரு சமுதாயம் எத்தகையது என்றால் அதன் மீது சூரியன் ஒளி வீசியது. அதன் கடுமையான வெப்பத்தின் அனல் அவர்களது முகங்களை பொசுக்கி விட்டது. அவர்கள் தோல்வியடைந்து திரும்பினர். இன்னொரு சமுதாயம் கடுங்குளிர் உள்ள பகுதியில் இருக்கின்றது. தெளிந்த நீரூற்று இல்லாமல் ஆகிவிட்டதனால் அவர்கள் கலங்களான நீரூற்றில் அமர்ந்திருக்கின்றனர்.

(முதலாவது) உதாரணம், நாங்களே முஸ்லிம்கள் என்று கூறுகின்ற மக்களுடையதாகும். ஆனால் அவர்களுக்கு இஸ்லாமிய சூரியனிடமிருந்து எந்த பங்கும் கிடைக்கவில்லை. தமது உடல்களுக்கு (அதன் மூலம்) பயனளிப்பதற்குப் பகரமாக அவற்றை அவர்கள் எரித்துப் பொசுக்குகின்றனர்.

(இரண்டாவது) உதாரணம், ஏகத்துவத்தின் சூரியனின் எந்த ஒளியும் தங்களிடம் எஞ்சியிருக்காத நிலையில் இருக்கின்ற மக்களை பற்றியதாகும். அவர்கள் ஈஸாவை கடவுளாக்கி விட்டனர். உயிருள்ள இறைவனுக்கு பகரமாக மரணித்தவரை அவர்கள் பெற்றுக் கொண்டனர். அவரது தேவை அவர்களுக்கு இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். இந்த இரண்டு உதாரணங்களும் தமக்குள்ளே பிரிவினையை ஏற்படுத்தி சிதறுண்டு போன இரு சமுதாயங்கள் பற்றியதாகும். சூரியனின் ஒளியின் கடுமையான வெப்பமானது அவர்களது முகங்களை எரித்து விட்டதைத் தவிர அது அவர்களுக்கு எந்த பலனையும் தரவில்லை. எனவே அவர்கள் அழிந்து கொண்டிருக்கின்றனர்.

இன்னோர் உதாரணம், சூரியனின் ஒளியிலிருந்து வெருண்டோடி இருளில் திரும்பவும் வந்து விட்ட சமுதாயத்தைப் பற்றியதாகும். நான் ஹிஜ்ரி மற்றும் கிறித்தவ காலண்டர்களின் அடிப்படையிலும் நடைமுறையிலுள்ள ஒவ்வொரு காலண்டரின் அடிப்படையிலும் இரண்டு நூற்றாண்டுகளை அடைந்துள்ளேன். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் வேதத்தில் எனக்கு துல்கர்னைன் (இரண்டு நூற்றாண்டுகளை அடைந்தவர்) என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. இதில் சிந்திப்பவர்களுக்கு ஒரு மாபெரும் அடையாளம் உள்ளது.

யாஜூஜும் மாஜூஜும் திறந்து விடப்பட்ட அந்த சமயத்தில் நான் வந்துள்ளேன். மேலும் ஒவ்வொரு மேடான பகுதியையும் கடல்களின் அலைகளையும் தாண்டிச் சென்றவாறு அவர்கள் பரவிக் கொண்டிருக்கின்றனர். எனவே தெளிவான அடையாளங்களைக் காட்டுவதற்கும், மலக்குகளை வானத்திலிருந்து ஈர்த்து பூமிக்கு கொண்டு வருகின்ற துஆக்கள் செய்வதற்கும், முஸ்லிம்களை யாஜூஜ் மாஜூஜ் ஆகியோரின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்து, முஸ்லிம்களுக்காக ஓர் உறுதியான அணையைக் கட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

தனது அடியாரை சரியான நேரத்தில் அனுப்பி குழப்பம் நிறைந்த காலத்தில் நண்பர் மற்றும் உதவி செய்பவர் எவரும் இல்லாத தருணத்தில் விண்ணிலிருந்து அவரை இறக்கிய அல்லாஹ்வே உண்மையான புகழுக்குரியவனாக இருக்கின்றான். அவனது இந்த நியதியை மறுத்து அவனது அடித்தளத்தை உடைக்கின்றவர் உங்களில் எவராவது இருக்கின்றாரா?

அல்லாஹ் மிகவும் தூயவன் ஆவான். உங்களது எண்ணங்கள் மற்றும் யூகங்களிலிருந்து அவன் மிகவும் மேலானவனாக இருக்கின்றான்.

நீங்கள் என்னை நிராகரித்தீர்கள். நீங்கள் உங்கள் மீதே அநீதியிழைத்துள்ளீர்கள். நான் எனது விவகாரத்தை அல்லாஹ்விடம் ஒப்படைக்கின்றேன். நீங்கள் மிக விரைவில் உண்மையான நிலையை அறிந்து கொள்வீர்கள்.

தாராளமாக வழங்குகின்ற அல்லாஹ்வின் உதவியினால் இந்த நூல் நிறைவை எட்டி விட்டது.

## மர்ஹூம் சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீ :ப் சாஹிப் அவர்கள் தொடர்பான ஏனைய நிலைமைகள்

ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களின் சிறப்பான மாணவர்களில் ஒருவரான மியான் அஹ்மது நூர் அவர்கள் 8 நவம்பர் 1903 அன்று தமது குடும்பத்துடன் கோஸ்த்திலிருந்து காதியான் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: மவ்லவி சாஹிப் அவர்களின் சடலம் அவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட்ட அதே இடத்தில் கற்களுக்கிடையில் சரியாக நாற்பது நாட்கள் வரை இருந்தது. அதற்குப் பிறகு நான் சில நண்பர்களுடன் சேர்ந்து இரவு நேரத்தில் அவர்களின் அருளுக்குரிய சடலத்தை வெளியில் எடுத்தேன். நாங்கள் மறைவாக அதனை நகரத்திற்கு கொண்டு வந்தோம். அமீரும் அவரது வேலையாட்களும் ஏதாவது தடையை ஏற்படுத்தி விடுவார்கள் என்ற அபாயம் இருந்தது. ஆனால் நகரத்தில் காலரா நோய் எந்த அளவு பரவியிருந்தது என்றால் ஒவ்வொரு நபரும் (அ)தன் துன்பத்தில் சிக்கியிருந்தார்.

எனவே நாங்கள் நிம்மதியாக மர்ஹூம் மவ்லவி சாஹிப் அவர்களது ஜனாஸாவை கபருஸ்தானுக்கு கொண்டு சென்றோம். ஜனாஸா தொழுகை தொழ வைத்து அவர்களை அங்கு அடக்கம் செய்தோம். வியப்பிற்குரிய விஷயம் என்னவென்றால், மவ்லவி சாஹிப் அவர்கள் கற்களுக்கிடையிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டபோது கஸ்தூரியைப் போன்று அவர்களின் உடலிலிருந்து நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. இதனால் மக்கள் பெரும் தாக்கத்திற்கு ஆளானார்கள்.

இந்தச் சம்பவத்திற்கு முன்பு காபூலின் ஆலிம்கள் அமீரின் கட்டளைக்கு ஏற்ப மவ்லவி சாஹிபுடன் விவாதம் செய்வதற்காக ஒன்று திரண்டிருந்தனர். உங்களுக்கு இரண்டு இறைவன்

இருக்கின்றான். ஏனெனில் நீங்கள் இறைவனுக்கு எந்த அளவுக்கு அஞ்ச வேண்டுமோ அதுபோன்றே அமீருக்கும் அஞ்சுகின்றீர்கள். ஆனால், எனக்கு ஓர் இறைவன் (மட்டுமே) இருக்கின்றான். எனவே நான் அமீருக்கு அஞ்சுவதில்லை என்று மவ்லவி சாஹிப் அவர்களிடம் கூறினார்கள். இந்த சம்பவம் பற்றி எதுவும் தெரியாத நிலையில் அவர்கள் சிறைபிடிக்கப்படாமல் வீட்டில் இருந்தபோது தமது இரு கைகளையும் பார்த்து, எனது கைகளே! நீங்கள் விலங்கிடப்படுவதை சகித்துக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள். அவர்களது வீட்டிலுள்ளவர்கள், உங்களது நாவிலிருந்து எவ்வாறான வார்த்தைகள் வெளி வருகின்றன? என்று கேட்டனர்.

இது என்ன விஷயம் என்று உங்களுக்கு அஸர் தொழுகைக்குப் பிறகு தெரிய வரும் என்று அவர்கள் கூறினார்கள். அஸர் தொழுகைக்குப் பிறகு அரசரின் படை வீரர்கள் வந்து அவர்களை கைது செய்தனர்.

பாருங்கள்! நான் போகிறேன். நீங்கள் வேறு எந்த ஒரு வழியையும் பின்பற்றிச் செல்ல வேண்டாம். எந்த நம்பிக்கையிலும் கொள்கையிலும் நான் இருக்கின்றேனோ அதுவே உங்களது நம்பிக்கையாகவும் கொள்கையாகவும் இருக்க வேண்டும் என்று வீட்டிலுள்ளவர்களுக்கு அவர்கள் அறிவுரை கூறினார்கள்.

சிறைப்பிடிக்கப்பட்ட பிறகு வழியில் சென்று கொண்டிருந்த போது, இந்தக் கூட்டத்தில் நான் மணவாளனாக இருக்கின்றேன் என்று அவர்கள் கூறினார்கள். விவாதம் நடந்த நேரத்தில், வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருப்பதாக வாதம் செய்துள்ள இந்த காதியானி நபரைப் பற்றி நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்று ஆலிம்கள் அவர்களிடம் கேட்டனர்.

அதற்கு மவ்லவி சாஹிப் அவர்கள், நாம் அந்த நபரை பார்த்திருக்கின்றோம். அவர்கள் பற்றிய விஷயங்களை நன்கு சிந்தித்தோம். அவர்களைப் போன்று பூமியில் எவருமே இல்லை. எவ்வித சந்தேகமும், ஐயமும் இன்றி அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்; அவர் மரணித்தவர்களை உயிர்ப்பித்துக் கொண்டிருக் –கின்றார் என்று பதில் கூறினார்கள்.

முஸ்லிம்கள் அப்போது கூச்சலிட்டவாறு அவர் காஃபிர் ஆவார்; நீரும் காஃபிராக இருக்கின்றீர் என்று கூறினர். மேலும், 'தவ்பா' செய்யாமல் இருந்தால் அன்னார் கல்லெறிந்து கொல்லப்படுவார்கள் என்று அமீரிடமிருந்து மிரட்டல் விடுக்கப் –பட்டது. மேலும் இப்போது தாம் மரணிக்கப் போகிறோம் என்பதை அவர்கள் புரிந்து கொண்டதும் இந்த வசனத்தை ஓதினார்கள்:

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ
اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ (திருக்குர்ஆன் 3:9)

அதாவது எங்கள் இறைவா! நீ எங்களுக்கு நேர்வழியை வழங்கிய பிறகு எங்கள் உள்ளங்களை தடுமாற்றத்திலிருந்து பாதுகாப்பாயாக. வழுக்கி விழுவதிலிருந்து நீ எங்களை பாதுகாப்பாயாக. உன் புறமிருந்து நீ எங்களுக்கு கருணையை வழங்குவாயாக. ஏனென்றால் ஒவ்வோர் அருளையும் நீயே வழங்குகின்றாய்.

பிறகு (மக்கள்) அவர்கள் மீது கற்களை எறிய ஆரம்பித்த போது,
اَنْتَ وَلِيّٖ فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۚ تَوَفَّنِيْ مُسْلِمًا وَّاَلْحِقْنِيْ بِالصّٰلِحِيْنَ (திருக்குர்ஆன் 12:102)

'என் இறைவா! நீ உலகிலும் மறுமையிலும் எனது நண்பனாக இருக்கின்றாய். என்னை இஸ்லாத்தில் மரணிக்கச் செய்வாயாக. உனது நல்லடியார்களோடு என்னை சேர்த்து விடுவாயாக' என்ற வசனத்தை அவர்கள் ஓதினார்கள். அதற்குப் பிறகு கற்கள் எறியப்பட்டன. மர்ஹூம் அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மறுநாள் காலைப்பொழுது விடிந்ததுமே காபூலில் காலரா (நோய்) பரவி விட்டது. மேலும் இந்தக் கொலைக்கு அசல் காரணமாக இருந்த அமீர் ஹபீபுல்லாஹ் கானின் உடன் பிறந்த சகோதரராகிய நஸ்ருல்லாஹ்வின் வீட்டில் காலரா வெளிப்பட்டது. அதனால் அவரது மனைவியும் குழந்தையும் மரணித்து விட்டனர். ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 400 பேர் மரணித்துக் கொண்டிருந்தனர். ஷஹாதத் நடந்த அந்த நாளில் இரவில் வானம் சிவப்பாகி விட்டது. அதற்கு முன்னதாக,

اِذْهَبْ اِلٰى فِرْعَوْنَ اِنِّىْ مَعَكَ
اَسْمَعُ وَاَرٰى وَاَنْتَ مُحَمَّدٌ مُعَنْبَرٌ مُعَطَّرٌ

அதாவது ஃபிர்அவ்னிடம் செல்வீராக. நிச்சயமாக நான் உம்முடன் இருக்கின்றேன். நான் கேட்கின்றேன். நான் பார்க்கின்றேன். நீர் புகழப்பட்டவராகவும், நறுமணம் கமழ்பவராவும் இருக்கின்றீர் என்று எனக்கு மீண்டும் மீண்டும் இறையறிவிப்பு வருகின்றது என்று மவ்லவி சாஹிப் அவர்கள் கூறினார்கள்.

மேலும் வானம் கூச்சலிடுகின்றது. நடுங்க வைக்கின்ற காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள ஒரு நபரைப் போன்று பூமி நடுங்கிக் கொண்டு இருக்கிறது. உலகம் இதனை அறியாது. இந்த விஷயம் நடக்கப் போகிறது என்று எனக்கு இறையறிவிப்பு வருகிறது என்று அவர்கள் கூறினார்கள்.

மேலும் இவ்வழியில் உமது தலையைத் தந்து விடுவீராக. அதில் தயக்கம் காட்ட வேண்டாம். இறைவன் காபூல் மண்ணின் நன்மைக்காக இதையே விரும்பியுள்ளான் என்று எல்லா நேரத்திலும் எனக்கு இல்ஹாம் வருகின்றது என்று அவர்கள் கூறினார்கள்.

மவ்லவி சாஹிப் அவர்கள் ஒன்றரை மாதங்கள் வரை சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள் என்று மியான் அஹ்மது நூர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நான்கு மாதம்

வரை சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் இருந்ததாக நாம் எழுதியிருந்தோம். இது அறிவிப்புகளில் உள்ள முரண்பாடாகும். உண்மைச் சம்பவம் தொடர்பாக அனைவரும் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றனர்.

والسّلام علىٰ من اتّبع الهُدىٰ (நேர்வழியைப் பின்பற்றுபவர் மீது சாந்தி நிலவட்டுமாக.)

❖✦❖✦❖✦❖